# இலக்கியச் செல்வி

கழக வெளியீடு

கழக வெளியீடு: அசூ௫

# இலக்கியச் செவ்வி

750
H-56

இயற்றியவர்:
திரு. J. முத்துவீராசாமி நாயுடு, பி. ஏ.,
ஒப்புபெற்ற மாவட்ட ஆவணப் பதிவாளர்.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Nov., 1956.

# ILAKKIACH - CHEVVI

O-,1:9
N56

[Copyright with the Author]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office:
98, EAST CAR STREET, TIRUNELVELI.

10882

Appar Achakam. 2/140, Broadway, Madras-1—C. 1200.

750
4-56

# பதிப்புரை

திரு என்னுஞ் சொற்குப் பொருள் 'கண்டோரால் விரும்பப் படும் தன்மை' என்பர் பேராசிரியர். அதையே அழகு என்றனர். அழகு என்பதியாது? கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்களையும் ஒருங்கே கவரவல்ல ஒன்று. இவைகள் யாண்டுப்போதரும்? இயற்கையிடத்தன்றோ? இயற்கை கலவாத பொருள் யாண்டுமில்லை; அப் பொருள் மூப்பதுமில்லை, இறப்பதுமில்லை. அஃது என்றுமுள்ள எழில். அது, கட்குப் புலனும் பொருள்களினும் செவிமுதலாய ஏனைய பொறிவாயில்களாகத் தோன்றும் புலன்கட்குப் புலனும் பொருள்களினும் விளங்கித் தோன்றும்; அது நுண்மையினும் பருமையினும் செறிந்து காட்சிதரும். என்னே இயற்கைமாண்பு! இவ்வழகையே 'மணங்கமழ் தெய்வத்து இளநலம்' எனப் போற்றுவர், புலவரேறும் நக்கீரர் பெருமான். இதையே முருகாகக் கண்டனர்; களித்தனர்; அக் களிப்பு திருமுருகாக மலர்ந்து பாட்டாகப் பரவிற்று.

இம் முருகாம் அழகை யாங்கு நோக்கினும் ஆங்குக் காட்சி தரும். காலை இளவளஞாயிறும் மாலை மலரும் வண்மதியும் முத்துப் பந்தரென முகிழ்த்துத் தோன்றும் வான் மீன்களும் இவ்வழகினை இடையேகொண்டு திகழ்கின்றன. வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை நிறங்கள், நிலையியற் பொருள்களினும் இயங்கியற் பொருள்களினும் உள்ளீடாய்க் கிளைத்து அழகியற் காட்சியாய்க் கண்கட்குப் பெருவிருந்தூட்டுகின்றன. செடி கொடி ஈட்டங்களின் தளிரும் இலையும் பூவும் பிஞ்சும் காயும் பழனும் இப் பன்னிறங்களைப் படைத்தனவன்றோ! கிளிக்குப் பசுமையும் குயிற்குக் கருமையும் அன்னத்துக்கு வெண்மையும் மயிற்குப் பன்னிறமும் பாங்குற அமைந்து அழகுதந் தின்புறுத்துவனவன்றோ? இக்காட்சியை-இப்பருப்பொருள் தன்மையைச் சித்திரித்து நுண்பொருளாக நமக்குத் தருவனவே இலக்கியங்கள். அவை, கலை, ஓவியமாக உருவாகி நம்மை மகிழ்விக்கின்றன.

பொங்கர்களிலோ புனல்பரந்த படுகர்ப் புறங்களிலோ யாற்றின் பக்கலிலோ மருதஞ்சான்ற வைப்பிலோ நாம் சென்றால் ஆங்கே பல்வகைப் பாட்டொலி கூட்டும் புள்ளின் ஈட்டங்களையும், மான் மரை முதலிய விலங்கின் கூட்டங்களையும், பயன் பலதரும் மா பலா தெங்கு கோங்கு பாதிரி வேங்கை முதலிய மரப்பொதும்பர்களையும் கண்டு களித்துமன்றோ?

பொதுவறிவுபெற்ற நமக்குக் காட்சியொன்றே பயனாக
அதைக் கடந்ததும் அயர்க்கின்றோம். ஓவியப் புலவனோ காவியப்
புலவனோ காண்பனேல், ஓவியன் கைவண்ணத்தால் அவையாவும்
ஓவியமாகப் படைக்கப்பட்டு என்றும் நிலைத்த இன்பந்தரும்
உருவமடைகின்றன. அவற்கு வேண்டுவன, தாளும் எழுது
கோலும் செந்நிற கருநிற பொன்னிற வண்ண மைகளுமே.
அவைகளை நிலையாகக்கொண்டு உயிரோவியம் தோற்றமுறு
கின்றன. இவற்றையெல்லாம் காவியப் புலவன் கண்டால்
எழுத்துக்களைக் கொண்டே, இவ்வுலகங்களை யெல்லாம் படைத்
துக் காட்டிவிடுகின்றான். என்னே புலமைப்பண்பு! எழுத்துருப்
பெற்ற சொற்களால் இன்பவுலகத்துக்கு நம்மையெல்லாம்
ஈர்த்துச் செல்கின்றான்.

இப் பேரறிஞர் படைப்பே இலக்கியம். இலக்கியம் காணாத
நாடுண்டோ ஏடுண்டோ அறிஞருண்டோ! இலரன்றோ!
இவராற் படைத்த இலக்கியங்களே நாடெங்கும் இன்பக் கருவூல
மாக ஒளிர்கின்றன. இவர் கண்டனவே மக்கட் பண்பாம் மாண்
பினை வளர்ப்பன: அறத்தைப் பொருளை இன்பை அன்பை
வீட்டை இனிதின் மலர்விப்பனவாம்.

இத்தகைய இலக்கியங்களிற் செறிந்துகிடக்கும் ஓவியங்களை
யெல்லாம் கற்று ஆய்ந்து தேர்ந்து வடித்தெடுத்துக் கொடுத்த
வளனே இவ் '**இலக்கியச் செவ்வி**' என்னும் நூல்! இதனைத்
தம் அஃகியகன்ற கூர்த்த அறிவினால் திரு. J. முத்துவீராசாமி
நாயுடு, பி.ஏ., அவர்கள் ஆக்கி உதவியுள்ளார்கள். இவர்கள்
தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் புலமை சான்றவர்கள்;
ஆங்கிலத்தில் கலைத்திறன் ஆய்வு நூல்கள் பலவுள்ளன. அவற்
றைப்போல் நம் தமிழ் மொழியில் நூல்கள் வெளிவரல்
வேண்டும் என்னும் கருத்துந்த முதல்முதலாக இந்நூலை ஆக்கித்
தமிழ்த் தாய்க்கு அணியாக அணிந்துள்ளார்கள். முன்னரே
தமிழில் 'எழில்' என்னும் செய்யுள்நூல் ஆக்கி எழில்பெறப்
புனைந்துள்ளார்கள். ஆகவே, அழகின் கலைதேர் அறிஞரு
மாவார்கள். கடப்பாட்டுணர்ச்சி மிக்க இவர்கட்கு எம் உளங்
கலந்த நன்றி உரிமையாகுக.

நம் தமிழக நன்மக்கள் கற்றுப் பயனும்வண்ணம் அச்சிற்
பதித்து நூலுருவாக்கி வெளியிட்டுள்ளோம். கலையின்பங் காண்
பாரும் மாணவமணிகளும் கணக்காயரும் ஆய்வாளரும் முத்
தமிழ்த் துறையின் முறை போவாரும் இதனை வாங்கிக் கற்று,
வண்டமிழ் மொழிப் பயன் பெறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்**

# முன்னுரை

'எழில்' என்னும் என் நூலுக்குத் தொடர்புடையதே
யாகும் இந்நூல். கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
இயற்கைக் காட்சிகள் முதல், புலனெறி வழக்கால் உருவெய்து
நவும் எழில்மலர்ச்சியின் சிகரங்களுமான அருங்கலைகள் ஈறாக,
பேரண்டத்திலும், சிறப்பாக இவ்வுலகின் பல வாயில்களிலும்
மலரும் எழிலின் செவ்வி, 'எழில்' என்னும் அச் செய்யுள் நூலில்
சித்திரிக்கப்பட்டுள்ளது. அந்நூலின் முன்னுரையில், எழில்
இன்னதென்பதும் பலதுறைகளிலும் மலரும் அதன் பெற்றியும்
ஆராயப்பட்டுள்ளன. அவ்வாராய்ச்சியை யொட்டிய இலக்கி
யத் திறனாய்வே "இலக்கியச் செவ்வி" என்னும் இந்நூல் வடி
வில் உருவாகியுள்ளது.

இலக்கியஞ் செய்திறம், சிறந்த தமிழ் நூல்களில் செவ்வி
தின் அமைந்துள்ளது. இலக்கியத்தின் தன்மையைத் தக உண
ராத வழி, சிறந்த இலக்கிய நூல்கள் செய்தற்கியலாது. அதன்
செவ்வியைத் தக்கவாறு சுவைக்குநர் இல்லாத வழியும்
ஆசிரியர்க்கு அத்தகைய நூல்களைச் செய்தற்கான ஊக்கமு
மெழாது. எனவே, கற்றறிந்த தமிழரிடைச் செப்பமான
இலக்கியச் சுவையறிவு இருந்து வந்துள்ளமை உறுதியே. எனி
னும், இலக்கியத்தின் செவ்வியை ஆராய்ந்து, மேனாடுகளில்
உள்ளவாறு, அதை ஒரு கலையாகச் செய்திற்றிலர். இலக்கியத்
தின் தன்மையை உள்ளவாறு அறியாதவர் இலக்கிய நூல்களின்
செவ்வியைத் தக உணர்தற்கில்லை. எனவே அத் திறனாய்வு,
இலக்கியப் பயிற்சியை விரும்புவோர்க்கு இன்றியமையாததாகும்.

ஆனால், இன்றியமையாமையைக் கருதி இந் நூலைச் செய்யப்
புகுந்தேனல்லேன். 'எழில்' நூலைச் செய்தபின் எழிலின் சிறந்த
வடிவங்களாய அருங்கலைகளினிடைத் தனிச்சிறப்பமைந்த இலக்
கியத்தின் பரிசை ஆராயப்புகுந்தவழித் தோன்றியதாகும் இந்
நூல். ஆங்கிலத்தில் இக் கலையைப் பற்றி யான் கற்றறிந்தவை,
இந்நூலைச் செய்தற்குப் பெரிதும் பயன்பட்டனவெனினும்
நூலின் உள்ளுறைக்கான அடிப்படைக் கருத்துக்கள் என்னுடை
யனவே. பொதுவாக அருங்கலைகளின் பெற்றியும், அவற்றிடை
இலக்கியத்தின் சிறப்பியல்புகளும், பலமொழி இலக்கியங்
களிடையமைந்த பொதுத் தன்மைகளும், அவற்றிடைத்
தமிழிலக்கியங்களின் சிறப்பும் இந் நூலில் ஆராயப்பட்டுள்ளன.

இலக்கியத்தின் செவ்வி, இந்நூலில் பொதுப்படவே
ஆராயப்பட்டுள்ளது; ஒவ்வொரு வகை இலக்கியப் பரிசும் தனிப்
பட ஆராயப்படவில்லை. நாடகம், ஒரு பழ வகையினதே யெனி

னும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப் பெற்றுள்ள 'மனோன்மணீயம்' ஒன்றைத் தவிர நாடக நூல் பிறிதொன்றும் இலக்கியமாக மதிக்கக் காணாமையால் அவ்வகையின் தன்மைகள் ஆராயப்பட்டில. என்னை? இலக்கியங்கண்டதற்கே இலக்கணமியம்பல் வழக்கானமையான். இனி, மேனாட்டிலிருந்து வந்துள்ள புதினம் சிறுகதை என்னும் வகை வடிவுகளில் இப்போது சிறிது காலமாகவே நம் மொழியில் நூல்கள் செய்யப்படுகின்றன. எனவே, வெளிவந்துள்ள அவ்வகை நூல்களிடை, இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கவை உளவாயின் அவை எவை என்பது ஏற்பட்ட பின்னரே அவ்வகையவற்றின் திறன் ஆராயப்பட வேண்டுமாகையால், அவற்றின் தனிப்பட்ட பெற்றிகளும் ஆராயப்பட்டில. எஞ்சிய வகைகளின் பரிசுகள் மட்டும் ஆராயப்புகுதல் சால்புடைத்தாகாதெனக் கருதி அவையும் ஆராயப்பட்டில.

பொதுவாக எளிய நடையெனவும் கடு நடையெனவும் நடை வகைகளைக் குறித்துப் பேசுதல் வழக்கு. அப்பாகுபாட்டினால் நடைப் பரிசுகள் பலவற்றையும் உணர்த்துதற்காகாதெனக் கருதி, அணிகொண்ட வளநடையென்றும் அணியற்ற செந்நடையென்றும் நடைகளை இருவகைகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. வேறு வகைகளாகப் பிரித்தலாகாதா என்று வினவுதலும் கூடும். பிரித்தற்காகுமெனினும் வழக்காற்றில் வகைகள் பாகுபாடு செய்தபின்னர் இத்தகைய நூல்களில் அவற்றைப்பற்றிப் பேசுதலே ஏற்புடைத்தாகும்.

ஆவணப் பதிவுத்துறையில் பணியாற்றி வந்த யான், என் அடக்குதற்கியலாத ஆர்வம் பற்றி இந் நூலைச் செய்தபின், இதனை வெளியிடுதலைச் சிந்தை செய்தபோது, கற்றறிந்தோர் இந் நூலை மதிப்பரோ என்ற ஐயம் பிறந்தது. எனவே, தமிழ்ப் பெரியார் சிலர் ஆதரவை நாடினேன். அவர்கள் அனைவரும் தங்கள் ஆதரவை உவந்தளித்தனர். அவ்வாறு, முறையே ஆங்கில முன்னுரையும், அணிந்துரையும் கருத்துரையும், தந்துரையும் மகிழ்ந்து நல்கிய பேராசிரியன்மார், திருவாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் ஆகியோர்க்கு நான் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

இனி, நூலின் இம்முதற் பதிப்பை வெளியிட்டுதவியுள்ள திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கும் என் நன்றி உரித்தாகும்.

ஜ. முத்துவீராசாமி.

# INTRODUCTION

We who really belong to the passing generation had the English language for our mother—a mother who however proved to be only our stepmother—a rare step-mother indeed, who taught us Freedom and showed us the greatness of our own mother, the Tamil language. One of the finest products of this wonderful nursery is the present book on ' Literary Criticism,' by my friend Muthuveerasami Naidu, who has in the best traditions of English culture found time amidst his work as a District Registrar to write this monumental work in the best Tamil style reminding us of Maraimalai Adikal. His poetic work on ' Beauty ' (எழில்) with an introduc-tion which has probably now grown into this work, has already introduced the author to the Tamil world.

Modern Aesthetics has become objective and quantitative and what the man in the street hankers after as modern literature has become vulgar and melodramatic. This seems to be the natural reaction to the priggish pretensions of the nineteenth century idealism. Leaving alone these theorists, when one goes to the pristine source of the Classics, one finds the ideal and the real becoming one and it is to the masters of these classic works, that our author turns for inspiration.

"Arts for Arts' sake" is the cry of the modern hedonist. But art is fundamentally human and the characteristic feature of Man is his search for the Supreme values of Truth, Goodness and Beauty. Probably it is this that Tolkâppiar means when he speaks of "மக்கட்சுட்டு." It is Man's greatness that he willingly bears the cross and that he gets himself burnt to the stake with a smile in his face for the sake of Truth and Goodness. Human art, therefore, necessarily breathes this sweet aroma of truth and shines with this brilliant radiance of Goodness. They form as it were the root of the tree where blossoms the Beauty of Art. As Goethe puts it "The Beautiful is higher than the Good. The Beautiful includes in it the Good". To say that Art is merely pleasant is an abuse of language; it is a divine joy of tragedy too—it is the bliss and peace of harmony otherwise called poetic justice. If man's essence is moral, his art cannot be otherwise. Our author, therefore, takes for his rubric the striking statement of Tiruvalluvar "Arathal Varuvate Inpam," interpreting it in an original way to support this thesis.

The prostitution of Art on the Silver Screen is so unbearable that some critics in protest sing the divine glories of Art. To them the poetic experience is same as the mystic experience. Though our author seems to suggest this theory, he escapes this heresy by distinguishing the poet from the seer. The poet loses himself in the *lila vibhuti* or this beautiful



Universe, whilst the seer even when he is aware of this Beauty loses himself in the transcendental *Tripad Vibhuti* and the Lord. But all the same the author never forgets for a moment the divinity of Art. Poetry, as the word signifies in Greek and the corresponding word *Ceyyul* does in Tamil, connotes creation; and the Tamilians, as Kumaraguruparar sings, consider the poet greater than Brahma, the Creator. The poet, whilst he is a poet, is divine—he is literally inspired; he is but a lute in the hands of God on which He plays. The author deals with poetry as conceived in the mind of the poet in his first chapter on "womb", with poetry as delivered to the world in his second chapter on Form and with its Glories in his third chapter. This theory of inspiration may lead some to think that the author is writing of the unconscious artists and poets to whom the choicest words come of their own accord, as Cekkilar puts it, and arrange themselves into poems and who therefore feel that God sings of Himself through them. But this is not a correct interpretation of our Author's thesis, as is made clear in the second chapter where the various techniques of conscious composition are considered. Even the conscious artist is but giving expression to God within, even as a mother delivering a child is but an instrument in the hands of the Creator. Here is resolved the mystery that, though the style is man, yet the art is great only when art, expressing the personality of the artist, becomes impersonal by becoming

one with the Universal. In the third chapter the author comes to emphasize the supreme excellence of poetry—as the nectar, the ambrosia, the divine feast, the boon, the Sanjeevi, the eye of the eye, the divine grace, the Tiru of the Tevaram Saints and the divine Beauty.

All this is not mere theory; it is the experience of the greatest poets and artists—Goethe, Shakespeare, Wordsworth, Shelly, Keats, Tagore and Kamban. True to the traditions of Tamil land and India, our author has emphasized this truth. Various topics of aesthetics are discussed within this frame-work, but the originality of the book lies in delivering the message of the theory of poetry as conceived by the great poets. The author himself is a poet and this book on literary criticism is itself a masterpiece of literature. A few great works on literary criticism have been published in recent times and yet the present work has a place in the Modern World as an original contribution with a message.

Madras,<br>1–5–1954. } **T. P. MEENAKSHISUNDARAN.**

# அணிந்துரை

திரு மலிந்த நாடு நமது தென்னாடு! 'சென்றடையுந் திரு' 'சென்றடையாத திரு' என்னும் இருவகைத் திருவின் வளம் பலவும் இயல்பாகவே அமைந்த எழில் நாடு என்றே இதனைக் கூறலாம்.

தென்னாட்டின் இவ்வுணர்வெழில், செந்தமிழ் மொழியாய்த் திகழ்கின்றது. நுண்ணிய எழிலுணர்வு பெருகுவதற்கு, இம்மொழி, உலக மக்களுக்கே பேருதவியாய் நிற்கின்றது! 'சுடரொளி விளக்கே' என்று இதனை உளமாரப் போற்றலாம்.

'இலக்கணம்' 'இலக்கியம்' என்னும் இருதிறமும் தமிழ் மொழியில் வளமாக உண்டு. பன்னெடுங்காலமாகப் பண்பட்டு இயங்கும் பழைமைச் சிறப்பும் உயிர்க்களையும் அவ்விரண்டுக்கும் உண்டு. 'எண்' என்றும் 'எழுத்து' என்றும் வழங்கும் அவற்றைத் தமிழ்நாடு கண்ணெனப் போற்றி வருகின்றது.

இலக்கணம் அறிவு நிலைக்கும் இலக்கியம் உணர்வு நிலைக்கும் விருந்து! உணர்ச்சியின் வெளியீட்டில் அறிவுக் கருக்கள் அமைந்திருப்பது இயல்பாதலால், இலக்கிய வெளியீட்டில் இலக்கண அமைதி இனிது விளங்கக் காணலாம்.

வெள்ளரிப்பழம் ஒரு வேனில் இலக்கியம் என்றால், அதன் பால் வித்துக்கள் அமைந்திருக்கும் முத்தழகுபோல்வன அதன் இலக்கணம் எனலாம். சாற்றுக்கொடி மரம் வைப்பவனுக்கு இலக்கியம் (லக்ஷியம்) அதன் பழம். ஆயினும் இயற்கை அதனைச் சுளை யொழுங்கு முதலிய இலக்கணங்கள் (லக்ஷணங்கள்) இனிதமைய வெளியிட்டுதவுகின்றது. இலக்கணம் அமையாதது இயற்கையின் உணர்ச்சியில் இல்லை.

ஊன்றிப் பார்ப்பவர்க்கு இலக்கியத்தின் இலக்கணங்கள் தெரியும். இலக்கியங்களை அவற்றின் இலக்கணங்கள் தெரிந்து சுவைப்பவர்க்கே பயன் மிகுதி! அல்லாதார், வெற்றுச் சுவையாளர்; புறச் சுவையாளர்; பொறிச் சுவையாளர்.

இலக்கியச் சுவை வெறும் பொறிச் சுவையன்று; அது, உள்ளத்தின் உணர்வுச் சுவை! புறப் பொறிகளும் புறப்பொருள்களும் உள்ளத்துணர்வின் வீறலுக்கும் மிளிரலுக்கும் இணங்க ஒத்து இயங்குவன. அகப்பொருள் புறப்பொருள் எனப் பொருளிலக்கண இயல்பு பாகுபட்டு வருதலும் அவற்றில் அகப்

பொருளுண்மையே முதன்மையுற்று நிற்றலும் உள்ளுணர்வின் மேம்பாட்டை இனிதுணர்த்தும். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்னும் தொல்காப்பியத்தில் உணர்ச்சியின் முதன்மையும் ஆற்றலும் நன்கு மிளிர்கின்றன.

இலக்கியம் நகை அழுகை முதலிய எண்வகைச் சுவைகளையும் அவற்றின் குறிப்புக்களையும் இடமாகக்கொண்டு தோன்றும் சுவைத்திறம்! இச் சுவைகளெல்லாம் உள்ளுணர்வுக்குரியன என்பது தெளிவு. புறப்பொருள்கள் இச் சுவைகட்கு ஏதுவாயிருப்பனவே யல்லது வேறில்லை.

ஆதலால் இலக்கியத்திறன் என்பது உணர்வுத்திறனே; இலக்கணம் என்பது அவ்வுணர்வின் பல்வகை ஒழுங்கு முறைகளே என்பது இனிது தெளியப்படும்.

இலக்கியச் சுவை, அதன் ஒழுங்கு முறைகளாகிய இலக்கண அமைவுகளை அறிந்து நுகர்வோர்க்கே பெருஞ்சுவை பயத்தலின், இலக்கண அறிவுதான் இலக்கிய ஆராய்ச்சிக்குத் தக்க கருவியாகின்றது. தமிழ்மொழி, உலக மொழிகளிலேயே இலக்கண அமைதி நன்கமைந்த மொழி. இப் பெருமிதத்தை அறிந்த முன்னோர், தமிழ் மொழியை,

"மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?"

என்று வியந்து பாராட்டினர். பொருளிலக்கணம் தமிழிலக்கணத்தில் ஒரு தனிச் சிறப்பு! பொருளிலக்கண மென்பது கருத்திலக்கணம்; உணர்ச்சி யிலக்கணம்; அதாவது, வாழ்க்கை யிலக்கணம்; "வாழ்க்கை தோன்று மிடத்திலிருந்தே இலக்கியமும் தோன்றும்" என்னும் உண்மையின் இலக்கணம். ஆதலால், தமிழ்மொழியிலுள்ள இலக்கண நூல்களே, இலக்கியங்களின் திறனாய்வு நூல்கள் எனலாம்.

இலக்கிய நூல்களைத் தக்கபடி உணர்ந்து அவற்றின் நலங்களில் திளைத்தற்கு, அவற்றின் தன்மைகளை ஆயும் அறிவு இன்றியமையாதது. அவ்வறிவை வளர்த்து வளப்படுத்துதற்குத் திறனாய்வு நூல்கள் (Criticism) பல மொழிகளிலும் தோன்றியுள்ளன. மேனாட்டார் இக் கலையைப் பெரிதும் பொருட்படுத்தி ஆதரித்து வந்துள்ளனர்.

ஆங்கிலத்தில், இலக்கியத்தின் பொது இயல்புகளை விளக்கும் நூல்களே யன்றி, அதன் வகைகளின் தன்மைகளையும், அவ்வகைகளில் சிறப்புடைய நூல்களின் செவ்விகளையும் விளக்குதற்கு எழுந்துள்ள நூல்களும் பலப்பல. செகப்பிரியர் நாடக நூல்களைப் பற்றி எழுந்த ஆய்வு நூல்கள் மிகப்பல.



தமிழில் வெளிவரும் நூல்களுக்கு நாளிதழ்களிலும் கிழமை திங்கள் வெளியீடுகளிலும் அவ்வப்போது மதிப்புரை வெளியிடுகின்றனர். இவையும் திறனாய்வின் வகைகளே! இம் மதிப்புரைகளுக்கு அடிப்படையான கோட்பாடுகள், இலக்கண விதிகளை வைத்தும் வழக்காறுகளைப் பற்றியும் உரையாசிரியர் அறிவு ஆட்சிகளை ஒட்டியும் அமைந்தவை. அன்றி, மேனாட்டு இலக்கியத் திறனாய்வு [1]அளவைகளை வைத்தும் சிலர் தமிழ் நூல்களை மதிப்பிடுகின்றனர். பன்மொழி இலக்கியங்களின் அடிப்படை உண்மைகள் ஒத்த தன்மையனவாதலின், பிறமொழி ஆய்வுப் பொது அளவைகளைக்கொண்டு மதிப்பிடுதல் பொருந்தாததன்று. எனினும், ஒவ்வொரு மொழிக்கும் தனித்தன்மைகள் இருத்தலும் உண்மையாதலின், பொது ஆய்வுக் கோட்பாடுகளை, மொழியின் சிறப்பியல்களுக்குப் பொருந்துமாறு உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இக் கோட்பாடும் தமிழுலகில் நிலவி வருகின்றது. இதனையொட்டி வெளிவந்த நூல்களும் உள்ளன. எனினும், இலக்கிய ஆய்வுக்கலையின் நுட்பம் அகலம் ஆழங்களை விளக்க இன்னும் நல்ல நூல்கள் தமிழில் வெளிவரவேண்டும். பழைய இலக்கண நூல்கள் திறனாய்வின் அடிப்படையில் எழுந்தனவேயாயினும், அவை மிகச் சுருக்கமாகவும் நூற்பா வடிவிலும் இருத்தலின், விளங்கிய உரைநடையில் விரிவாகத் தமிழில் வெளிவர வேண்டும். இப் பெருங்குறையை இந் நூலாசிரியர் மிக்க வள்ளன்மையோடு தீர்த்திருக்கின்றார். இத் திறனாய்வு நூலைப்போல இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறும் நூல் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை.

பல மொழி இலக்கியங்களுக்கும் பொதுவாகக் கொள்ளத்தக்க கோட்பாடுகளோடு தமிழுக்குள்ள சிறப்பியல்புகளை இந் நூல் மொழிநடையிலும் கருத்து விளக்கத்திலும் நன்கு தழுவிச் செல்கின்றது. அவை தாமும் ஆராய்ச்சி முறையில் சோதனை செய்யப்பட்டுத் தக்க இடங்களில் எடுத்துக் காட்டுகளால் விளக்கப்படுகின்றன. தமிழ் மரபின்படி நில வகைக்கும் திணை வகைக்குமுள்ள இயைபு எங்ஙனம் பொருந்து மென்பது ஆராயப்படுகின்றது. ஆசிரியரின் தனித்தன்மைகள் அவர் நூல்களில் மலரும் உண்மை, கம்பரும் நக்கீரரும் இயற்றியுள்ள நூல்களின் சில இயல்புகளைக்கொண்டு விளக்கப்படுகின்றது.

---

1. Standard.

ஒரு குறித்த பயனை அளிக்கும் வகையில் பாடப்புத்தகமாக எழுதப்பட்டதன்று இந்நூல். இலக்கியத்தையும் அதனோடு தொடர்புடைய பல பொருள்களையும் மாணவரே யன்றி அறிஞர் பலரும் விரும்பிக் கற்றுத் திளைக்கும் வகையில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சிறுசிறு தலைப்புகளை நோக்கும்போதே இவ்வுண்மை வெளிப்படும். "இயற்கை யமைப்பு, ஆக்கவியல், பொருள் பற்றிய நாகரிகம், அருள் பற்றிய நாகரிகம், அறிவு, அறிவு மண்டலம், அறிவும் காட்சியும், மெய்யுணர்வு" முதலிய சிறு தலைப்புகளின் கீழ், இலக்கியத்துக்கே யன்றி அருங்கலைகள் பிறவற்றிற்கும் இன்னும் கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையான பொருள்களைப் பற்றிய கருத்துக்கள் ஆராயப்படுகின்றன. அங்ஙனம் ஆராய்ந்து பெறப்படும் முடிபுகளுக்கிடையில், இலக்கியம், பிற அருங்கலைகளோடு அண்டத்தோற்றத்தில் இயல்பாக அரும்பி, மக்கள் வாழ்க்கைத் தரத்தொடு வளர்ந்து உருவாகியுள்ள வகை திட்பமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் முடிபு 'வாழ்க்கை தோன்றுமிடத்திருந்தே இலக்கியமும் தோன்றும்' என்ற தலைப்பைக்கொண்டு நிற்றலைக் காணலாம்.

ஆங்கிலத்தில் தோன்றியுள்ள பல நூல்களில், இலக்கியத்தின் தன்மை பற்றி ஆராய்ந்து கண்ட உண்மைகள் அவற்றின் ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளன. இக் கோட்பாடுகள் ஓரளவு பல ஆசிரியர்க்கும் ஒப்ப முடிந்தனவே யெனினும், தனிப்பட்ட ஆசிரியரின் கருத்துக்களுக் கிணங்கக்கொண்ட முடிபுகளும் உள்ளன. அவற்றிற் சிலவற்றை இந்நூலாசிரியர் மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். எனினும், இலக்கியம் இன்னதென்பதும் அதை உணரும் முறைகள் இன்னவென்பதும் இந்நூலாசிரியரின் தனிப்பட்ட கருத்துகளுக் கிணங்கவே அமைந்துள்ளன.

இந்நூலின் முதற் பகுதியில் இலக்கிய நூலின் 'கரு' அமையும் வகை உணர்த்தப்படுகின்றது. அண்டத்தோற்றத்துக்கு முதலாகும் ஆக்கவியலே இலக்கியத்திற்கும் முதலாகும் நோக்கை யொட்டிக் கருத்தமையும் என்பன கூறி, அந்நோக்கின் மாண்பு ஆழங்களை எடுத்துக்காட்டி, அதன் வழியமையும் கருத்தின் உண்மைக்குத் தக்கபடி திருவருள் வாய்த்த வழி, பிற அருங்கலைகளை யொத்து, இலக்கியமும் அழகிய வடிவொடு தோன்றும் என்பதும் இப்பகுதியில் விளக்கப்படுகின்றது.

பொருளை விளக்கிச் செல்லும் வகையில், உலக வழக்கு நாடக வழக்கு புலனெறி வழக்காதியன ஆராயப்படுதலோடு, முனிவர் புலவர்களின் தன்மைகள், திருவருள், அது வந்தெய்தும் நிலை, திருவருள் வாய்ப்பு முதலிய அரிய பொருள்கள் தெளிவுறுத்தப்படுகின்றன.



இரண்டாவது பகுதியில் இலக்கிய நூல்களின் வடிவு அழகுடையது என்னும் உண்மையை அடிப்படையாகக்கொண்டு, அவை தோன்றும் நாட்டின் நாகரிகம் மொழியின் சிறப்பியல்புகள், ஆசிரியரின் இயற்கைப் பண்புகள், கல்வி பருவம் அனுபவம் ஆதியவற்றிற் கிணங்க இலக்கிய நூல்கள் அமைதல் காட்டப்பட்டுள்ளது.

இன்னும், இலக்கியத்துக்குரிய பொருள், அதன்வகை, அவற்றை நூல்களாக யாக்கும் செயல், யாத்த நூல் நடைகளின் பரிசு, அவற்றின் வகை, பா உரைகளுக்கேற்ற நடைப் பண்புகள் போல்வனவும் இப் பகுதியில் ஆராயப்படுகின்றன. நடையைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் வழக்கே யாயினும் நடை இன்னதென்று தமிழில் இதுவரை ஆராயப்படவில்லை. அவ்வகைமை இந்நூலில் ஆராயப்படுகின்றது. மேலும், நூல்களெய்தும் வடிவங்களுக்குச் சார்புகளாக அமையும் பல பொருள்களும் நூல் வகைகளுக்கேற்ற ஆசிரியரின் அமைதியும் கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பெரிய புராண நூற் பொருளுக்கேற்ப அதன் ஆசிரியர் வாய்ப்பு மொழியப்படுகின்றது.

'இன்பம், போலியின்பம், பேரின்பம், சிற்றின்பம்' என்னும் தலைப்பின் கீழ் அவற்றின் பரிசுகள் தெளிவுறுத்தப்படுகின்றன.

இன்பத்தை யளிக்கும் சுவைக்கு அடிப்படை அழகு என்ற கருத்தை எடுத்துக்கொண்டு பல சுவைகளின் இயல்புகளும் ஆராயப்படுகின்றன.

நல்லாரிணக்கத்தை யளிக்கும் கழகம், தவப்பேறு, வரனென்னும் வைப்பு, தத்துவ ஞானம், கலைகளின் தாயகம், எல்லா உயிர்க்கும் பொருந்திய ஞானம், நானிலத்தின் செம்பொருள், வான் பொருள், பொற்றலை, தேன், சீரிளமை, முருகு, விருந்து, அமுதம், மருந்து, விஞ்சை, கண்ணளிக்குங்கண், தெய்வ மணம், திருப்புகழ், நீடும் பொருள், கற்பகம், இறையுவக்கும் தெள்ளமுது, பெரு வாழ்வு, இன்ப வெள்ளம் என்னும் தலைப்புகளின் கீழ் இலக்கிய நலன்கள் பலவும் மூன்றும் பகுதியில் தெளிவாகச் சித்திரிக்கப்படுகின்றன.

நாட்டின் புகழுக்கு வரம்பாக நிற்கும் இத்தகைய இலக்கிய நூல்களைத் தரும் இலக்கிய ஆசிரியரின் பண்புகள், அவர்கள் இறைவன் கைக்கருவிகளாக அமைதல், அவர்கள் கடமை முதலிய பொருள்களும் நூலின் முப்பகுதிகளிலும் ஏற்ற ஏற்ற இடங்களில் விளக்கமாக ஆராயப்படுகின்றன.

இனித் தொடர்புடைமை பற்றி நாகரிகத்தின் பரிசும், இக்கால நகர வாழ்க்கையின் போக்கும், மன்பதை பெரிதும் பொருட்படுத்திக் கண்டும் கேட்டும் களிக்கும் பேசும் படத்தின் இயல்பும் ஆராயப்படுகின்றன.

முடிவாக, இவ்வண்டத் தோற்றத்திற்கு முதலாகிய இறையும் அதன் கருத்தும் மறையாக நிற்கும் இயல்பையும், அம்மறையை இகந்து இமைக்கும் திருவையும், திருவிடை மலரும் இறை மணத்தையும் பேசி இலக்கியம் தரும் இன்ப வெள்ளத்தில் திளைத்தலோடு முடிகின்றது இந்நூல்!

தமிழாசிரியர்க்கும் தமிழ் பயிலும் மாணவர்க்கும் இந்நூல் ஒரு புதுத் திறவுகோல்! இத்தகைய அரிய பெரிய புதுத் திறனாய்வு நூலைத் தமிழன்னைக்கு இயற்றி அணிவித்த பெரியார், சென்னை அரசினர் மாவட்ட ஆவணப் பதிவாளராய் ஓங்கி விளங்கும் தமிழ்வளத் திருவினர் J. முத்து வீராசாமி நாயுடு B. A., அவர்கள். அண்மையில் இவர்கள் 'எழில்' என்னும் கவிதை நூலையும் தக்க ஆராய்ச்சி முன்னுரையோடு தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழன்னையின் புதவப் தல்வராயும், ஆழ்ந்து அகன்ற நுண்மாண் நுழைபுலச் செல்வராயும் திகழ்கின்ற இவர்களால், தமிழ்மொழி பல்வகை எழிலும் மேன்மேற் பெற்று உலக அரங்கில் தனிச்சிறப்பில் உயர்ந்து, யாவரும் அறியாப் பேருணர்வுப் பெரும் பயனை விளைத்து நிற்பது உறுதி! தமிழ்க்கு இப் பெருநூலை வழங்கிய இவர்களைத் தமிழ் வள்ளல் என்று வாயார வாழ்த்துகின்றோம்.

நூல் செவ்வியின் தமிழ் மக்கட்கும் உலகவர்க்கும் நீடு நின்று விளங்கிப் பயன் விளைப்பதாக!

சென்னை,
23-2-1953

**ரா. பி. சேதுப்பிள்ளை.**

# கருத்துரை

உயர்ந்தோர் உள்ளத்தே கருவுற்றிருந்து உருப்பெற்றிலங்கி நலன் பயப்பது இலக்கியம் என்னும் உண்மையை விரிந்த நூலாக்கித் தந்துள்ளார் இதன் ஆசிரியர் திரு. முத்துவீராசாமி நாயுடு அவர்கள். இலக்கியச் செவ்வி என்னும் இந்நூல் இதுகாறும் போற்றப்பட்டு வந்துள்ள இலக்கியம் பற்றிய சிறந்த கொள்கைகள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சமயம், அறநெறி, கலை ஆகிய எல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படுமாறு அமையும் நல்லதொரு கலையே இலக்கியம் என்பதை ஆசிரியர் அழகுபட எடுத்துக்காட்டியுள்ளார்.

தொல்காப்பியம் முதல் மேலைநாட்டு அறிஞர்களின் ஆய்வு நூல்கள் வரையில் பலதிறப்பட்ட நூற் கருத்துக்களையும் சுவைபட இயைத்து மேற்கோள் காட்டிச் செல்லும் போக்கு நயம் மிகப் பயப்பதாக உள்ளது. விளக்கத்தின் பொருட்டு ஆங்காங்குத் தரப்பட்டுள்ள உவமைகள் இன்சுவை ஊட்டுவனவாக உள்ளன. திரு, திருப்புகழ், சீரிளமை முதலாய சொற்கள் பலவற்றை எடுத்தாண்டிருக்கும் தகவு, தமிழ்மொழியின் தனிச்சிறப்பைப் புலப்படுத்த வல்லதாக மிளிர்கின்றது.

அருங்கலைகளின் பெற்றியை ஆங்காங்குத் திறம்படப் பொறித்து அவற்றுள் இலக்கியத்தின் தனிச்சிறப்பை இனிதின் விளக்கியுள்ளார். இந் நாளைய நாகரிகத்தின் போலித்தன்மைகளை ஆசிரியர் சுட்டிச் செல்லும் இடங்கள், அறிவியல் முன்னேற்றத்தையே பெரிதென மதிப்பவர் உளங்கொளற் குரியன. இந் நூலாசிரியர் பரந்த உலகை நோக்கி, படைப்பின் நோக்கங்களை உய்த்துணர்ந்து, உள்ளத்தின் பெற்றியையும் ஆய்ந்தறிந்து, இவற்றினை மறவாமல் இலக்கியச் செவ்வியை அறிமுகப்படுத்தும் முயற்சி போற்றத்தக்கது. வாழ்க்கையில் அமைதியையும் எளிய வாழ்வையும் நாடி ஒழுக்க நெறியில் நின்று அறத்தைப் போற்றி அன்பை வளர்க்கும் ஆர்வம் நிறைந்தவர்க்கே இத்தகைய நூல் எழுதுதல் இயல்வதாகும்.

ஆசிரியரே கூறுமாறு, உயர்ந்த இலக்கியம் பலராலும் போற்றப்படும் நிலை எய்தவில்லை. இலக்கிய ஆராய்ச்சியோ மிகச் சிலராலேயே விரும்பப்படுவது. அதனினும், காய்தல் உவத்தல் அகற்றி, கால வேகத்தையும் பொருட்படுத்தாது கருத்துக்களை அறிவிப்பவர்க்கு ஒரு சிலரே செவி கொடுப்பர். அத்தகைச் சிலர்க்கே இந்நூல் பயன்படும். அவர் சார்பாக ஆசிரியர்க்கு நன்றி கூறுதலே என் கடமையாகும்.

**மு. வரதராசன்.**

# தந்துரை

திருவாளர் முத்துவீராசாமி நாயுடு அவர்கள் இயற்றிய "இலக்கியச் செவ்வி" என்ற நூலைப் படித்துப் பார்த்து மிக்க மகிழ்ச்சியுற்றேன். இலக்கியத்திறனாய்வு பற்றி இதைப்போன்றதொரு நூல் தமிழ்மொழிக்கு இன்றியமையாத தொன்றே. "இலக்கியக்கலை" என்ற தலைப்பில் திரு. அ. ச. ஞானசம்பந்தம் நல்லதொரு பனுவல் அமைத்துத் தந்துள்ளார். ஆயினும் திரு. முத்து வீராசாமி அவர்களின் நூல்போன்ற நூல்களுக்கு இன்னும் இடம் உண்டு. இது நல்ல இனிய தூய தமிழில் யாக்கப் பட்டுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துக்களும், மேனாட்டார் இலக்கிய ஆய்வுபற்றிக் கொண்டுள்ள கருத்துக் களும் பொருத்திக்காட்டப் பெற்றிருப்பதன்றியும், தமிழிலக்கியங்கள் அக்கருத்துகளுக்குத்தக எவ்வாறு அமைந்துள்ளன என்பதும் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வாசிரியருடைய அகன்ற அறிவும் ஆழ்ந்த கருத்துக்களும் நூலினால் நன்கு விளங்குகின்றன. ஆவணக் களரியில் அலுவல் பார்க்கும் ஒருவர் இத்தகையதொரு அருமையான ஆராய்ச்சி நூலினால் தமிழன்னையைப் புனைய எழுந்தது மிகவும் பாராட்டுதற்குரியது.

இந்நூலாசிரியர் ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, கேதே, தாகூர் போன்றவர்களின் இலக்கியங்களைப் படித்துத் துய்த்தவர் என்பதும், பத்துப்பாட்டினை மனத்தினால் நன்றாகப் பற்றியுள்ளவர் என்பதும், இலக்கணத்தோடு இயைந்த கற்பனைகள் நிரம்பிய எட்டுத்தொகை நூல்களைக் கற்று மகிழ்ந்துள்ளவர் என்பதும் திருக்குறளிலும் சிலப்பதிகாரத்திலும் இறையனார் களவியலுரையிலும் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தவர் என்பதும் இனிது புலப்படுகின்றன. அவ்வாறே கம்பராமாயணத்தின் இலக்கிய நயங்களில் இவ்வாசிரியருக்குள்ள ஈடுபாடு விளங்குகின்றது.

அருள் நிலையொடு தொடர்புடைய மாந்தர் இயற்றும் நூல்களே தலைசிறந்தன என்பதும், அருளினின்று விலகியார் இயற்றும் இலக்கியங்கள் அத்துணைச் சிறந்தவையல்ல என்பதும் இவ்வாசிரியர் கருத்து. இஃது ஆய்தற்கு உரியது.

வடிவத்தைக்கொண்டே ஒன்றனைச் செய்யுள் என்றோ உரை என்றோ கொள்ளுதல் பொருந்தாது என்னும் கருத்தினைத் தக்க



சான்றுகளுடன் ஆசிரியர் விளக்கியுள்ளார். இலக்கியத்திற்குரிய பொருள், பொருள் வகை, அணியற்ற செந்நடை, உணர்வு தோயப்பெறாத பொருட் பட்டிகள் ஆகியவை பற்றி ஆசிரியர் குறிப்பிட்டிருப்பவற்றைச் சிறப்பாகப் பாராட்டுகின்றேன். "பா" என்பதற்குப் பேராசிரியர் கூறியுள்ள சொற்பொருளைக் காட்டிலும் ஒருபடி தாண்டி, அதன் வரி வடிவத்தையொட்டிப் புதியதொரு பொருள் கண்ட பெருமை இவ்வாசிரியருக்கு உரியது.

இந்நூலை அமைத்துத் தந்துள்ள பெரியார் முத்துவீராசாமி நாயுடுவுக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டுளர் என்பது உறுதி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.
29—10—54

அ. சிதம்பரநாதன்.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | ௩ |
| முன்னுரை | ௫ |
| ஆங்கில முன்னுரை | ௭ |
| அணிந்துரை | ௧௧ |
| கருத்துரை | ௧௭ |
| தந்துரை | ௧௮ |
| பயன்பட்ட நூல்கள் | ௨௭ |

## க. கரு

| | | |
|---|---|---|
| 1. | இயற்கை யமைப்பு | 1 |
| 2. | கலைகளின் தோற்றம் | 5 |
| 3. | கலைவகை | 6 |
| 4. | அருங்கலைகளின் மாண்பு | 7 |
| 5. | நாகரிகப் போக்கும் கலைகளும் | 8 |
| 6. | பொருள்பற்றிய நாகரிகம் | ,, |
| 7. | அருள்பற்றிய நாகரிகம் | 9 |
| 8. | ஆக்கவியல் | 14 |
| 9. | பல நாகரிகங்களிடையும் தோன்றிடும் அருங்கலைப் பேறு | 15 |
| 10. | அறிவு | 17 |
| 11. | அறிவு மண்டலம் | 18 |
| 12. | அறிவும் காட்சியும் | 19 |
| 13. | மெய்யுணர்வு | 20 |
| 14. | புலனெறி வழக்கு | 21 |
| 15. | உலகவழக்கு | 23 |
| 16. | நாடக வழக்கு | ,, |
| 17. | மறை | 26 |
| 18. | முனிவரும் புலவரும் | 27 |
| 19. | நோக்கு | 28 |
| 20. | நோக்கின் மாண்பு | 29 |
| 21. | நோக்கத்தை யொட்டிச் சுவை யமைதல் | 31 |
| 22. | திருவருள் | 32 |

| | | பக்கம் |
|---|---|---|
| 23. | திருவருள் வந்தெய்தும் நிலை | 35 |
| 24. | இலக்கிய ஆசிரியன் இறைவன் கைக்கருவி | 36 |
| 25. | திருவருள் வாய்ப்பு | ,, |
| 26. | இலக்கிய ஆசிரியர் வாழ்க்கைப் பரிசு | 39 |
| 27. | அகண்ட தத்துவம் | 45 |
| 28. | ஆழ்ந்த நோக்கு | 46 |
| 29. | உள்ளத் தெழுச்சி | 47 |
| 30. | உள்ளத் தகவு | 48 |
| 31. | கருத்துண்மை | 49 |
| 32. | இலக்கியம் இயற்கையாகத் தோன்றுதல் | ,, |
| 33. | இலக்கியம் இயல்பில் இயற்கையா ? அன்றிச் செயற்கையா ? | 50 |
| 34. | இலக்கியம் இயற்கையினும் மேம்பட்டது | ,, |
| 35. | எழிலமைப்பு | 51 |
| 36. | எழிலுணர்ச்சி | 52 |
| 37. | உண்மை அழகுபட மலரும் வகை | 54 |
| 38. | உண்மை எழில்பட மலருந் தன்மையில் அருங்கலைகள் தோன்றுதல் | 55 |
| 39. | பா | 56 |
| 40. | இலக்கியக் கருவின் சிறப்பு | 58 |


## உ. உரு


| | | |
|---|---|---|
| 1. | இலக்கியத்தின் முதல் | 61 |
| 2. | யாத்தல் ஒரு தனிக் கலை | 62 |
| 3. | யாக்கும் திறம் இயல்பாக அமைதல் | 63 |
| 4. | கருவற்றனவே, உயிரற்ற போலி நூல்கள் | 64 |
| 5. | ஆக்கவியலின் உருவம் அழகு | ,, |
| 6. | இலக்கியத்திற்குரிய பொருள் | 65 |
| 7. | பொருள் வகை | 66 |
| 8. | பொருட்பரிசு | 72 |
| 9. | அழகில் அறம் நிலவல் | ,, |
| 10. | அறத்தான் வருவதே இன்பம் | 73 |
| 11. | வாழ்க்கை தோன்றுமிடத்திருந்தே இலக்கியமும் தோன்றும் | 74 |
| 12. | கரு உருவெய்தும் வகை | 76 |
| 13. | கருத்தின் தெளிவு | 78 |
| 14. | கருத்தின் ஆழம் | ,, |
| 15. | வேட்கைப் பித்தம் | 80 |





| | | பக்கம் |
|---|---|---|
| 16. | நூலின் படிவம் முற்றும் ஒரு சேர அமைதல் | 81 |
| 17. | ஆசிரியன் மதி நுட்பம் | 82 |
| 18. | உணர்ச்சியும் நூல் வடிவும் | 86 |
| 19. | பொய்யடிமை யில்லாத புலமை | 88 |
| 20. | கோட்பாடும் நூலுருவும் | 90 |
| 21. | ஆசிரியன் பருவமும் நூற்போக்கும் | 92 |
| 22. | ஆசிரியன் அனுபவமும் நூலமைப்பும் | ,, |
| 23. | மொழி வழக்கும் நூல் வடிவும் | 93 |
| 24. | காட்சித் திறமும் நூலின் செவ்வியும் | 94 |
| 25. | புலனெறி வழக்கும் நூல் வடிவும் | 98 |
| 26. | சார்புகள் | 102 |
| 27. | முதற்பொருள் | 104 |
| 28. | கருப்பொருள் | 110 |
| 29. | உரிப்பொருள் | 111 |
| 30. | பொருந்தாச் சார்புகள் | 115 |
| 31. | இல்க்கியம் இன்னதென்பது | 117 |
| 32. | பாவுக்கும் உரைக்கும் உள்ள தொடர்பு | ,, |
| 33. | பா உரைகளுக்குரிய மொழிவகை | 122 |
| 34. | செய்யுள் மொழி | 124 |
| 35. | உரைநடை மொழி | ,, |
| 36. | கருத்தும் மொழியும் | 125 |
| 37. | நடை | 127 |
| 38. | மொழிதலுண்மை | 128 |
| 39. | தனித்தன்மை | 130 |
| 40. | தனித்தன்மை மலர்தலில் இயற்கைப் போக்கு | 137 |
| 41. | பொருளைத் தகவிள்ளும் நடையின் இயல்பு | 140 |
| 42 | அணியற்ற செந்நடை | 141 |
| 43. | அணிகொண்ட வளநடை | 143 |
| 44. | பொருளின் பெற்றி, நடையின் ஓசை விசைகளில் மலர்தல் | 144 |
| 45. | ஓசை | 145 |
| 46. | நூலின் வடிவம் | 148 |
| 47. | நூலின் அளவு | ,, |
| 48. | பேச்சும் நூலும் | 149 |
| 49. | எளிய நூலினம் | 151 |
| 50. | உணர்ச்சி தோயப்பெருத நூற்பகுதிகள் | 152 |
| 51. | நூலின் உறுப்புக்கள் | 153 |
| 52. | நூற்பகுதிகளின் வரிசை | 154 |
| 53. | உள்ளுறையும் பகுதிகளும் | ,, |

| | | பக்கம் |
|---|---|---|
| 54. | அலைப்போக்கு | 155 |
| 55. | நூலாசிரியன் அமைதி | " |
| 56. | நூலுக்கு உருவளிக்கும் தறுவாயில் ஆசிரியன் உள்ளத்தின் நிலை | 157 |
| 57. | யாத்தற்குரிய பொழுது | 158 |
| 58. | யாக்கும் வகையை மறைத்துவிடுதல் | 159 |
| 59. | இலக்கியத்தின் செவ்வி | 161 |
| 60. | அதனை முற்றும் மொழிதற்கியலாமை | " |


## ௩. நலன்


| | | |
|---|---|---|
| 1. | திரு | 163 |
| 2. | திருக்கோயில் | 165 |
| 3. | மிதிக்குங் கல்லும் வணங்குங் கல்லும் | 166 |
| 4. | திருமணக்குந் துறைகள் | 168 |
| 5. | செஞ்சொற்கலை | 169 |
| 6. | அருங்கலைச் செல்வங்களைத் தருவோர் உள்ளப் பரிசு | 170 |
| 7. | நல்லா ரிணக்கத்தை யளிக்கும் கழகம் | 171 |
| 8. | தவப்பேறு | 173 |
| 9. | வரனென்னும் வைப்பு | 175 |
| 10. | சமயமும் இலக்கியமும் | 176 |
| 11. | தத்துவஞானம் | " |
| 12. | கலைகளின் தாயகம் | 177 |
| 13. | எல்லாவுயிர்க்கும் பொருந்திய ஞானம் | 178 |
| 14. | வான்பொருள் | 179 |
| 15. | நானிலத்தின் செம்பொருள் | 181 |
| 16. | மண்ணரசும் மன்னரசும் | " |
| 17. | பொற்றளை | 182 |
| 18. | தன்மதிப்பு | 183 |
| 19. | துறவு | 184 |
| 20. | இலக்கிய ஆசிரியர் பெறும்பேறு | 186 |
| 21. | புகழும் கடமையும் | 187 |
| 22. | சுவை | 188 |
| 23. | முதல் இடை கடைச் சங்கங்கள் | 189 |
| 24. | பருவப் போக்கும் சுவையும் | " |
| 25. | சுவை வகை | 191 |
| 26. | பிற சுவைகள் | 196 |
| 27. | இயற்கைக் காட்சி | " |
| 28. | சுவைக்கு முதல் அழகு | 198 |





| | | பக்கம் |
|---|---|---|
| 29. | அவலம் | 199 |
| 30. | நகை | 203 |
| 31. | அங்கதம் | " |
| 32. | விள்ளும் ஆற்றல் | 204 |
| 33. | கருத்தின் முதிர்வு உணர்ச்சியின் வீக்கம் | 205 |
| 34. | மொழி நயம் | 206 |
| 35. | தேன் | 207 |
| 36. | சீரிளமை | " |
| 37. | முருகு | 209 |
| 38. | விருந்து | 210 |
| 39. | அமுதம் | 211 |
| 40. | மருந்து | 212 |
| 41. | விஞ்சை | 214 |
| 42. | கண்ணளிக்குங்கண் | 215 |
| 43. | கலங்கரை விளக்கம் | " |
| 44. | இலக்கியச் செவ்வியின் உண்மை | 216 |
| 45. | அருங்கலைகள் பலவற்றின் ஒத்த நலன் | 217 |
| 46. | இலக்கியத்தில் அறத்தின் கூறு | 218 |
| 47. | இன்பம், போலி யின்பம், சிற்றின்பம், பேரின்பம் | 219 |
| 48. | பிற அருங்கலைகளில் அறத்தின் கூறு | 220 |
| 49. | இலக்கியமும் பிற அருங்கலைகளும் | 223 |
| 50. | இலக்கியத்தின் சிறப்பு | 224 |
| 51. | இசை நாடகங்களினும் இயல் சிறந்தது | 228 |
| 52. | குறிப்புரை | 229 |
| 53. | சொல்லாது சொல்லுதல் | 230 |
| 54. | பேசும் படம் | 232 |
| 55. | அதனிடம் புன்சுவை பொருந்தி நிற்றல் | 233 |
| 56. | அஃதோர் அருங்கலையேயோ | 235 |
| 57. | அஃதிந்நாள் நாகரிகத்தின் பிள்ளை | 236 |
| 58. | நாகரிகமும் மக்களியல்பும் | 237 |
| 59. | நாகரிகத்தின் மற்றொரு அருமை மகவு | 238 |
| 60. | புலவர் | 239 |
| 61. | எட்டுச் சுரைக்காய் | 240 |
| 62. | காலப் போக்கு | " |
| 63. | ஓய்வும் நாகரிக வளர்ச்சியும் | 242 |
| 64. | நகர வாழ்க்கை | " |
| 65. | காலப்போக்கும் இலக்கியமும் | 245 |
| 66. | மறுமலர்ச்சி | 247 |
| 67. | தெய்வ மணம் | " |

| | | பக்கம் |
|---|---|---|
| 68. | திருப்புகழ் | 251 |
| 69. | பூப்பு | 252 |
| 70. | பருவத்தை இகந்த செவ்வி | 255 |
| 71. | நீடும் பொருள் | ,, |
| 72. | கற்பகம் | 257 |
| 73. | இறை யுவக்கும் தெள்ளமுது | ,, |
| 74. | பெரு வாழ்வு | 258 |
| 75. | மறை பொடித் திமைக்குந் திரு | 259 |
| 76. | திருவிடை யிமைக்கும் இறை | 260 |
| 77. | இன்ப வெள்ளம் | 262 |
| | பின்னிணைப்பு | 265 |
| | அருஞ்சொற்பொருள் அகரவரிசை | 277 |


# பயன்பட்ட நூல்கள்


## தமிழ்

1. திருமுருகாற்றுப்படை
2. இறையனுர் அகப்பொருள்
3. இராமாவதாரம்
4. தொல்காப்பியம்
5. சரசுவதியந்தாதி
6. பெரியபுராணம்
7. புறநானூறு
8. திருக்கோவையார்
9. தாயுமானவர் பாடல்
10. பட்டினப்பாலை
11. தனிப்பாடல்
12. நெடுநல்வாடை
13. திருவருட்பா
14. கலிப்பா
15. சிலப்பதிகாரம்
16. எழில்
17. திருப்புகழ்
18. நளவெண்பா
19. குறிஞ்சிப் பாட்டு
20. திருக்குறள்
21. முல்லைப்பாட்டு
22. நன்னூல்
23. தேவாரம்
24. திருவாசகம்
25. பொருநராற்றுப்படை
26. பட்டினத்தார் பாடல்
27. குறுந்தொகை
28. மனோன்மணீயம்
29. நீதிநெறி விளக்கம்
30. திருவிளையாடற்புராணம்

## ஆங்கிலம்

1. Gitanjali — R. Tagore
2. The Gardener— ,,
3. What is art— ,,
4. Voice of silent millions—H. N. Brailford
5. Gilded gold—Francis Thompson
6. In her paths— ,,
7. The mistress of vision— ,,
8. Sister songs, the proem— ,,
9. Her portrait— ,,
10. The worlds way—W. Shakespeare
11. As you like it— ,,

12. Hamlet—W. Shakespeare
13. The Holy Bible— „
14. An introduction to the study of literature—William Henry Hudson
15. Poetry—John Henry Newman
16. The hero as poet—Thomas Carlyle
17. A defence of poetry— P. B. Shelly
18. To a sky lark— „
19. Stanzas written in dejection near Naples „
20. Rabbi Ben Ezra—Robert Browning
21. Poetry and poetic diction—William Wordsworth
22. Poetry and its varieties—John Stuart Mill
23. Life of Swami Vivekananda
24. My first acquaintance with poets—Hazlitt
25. Shakespeare ; or, the poet—R. W. Emerson
26. The Choice of subjects in poetry—Mathew Arnold
27. Sesame—John Ruskin
28. The Bhagavad Gita (Translation by D. S. Sarma)
29. Life of Sri Ramakrishna
30. An answer to the question what is poetry—James Henry Leigh Hunt
31. Ode on a Grecian urn—John Keats
32. Endymion— „
33. Break Break Break—Lord Tennyson
34. On his blindness—John Milton
35. Paradise Lost— „

# கரு

**இயற்கை யமைப்பு**

பாரின் நலன் இளவேனிற் பருவத்தில் செழித்துப் பொங்கி வழிகின்றது ; பசும் புல்லும் சிறு புதல்களும் தளிர்த்துத் தரையை அணிசெய்து நிற்கின்றன ; தளிர்களோடும் பூங்கொத்துக்களோடும் காய்குலைகளோடும் மரஞ் செடி கொடிகள் மலிந்து நிற்கின்றன ; போதுகளின் இதழ்கள் அவிழத் தேனும் தாதும் சிந்துகின்றன ; தேனீக்களும் வண்டினம் பிறவும் பொம்மென ஒலித்து மொய்த்து மதுவுண்டு இசை முரல்கின்றன ; காய்கள் பழுத்துத் தேன் ஒழுக அளிந்து விரிகின்றன ; பறவைகள் திரள் திரளாகக் கூடி அப் பழங்களை யுண்டு களித்துப் பாடி யாடுகின்றன ; ஒரோவொரு வழி, கருமுகில்கள் நீல வானவெளியில் தவழ்ந்து சென்று மழைத்தாரைகளைச் சொரிகின்றன ; முத்தினங்கள் போன்ற மழைத்துளிகள் தளிர்களிலும் இதழ்களிலும் கனிகளிலும் அசைந்து நிற்கின்றன ; தட்பம் செறிந்த தென்றல், நறுமணம் பொருந்திய பூந்தாதுகளையும் தேன்துளிகளையும் வாரித் தெளித்து உலவித் திரிகின்றது ; மக்கள் மனவெழுச்சி யுறுகின்றனர் ; மணவணியும் விழாவணியுங் கண்டு மகிழ்கின்றனர் ; செவ்விய தீவிய கனிகளை யுண்டு அவற்றின்

சுவைகளில் திளைக்கின்றனர்; சிறார் மலர் கொய்து சூடி, விளையாட்டயர்கின்றனர்; தண்மதியின் நிலவு துய்த்துக் காதலர் இன்பவெள்ளத் தாழ்கின்றனர். பாரின் நலன், இன்பம் பயக்கும் அழகிய உருவங்களாகவும் மெல்லிய ஊறுகவும் [1]தென்னிசையாகவும் நறுமணமாகவும் இன்சுவையாகவும் பெருகி, விருந்தாகி, உள்ளத்தின் எழுச்சியிற் றோன்றும் கருத்துக்களையும் மெய்ப்பாடுகளையும் ஒழுக்கங்களையும் மலர்வித்து, அச் சுவைகளைத் துய்க்கும் உணர்வையும் எழுப்பி, அமைந்த துய்ப்பில் இனிக்கின்றது. இத்தன்மைத்தான நலன், பாரினிடத்தும் பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் பொதிந்து நின்று, இளவேனிற்பருவம் அணுகும்போது அரும்பி மலர்வது போன்றே, ஒவ்வொரு நாட்டினரின் நலனும் அந் நாட்டினரிடத்தே பொதிந்து நின்று, உற்ற பருவத்தே மலரும். நாட்டின் வளம் பொதுவாகப் பொருளளவிலேயே கண்டு மதிக்கப்பெறு மெனினும், திருவருள் மணங்கமழும் இலக்கியம் முதலிய அருங்கலைகளே அழியாத விருந்தாக அமைந்து, நாட்டின் சிறப்புக்கு வரம்பாகி, வாடாத புகழ் மணக்க நிற்பனவாம்.

உள்ளம் நிறைவெய்தி உவகைபூக்கும்போது, அதன் மிகுதி உடம்பிற் பரவி மயிர்க் கூச்செறிகின்றது; கண்களில் மிளிர்கின்றது; நகையென மலர்கின்றது. இப் பெற்றியே, அளவிறந்த வானவெளியில், தாழாது நிலைநின்று திரிந்து கருதுந்தோறும் பொன்றாத வியப்பையளிக்கும் எண்ணரிய விண்மீன்களும் இனமுங்கொண்ட இப் பேரண்டமும், புலன்களும் அறிவும் சென்றறியாதவாறு, அதனிடைச் செறிந்து நிற்கும் இறைவன் உவகையினாலேயே உருவாகி இயங்கி நிற்கின்றது.

இங்ஙனம் தோன்றி நிற்கும் அண்டத் தொகுதியிலுள்ள உலகம் ஒவ்வொன்றும் அவன் அருள் நிறைந்து நிற்குங் கருவாகி, உரு நிறைந்து மலருந் தன்மையில்

1. தென் - இனிமை.



அதனினின்றும் அவிழ்ந்து பொலியும் செவ்வி எழிலெனப்படும். உலகம் பலவும் உருவத்திலும் இயக்கத்திலும் பிற பண்புகளிலும் பல வகையனவாம்: பகலவன் காலும் ஒளி வெப்பம் பொருந்தி நிற்க, மதியின் ஒளி தண்மை செறிந்துள்ளது; இன்னும், விண்மீன்களின் ஒளி வடிவங்கள் அளவிலும் நிறத்திலும் பலவகை மணிகளையொத்து முரண்பட வமைந்துள்ளன. வெகு தொலைவிலேயுள்ள அன்னவற்றின் பரப்புக்களும் ஆங்குள்ள பொருள்களும் வடிவம் நிறமாதிய பண்புகளில் எவ்வெப் பெற்றியன, உயிர்கள் புலன்கள் ஐந்தே உடையனவோ, அறிவில் மக்களை மிக்கனவோ, தாழ்ந்தனவோ என்பனவும் பிறவும் கண்டுகொள்ள வசதியில்லை. எனினும், சில கூறுகளில் மாறுபடு மியல்பினவாதல் வேண்டுமென உணரக்கூடும். என்னை? ஒற்றுமையிற் கிளைத்து மலரும் பலவகை முரண்படு தோற்ற வமைப்பே இறைவன் படைப்பின் கருத்துப்போலும்! இவ்வழி, பல உலகங்களும் அன்னவை ஒவ்வொன்றிலும் அமைந்த பொருள்களும் உயிர்களும் பலவகையினவா மெனினும், அவை அனைத்திலும் மணக்கும் செவ்வி, ஒரு மலர்வனத்திலுள்ள பலவகை மலர்களில் மணக்கும் செவ்வி ஒன்றேயாவது போல், ஒன்றேயாம். எனவே, இத் திரண்ட செவ்வியை இவ் வுலகின் பெற்றியைக் கொண்டே உணர்ந்து இன்புறக்கூடும். இப் பாரினிடத்தே இறைவனது ஆக்கவியல் உருத்தெழுந்து முருகவிழப் பொலிகின்றது; இங்கே அமைந்துள்ள பலவகைப் பொருள்களிடத்தும் எண்ணிடற்கரிய உயிர்களிடத்தும் முருகின் பெற்றி பலவகை வனப்பொடு முறுக்கவிழ்ந்து சிந்துகிறது.

உறைபனியினால் மூடப்பெற்றனவும் பெறாதனவுமாய், உயரத்திலும் வடிவத்திலும் வேறுபட்டு இனமாக அமைந்து, வானளாவி நிற்கும் மலைச் சிகரங்களும், அவற்றிடை விசையொடு சாய்ந்து உரன்று பொங்கி மணிகள் போன்ற நீர்த்திவலைகள் சிதறத் தாழும் அருவிகளையுடைய சாரல்களும் அமைந்த மலைநாடு, வற்றாத நீர்

நாளு மோடும் ஆறுகளின் இருமருங்கும் நறுமலரும் தீங்காய் கனிகளும் தாங்கித் தாழும் கிளைகளையுடைய கொடி செடி மரங்கள் அடர்ந்த சோலைகளும் பசும் பயிர்ப்பண்ணைகளும் செந்நெற் கழனிகளும் மலிந்து நிற்கும் சமவெளிகள், புது மணல்மேடுகளிடையே பாயும் சிற்றாறுகள் அணிசெய்யும் காடடர்ந்த முல்லை நிலம், சிப்பிகளும் சங்குகளும் சிதறுண்டு கிடக்கும் பரந்த மணல்வெளியில் சோலைகள் இடையிடையே நிற்கும் கரையையுடைய அலைகடற் பரப்பு, ஆயவை அமைந்த பாரிடம், மாறிச்செல்லும் பருவங்களிற் பலவகைக் காட்சிகளை யளிக்கும் பான்மைத்து; அதன் பரப்பிலுள்ள பொருள்களும் உயிர்களும் எண்ணரிய வகையனவாம். வண்ண வொளி பல விரிக்கும் மணி யினங்கள், வியப்பளிக்கும் பல வண்ணத் தோய்வும் உரு நலனும் மெல்லிய ஊறும் ஒருங்கே யமைந்த முத்தினங்கள், சங்கினங்கள், சிப்பித் திரள்கள் முதலியன பல வனப்புகளுடையன; இலைகள் பலவேறு வடிவத்தன; மலர்கள் வடிவத்திலும் நிறத்திலும் மணத்திலும் எண்ணரிய வகையன; இவற்றையுடைய செடி கொடிகள் வரிவடிவிலும் நெகிழ்ந்தசையும் தன்மையிலும் உருவழகும் சாயலு முடையன; வடிவத்திலும் நிறத்திலும் இயக்கத்திலும் விலங்கினங்கள் பலவேறு வகையின; உருவழகு, நிறம், சாயல், இசை பல முரலு மியற்கையாற்றல் ஆதியவற்றில் கணக்கற்ற வகையின பறவையினம். இவை யனைத்தும் முருகின் கூறுகள் மலர்ந்து மணக்கும் வாயில்களாம்.

இவை, அழகுடையனவாயினமையின், மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இவ்வாறு பொருள்களிலும் உயிர்களிலும் பொலியும் எழிலை விரும்பிப் போற்றும் மக்கள் அவை அனைத்தினும் அழகிற் சிறந்தவர். [1]அவரே முருகமரும் மாண்பு மிக்க கோயில்களாவர்.

1. "And chiefly thou, O Spirit, that dost prefer
Before all temples the upright heart and pure,"
—John Milton, Paradise Lost, Book I, ll. 17, 18.



இனி, வடிவமே யன்றி, உள்ளமும் அறிவுங்கூட அழகு மணக்கும் துறைகளாம். அன்பே கடவுளென்பதும், அறிவே கடவுளென்பதும் ஆன்ற உரைகள். கடவுளின் ஆக்கவியல் மலருந்தன்மையில், அவர் அருளே உயிர்களின் உள்ளத்தில் தூய அன்பாய் அரும்புகின்றது; அவர் அறிவின் கூறே அவற்றின் அறிவாய்த் திகழ்கின்றது. அறத்திற்குத் தாயாகிய அன்பிலிருந்தே அறச்செயல்கள் மலர்கின்றன. ஆயவழி, அறத்திற்குக் காரணன் கடவுளே யன்றோ! இனி, அறிவிலே உருவாகிப் பல அருங்கலைகளாக மலரா நிற்பதும் இறைவன் அறிவுச் சுடரின்வழி இமைக்கும் ஆக்கவியலேயாம்.

### கலைகளின் தோற்றம்

இத்தன்மைத்தான உலகில், மக்கள் தோன்றியது முதல், தங்கள் வாழ்க்கையிலே இயல்பாகக் கண்டு தெளிந்த அனுபவங்களை யொட்டித் தக்க இடங்களில் இல்லங்களை அமைத்து, நிலையாயிருந்து, வாழ்க்கைக்கு வேண்டிய உணவு உடை முதலிய பொருள்களும் பிற வசதிகளும் அமைத்துக்கொண்டு, நாகரிக வாழ்க்கையில் தலைப்படும் நிலைமை எய்துதற்குப் பல்லாயிர ஆண்டுகள் கழிந்திருத்தல் வேண்டும். அவ்விடை, அவர்கள், தங்களைத் தாக்கவரும் விலங்கு முதலிய பகைகளை வென்று, உயிர் வாழ்தற்கு வேண்டிய தொழில்களையே, பெரும்பாலும் பயன் கருதி, வளர்த்து வந்திருத்தல் வேண்டும். நாளடைவில், பொருள்களைப் பற்றிய அறிவு மிக மிக, வாய்த்த தெளிவிலிருந்து அத்தகைய அறிவு பாகுபாடு செய்யப்பட்டு வந்திருத்தல் வேண்டும்; இங்ஙனமே, உடம்பைப் பற்றிய அறிவும், அதன்பின் மனத்தைப் பற்றிய அறிவும் வளர்ந்து பாகுபாடு செய்யப்பட்டுக் கலைகளாக உருவாகியிருத்தல் வேண்டும். இடையிடையே, இயற்கையே உந்த, இசைத்தல், ஆடுதல், உருவங்களை வரைதல், வில் முதலிய கருவிகளின் வடிவங்களை அழகுபடத் திருத்துதல், உடம்பை அழகு செய்து கொள்ளுதல் முதலிய அழகுணர்ச்சி காரணமாக எழும் செயல்களுந்

தோன்றி, நாளடைவில் பல மாறுபாடுகளுடன் சிறிது சிறிதாகத் திருந்திக் கலைகளாக உருவெய்தியிருத்தல் வேண்டும். இங்ஙனம், நம் நாட்டில் நாளடைவில் தோன்றிய கலைகள் அறுபத்து நான்காகும். இவற்றில், நாளடைவில் குன்றி நெகிழ்ந்தன சில; வளர்ச்சியின்றி நின்றன பல; போற்றப் பெற்று நிறைவெய்தின பிற. இனித் தற்போது வைகலும் போற்றப் பெற்றுப் பெரு வளர்ச்சி யெய்திவரா நிற்கும் அறிவுநூற் கிளைகளிற் பல புதியனவேயாம். அவற்றின் பண்பு பிற கலைகளையும் சார்ந்து நிற்கின்றது.

**கலைவகை**

கலைகளனைத்தும் அறிகலை, கலை, அருங்கலை என்னும் மூன்று வகைகளில் அடங்கும். எடுத்துக் கொண்ட உயிர் பொருள்களின் தன்மைகளை ஆராய்ந்தறிந்து, அவற்றைப் பற்றிய அறிவைப் பாகுபாடு செய்து, அவற்றின் தன்மைகளுக்குக் காரணங்களைக் காட்டும் அறிவுநூற் கிளைகள் பலவும் அறிகலை வகையில் அடங்கும். மருத்துவம், அறிகலைகளால் உடலின் தன்மையையும் பொருள்களின் தன்மைகளையும் அறிந்துகொண்டவழி, உடலை நலிவிக்கும் நோய்களின் மூலத்தை நாடி, அவற்றை நீக்குதற் கேற்ற மருந்துகளையும், அவற்றைக் கையாளும் வகைகளையும் கற்பிக்கும். இதனையும் இதனை யொப்பவற்றையும் கலைகளெனக் கொள்ளலாம். அறிந்தவற்றைக் கொண்டு வேண்டிய தொழில்களை முடித்துக் கொள்ளுதற்கானவற்றைக் கற்பிப்பனவாகும் இவை. உழவு தச்சு ஆதியவை இவ்வகையில் அடங்கும். எனவே, கலைகள் (arts) அறிகலை (sciences) களின் ஆதரவிலே தோன்றி வளர்வனவாம். உழவும் மருத்துவமும் பிற கலைகளும் பயன் கருதிய வகையிலேயே எழுந்தவையாகும்; பயன் கருதியே வளர்க்கப்படுவனவுமாகும். இவ்வாறன்றி, இயற்கையாக அழகுணர்ச்சியின் ஆதரவால், பயன் கருதாத வகையில் எழுந்து வளர்வனவே இலக்கியம் இசைப்பாட்டு நாடகம் ஓவியம் சிற்பம் ஆகிய அருங்கலை



கள். இவற்றிற்கு முதல் ஆக்கவியலேயாகும்; இவற்றின் வடிவம் அழகுணர்ச்சியான் அமையும்; அறம் அழகின் ஒரு கூறாயினமையின், இவற்றின் தன்மையும் பயனும் அதனை வழுக்கிச் செல்லா; பொருட்பயனைப் பொருட்படுத்தா. கலைகள் அறிகலைகளின் ஆதரவால் எழுந்து தழைத்தலை யொத்தே, அருங்கலைகள் கலைகளைக் கருவிகளாகக் கொள்ளும். அழகுப்பயிற்சி ஒரு கலை; அது கூத்தாகிய அருங்கலைக்குக் கருவியாகும். இவ் வழகுப் பயிற்சி, அரங்குகளின் பாசறைகளிற் பெரிதும் கையாளப் பெறுகிறது. கல்தச்சு, கொல்தச்சு, மரத்தச்சு ஆதிய கலைகள் சிற்ப அருங்கலைக்குத் தொழும்பு செய்யும். இவ்வாறே எழுத்து சொல் யாப்பு அணியிலக்கணங்களைக் கொண்ட யாத்தற்கலை, இலக்கிய அருங்கலைக்குக் கருவியாகும். இலக்கிய ஆசிரியர் ஒவ்வொருவர் முயற்சிக்கும் பழக்கத்திற்கும் ஏற்ப யாத்தற்றிறம் மேம்படும். முன்னே செய்யப்படும் நூல்களினும், பின்னே செய்யப்படும் நூல்களில் இத்திறம் மிகுந்திருத்தலை இலக்கிய ஆசிரியர் ஒவ்வொருவர் செய்யும் நூல்தொகுதிகளிடையும் காணலாகும்.

**அருங்கலைகளின் மாண்பு**

கலை என்றால் கூறு அல்லது பங்கு என்பது பொருள். அன்றி, அஃது அறிவையும் குறிக்கும். அறிவு பல துறைகளில் தொழிற்படுகின்றது. ஒவ்வொரு வகையும் ஒரு கலையாகும். அவை பலவும் அறிவின் கூறுகளைக் கொண்டு எழுந்தவாற்றான் ஒவ்வொன்றும் கலை யென்று பெயர் பெற்றது போலும். கலைகள் பலவும் அறிவின் ஆதரவால் எழுவனவா மெனினும், ஆக்கவியலின் உந்துதலால் அமையும் நற்பண்பைச் சார்ந்து தொழிற்படும் அறிவின் பயனாய் அழகுணர்ச்சி உருவாக்கிட, பொருட்பயனைக் கருதாத வகையில் எழுவனவே அருங்கலைகள். இறைவன் அறிவு மயமானவன்; அன்பு மயமாகவும் திகழ்கின்றான். அன்பு, உள்ளம் பற்றியது. உள்ளச் செம்பரிசைச் சார்ந்து தொழிற்படும் அறிவான் அழகுணர்ச்சிக் கேற்ப உருவெய்

தும் அருங்கலைகள், அறிவின் திறனை மட்டுமே யொட்டி யெழும் கலைகளினும் சால உயர்ந்தவையாகும்; அவையே திருவருள் மணமும் உடையவை. என்னை? திருவருள் மலர்வது உள்ளத்தில்; அறிவிலன்று.

### நாகரிகப் போக்கும் கலைகளும்

நாட்டின் இயற்கையமைப்பு வளம் பருவ இயல்புகள் ஆதியவற்றிற் கேற்ப அமையும் நாட்டு மக்களின் நோக்கம் அறிவு செயல்திறம் ஆயவற்றை யொட்டியே ஒவ்வொரு நாட்டிலும் கலைகள் தோன்றி வளரும். அறிவு நூல் கிளைகளிற் பல மேல்நாடுகளிலேயே தோன்றித் தழைத்துள்ளன. அவை, அவற்றைக் கருவிகளாகக் கொள்வோரின் கருத்தை யொட்டி, நலத்தைப் பெருக்கவும் கேட்டை விளைக்கவும் பெரிதும் பயன்படுகின்றன; அவை உழவு மருத்துவம் முதலிய கலைகளின் வளத்தைப் பல வகைகளிற் பெருக்கியுள்ளன. காரணத்தை நாடியும் பொருள்களின் குணங்களைத் தேர்ந்தும் இயற்கை யமைப்பிற் பொருந்தியுள்ள விதிகளை உய்த்துணர்ந்தும் செல்லும் அவற்றின் போக்கு, சரித்திரம் போன்ற பிற கலைகளின் போக்கைப் பதப்படுத்தியுள்ளது. அக் கிளைகளின் வளர்ச்சியிற் றோன்றிய உண்மைகளின் பயன்கள் பலப் பல. உடல் பற்றிய வாழ்க்கை நலத்தைப் பெருக்குவதற்கும் பகையைப் பல வழியிலும் குறுகிய காலத்தில் அழித்தற்கும் வேண்டியவற்றை நாடி இடையீடின்றி ஆராய்ச்சி செய்வதில் பல நாட்டினரும் முனைந்து மேற்செல்லாநிற்கின்றனர். நல்லொழுக்கத்திற்கும் தீயொழுக்கத்திற்கும் துணைசெய்யும் விளக்கொளி போன்று, அவற்றின் தன்மை, பயன்கருதும் மக்களின் உள்ளப்போக்குக் கேற்றவாறு, நன்மையையும் தீமையையும் விளைப்பதாகும்.

### பொருள்பற்றிய நாகரிகம்

இக் கலைகளை வளர்ப்பதில் பெரு முயற்சியுடைய மேனாட்டு மக்களின் நாகரிக வளர்ச்சிக்கு அவை பெரிதும்



ஆதரவளிக்கின்றன. இயற்கைப் பொருள்களில் நுகர்வுக்குரிய இன்பம் செறிந்து கிடப்பதைப் பொருட்படுத்தி, அவற்றை ஆளும் திறத்தைக் கைக்கொள்வதைப் பெரிதும் விழைந்து முயலும் அன்னார், நீராவி மின்சாரம் போன்ற இயற்கை யாற்றல்களைக் கண்டு, உலகம் வியக்கும் வகையில் கப்பல் புகைவண்டி விண்ணூர்தி தந்தி வானொலி முதலியவற்றை யமைத்து, நுகர்வுக்குரிய வசதிகளைப் பெருக்கி வருகின்றனர். பொருள்களைப் பற்றிய அறிவைப் பெருக்கியும் திருத்தியும் பொறியின்பங்களை யளிக்கும் வசதிகளைப் பெருக்குவதில் அந்நாகரிகம் உன்னத நிலையை அடைந்துள்ளது. அன்றியும், அப் போக்கை மேன்மேலும் போற்று நிற்கின்றது. இன்னும், நுகர்வுக்குரிய பொருள்களின் வளர்ச்சியும் அளவும் பெருகாநிற்க, இன்பத்தை விழைந்து அப்பொருள்களை நாடும் மக்களின் வேட்கை மிகவே, அப்பொருள்களை விலை கொடுத்துப் பெற வியலாதவர் மனம் நெகிழ்ச்சியுற நேரும் துன்பமும் அந் நாகரிகத்தின் விளைவேயாகும். அந் நாட்டினரின் அரசியல் மேம்பாட்டின் வாயிலாகவும் வாணிப ஆதிக்கத்தின் வாயிலாகவும் அன்னவர் நாகரிகம் பல நாடுகளிலும் பாவி நிற்க, அன்னவர் செல்வாக்குக்குக் காரணமான அறிவுக்கலைகள் பிற நாட்டினராலும் போற்றப் பெற்று வருகின்றன. தற்கால வாழ்க்கைப் போக்குக்கு அக் கலைகளே சிறந்த காரணங்களாக நிற்றலால், இக் காலப் பிரிவை ‘அறிவுக்கலை யூழி’ யென்று குறிக்கத் தகும்.

### அருள்பற்றிய நாகரிகம்

மேனாட்டு நாகரிகம் தோன்றுவதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே கீழ்நாடுகளில் சிறந்த நாகரிக வாழ்க்கை நிலவி வந்திருக்கின்றது. சிறப்பாக, நம் நாட்டில் பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் கடவுளின் பெருமையையே கண்டு மகிழ்ந்த நம் முன்னோர், பொருள்களைப் பெரிதும் பொருட்படுத்தாது, தெய்வத்தன்மை யமைந்த உயிர்களின் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு

தம் வாழ்க்கையை அமைக்க, அதன்வழித் தோன்றிய நாகரிகம், பொருள் நுகர்வைப் பெரிதும் பொருட்படுத்தும் பிற நாகரிகம் போலாது, உயிரின் சிறப்பை யொட்டிய தாகத் தழைத்தோங்கி நிற்கின்றது. இப் போக்கு முற்றும் நீத்தார்க்கே சிறப்புடைத் தென்பது உண்மை. எனினும், இவ் வுண்மைப் போக்கின் மாண்பை யுணர்ந்து, தங்கள் கூட்டத்திற்கு [1]நீத்தாரையே தலைவர்களாக வைத்துப் போற்றி வந்திருக்கின்றனர். [2]இன்றும் கூட, நம் நாட்டினரின் போற்றுதலுக்கும் வணக்கத்துக்கும் முதலிடம் பெறும் பெரியார், மேனாட்டில் முன்னணியில் வைக்கப்பெறும் பொருளாளரும் அதிகாரிகளு மல்லர்; நீத்தாரேயாவர்.

இயேசுகிறித்து கௌதமபுத்தராதிய உலகப் பெரியார் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் மகாத்மா காந்தியடிகள். இவரே உரிமை இந்தியாவின் தந்தை; உலகில் இதுவரை இல்லாதவாறு, அரசியல் இயக்கத்தில் தூய்மையைப் புகுத்தி, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து முன்னேறிச் சென்று, இரத்தம் சிந்தாதவாறு சாத்துவிக மறுப்புத் திட்டத்தை மேற்கொண்டு, புரட்சி செய்து, அந்நியர் ஆதிக்கத்தை முறியடித்து, வெற்றியடைந்த பெருமான் இவரே. உண்மை, யாவர்க்கும் ஒத்த உரிமை, தற்சார்ந்தாரையும் நொதுமலரையும் பகைமை மேற்கொண்டாரையும் அன்புள்ளத்தொடு ஆதரித்தல், ஒறுத்தார்க்கும் அன்பு காட்டுதல், அச்சமின்மை, ஊக்கத்

1. "சீரை தைஇய உடுக்கையர்.........
......... ......... கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்.........
தனியில் காட்சி முனிவர்.........."

—திருமுருகு. அடி, 126, 133, 134, 137.

2. "Always it is renunciation that wins the heart of India. The Buddha renounced his throne and Gandhiji stripped himself of every thing but a loin cloth"

—H. N. Brailford, 'Voice of silent millions.' The Hindu, 23rd Oct., 1948.



னைக் கைவிடாமை, சமூகசேவை, சிக்கனமான எளிய வாழ்க்கைமுறை ஆதியன, ஆன்மசத்தியைப் பின்பற்றி, வாழ்க்கையின் குறிக்கோளை யடைவதற்கு, அவர் கடைப்பிடித்த முறைகளாகும். அவர், வெற்றியை மட்டும் பொருட்படுத்தாது, அதனைப் பெறுதற்குக் கையாளும் முறைகள் தூய்மையுடையனவா யிருத்தல் வேண்டுமென்பதையும் குறிக்கோளாகக் கொண்ட பேரருளாளர்; உலகமெல்லாம் போற்றும் அறப்பெரியார்; உலகிலெங்கும் கண்டறியாதவாறு, அருள்பற்றிய நாகரிகம் நிலவும் நாடு தந்த இப் பெரியார், மறத்தை அறவே தவிர்த்து, அறத்தை வைத்தே அரசியல் உரிமையை வென்று மக்களுக்காக்கிய பெருமிதமுடையார். மறத்தை அறத்தால் வெல்லும் இவர் முறை உலகுக்கே தலைசிறந்த வழிகாட்டியாகும். இவர் துறவி. கௌதமபுத்தருக்குப் பின் கடந்த பல்லூழி காலமும் எத்தனையோ வல்லரசர் தோன்றி மறைந்தனர். எனினும், அன்னவர் ஒருவர்க்கும் காட்டாத மதிப்பும் வணக்கமும் மகாத்மாவுக்கே காட்டினர் இந் நாட்டினர். இஃது அருள்பற்றிய நாகரிகத்தின் சிறப்பியல்பு!

பொறியின்பத்தை நாடும் காம வாழ்க்கையையுங் கூட நம் முன்னோர் தெய்வத்தை நாடிச் செல்லும் பான்மையில் அமைத்து வைத்துள்ளனர். [1]களவென்னும் சொல், பிற ரறியாதவாறு காதலரிருவர் கூடு மொழுக்க மென்பதைக் குறிக்குமாயினும், காதல் வயப்பட்டோர் பொறியின்பம் துய்ப்பதாகக் கருதியிருக்க, தெய்வத்தை யணுகும் வழிக்கு அன்னவரைக் களவிச் செல்லும் ஒழுக்க மென்பதையே சிறப்பாகக் குறிப்பதாகும். இனி, நம்மவர், இல்லற வாழ்க்கையையுங்கூட, அவ் வாழ்க்கையில் ஈடுபட்டோருடைய அன்பு, நாளடைவில் தம் மக்களிடத்தும் உறவினரிடத்தும் சார்ந்தாரிடத்தும் பிற மக்களிடத்தும் மக்களல்லாத உயிர்களிடத்தும் பரவி அருளாகப் பழுத்து

1. "அவனை வஞ்சித்துக்கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையின், களவியல் என்னும் குறி பெற்றது."

—இறையனார் அகப்பொருள், உரை.

நிற்க, அன்னவர் நீத்தார்நிலையை யணுக வாய்ப்பளிக்கும் முறையில் அமைத்துள்ளனர். பொருளைப் பொருட்படுத்தும் நாகரிகம், பொருளை நுகரும் பொறிகளைப் பொருட்படுத்தும் இளமைப்பருவத்துக்குரிய போக்கை யொட்டியது; அருளைப் பொருட்படுத்தும் நாகரிகம், மெய்யுணர்வு பழுக்க, இறையின்பத்தை விழையும் முதுமைப்பருவச் செவ்வியை யுடையதாகும்: முன்னது உடலை யொட்டியது; பின்னது உயிரை யொட்டியது.

உடலும் அதன் நுகர்வுக்குரிய பொருள்களும் இவ் வுலகிற்கே சிறப்புடையன; இவ் வுலகிலேயே தோன்றி யழியும் பெற்றியன; அவற்றிடை யெழு மின்பமும் சிற்றின்பமேயாம். உயிர் எல்லா உலகங்களுக்கும் முதல்வனான இறைவனையே தலைவனாகக் கொண்டு, பல உலகங்களுக்கும் பொதுவாயது; உயிர்க்குணங்களில் தலைச்சிறந்தனவாய மெய்யுணர்வும் அருளும் இவ்வுலகுக்கே சிறப்பாவன வல்ல; எல்லா வுலகங்களுக்கும் பொருந்தியவையாக அமைந்துள்ளமை பற்றி, அவற்றின் வாயிலாகத் தோன்றும் இன்பமும் என்றும் அழியாது நிற்பதாகும். எனவே, இறைவன் பெருமையை யுணர்ந்து, அருளின் மேலீட்டினால் உயிரின் சிறப்பியல்புக்கு இணங்க, உலகனைத்தையும் ஆதரித்து நோக்கும் பெரியார் எல்லா உலகங்களிலும் சிறந்ததும், எல்லா நிலங்களிலும் செறிந்து அழியாது நிற்பதுமான வீட்டு நிலத்துக்கு உரியவராவர். வீடென்பது ஒவ்வொரு நிலத்திலும் தோன்றும் உயிர்களுக்குச் சிறப்பாய பொறி முதலிய தத்துவங்களைக் கடந்து, அவ்வழி அந் நிலத்துக்குரிய பொருளாதியவற்றின்மீது செல்லும் வேட்கை யாதியவற்றிலிருந்தும் விடுபட்டு, உயிர் தன்னிலையிலிருந்து, அருள் கசிந்திட உலகனைத்தையும் ஆதரித்து நோக்கி, இறைவன் அருளை யன்றிப் பிறவற்றைப் பொருட்படுத்தாத நிலம். [1]பொருட்சிறியார்

1. பொருளுடைமையிற் சிறுமையில்லை. ஆயினும், "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதன்வழி நில்லாது, பற்றுள்ள முடையவராய்ப் பொருளைப் பெரிதும் பொருட்படுத்துமளவில், உயிரின் மாண்பைப் பொருட்படுத்தாதவரும், உயிர்க்குணங்களாய



தம்முணர்வைப் பொறி வாய்களிலேயே நிறுத்தியிருப்ப, அருட்பெரியாரோ, தம் முணர்வைத் தம் வயப்படுத்திய பின் அந் நிலைக்கு மேற்சென்று இறைவனருள் வாய்க்கப் பெற்றுத் தம் உள்ளத்தை அவன் அருட்டிருவடிகளிலேயே ஒன்றுவிப்பவர். இவ்விரு போக்குகளிடையும் அவற்றைத் தழுவி நிற்கும் கீழ்நாட்டு மேல்நாட்டு நாகரிகங்களிடையும் வேறுபாடுகள் இருப்பனவாகத் தோன்றினும், முதுமைப் பருவம் இளமைப்பருவத்தின் விளைவே யாவது போன்று, ஒன்று நிறைவெய்த நிற்பது, மற்றையது நிறைவெய்தியது என்றே கொள்ளுதல் வேண்டும். மேனாட்டறிஞர் கீழ்நாட்டு நாகரிகத்தைப் போற்றுமாற்றானும் இவ் வுண்மையை அறியக் கூடும்.

அருள் உயிரின் கூறு. வேட்கை ஐம்புலன்களின்வழி மேவும் உள்ளத் தெழுவது. ஐம்புலன்களையுடைய உடல் கொண்டு உயிர் நிலவலே வாழ்க்கையாகலின், அவ் வாழ்க்கையில் உயிரின் பரிசொடு உடலின் தன்மையும் திகழும். இவ் விரு செவ்விகளுள்ளும் வாழ்க்கையின் முற்பகுதியில் உடலின் தன்மையே பெரிதும் மலரும்; பிற்பகுதியிலேயே கல்வி அறிவு அனுபவங்களை யொட்டி உயிர்ப்பண்பு பெரிதும் மணக்கும். மெய்யின் ஒலி முன்னும் உயிரின் ஒலி பின்னுமாக ஒலிக்கும் உயிர்மெய் யெழுத்தின் தன்மையிலும் இப் போக்கு அடங்கி நிற்றலைக் காணலாகும். தனிப்பட்டவர் வாழ்க்கையை யொத்தே, பொதுவாகச் சமூக வாழ்க்கையின் முற்பகுதியில் மலர்வது பொருள் பற்றிய நாகரிகம்; பிற்பகுதியில் மலர்வதே அருள்பற்றிய நாகரிகம். பல நாகரிகங்களின் சிறப்பியல்புகள் பிறவும் உளவாகும்.

இவ் விருவகை நாகரிகங்கள், அவற்றின் போக்குகளுக்கேற்பச் சிறப்பாகப் பலவேறு கலைகளைப் போற்றினும், அவற்றிடை அடிப்படையாயுள்ள ஒற்றுமையும் இருப்பதுபற்றியே, அருங்கலைகள், அவ் விரு வகையவற்

அன்பும் அருளுமில்லாதவரும் பெரும் பொருளுடையரேனும் சிறியரே யாவர்.

றிடையும் இயற்கையாகத்தோன்றி வளர்ந்து வருகின்றன, பலநாட்டு மொழிகளும் அருங் கலை யுரு பிறவும் பல வகையன வெனினும், அவற்றை உடம்புகளாகக் கொண்டு தோன்றும் உயிரன்ன அருங்கலைகளின் செவ்வியில் மாறு பாடுகள் காணப்படவில்லை. பிறமொழியிலுள்ள இலக்கியங் களைத் தத்தம் மொழிகளில் பலநாட்டினரும் விரும்பி மொழிபெயர்த்துக் கற்று இன்புறுதலே இதற்குச் சான் றாகும்.

### ஆக்கவியல்

அருளென்பது இறைவன் ஆக்கவியற் கூறேயாகும். அதன் தன்மை விளக்கமுற, அது அருட்சத்தி யென்றும் வழங்கப்படுகிறது. இப் பேரண்டத்துக்குக் காரணம் இறையருளென்று முன்னே குறித்துள்ளாம். அருளுக்கு ஆக்குந்தன்மை உள்ளமை பற்றியே, தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இவ் வுலகுக்கு இன்றியமையாததும் ஆக்கத்தை யளிப்பதுமான இறைவனருளை அதற்கு அறிகுறியாகிய மழையின் திறத்தைச் செப்பி யுணர்த்தி யுள்ளார். [1]இவ் வுலகத்தை ஆக்குவித்த அருட்சத்தி, இறைவன் விருப்பத்தினின்றும் எழுந்தது. இவ் விருப்பம் பயன்கருதி எழுந்ததன்று; அவன் உள்ள நிறைவில் எழுந்த மகிழ்ச்சியால், படைக்கக் கருதியபோது அரும்பியது. [2]இவ் வுலகைப் படைத்தலும் காத்தலும் அழித் தலும் அவன் விளையாட்டேயாம். விருப்பமே ஆக்குந்

1. "Deliverance? Where is this deliverance to be found? Our master himself has joyfully taken upon him the bonds of creation; He is bound with us all for ever"

—R. Tagore, Gitanjali, 11.

2. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

—கம்பர். இராமாவதாரம்.



திறத்திற்கு அடிப்படையானது. [1]இத் திறம் உலகைப் படைத்து, அதனிடத்தில் செறிந்து நின்று பல படியாக வளர்ந்து நிற்கின்றது. [2]அருங்கலைகளின் ஆக்கத்திற்கு முதலும் பயன்கருதாத தூய வேட்கையேயா மென் பதைக் கருதிப் பார்த்து, அதன்வழி யெழுந்த அவற்றின் இயற்கைப்போக்கு உணர்ந்து கோடற்பாலதாகும். இறைவனது ஆக்க விருப்பமே இத்தகைய தூய்வேட்கை களில் மலர்கின்றது.

### பல நாகரிகங்களிடையும் தோன்றிடும் அருங்கலைப் பேறு

உயிர், தன் நிலையிலிருந்து இறைவனை யொன்றி நின்று இடையீடின்றி இன்புறுதல், இவ்வுலகின் சிறப் புத் தன்மைகளை முற்றும் இகந்து நின்று, இறைவன் அருளாலன்றி எய்தலாகாத அரிய நிலையாகவும், பொருள் நுகர்வைப் பெரிதும் பொருட்படுத்தும் நிலை உயிரின் மாண்பைப் பொருட்படுத்தாத இழிந்த தன்மையதாகவும், [3]தெய்வத்தன்மை வாய்ந்த உயிர்ப்பண்புகள் இவ்வுலகுக்

1. "......தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்த தெது?......"

—தாயுமானவர். திருவருள் விலாசம்: 1

2. "அளவி லாதபெ ருமைய ராகிய
வளவி லாவடி யார்புகழ் கூறுகே
னளவு கூடவு ரைப்பரி தாயினு
மளவி லாசை* து ரப்பவ றைகுவேன்."

—பெரிய புராணம், பாயிரம்.

3. "Life of my life, I shall ever try to keep my body pure, knowing that thy living touch is upon all my limbs."

"I shall ever try to keep all untruths out from my thoughts, knowing that thou art that truth which has kindled the light of reason in my mind."

"I shall ever try to drive all evils away from my heart and keep my love in flower, knowing that thou hast thy seat in the immortal shrine of my heart." —R. Tagore. Gitanjali, 4.

* துரப்ப—தூண்ட.

குச் சிறப்பாய உடலாதிய பொருள்களில் எழில்பட மலர்வதைப் பொருட்படுத்தும் அருங்கலைஞர் போக்கு, அவ்விரு போக்குகளுக்கும் இடையமைந்த செம்போக்காகும். இப்போக்கே இயற்கை நற்போக்கானமை பற்றி, அவ்விரு வகை நாகரிகங்களிடையும் இப் போக்கையொட்டிய ஒரு தன்மையவான அருங்கலைகள் எழுந்து நிலவலாயின.

இனித் தம்மை முற்றும் மறந்து, சிந்தையும் அறிவும் சென்றணுகலாகாத கங்குல் பகலற நின்ற எல்லையிலுள்ள இறைவனை ஒன்றி நிற்கும் அருட்பெரியார், அந்நிலையில் கருதுதலும் செய்தலும் இலராயினமையின், பா முதலிய அருங்கலைகளைச் செய்வா ரல்லராக, மனம் பொருள்நிலையில் பதிந்து நிற்கும் தறுவாயில் அருங்கலை வல்லார் பிறரும் அவற்றை யாக்கும் திறத்தின ரல்லராக, இவ்விரு நிலைகளுக்குமிடையேயுள்ள அறிவு வெளியை அணுகி, அருள் வயமாய் நிற்கும் நிலையிலேயே பா முதலிய அருங்கலைகளைச் செய்யும் வாய்ப்பு அமையப் பெறுவராகையான், அக்கலைகள், ஒரு சார் அனைத்துலகுக்கும் பொதுவாய அருள் வெளியையும், ஒரு சார் இவ்வுலகுக்கே சிறப்பாய மொழி முதலியவற்றையும் தோய்ந்து நிற்பனவாம். இவ்வண்ணம், இயற்கையை யொட்டி யுயர்ந்த நிலையில் இறைவன் திருவருளால் மலரும் போக்கினாலேயே, அருங்கலைகள் பல நாட்டினராலும் போற்றப்படுகின்றன. இறைவனொடு ஒன்றி நிற்கும் நிலையில் வாய்க்கும் பேரின்பத்தைப் பெறுதல் அவனருளால் ஒரு சிலருக்கே வாய்ப்பதன்றிப் பிறருக்குக் கருதுதலுங் கூட மிக மிக அருமையானது பற்றியும், அவ்வின்பம் துய்ப்பாரும் அஃது இத்தன்மைத்தென உணர்த்துதற்கு மொழி முதலியன கருவிகளா யமைய இயலாமை பற்றியும், பொருளும் அதனை நுகரும் பொறிகளும் அவற்றிடை யெழு மின்பமும் தோன்றி யழியும் தன்மையன வானமை பற்றியும், அறிவு நிலத்திற்றோன்றி அருள்மணம் கமழும் அருங்கலைகளே பலவகை நாகரிகத்தினராலும் பெறற்கரிய பேறுகளென்று மதித்துப் போற்றப்பெற்று வருகின்றன. நாகரிக வளர்ச்சிக்குச்



சிறப்பாகுநவும் பிற நாட்டினரின் மதிப்புக்கு உகந்தனவும் அருங்கலைகளேயாம்.

**அறிவு**

இத்தகைய அருங்கலைகள் பலவும் தோன்றும் களன் அறிவு மண்டல மென்பது கண்டாம். இறைவன் உள்ளம் உவந்த வழி, அவன் அருளுக்கு இலக்காயவர் உள்ளத்தெழும் ஆர்வத்தால், தோற்றத்திற் செறிந்து நிற்கும் உண்மை அழகுபட மலரும் போக்கில், அவர் அறிவு, கல்வி, நோக்கம், நோக்கின் திட்பம், அனுபவம், கருத்துண்மை, உள்ளத் தகவு ஆயவற்றிற்கேற்ப அன்னவர் கருத்திற் கருவா யரும்பி, கருத்தும் உணர்ச்சியும் தொழிற்பட வளர்ந்து, உற்ற பருவத்தே, கருத்தளவிலே அடங்கி நிற்க வியலாத நிலையில், முட்டை யோட்டின் கட்டைச் சிதைத்து வெளிவரும் குஞ்சுபோன்று, அவர் அறிவை யிகந்து, மொழியாதிய வடிவில் வெளிவருவன அருங்கலைகள். ஒவ்வொரு வகையிலு மடங்கிய உயிர்களின் அறிவுத் திறங்கள் பல ஏற்றத் தாழ்வுகளை யுடையனவாம். ஒவ்வோர் உயிரிலும் அறிவுமயமாய் மறைந்து நிற்கும் இறைவனுடைய ஒளி, அவ்வவ்வுயிர் கட்டுண்டு நிற்கும் உடம்பின் தத்துவக் கட்டுக்கேற்பவே, மின்சாரக் கொடி யொன்றில் இணைக்கப்பட்டிருக்கும் விளக்குகள் அவற்றின் திறத்திற்கும் அவற்றைப் பொதிந்து நிற்கும் கண்ணாடியின் நிறம் நிறமின்மைக்கும் நிறமுடையவற்றின் கனத்திற்கும் ஏற்றபடி ஒளிருதலே போன்று, ஒரு சிறிதே விளக்கமுடைமை முதல் தெய்வப்புலமை யுடைமை வரையும் எண்ணரிய பல படித்தரங்களிற் பொலிவதற் கேற்பவே அமையும் உயிர்களின் அறிவு. ஊறு ஒன்றையே அறியும் செடி வகையில், தொட்ட போதே வாடும் தொட்டால் வாடியின் அறிவு சிறந்ததேயாம். இனி மக்க ளொழிந்த பிற உயிர்களின் தொகுதி ஒவ்வொன்றிலும் அவற்றின் அறிவு விகற்பங்கள் பலவகையினவேயாம். ஆறறிவுடைய மக்களின் அறிவுத்திறத்தில் எண்ணரிய வகை ஏற்றத் தாழ்வுகளு முள.

### அறிவு மண்டலம்

இனி, அறிந்தவற்றை நுதலும் திறத்தில் வகைகளும ஒவ்வொரு வகையில் பல ஏற்றத் தாழ்வுகளு முள. பயிர்த்தொழில் செய்வோன் ஒருவன், தன் கருத்துக்களை அத் தொழில் நடக்குமிடத்திலுள்ள பொருள்கள், அத் தொழிற் பகுதிகள், தன்மை ஆதியவற்றை யொட்டி, ‘அகல உழுகிறதைவிட ஆழ உழுகிறது நல்லது’ என்பது போன்று வெளியிடுதலும், இங்ஙனமே பிற தொழில் புரிவோர் ஒரு தன்மைத்தான தம் கருத்துக்களைத் தம் தொழில்களைச் சார்ந்த வகைகளில் வெளியிடுதலும் இயல்பேயாம். இவ்வாறே, ஒவ்வொரு மொழியிலும் ஒரு கருத்தைப் பல வகைகளில் வெளியிடும் வாய்ப்புகள் அமைகின்றன. எனவே, ஒரு பெற்றித்தான கருத்துக்களைப் பல மொழிகளில் வெளியிட நேர்ந்தால், அம் மொழிகள் நிலவும் நாட்டினரின் சிறப்புத் தன்மைகளை யொட்டி அக்கருத்துக்கள் பல உருவங்களில் வெளிவருதலும், கருத்துக்களை வெளியிடும் ஆசிரியர் தனிப்பண்புகளை யொட்டி மொழி யுருவங்களிற் பல விகற்பங்கள் அமைதலும் வியப்பன்று. மொழி விகற்பங்களினாலும் அம் மொழிகளைக் கையாளும் நூலாசிரியர் தனிப் பண்புகளினாலுமே விளையும் நூல்களின் பல வேறுபாடுகளினால், ஒரு மொழியிலுள்ள ஒரு நூலைப் பிற மொழிகளில் தக்கபடி மொழிபெயர்த்தெழுதுதல் மிக மிக அருமையாகி விடுகின்றது; முற்றும் உருவம் பழுதுபடாமல் மொழி பெயர்த்தல் இயலாததென்பது திண்ணம். எனவே, ஒரு தன்மைத்தான நீர் பல நீர்மையுடைய நிலம் பலவற்றில் தோய்ந்து பல சுவைத்தாமாறு போன்றே, ஒரு பரிசுடைய கருத்து, பல வாயில்களில் பல விகற்ப வுருவங்களோடு வெளிவரும்; இவ்வுண்மையின் வழி நோக்கும்போது, ஆக்கக் கருத்துக்களெல்லாம் ஒரு நிலத்திலிருந்தே தோன்றித் தளிர்த்துக் கிளைப்பது தென்படும். இந்நிலமே அறிவு மண்டலம். பருப்பொருளுலகத்தில், பலர் கூடியுள்ள ஓர் இடத்திலுள்ள பொருள்கள் ஆங்குள்ள பலரும் காணக்கிடக்குமாறு போன்றும், பொதுவாக மக்கள் பழகியறியாத



ஓரிடத்தை யணுகிய ஒருவனால் காணக்கிடக்கும் அரிய பொருள் ஒன்று, அவன் சென்ற வழியே செல்லும் பிறரும் கண்டறியலாவது போன்றும், வழக்கிலுள்ள எளிய கருத்துக்களைப் பலரும் அறியுமாற்றானும், அறிஞர் ஒருவர்க்குப் புலப்படும் அரிய கருத்துக்கள், அவரைப் பின்பற்றிச் செல்லும் பிறருக்கும் தென்படுமாற்றானும், பொருளுலகம் உள்ளது போன்றே அறிவுமண்டலம் உளவாதலும் தெற்றென விளங்கும்.

### அறிவும் காட்சியும்

கருத்துக்கள் பொதுவாக ஆராய்ச்சியின் வழித் தோன்றுவனவாம்; ஆயினும், அரிய உண்மைகள் காட்சியின் வழி வருகின்றன. ஆராய்ச்சி முயற்சியின் கூறு; [1]காட்சியோ முயற்சியின்றியே தோன்றுவதாகும். முயற்சியின்வழித் தேர்ந்த முடிபுகள் சில அரைகுறைகளாகவும், சில முரண்பாடுடையனவாகவும் இருத்தலுங்கூடும். அன்னவற்றைச் சோதனையின் வழியும், பின்னே காணப்பெறும் துளக்கறு உண்மைகளைக் கொண்டும் செப்பஞ்செய்து கொள்ளக்கூடும். அறிவுக்கலைத்துறையில் ஏற்படும் முடிபுகள் பல, இப்போக்கிலேயே, பலமுறை மாற்றியமைக்கப்படுகின்றன. இதுபற்றியே, அத் துறையில் எவற்றையும் நிலைத்த முடிபுகளாகக் கொள்ளார்; மாற்றியமைக்கவேண்டியிருப்பின் அவ்வாறு செய்யும் எண்ணத்துடனேயே முடிபுகள் கொள்ளப்பெறும். காட்சியோ வெனின், அறிவு வெளியிற் செறிந்து நிற்கும் ஆக்கவியலின் கூறே அரும்பி மலரத் தோன்றுவதாகும்; எவ்வகையில் சோதனை செய்த போதிலும், குற்றமற்ற வயிரம்போல், என்றும் உண்மை

---

1. “Secret was the garden;
Set in the pathless awe
Where no star its breath can draw,
Life that is its warden,
Sits behind the fosse of death,
Mine eyes saw not, and I saw.”
—Francis Thompson, The mistress of Vision.

யாய் விளங்கும் தன்மைத்து ; வேறுபல உண்மைகளையும் உணர்த்தும் பரிசினது ; தெய்வத்தின் அருள்மணம் கமழ நிற்பது.

சிறந்த புலவர்களின் கருத்தில் அரும்பும் இலக்கிய நூல்களுக்கு முதலாகும் கருத்துக்கள் காட்சியின் வழி வருவனவாம். இவ் வடிப்படையான கருத்துக்களையே தக்கவாறு இலக்கிய உருவங்களாக அமைத்துக் கொள்ளுவர். கருதிப்பார்த்து அமைத்துக்கொள்ளாது, ஆக்கவியற் கூறே உள்ளத்தில் அரும்புமாற்றான் மலருந் தன்மையனவானமை பற்றி, [1]அக் கருத்துக்கள் வந்த வழியை அவற்றிற்கு இலக்காகிய அறிவையுடைய ஆசிரியரும் முற்றும் உணரார்.

**மெய்யுணர்வு**

காட்சியை மெய்யுணர்வென்றும் கொள்ளத்தகும். மெய்யை, எனவே, உண்மையை உணர்த்துவதும், அதனைச் சார்ந்து நிற்பதும் மெய்யுணர்வாகும். இனி, அறத்தைச் சார்ந்தெழும் கருத்துக்களும் மெய்யுணர்வுகளென்று கொள்ளுதலும் பொருந்தும். இவற்றுள், இறைவனுக்கும் உயிருக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தம் பற்றிய முடிந்த உண்மைகளும் அவற்றைச் சார்ந்த கருத்துக்களும் தத்துவஞான எல்லைக்குட்பட்டவையாம். இவை உலகில் நிலவும் அடிப்படையான சமயக் கோட்பாடுகளிடை யடங்கும். அக் கோட்பாடுகளிடை ஒற்றுமையும் வேற்றுமையும் உண்டு. தோற்றமும் மறைவுமற்ற இறைவனுடைய எல்லையற்ற அறிவு, அன்பு, அழிவற்ற உயிரின் தன்மை, மக்கள் மேம்பாட்டுக்குரிய தூய உள்ளமுடைமை, நன்மை கடைப்பிடித்தல், அடக்கமுடைமை

1. "I put my tales of you into lasting songs. The Secret gushes out from my heart. They come and ask me, "Tell me all your meanings." I know not how to answer them. I say, "Ah who knows what they mean! They smile and go away in utter scorn. And you sit there smiling."

—R. Tagore, Gitanjali, l. 102.



தெய்வ வணக்கம் ஆதியவற்றின் இன்றியமையாமை, என்னு மிவையும் பிறவும் பல கோட்பாடுகளிடையும் ஒப்பக் கொண்டு போற்றப்படுவனவாகும்.

இவ் வண்ணம் ஒப்ப முடிந்தவை, மக்கள் அனைவரின் அடிப்படையான உணர்வுகளுக்கும் அவற்றை யொட்டிய ஒழுக்கங்களுக்கும் இயல்பாகப் பொதுவானவையே யாகும். எனவே, மாறிச்செல்லும் உலகப் பழக்க வழக்கங்களிடை, மக்கள் வகுப்பினர் அனைவருக்கும் இவ் வடிப்படையான கருத்துக்கள் என்றும் உண்மையாக நிலவும் தன்மையின வாம். எல்லா வகுப்பினரிடையும் ஊழி யூழிக்காலம் நிலவும் இத்தகைய உண்மைகளையே பொய்யாமொழியில் காண்கின்றோம் : உண்மைகளைப் பற்றிக் கூறும் நூல் பொய்யா மொழியானது இயல்பேயாகும். கருத்துக்கள் உண்மைகளாய வகை என்னை? உள்ளபடி தகுதியான கருத்துக்கள், எனவே அறத்தைச் சார்ந்து நிற்கும் கருத்துக்கள், என்றும் உண்மைகளாக நிலவுதல் இயல்பே. எனவே, அக் கருத்துக்கள் மெய்யுணர்வின்வழி எழுவன வாம். அறிவு தன் அளவிலே ஓர் ஆற்றலே யாகும் : ஐந்து புலன்களை யொட்டிய ஆற்றலிற் சிறந்த ஆறுவது புலனே யாகும். ஆனால், அறத்தின்வழி நின்றாலே மெய் யுணர்வாகும். அவ் வகையில் சிறந்த அறிவுடையோரே, திருவள்ளுவரை யொத்த தெய்வப் புலமை யுடையவ ராவர்.

**புலனெறி வழக்கு**

இறைவன் என்றும் நிலவும் உண்மை அல்லது மெய்யாவான். எல்லையற்ற அறக்கடலாகிய அன்னவன் ஆக்கவியலின் பரிசமைந்த காட்சிகள் அறத்தைச் சார்ந்து நிற்பன வானமை பற்றி, அவை உண்மைப் பரிசுடையன வாம். அறத்தின்வழி நில்லாத கருத்துக்கள் ஆற்றலுடையவையா யிருக்கலாம் ; எனினும், அறத்தினின்றும் மாறுபட்ட அளவுக்கும் அவற்றால் விளைவதும் தீமையே யாகும். கொல்லாமைக்கும் கொல்லுதற்கும் அறிவு தொழிற்படுகிறது. ஆனால், முன்னது அறத்தைச் சார்ந்த

மெய்யுணர்வினின்றும் எழுந்த கருத்தா னமைந்தது; பின்னது அறத்தின்வழி நில்லாது பிறழ்ந்துபட்ட வறிய அறிவின் வழியமைந்த தீயொழுக்கம். மெய்யுணர்வின்பால் ஆக்கவியலின் பரிசு அமைந்திருத்தலும் வறிய அறிவின்பால் அஃதின்மையும் இப்போது தெற்றெனவிளங்கும். அறிவின்பயன் (நல்ல) ஒழுக்க மென்னும்போது குறித்திடும் அறிவு அறத்தைச் சார்ந்ததேயாகும்; வறிய அறிவாகாது. இலக்கியத்திற்குக் களன் அறிவே யாயினும், நூல்களுக்குரிய பொருள்களைத் தேர்ந்து அமைத்துக் கொள்வதில் தகுதியைச் சார்ந்த முறையுமுண்டு. இறையறிவே உலகை உருவாக்கினமை பற்றியும், புலவர் உள்ளத்தில் கருத்தாய் அரும்புவதும் அவ் வாக்க வறிவே யானமை பற்றியும், நூல்களின் கருக்கள் மலருந் தன்மையில், உலகிலுள்ள பொருள் உயிர்களின் வடிவமாதிய நலன்களைப் பற்றியனவும், உயிர்களின் அறிவின்வழி யமைந்த இயக்க ஒழுக்கங்களைப் பற்றியனவும் மக்கள் அறிவின் தனித்த வளர்ச்சியினின்றெழும் புனைந்துரை வகையும் தேர்ந்து ஏற்ற பெற்றி நூல்களில் அமைத்துக் கொள்ளப் பெறும். [1]இங்ஙனம் உலக நாடகவழக்குக ளிரண்டும் அமையக்கொண்டது புலனெறி வழக்காகும். உலகவழக்கு நாடகவழக்கென விகற்பித்துக் கூறப் பெறினும், அவை ஓரிடத்திலேயே தோன்று முண்மை பற்றியும், பின்னது முன்னதையொட்டி யெழுந்த நிறைவே யானமை பற்றியும், இவ் விருபால் வழக்கும் இயற்கையும் அதை யொட்டி வளர்ந்த நிறைவுமேயாம். நாடகவழக்கு, செயற்கையெனத் தோன்றினும், ஆராயின், அதற்கு முதலும் உருவெய்தும் போக்கும் இயற்கையே யென்பது புலனாகும்.

இனி, "அகனைந் திணையாகிய காமப்பொருளே புலனெறி வழக்கிற்குப் பொருளாமென்று" (தொல்.

1. "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்."
—தொல். பொருள். 53.



பொருள், 53. நச்சினார்க்கினியம்.) கூறுவர். ஆராயின், பிற திணைகளும் இயற்கைப் பொருள்களுங்கூடப் புலனெறி வழக்கினுக்குப் பொருளா மென்பது இலக்கியங்களிற் காணக்கிடக்கும் உண்மையேயாகும். எனவே, இலக்கியம் புலனெறி வழக்கின்வழித் தோன்றுவதென்றும், அவ் வழக்கிற்கு அகனைந் திணையும் பிறவும் பொருள்களா மென்பதும் பெற்றாம்.

### உலகவழக்கு

உலகவழக்கென்பதனை, உலகமும் அதனிடை வழக்குமெனக் கொள்ளலாம். உலகமென்பதில், உலகத்தில் அமைந்துள்ள பொருள்களும் உயிர்களின் உருவம் தன்மை முதலியனவும், வழக்கென்ற வழி இயற்கையின் வழி யமைந்த உயிர்களின் இயக்கங்களும், உயிர்களிற் சிறந்த மக்களின் ஒழுக்கங்களும், அவற்றின் வழியமைந்த வழக்கும் அடங்கும். [1]இவ் வமைப்பு வழக்குகளில், புனைந்துரைகொண்டு அழகுசெய்ய வேண்டாத வகையில் இயல்பாகவே மேம்பட்ட அழகுடைய கூறுகளை உள்ளவாறே நூல்களில் அமைத்துக்கொள்ளப்படும். "யாரே அழகுக் கழகு செய்வார்!"

### நாடக வழக்கு

இனி, இவ்வுலகில் நிலவும் அமைப்பு வழக்குகளின் செவ்விகள் நிறைவெய்தாதனவாய்க் காணப்பட்ட வழியும், அவற்றின் அமைப்பு முற்றும் காணப் பெறாமல், சில கூறுகள் மறைந்துநின்ற வழியும், சுவைத்திறமறிந்த புலவர்கள் மறைந்துகிடக்கும் அவற்றின் நலத்தைத் தெரிக்கும் வண்ணமும், வளர்ச்சி நிறைவெய்தியவாறு காட்டும் வழியும் இயற்கையையொட்டிப் புனைந்தும் உரைப்பர். அழகுடைய மகளிரிடையும், ஒவ்வொருவரிடம்

1. "God's master piece thou should'st retouch?
Where a sweetness is complete,
Add not sweets unto the sweet!"
—Francis Thompson, Gilded Gold.

அழகின் கூறுகள் ஒரு சிலவே காணப்படும். இதை யுணரும் உள்ளம் அழகின் கூறுகள் அனைத்தும் பொருந்திய உருவத்தைக் காண விழைகின்றது. [1] இவ்வாற்றானேயே, இலக்கிய ஆசிரியர் அழகின் கூறுகள் பலவும் ஒருங்கே திரண்ட மகளிர் வடிவங்களைத் தங்கள் நூல்களில் அமைக்க விரும்புவர். [2] பொருநராற்றுப் படையிலுள்ள பாடினியின் வடிவத்தைப்பற்றிய வருணனை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். வாழ்க்கையில் ஒவ்வொருவர் குணங்களும் பொலிவதற்கு வாய்ப்பிருப்பதில்லை. அன்றி, அவை அரும்பி மலர்வதைத் தடுப்பதற்குப் பல இடர்ப்பாடுகளும் உளவாம். இன்னவாறில்லாமல், நாடகமாதிய நூல்களில், உறுப்பினர் சிறப்பியல்புகள் விளக்கமுறுவதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் அமையத்தகும் நிகழ்ச்சிகளும் பிறவும் கற்பனை செய்யப் பெறும். [3] இனி, நல்லோர் ஒசிதலையும் தீயோர் நலமுறு

1. "*இழைகுலா முலையி னாளை  
யிடை யுவா மதியி னோக்கி  
மழைகுலா †வோதி நல்லார்  
களிமயக் குற்று நின்றார் ;  
‡உழைகுலா நயனத் தார்மாட்  
டொன் றொன்றே விரும்பற் கொத்த  
தழகெலா மொருங்கே கண்டால்  
யாவரே யாற்ற வல்லார்."  
—இராமா. பால. கோலங்காண். 20.

* இழை - அணிகலன். † ஓதி - கூந்தல். ‡ உழை - மான்.

2. **பின்னிணைப்பு**-க பார்க்க. (பொருநராற்றுப்படை, 25-47.)

3. 'The World's Way

Tired with all these, for restful death I cry—  
As, to behold desert a beggar born,  
And needy nothing trimmed in jollity,  
And purest faith unhappily forsworn,  
And gilded honour shamefully misplaced,  
And maiden virtue rudely strumpeted,  
And right perfection wrongfully disgraced,  
And strength by limping sway disabled,



தலையும் சமூகத்திற் கண்டு அமைதி கெட்டுக் கவற்சியடைகின்றோம். இக் கசப்பு நீங்க, நன்மை தழைக்கவும் தீமை யொசியவும் இலக்கிய நூல்களில் காட்டப்பெறும். அன்றி, நல்லோர் தமக்குத் தகுதியற்றவற்றை எய்துமாறு நூல்களில் அமைக்க நேரினும், அன்னவற்றையறியும் உள்ளம் ஆறுதலடையும் வண்ணம் காட்டப் பெறும். தீவினை செய்தறியாக் கோவலனும் கண்ணகியும் பல இன்னல்களை யனுபவித்து இறந்துபடினும் தேவர்களுக்கு விருந்தாய்த் துறக்க மெய்துவதாகக் காட்டியுள்ளமையும், முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனையே அவரிருவரும் அனுபவிக்க நேர்ந்ததாகக் கூறியுள்ளமையும் இக் கருத்தை யொட்டியனவேயாம். இன்ன பிறவும் உள. இலக்கிய நூல்களிலே குறிக்கப்படும் பொருள்களும் உயிர்களும் நிகழ்ச்சிகளும் முற்றும் உலகிடை யுள்ளவையல்ல ; எவ்வண்ணமிருப்பின் இன்பம் பயப்பனவா மெனத் தேர்ந்து ஆசிரியன்மாரான் கற்பனை செய்யப் பெற்றனவும் அந் நூல்களில் அடங்கி நிற்கும்.

எனவே, நாடக மென்பது, உலகில் காணக்கிடையாத தன்மையில், சுவை மலியுமாறு, சுவைத்திற மறியும் புலவர்களின் அகம் அல்லது உள்ளம் நாடிட உருவாகும் கருத்துருவமும், அதன் மொழியுருவாகிய புனைந்துரையுமாம். இங்ஙனம் உருவெய்தியவற்றைக் கற்கும் அறிஞர் உள்ளமும் (அகமும்) அவற்றை விழைந்து நாடுமாற்றானும், அவ்வகைக் கருத்தும் மொழிப் பகுதியும் நாடக மெனப்படும். இனிக் காரிகை சிறக்க ஏந்தியவரைக் காரிகையா ரென்று குறிப்பது போன்றே, சுவை நிரம்பிடக் காண்போருள்ளம் பெரிதும் விழைந்து மேவுமாறு கதை தழுவியும் தழுவாது

And art made tongue tied by authority,  
And folly. doctor like, controlling skill,  
And simple truth miscall'd simplicity,  
And captive good attending captain Ill :—  
—Tired with all these, from these would I begone,  
save that, to die, I leave my love alone."  
—W. Shakespeare.

முள்ள கூத்தையே சிறப்பாக நாடகமென்று வழங்குதல் மரபாயது போலும்! உலக வழக்கு உள்ளதொன்றென்றும், நாடக வழக்கு இல்லதென்றும், இனியதென்றும் கூறுவதுண்டு. பின்னது முன்னதன் நிறைவேயானது பற்றி, அதனைப் பலர் உளதாகக் காணாத வழியும் அஃதும் உள்ளதேயாகும்; இனி, பின்னது என்றும் நிலவும் உண்மைகளையே உணர்த்துமாற்றானும் உள்ளதே யாகுமென்பாம்.

**மறை**

[1]எனவே, இலக்கியம், பொருள்கள் உயிர்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை முற்றும் கண்டவாறே விள்ளாது, அவை எப்படி இருப்பின் உண்மைகளை உணர்த்தும் பரிசினவாமோ, அவ்வண்ணம் அமையக்கொண்டு அழகிய உருவில் தோன்றுவதாகும். இங்ஙனம், புலனெறி வழக்கையொட்டி, இலக்கியத்திற்குப் பொருந்தும் பொருள்களைத் தேர்ந்து கொள்ளுவதற்கு நோக்கும் திறமை அடிப்படையானதாகும். மக்களெல்லாரும் இவ் வுலகினிடையிலேயே வாழ்வாரெனினும், இவ்வுலகத்தின் உண்மை யமைப்பை உள்ளவாறு நோக்கி யறியும் வாய்ப்பும், கண்டதை ஏற்றவாறு விள்ளும் ஆற்றலும் பலருக்கு இயலாதனவேயாம்; ஒரு சிலருக்கே பொருந்துவனவாம். அஃதெங்ஙனமெனின், அவ்வமைப்பின் உண்மை உலகிடைப் பொருந்தி நிற்குமாற்றான், உலகின் பரப்பிலேயே மேவும் மனமுடையார் தாம் அறியும் எதனையும் உண்மையொடு பொருந்தக் கொண்டு உணரார். உடம்பை வளர்த்தற்கு வேண்டும் பொருள்களை யீட்டுவதற்கான வாய்ப்புகளைத் தேடி, வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை அமைத்துக்கொண்டு,

1. "Poetry according to Aristotle is a representation of the ideal. Biography and history represent individual characters and actual facts; poetry on the contrary, generalising from the phenomenon of nature and life, supplies us with pictures drawn not after an existing pattern but after a creation of the mind."

—John Henry Newman, poetry.



அவ்வளவிலேயே நின்று, உலகின் பரப்பிலே திரிந்து, வாழ்க்கையின் குறிக்கோளைக் கண்டுவிட்டதாகக் கருதுவோரே சமூகத்தில் பெரும்பாலோராவர். இன்னவர் உலகின் உண்மை அதனிடை மறைந்து நிற்பதை யுணர்ந்து, அதனை யறியவோ விரும்புவர்!

**முனிவரும் புலவரும்**

இம் மறையை உள்ளவாறு காணும் திறமையுடையோரே நிரம்பிய காட்சியுடையவர். மூலக் கருத்தைக் கண்டு, ஆன்ம வெளியிலே தம் உணர்வை நிறுத்தி, நல்லவற்றையும் தீயவற்றையும் வரையறுத்து, உயிர்க் குறுதி தேடுவோர் ஆற்ற வேண்டிய கடமைகள் இவை, விலக்க வேண்டிய தீமைகள் இவை என்று உலகுக்கு அறிவிப்போர் முனிவர். இவர்களைத் தீர்க்கதரிசிகளென்று வடமொழியிற் கூறுவர். தீர்க்க தரிசிகளெனினும், புன்மையில் காட்சியவரெனினும், நிரம்பிய காட்சியவரெனினும் ஒக்கும். இவரே போலிச் சுவைகளைப் பொருட்படுத்தும் வாழ்க்கையை முனியும் முனிவர். மறையை யறிந்து, உலகினும் அதனிடை வழக்கினும் விரும்பத்தக்கனவற்றை உண்மையொடு பொருந்தக்கொண்டு மொழியுருவங்களிலே அமைக்குமாற்றலுடையவரே செந்நாப்புலவர். காட்சியெனினும் புலமையெனினும் ஒக்கும். முனிவரும் அருட்பெரும் புலவரும் நிரம்பிய காட்சியுடையவரேயாவர். முனிவர் கடமையையும் விலக்கையும் அறிவித்து உலகத்தோரை முடிந்த உண்மைகளைக் காண ஊக்குவர்; அருட்பெரும் புலவர் அவ்வுண்மையின் பொலிவாகிய அழகைப் பொருட்படுத்துவர். [1]இவ்விரு நோக்குகளின் முடிபில் வேற்றுமையில்லை: முனிவர் முடிந்த உண்மைகளை யறிந்து

1. "Vates means both prophet and poet: and indeed at all times, prophet and poet well understood, have much kindred meaning. Fundamentally indeed they are still the same; in this most important respect especially, that they have penetrated both of them into the sacred mystery of the universe; what Goethe calls the open secret."

—Carlyle, The Hero as poet.

அவற்றை விளக்குவர்; அருட்புலவர், உண்மைகளையுணர்ந்து, அவற்றை யொட்டி உலகின் முழு அமைப்பின் செவ்வியை நயந்து, சுவைத்திற மறிந்து, தம்மி லெழுந்த கருத்துக்களை ஏற்ற நூலுருவங்களில் அமைப்பர். கவிஞரிடையும் தெளிந்த காட்சியுடையோர் ஒரு சிலரே யாவர். இவர்களே உலகின் பல நாட்டினரும் போற்றும் கம்பர் காளிதாசர் செகப்பிரியர் ஆதிய அருட்பெரும் புலவர். பிற கவிஞரின் புலமை, உலகமாக் கவிகளின் புலமையின் தெரிவில் குறைவுபட்டு, பல ஏற்றத் தாழ்வுகளுடன் அமைந்திருக்கும்.

### நோக்கு

உண்மையை அறியும் வாய்ப்பு அமையப் பெற்றவரானமையால், உலகை நோக்கும் போக்கில், அருட்புலவர் உயர்ந்த நிலையில் நிற்பர். மக்களிற் பெரும்பாலோர் பொருளை விழைந்து, அதை எய்தும் வழியிலேயே தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழிக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் மக்கட் சமூகத்தின் முயற்சிகள், எண்ணிப்பார்த்தால், பொருளை யீட்டும் வகையிலும், அதைக் காக்கும் வகையிலும், துய்க்கும் வகையிலுமே சென்று கொண்டிருக்கின்றன. உலகின் இயற்கையமைப்பை உள்ளவாறு அறிந்து, நயந்து, அதன் அழகில் ஈடுபடும் இயல்பு எல்லோரிடத்திலும் காணப்படவில்லை. காரிய வசமாகத் தொழிலையே பொருட்படுத்துவோரின் கருத்து இப்போக்கில் நுழைவதில்லை. உலகின் இயற்கைத் தோற்றங்கள், மீன்களும் கோள்களும் நிறைந்த விசும்பின் காட்சி, கதிரவன் தோற்ற மறைவுகள் அளிக்கும் வண்ணச் செவ்வி, நிலவின் அமுத வெள்ளம் ஆதியவற்றை விரும்பி அவற்றின் நலன்களில் எத்தனை பேர் ஈடுபடுகின்றனர்? வழி நடந்து செல்லும் போது, மருங்கே கிடக்கும் அழகுடைய மலர்களை யேந்திய சிறு புதல்களை நோக்குவோர் யார்? புதல்களிலும் மரங்களிலும் இசை பாடித் திரியும் வண்ணப் பறவைகளை நோக்கி மகிழ்வோரின் தொகை எத்துணையாம்? காரியத்தில் கண்ணு



யிருக்கும் மக்களில் எவர் அவற்றின் நலன்களைத் துய்ப்பார்? பொருளையே நாடிநிற்கும் மக்கள் இவ்வியற்கை அமைப்புகளையும் இயக்கச் செவ்விகளையும் உள்ளவாறு அறிந்து மகிழும் ஆற்றலற்றவர்களாகின்றனர். இறைவனுடைய செயலும் பொருட்பயன் கருதாத விளையாட்டேயா மென்பதை நினைவுகூர்ந்தால், மக்கட் சமூகம் இயற்கை நற்போக்கிலிருந்து எவ்வளவு மாறுபட்டு நிற்கின்றதென்பது தென்படும். அருட்புலவர் உள்ளப்பான்மை இயற்கைநயங்களை இயல்பில் விழைந்து துய்க்கும் வகையில் அமைந்ததாகும்.

### நோக்கின் மாண்பு

பல ஊர்களிலும், தெருவழியே செல்வோர் காணப் புருக்கள் மருங்கேயுள்ள மாடங்களிலும், தெருவின் ஓரங்களிலேயும் இணையிணையாகச் செருக்கி இருந்து திரிகின்றன. காண்போரில் ஒரு சிலரே அவற்றின் உரு நலத்திலும் நடை யழகிலும் ஈடுபடுவர். பிற சிலர் அவற்றின் தசையின் அளவையும் சுவையையும் கருதுவர். இங்ஙனமே, ஊரினிடையே துள்ளி விளையாடும் ஆட்டுக் குட்டிகளைப் பார்க்க நேர்ந்தால், அவற்றின் உருவழகிலும், கள்ளங் கவடற்ற தன்மையிலும், துள்ளிக் குதித்து ஓடித் திரியும் அவற்றின் விளையாட்டிலும் சிலர் மனமே பதியும்; [1]மக்கள் பலர் அவற்றின் தசையையே பொருட்படுத்துவர். மக்களிடம் அமைந்துள்ள மக்கட் டன்மை உரு இயக்க நலங்களில் ஈடுபட, அவரிடமுள்ள விலங்கியல்பு அவற்றின் தசைப் பகுதியைப் பொருட்படுத்தும். இவ்விரு நோக்கங்களில் சிறந்ததெது என்பதைச் சொல்லவும் வேண்டா. இயற்கை நற்போக்கை விட்டு, பொருட்பயனைப் பொருட்படுத்திப் பொருளையே நாடி நிற்கும் சமூகம் இயற்கைக்கு மாறுபட்ட புன்சுவையிலேயே ஈடுபட்டு நிற்கின்றது; உடல் வளத்தையும் பொறி யின்பத்தை யளிக்கும்

1. The man in me calls "Love"
The child calls "Mother."
—Francis Thompson, In her paths.

காமத்தையுமே நாடி நிற்கின்றது; உயிரன்மையும் காதல் மாண்மையும் தெளிந்திலது. பொருட்பயனையே கருதும் மனம் பொருளளவிலேயே கட்டுண்டு நிற்கின்றது; பொருட்பயனை மதியாது செம்போக்கில் நிற்கும் உள்ளம் உயர்ந்த நிலையிலிருந்து, உலக அமைப்பின் செவ்வியைக் கண்டு, நினைந்து நினைந்து மகிழ்கின்றது. இந் நற்போக்கு எல்லோருடைய இயற்கையிலும் அமைந்து கிடப்பினும், பெரும்பாலோர் அதனைப் பொருட்படுத்தி வளர்ப்பா ரல்லர்; இத் தன்மை சிலரிடத்திலேயே விதந்து அமைந் துள்ளது. இச் சிறு கூட்டத்தில் உள்ளோரே அருட் புலவர். இவர் நோக்கு முயற்சி யின்றியே நற் சுவைகளை நாடி நிற்கும்.

பொறி வாயில் தன் உணர்வை வைத்து, காமத்தில் அழுந்திக் கிடந்த இராவணன், தன் காம வேட்கையைத் தணித்தற்குரிய [1]சிறந்த வடிவழகுடைய பெண்ணெனக் கருதிய சீதாபிராட்டியார், புலன்களை வென்று, மக்களின் சிறப்பியல்பை யறிந்தொழுகிய அநுமன் நோக்குக்குக் [2]கற்பினுக்கு அணியாகக் காணப்பட்டார். காம விகாரத் தால் உள்ளத் தகைவை யிழந்து, அவ் வேட்கையில் உழன்று வைகுகின்ற இராவணனது பிறழ்ந்த நோக் குக்கும் கல்வி யறி வொழுக்கங்களில் சிறந்த அநும னது மாண்பமைந்த நோக்குக்கும் இடைநின்ற வேறு பாடுதான் என்னே! ஒன்று அறம் பிழைத்த விலங் கியல்பினது; மற்றொன்று விலங்கியல்பைக் கடந்து

1. வஞ்சனை யெனக்கு நானே மாதரார் வடிவு கொண்ட
நஞ்சதோ யமுத மென்பா னச்சினே னுகர்ந் தேய்ந்து
நெஞ்சகே ரான தும்மை நினைப்புவிட் டாலி நீக்க
அஞ்சினே னடிய னேனு மடைக்கல மருமின் வந்தீர்."
—கம்பர். இராமா - யுத்த. மாயாசனக, 10.

2. "கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னக
ரண்டநா யகவினித் துறத்தி யையமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்."
—கம்பர். இராமா. சுந்தர. திருவடி தொழுத. 58.



சென்று அறஞ் சார்ந்த அறிவின் உயர்வொடும் உயர்ந்த பான்மையினது.

## நோக்கத்தையொட்டிச் சுவை யமைதல்

விழுப்பந் தரு மொழுக்கம் உயிரினும் ஓம்பத் தகுந்த தாகும். இவ் வுண்மையை மக்கள் பலரும் அறிவர். எனினும், உள்ளத் தூய்மையையும் ஒழுக்கத்தையும் பொருட்படுத்தி, அவை மாசுபடாதவழி வராத பொருளை யும் பொறி யின்பங்களையும் இகழ்ந்து தள்ளுவோர் தொகை எத்துணையாகு மென்பதை அறிஞர் அறிவர். மக்களிற் பெரும்பாலோரின் நாட்டம் பொருளையும் பொறி யின்பங்களையுமே குறித்த தன்றோ! உள்ளத் தூய்மையை யும் ஒழுக்கத்தையும் ஓம்பி நிற்கும் நிலையில் வறுமையை யும் துன்பத்தையும் மேற்கொள்வார் தொகை எத்துணை யாகும்? ஒருதலைக் காமமும் ஒவ்வாக் காமமுமே பெரு வழக்கா யமைந்த சமூகத்தில், கணவனும் மனைவியும் வறுமை மேலிடத் துன்பத்தால் நலியுற்ற காலத்தும், முதுமை யெய்தி உடல் நலங் குன்றியபோதும், தம்மிடை யமைந்த அன்பு மாறாமல் ஒழுகுவோர் தொகை எத்துணை யாகும்? பயன் கருதாது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"த் தெய்வத்தை வணங்குவோர் எத்தனை பேராவர்? மக்கள், இவ்வகை ஒழுக்கங்களின் மேம்பாட்டை அறியா தாருமல்லர்; உயர்ந்த குணங்களும் ஒழுக்கங்களுமுடைய பெரியாரை மதியா தாருமல்லர். எனினும், அவர் புன்சுவை யின்பங்களை ஒதுக்கித் தள்ளலாகாத நிலையில், மேன் மேலும் அவ்வழியில் தங்கள் அவா மேவி நிற்கக் "கற்ற தும் கேட்டதும் அவலமாய்ப் போக," இழிந்த இன்பங் களையே நாடிச் செல்ல வமைந்த இப்போக்கே உலகின் பெரு வழக்கெனக் கொண்டுள்ளார். என்ன மடமை! காய்ச்சல் வாய்ப்பட்டார்க்கு இன்சுவைப் பண்டம் கசந்து சுவைக்குமாறு போன்று, ஒழுக்கந் திறம்பிய உலகின் சுவையறிவு கெட்டு, மேன்மேலும் மாறுபட்ட சுவை யின் பங்களை விழையும் வழியிலேயே அதன் மனமும் செயலும் செல்லா நிற்கின்றன. புலாலை விரும்பும் மக்கள், அப்

புலாலையுடைய உயிருடம்புகளின் அழகிய வடிவங்கள், வண்ணங்கள், அணி நடைகள், இன்னிசை வகைகள் ஆதியவற்றிலோ ஈடுபடுவர்! ஆக்கத்தின் மாண்பையோ கருதிப் பார்ப்பர்! அவர் நாடுவதும் புலா லளிக்கும் புன் சுவை ஒன்றேயன்றோ? என்ன பேதைமை! இவர்கள் மன நிலை எங்கே! உயிரின் சிறப்பை எண்ணி, உலகங் களுக்கெல்லாம் தலைவனான இறைவனுடைய மாண்பை நினைந்து நினைந்து, உயிரைத் தளைந்து நிற்கும் அவாவை நீக்கி, இடைவிடாது அவனிடத்திலேயே தங்கள் சித்தத்தை வைத்து இன்புறும் உண்மைத் துறவிகளின் உன்னத நிலை எங்கே! என்ன வேறுபாடு! அன்னவர் மனப்பாங்கை யொட்டியே, பொருளை விழையாது, உலக அமைப்பின் நலத்தை யுணரும் நிலையில் எழாநிற்கும் நற் சுவைப் போக்கிலேயே பிறரும் சிறந்த இலக்கிய நூல்களை ஆக்குதல் கூடும். பொன்னையும் பொருளையும் பொறிகளை யுமே பொருட்படுத்தாது, இயற்கை யளிக்கும் நற்காட்சி களையும் [1]உயிர்களின் தோற்றம் சாயல் நடை இசை ஒழுக்கமாதியவற்றின் நலங்களையும் விழுப்பொருள்களாக மதித்தல் சால்புடைய போக்காகும். இங்ஙனம் நோக்க வல்லுநர்க்கு [2]உலகின் இயற்கை யமைப்புகள் யாவும் இறைவன் இயல்பை விள்ளும் களன்களாகும். அவற்றின் வாயிலாக மணக்கும் அவன் மாண்பில் அவர் உள்ளம் களித்து இன்புறும்.

**திருவருள்**

ஆனல், புலாலை உணவாகக் கொள்வோரிடையும் மாண்புடைய நோக்கின் பேராசிரியரும் உளராதல் என்னை?

1. "Consider the lilies of the field, they toil not, neither do they spin: yet Solomon in all his glory was not arrayed like one of these."

—The Holy Bible. St. Luke 12: 27th verse.

2. "And this our life exempt from public haunt
Finds tongues in trees, books in running brooks
Sermons in stones, and good in every thing."

—W. Shakespeare, As you like it, Act II Scene I.



என்ற ஐயமெழுகின்றது. மண்டபத்தைத் தாங்கி நிற்கும் கற்கந்தின் சிற்பச் செவ்வியில் உள்ளம் ஈடுபட்டு நிற்கும் போது, அது கல்லென்பதும் தூணாகப் பயன்பட்டு மண்டபத்தைத் தாங்கி நிற்கிறதென்பதும் கருத்திற்படுவதில்லை. இவ்வாறே, பயன் கருதாத வகையில் உலகை மாண் புடையவாறு நோக்கி நிற்கும் நிலையில், பொறியின்பத்தை நல்கும் புன்சுவைப் பயனைக் கருதும் இழிதகவு மறைந்து படுகின்றது. கட்டழகுடையார் ஒருவர் வனப்பில் முற்றும் ஈடுபட்டு நிற்கும்போது, நோக்குவோர் தாம் ஆண் பெண் என்ற பால் வேற்றுமையும், அதையொட்டி அழகுடையாரின் நலத்தை அவாவும் உணர்வும் அற்று நிற்பர். மாண்புடைய நோக்கமைந்து நிற்கும்போது, புலால் உண்ணும் இழிசுவைத் தகவும் மறைந்து நிற்கின்றது. இடையிட்டு மீண்டும் மீண்டும் உயர் தகவு தொழிற்பட்டு நிற்குமாற்ருன், நனஞேக்குடைய ஆசிரியரின் புலாலுண்ணும் பழக்கம், பழக்கத்தளவிலேயே நின்றுவிடும்; நோக்கின் தகவைக் கெடுப்பதில்லை. நற்சுவையை விழைந்து, இயற்கை நலன்களிலே பலகாலும் ஈடுபட்டு நிற்கும் உள்ளத்தில் அந் நலன்களுக்கு இறையான இறைவன் ஆக்கநலன் அரும்பி மணக்கின்றது. இஃதே திருவருள் நலன். என்னை? உயிர் இடையீடின்றி எதை நினைக்குமோ, அதன் செவ்வியே அதனை வந்தணுகு மென்பது அருட்பெரியார் தெளிந்த உண்மை. [1]இவ் வுண்மையை யொட்டியே, கவியரசர்க்கரசர் கம்பரும், கலைமகளையே அல்லும் பகலும் வணங்கி நிற்கும் அறிவிலிகளும் கவிபாடும் திறமை யெய்துவர் என்று கூறியுள்ளார். உள்ளம் எப்பொருளைப் பெரிதும் விரும்புகிறதோ, அப் பொருட்செவ்வியின் கூறு அவ் வுள்ளத்திலும் இயல்பாக அமைந்திருத்தல் வேண்டும். இனம் இனத்தைச் சாரு

1. "படிக நிறமும் பவழச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி."

—கம்பர், கலைமகள் அந்தாதி, காப்பு.

மென்பதும் அனுபவத்தில் கண்ட முடிவு. எனவே, நற்சுவைத் திறனைத் தேர்ந்து, அதனை விழைந்து நிற்கும் பெரும் புலவர்களிடம், இயல்பாகவே, அச் சுவையை அறியும் தன்மை அமைந்து நிற்கின்றது. பண்புகளும் அவற்றைத் துய்க்கும் உணர்வுகளும் ஒரே பெற்றித்தான கூறுகளிற் றேன்றி, பிளவுபட்டு நின்று, ஒன்றையொன்று முயங்கி நிற்பனவாம். ஆதலின், இயல்பாக நற்சுவைப் போக்கையே விரும்பும் உள்ளத்தில் அச் சுவையுடையவற்றிற் கிறையான இறைவன் அருள்மணம் கமழ்கின்றது.

முனிவரும் அருட்பெரும் புலவரும் நிரம்பிய காட்சியுடையவரென்று முன்னே செப்பினும், இவர்களில், முனிவர் உலகத்தின் உண்மையை யறிந்து, அதற்கு இறையான இறைவனை உணர்ந்து, அவனிடத்திலேயே தங்கள் உள்ளம் ஒன்றி நிற்கப் பேரின்பம் துய்ப்பவர்; எனவே, அவரிடம் இறைவனுடைய அருளும் ஆற்றலும் அமைந்து நிற்கும். புலவருடைய மனமோ, அவ்விறைவன் ஆக்கிய உலகின் செவ்வியிலேயே பெரிதும் ஈடுபட்டு நிற்குமாற்றான், அவ் வுலகை ஆக்கிய ஆக்கவியல் அவர்பால் வந்தெய்தி மொழியுருவில் நூல்களை ஆக்கி நிற்கும். எனவே, இருவரும் நிரம்பிய காட்சியுடையவரே யாயினும், முனிவர் இறைவனுடன் ஒன்றிநிற்கும் பான்மையான் இறை வண்ணமாய் நிற்பவர்; இறைவன் ஆக்கிய உலகின் நலத்தில் ஈடுபடும் புலவரோ, அவர் ஆக்கத்திறம் ஓரளவு அமையப் பெற்றவராவர். முன்னையவர் உலகமாகிய இறைவன் திருக்கோயிலின் உள்ளே சென்று, கோயிலை மறந்து, இடையீடின்றி இறைவனோடு ஒன்றி நிற்பவர்; பின்னவரோ, அக் கோயிலின் செவ்வியில் ஈடுபட்டு, இறைவன் பெருமையை உணர்ந்து நிற்பவர். எனவே, புன்மையில் காட்சியுடையோருள், முனிவர் முடிந்த உண்மையைக் கண்டு நிற்பவர்; அருட்பெரும் புலவர் அவ் வுண்மையின் பொலிவை நயந்து நிற்பவர். ஆனது பற்றியே, கடவுளுக்கு அடுத்தபடியாக மதித்து வணங்கப் பெறுபவர் முனிவரே யாவர்.



திருவருள் வந்தெய்தும் நிலை

தம்மைத் தாம் காப்பாற்றிக்கொள்ளும் ஆற்றலற்ற
நிலையில், குழந்தைகள் தம் தாய்மாரின் அளிக்கு ஆளா
கின்றனர். ஆசானைக் கண்டபோது மனம் அடங்கி
நின்று மதிக்கும் நிலையிலேயே, மாணவன் அவன் அளிக்கு
உரியவனாகின்றான். கற்றறிதலின் சிறந்த பயன் இறைவன்
பெருமையை யறிந்து அடங்கி வணங்கி நிற்றலேயாகும்.
[1]அடங்கும் நிலையில் தான் என்னும் அகந்தை ஒடுங்கு
கிறது; மதி தன் வயமாகிப் பின் இறைவன் வசப்
படுகிறது; அந்நிலையிலேயே அவன் திருவருள் வந்தெய்து
கிறது. நுண்மாண் நுழைபுல முடையோனே யாயினும்
தெய்வத்தை யணுகி, அதன் பெருமையை யுணர்ந்து,
அருளை வேட்டு நிற்கும் நிலையில் [2]தன்னைப் பேதையென
வுணர்ந்து தன்வயமழிந்து நிற்றல் வேண்டும். அந்
நிலையிலேயே தெய்வம் தன் நெஞ்சில் இருந்தருள வாய்ப்
புண்டாகும். கற்றறிந்த புலவரும் அருள்வயமாகும்போது
தம் மதியின் முனைப்பற்று நிற்பர். [3]உள்ளம் அச்
செவ்வியை அடையும் தறுவாயிலேயே அதனிடை
வாலறிவன் திருவருள் வந்தெய்தும்.

1\. " ... ... ... அருட்
*ககனவட்டத்தில் நின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்து மதி யவச முறவே
பண்ணுவது நன்மை ... ...."
—தாயுமானவர், சித்தர்கணம் : 4.

2\. "பெருந் திருவும் சயமங்கையு மாகியென் பேதை நெஞ்சில்
இருந் தருளும் செஞ்சொல் வஞ்சியைப் போற்றின் ...."
—கம்பர், கலைமகள் அந்தாதி : 30.

3\. " எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவு ... ... ... ...."
—திருமுருகாற்றுப்படை : 61—64.

* ககனம் - ஆகாயம்.

**இலக்கிய ஆசிரியன் இறைவன் கைக்கருவி**

[1]அந் நிலையில் அருட்கவிஞன் இறைவனுடைய கருவி யாவான். இசைப்புலவனுடைய புலமைத் திறமன்றே யாழிலும் பிற இசைக் கருவிகளிலும் இசைகளாய் மலர்வது! எனவே, இசைக்குக் காரணன் இசைப்புலவன்; இசைக்கருவிகளல்ல. [2]இன்னவாறே, இலக்கியத்துக்குக் கர்த்தா இறைவனேயாம்; புலவனன்று; அருட்புலவன் அவன் கையிற் கருவியே யாவான். இப் பரிசை உள்ளபடி யறிந்து, தன் அறிவின் முனைப்பை விட்டொழித்து, அவன் கையில் தக்க கருவியாய் அமையும்படி தன்னைப் பண்படுத்திக்கொள்ள வேண்டியது ஆசிரியன் கடமை. இப் போக்கும் அவனிடத்தில் இயற்கையாய் அமைந் திருக்கும். [3]அதன்படி ஒழுகும் நிலையிலேயே இறைவன் அருளால் இலக்கியம் மலரும்.

**திருவருள் வாய்ப்பு**

தெய்வம் யாவர்க்கும் பொதுவானது. தகுதியுடையவர் எவர்க்கும் அதன் திருவருள் வாய்க்கும். திருவருள் வாய்ப்பில் உள்ளமும் அறிவும் வாழ்க்கையும் பண்படும்.

1. "This little flute of a reed thou hast carried over hills and dales, and hast breathed through it melodies eternally new. At the immortal touch of thy hands my little heart looses its limits in joy and gives birth to utterance ineffable." —R. Tagore, Gitanjali, 1.

2. "Sing, Heavenly Muse, that on the secret top
Of Oreb, or of Sinai, didst inspire
That shepherd, who first taught the chosen seed
In the beginning how the Heavens and Earth
Rose out of chaos... ... ... ...."
—John Milton, Paradise Lost, Book I, 6—10.

3. "Poetry as has been said, differs in this respect from logic, that it is not subject to the control of the active powers of the mind, and that its birth and occurrence have no necessary connection with the consciousness of the will."
—Shelly, A Defence of Poetry.



ஆனால், அருட்கவிஞராதிய அருங்கலைஞர்க்கு வாய்க்கும் திருவருள் தனிச் சிறப்பினதாகும். தெய்வத்தின் விருப்புக்குரியார்க்கே அது கிட்டும். பதவி, பொருள், அறிவு, கல்வி, கோட்பாடு, ஒழுக்கம், முயற்சி ஆயவற்றைப் பற்றி வாய்ப்பதன்று. இலக்கிய ஆசிரியன்மாரிடை, அதிகாரம் படைத்த அரசர் முதலியோரே யன்றி, அன்னவர் குடிகளு முளர்; செல்வரே யன்றி, வறியரு முளர்; கல்வியறிவிற் சிறந்தோரே யன்றி, சிறப்பற்றவரு முளர்; இல்லறத்தாரே யன்றி, துறவிகளு முளர். ஆனால், அவர் அனைவரும் இலக்கிய ஆசிரியராகும் வண்ணம் திருவருள் வாய்த்திடத் தெய்வத்தால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்புடையோராவர். வேந்தன் மகன் வேந்தனாதலும், செல்வன் மகன் செல்வனாதலும், அறிஞன் மாணவன் அறிஞனாதலும், அருட்திருவாளர் அளிக்கு உகந்தோர் அருட்திருவாளராதலும் உலகில் மீண்டும் மீண்டும் நிகழ்வனவேயாம். ஆனால், அருட்கவியின் மகன், கம்பன் மகன் அம்பிகாபதியைப் போன்று, அருட்கவி யாகத் திகழ்தல் மிகமிக அருமையேயாகும். அத்தகைய திருவருள் தெய்வத்தின் தனிப்பட்ட விருப்பானன்றி வாய்ப்பதில்லை.

பிரான்சிசு தாம்சன் என்னும் ஆங்கிலக் கவி, தம் சிறுபோதிருந்தே பெற்றோர் சொல்லுக்கு அடங்கி நடவாதவர்; நூலறிவு ஒரு சிறு அளவே உடையவர்; அபினி யுண்டு மயங்கிக் கிடந்து, இல்லத்தை விட்டகன்று, ஏற்ற உணவும் உடையு மின்றி, வெயிலிலும் பனியிலும் தங்கி யிருக்க இருக்கையு மின்றி, ஊரூராய்த் திரிந்துகொண்டிருந்தவர். அன்னவர் முதல்தரமான கவிகளையும் உரைநடை நூல்களையும் செய்துள்ளனரென்றால், செய்யப்பட்டவை அவர் சொந்த ஆற்றலால் முடிந்தவையோ? அன்றி, இறைவன் அருளால் முடிந்தனவோ? அவரைக் கருவி யாகக் கொண்டு, இறைவனே செய்தவையாகு மென்பது அவர் வரலாற்றினை அறிவார் அனைவர் முடிபுமாகு மென்பதில் ஐயமில்லை.

கம்பர் காளிதாசர்களைப் பற்றி ஐயமற்ற வரலாறுகள் இல்லை. ஆனால், அவர் நூலறிவு ஒரு சிறிதளவே யாகுமென்றும், தெய்வத்தின் அருள் வந்தெய்தியதன் பயனாகவே அவர் கவிஞராகிப் பாடத் தொடங்கினாரென்றும் தொன்றுதொட்டு வந்த வழக்குரைகளின் வாயிலாக அறிகின்றோம். அவர் விழுமிய நூலறிவுடையவரென்பது அவர் செய்த நூல்களினின்றும் புலனாகின்றது. எனினும், அன்னவர் நூல்களின் தோற்றங்கட்கு அடிப்படையான காரணம் தெய்வத்தின் அருளென் றறிந்தவர் அவருடைய நூலறிவை இழித்துக் கூறியிருத்தலும் கூடும். வரலாறு எப்படி இருப்பினும், இவ் வழக்குரைகளில் ஒன்று காணக்கிடக்கின்றது; இலக்கியம் நூலறிவால் மட்டும் ஆவதன்று; இயற்கை ஆற்றலால், தெய்வத்தின் அருள்பற்றி எழுவதென்பதே அது. சரித்திர காலத்திலே யிருந்த உலகம் புகழும் நாடகக்கவியான செகப்பிரியர், அவர் உடன் காலத்தவரான நூலாசிரியர் சிலரைப் போன்று, சிறந்த நூலறிவுடையவரல்லர்; எனினும், இயற்கை யறிவின் மாண்பினானும் திருவருள் வாய்ப்பினா னமைந்த ஆற்றலினானும் அவர் செய்த நூல்கள், கல்வித் திறம்படைத்த பிறர் நூல்களினும் சிறந்து, அழியாத தன்மையொடு பொலிகின்றன.

இறைவன் அருளுக்கு இலக்காவார், பொருளைப் பெரிதும் பொருட்படுத்தும் உலகத்தவரைத் துரும்பாக மதிப்பர். இந்நிலையிலே நிலைத்துவிட்டால், அவர் இயல்பு முற்றும் செப்பமாய் விடும்; அவர் எய்திய அருளாகிய உன்னத நிலையினின்றும் இழியார், இவ்வுலகிலேயே இருப்பினும் எங்கும் பொதிந்து நிற்கும் இறைவன் அருள் திருமுன் இருப்பதை மறவார். ஆனால், அருள் நீங்கிய போது, பருவம் கழிய மலர்களொழிந்து பொலிவழியும் செடிகளையும், காதலொழிந்த இல்வாழ்க்கையையும் ஒத்திருப்பர்; புல்லியற்கையுடைய வறிய வாழ்க்கையின் வாய்ப்படுவர். அந்நிலையிற் சிலர் ஒழுக்கம் வழுக்கியும் நடப்



பர்; [1]அப்போது, அவர் அருட்கவிஞரல்லர்: வறிய மக்களே யாவர்.

**இலக்கிய ஆசிரியர் வாழ்க்கைப் பரிசு**

இயற்கை யாற்றலான் மட்டுமே யன்றி, நூலின் நுட்ப திட்பங்களின் அளவும், விள்ளும் உணர்வுகளின் உறைப்பும், ஆசிரியர் அனுபவத்தானமைந்த மறத்தற்கரிய நிகழ்ச்சிகள் உணர்த்திடும் உண்மைகளானு மமையும். உள்ளத்தை அள்ளும் சிறந்த நூல்களின் திறம் அவ்வந் நூலாசிரியர் அனுபவ வாயிலாக அமைந்த அறிவின் செப்பத்தானும் அழுந்திய உறுதிப்பாடுகளானு மமையும். புத்தகங்களைக் கற்பதனா னமையும் அறிவுக்கும், அப்புத்தகங்களை ஆசிரியன் கற்பிக்க வாய்க்கும் ஐய மொழிந்த தெளிந்த கல்விக்கும், குருகுலத்திலிருந்து அப்புத்தகங்களைக் கற்பதோடு, வைகலும் புன்மையில் காட்சி ஆசிரியரொடு பழகி, அவர் ஆணையின்படி ஒழுக வெய்திய செப்பமான திரிபற்ற உணர்வு ஒழுக்கங்களுக்கு மிடையே எத்துணை வேற்றுமைகளுள்ளன! ஒரு முறையைக் காட்டிலும் மற்றொன்று எத்துணை மேம்பட்ட பயனை அளிக்கிறது! இம் மேன்மையும் அனுபவ அளவுக்குத் தக அமைந்ததேயன்றோ? எனவே, உலக வாழ்க்கையின் திறத்தை அனுபவத்தால் அறிந்த ஆசிரியர் செய்யும் நூல்களில் உண்மைகளின் விளக்கம் அழுந்திக் கிடக்கும். ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்திலும், படிப்போர்க்கு மனவெழுச்சியையும் சோர்வையும் அளிக்கத் தக்க நிகழ்ச்சிகள் பல அடங்கி யிருக்கும். ஆனால், அந் நிகழ்ச்சிகளை அனுபவித்தோர் மனநிலைகட்கும் அவற்றை நூல்முகமாக அறிந்தோர் நிலைகட்கும் எத்துணை வேறுபாடுகளுள என்பதை உணரின், கல்வி யறிவிற்கும் அனுபவ உண்மைக்கும் உள்ள வேறுபாடு விளங்கும்.

---

1. "But in the intervals of inspiration, and they may be frequent without being durable, a poet becomes a man and is abandoned to the reflux of the influences under which others habitually live." —Shelly, A defence of poetry.

வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் இன்பத்தையும் துன்பத்தையும் தரும் தன்மையினவாம். வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாதியன சிலருக்கு முயற்சியின்றியே கிட்டுகின்றன; பலருக்கு முயன்றும் போதிய அளவில் அமைவதில்லை. பிறப்பினாலும் முயற்சியினாலும் சிலரைச் சேர்ந்த சுற்றமும் நட்பும் பொருளும் பெரிதும் மகிழ்ச்சியை யளிக்கும் பரிசினவாம்; பிறருக்கோ பெரிதும் இன்னலையே நல்கும் பான்மையினவாம். எனவே, இவ்வகையான பலதிறப்பட்ட வாழ்க்கைக்குரிய வாய்ப்புகளிடையுள்ள ஒரே வகை மனப்பான்மையுடையோர் அனுபவங்கள் பலவகை யாதல் இயல்பேயன்றோ? இவ்வாறாகவும், அன்னவரின் மனப்பரிசும் வேறாயபோது அனுபவங்களில் மீண்டும் வேறுபாடுகள் அமையுமென்பதும் போதரும்: மக்களின் சுவை வேட்கையும் அன்னவர் உணர்ச்சியின் எளிமை தடிப்புகளும் பல தரத்தனவாம். சிலர் ஓரளவு இன்னலைப் பொருட்படுத்தார்; பலர் அவற்றை எண்ணி யெண்ணி நைவர். இவ்வியல்புகளிலும் பலவகை வேறுபாடுகள் உண்டு. எனவே, இவ்வகையிலும் அனுபவங்கள் வேறுபடுதற்கு வாய்ப்புளது. இனி, மக்களின் அனுபவங்கள் அன்னவர் குறிக்கோள்களையொட்டியும் அமையும்: வச்சையர் பொருள்களைச் சேர்ப்பதிலேயே கருத்தை வைப்பர்; காமுகர் இணை விழைச்சையே நாடுவர்; அடியார் தெய்வ வேட்கையே உடையவராவர்; இவ்வாறே பிற பண்புகளின் உறைப்பு மிக உடையாரும் அன்னவர் விருப்புக்குரியவற்றையே நாடி நிற்பர். அவர் நாடுமவற்றை யடையும் முயற்சியோடு நிற்கும் வழி, பிற வகையில் உளவாகும் இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் பொருட்படுத்தார். உணவை உட்கொள்ளும் ஒருவன் மனம் இடையீடின்றி வேறொன்றைக் கருதி நின்றால் உணவின் சுவையை அவன் அறிவதில்லை. எனவே, மக்களின் அனுபவங்கள் பலவேறு வகையினவாம்: ஒருவர் அனுபவம் ஒருவர்க்கில்லை. அவ்வழிச் சிலர் பெரும்பாலும் இன்பமெய்துதலும் பிறர் துன்பமெய்துதலும் இயல்பேயாகும். இவ்வாறாகவும் இன்பமேயன்றித் துன்பமும் பேரளவில் நல்கும் நிகழ்ச்சி



கள் பயின்ற வாழ்க்கை அமையப்பெற்றவரே நிரம்பிய அனுபவமுடையவராவர். என்னை? உலகின் தன்மையை உள்ளவாறு அறிதல் அவ்வகையிலேயே அமையுமாதலின்.

சிறந்த ஆசிரியன்மார் நிரம்பிய அனுபவமுடையவர். கம்பர் தம் வாழ்வுக்கு வேண்டியவற்றைச் சடையப்ப வள்ளல் நல்கப் பெற்ற வகையும், சோழனிடம் கவியரசாக இருந்தபோது மேவிய சில நிகழ்ச்சிகளும், தம் புதல்வன் அம்பிகாபதிக்கும் அரசன் புதல்விக்கும் இடையே நேர்ந்த களவொழுக்க நிகழ்ச்சிகளும், அவற்றின் விளைவும் அவர் வாழ்க்கையில் ஒரு சில நிகழ்ச்சிகளேயாக வேண்டும்; அவையும் நமக்குச் சரிவரத் தெரிந்தில. அவ்வகையில் நமக்குக் கிடைத்துள்ள செய்திகளை வைத்துப் பார்த்தாலே அவர் இன்பமும் துன்பமும் பொருந்திய நிரம்பிய அனுபவமுடையவரென்று ஊகிக்க இடமிருக்கிறது. ஆங்கிலப் பெருங்கவி செகப்பிரியரும் நிரம்பிய அனுபவமுடையவரென்று தெரிகிறது. இவ்விரு பேராசிரியர்க்கும் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் எளிதாக அமையவில்லை எனவே, அவர் பலவேறு வகைப்பட்ட நிரம்பிய அனுபவமுடையவராயிருந்தார். இவ்வாறே வடமொழிப் பெருங்கவி காளிதாசர் வாழ்க்கையும் பல இன்ப துன்ப நிகழ்ச்சிகள் செறிந்ததென்பதாகத் தெரிகிறது.

[1]இனி, அன்னவர் வாழ்க்கையில் துன்பம் மேலிட்டிருந்ததாகவும் சொல்லுப. கூர்த்த வறிவும் நுட்பவுணர்ச்

---

1. "Alas I have nor hope nor health,  
Nor peace within nor calm around,  
Nor that content surpassing wealth  
The sage in meditation found,  
And walked with inward glory crowned—  
Nor fame, nor power, nor love, nor leisure.  
Others I see whom these surround—  
Smiling they live, and call life pleasure ;—  
To me that cup has been dealt in another measure."  
—P. B. Shelly, Stanzas written in dejection near Naples.

சியுமுடையவர் இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் பெரிதும் உளத்தே கொண்டு வருந்துதல் இயல்பே. [1]வேண்டப்பட்டவை கிட்டாதவழியும் இன்பம் பயக்குமவற்றை இழக்க நேர்ந்தவழியும் துன்ப நுகர்வின் அளவே மிகுந்து நிற்கும். இனி, இருட்செறிவைக் கீறி மேலெழும் ஒளியின் தன்மையை யொத்தும், வறுமை சாயத் தோன்றும் திருவை யொத்தும், துன்பத்திடையெழு மின்பமே பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். கோடை வெயிலின் கொடுமையை அனுபவித்த பின்னரே நிழலின் அருமையைத் தக உணரலாகும். எனவே, துன்ப நிகழ்ச்சிகளும் இன்ப நிகழ்ச்சிகளும் செறிந்த வாழ்க்கையே நிரம்பிய அனுபவமுடைய வாழ்க்கையாகும். உலகப் பெருங்கவிகள் பலரின் வாழ்க்கைகள் இப்பெற்றியனவே என்பதை அவர்களைப் பற்றிய வரலாறுகள் அறிவிக்கின்றன. [2]அவரது கல்வியறிவைக் காட்டிலும் அவர் அனுபவங்களே அவர் நூல்களில் அமைந்துள்ள நுட்ப திட்பங்களை அமைத்திடும் ஆற்றலை அளித்திருத்தல் வேண்டும்.

[3]பலவகை அனுபவங்களிலும் பட்டுத் தேறிய அறிஞர், இன்ப துன்ப உணர்வுகள் உள்ளப் பரிசுக்கேற்பவே அமையு மென்பதைத் தேர்ந்து, மனதைச் செப்பஞ் செய்து, நிகழ்ச்சிகளின் போக்கை யொட்டி இன்ப

1. "We look before and after,
   And pine for what is naught."
   —P. B. Shelly, To a Sky Lark.

2. "Better than all measures
   Of delightfull sound,
   Better than all treasures
   That in books are found,
   Thy skill to poet were, thou scorner of the ground!"
   —P. B. Shelly, To a Sky Lark.

3. "இன்பமுந் துன்பந் தானு
   முள்ளத்தோ டியைந்த வன்றே."
   —கம்பர். இராமா. ஆரணிய. மாரீசன் வதை. 100.



துன்பங்களை அனுபவியாது, அவற்றை இகந்து நிற்பதும் உண்டு. உறுதிப்பாடு, அனுபவ முதிர்ச்சியால் வந்தெய்துமாகையானும், அந்நிலையில் மனம் குவிந்து நிற்குமாகையானும், ஆன வழி துய்ப்பைச் சார்ந்து நிகழ்ச்சிகள் பயனையளியா வகையானும், அந்நிலையில் இலக்கிய மாதிய அருங்கலைகளைச் சுவைத்த லாகாதாகையானும், அவ்வகை உள்ளப் பரிசு, உலகை மதியாதார்க்கன்றி, உலகையும் அதன் இயற்கையை யொட்டி மேம்பட்ட செவ்வியையும் உண்மைகளாகக் கொண்டு பொருட்படுத்தும் ஆசிரியன்மார்க்கும் அவர் வழிநின்று அவர் நூல்களைத் துய்ப்பார்க்கும் சிறப்புடையதாகா தென்பாம். இனி, இன்பமும் துன்பமும் உள்ளத்தோடியைந்தவை என்னும் அனுபவ உண்மையை உறுதியாகக் கொண்ட ஆசிரியன்மாரும் குறித்த தறுவாய்களில் குறித்த பல திறப்பட்ட மக்கள் எத் தன்மையவான அனுபவங்களை உடையவராவர் என்பதைத் தங்கள் அனுபவ அறிவினால் மனத்தில் உருவகப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையவரானமையான், ஏற்றவாறு பல திறப்பட்ட நிகழ்ச்சிகளைத் திறம்பட நூல்களில் அமைத்திடுவர். எனவே, அவர் தம் உள்ளங்களைச் செப்பஞ் செய்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளைப் பின்பற்றித் தொடராதவாறு நிறுத்தும் வல்லுநராய வழியும், உலகியலை யொட்டிப் படிப்போர்க்குப் பல சுவைகளும் வாய்க்குமாறு நூல்களைச் செய்யும் திறமுடையோரே யாவர். துறவியாயிருந்த இளங்கோ வடிகள், பல சுவைகளும் பொருந்திய சிலப்பதிகாரத்தை இவ்வகையிலேயே செய்து உலகிற் களித்திருத்தல் வேண்டும்.

வாழ்க்கையில் நேர்ந்திடும் இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் கண்டு ஆசிரியன் ஊக்கம் குன்றி மடிந்திருத்தலாகாது. [1]ஒவ்வொரு இடர்ப்பாடும் இன்னலும் தன் கடமையைச் செய்து முடிக்குமாறு உள்ளத்தை ஊக்கு

1. "Then welcome each rebuff
   That turns earth's smoothness rough,
   Each sting that bids nor sit nor stand but go!

தற்கு அமைந்ததென வறிந்து தாளாண்மையை மேற்கொள்ளுதலே ஏற்புடைத்தாகும்.

இலக்கியஞ் செய்திறம் தன்னிடத்தில் அமைந்திருப்பதை உணரும் ஆசிரியன் அத்திறமையை ஏற்றவாறு பயன்படுத்தித் தன் கடமையைச் செய்து முடிக்க முற்படுதல் முறையாகும். அத்திறல் அமைந்திருத்தலை அறிந்தவாற்றானே, மேலே செய்ய வேண்டிவற்றைத் தன் ஆற்றலால் செய்து விடுவதாகக் கருதாமல், இறைவன் அருளை நோக்கி நின்று, எவ்வகையில் அத்திறமையைப் பயன்படுத்தினால் கடமையைச் செப்பமாகச் செய்து முடிக்கக் கூடுமென்பதைச் சிந்தித்து நின்று, உணர்த்தப்பெற்ற வழி செய்ய மேவுதலே அமைந்த ஒழுக்கமாகும். "செல்வத்துப் பயனே ஈவது" ஆயது போன்றே, இலக்கிய ஆக்கத் திறமை வாய்ந்தவரும் வாளா இருந்து அவ்வாற்றலை வீணாக்காது, உலகுக்குத் தக்கவகையில் அளித்தலே கடமையாகும். [1]ஆங்கிலப் பெருங்கவி

Be our joys three parts pain!
Strive and hold cheap the strain;
Learn, nor account the pang; dare, never grudge the throe!
—R. Browning, Rabbi Ben Ezra, stanza: 6.

1. "When I consider how my light is spent
Ere half my days, in this dark world and wide,
And how one talent which is death to hide
Lodged with me useless, though my soul more bent
To serve there with my Maker, and present
My true account, lest he returning chide,—
Doth God exact day labour, light denied?
I fondly ask:-But patience to prevent
That murmur, soon replies: God doth not need
Either man's work, or his own Gifts: who best
Bear his mild yoke, they serve Him best: His state
Is kingly; thousands at His bidding speed
And post over land and ocean without rest:-
They also serve who only stand and wait.
—John Milton, On his blindness.



மில்டன் தம் இலக்கிய ஆக்கத்திறமையைக்கொண்டு செய்யவேண்டிய கடமையைச் செய்து முடிக்காமல், வேறு துறையில் தம் பொழுதெல்லாம் கழிந்து செல்லக் கண்ணொளி முற்றும் தேய்ந்த பின்னர்க் கடமையிற் பிழைத்தமையை நினைந்து வருந்தியிருந்து, ஆங்கிலப் பெருங் காப்பியமான **துறக்க நீக்கம்** (Paradise Lost) எனும் சிறந்த நூலைச் செய்தார். அவ்வாற்றலுடையார் பிறரும் கடமையை நினைத்தொழுகுதலே முறையாகும். ஆற்றல் உண்டாயபோது, அதன்வழி ஆகவேண்டியவை செய்யப் பெறுமெனின், கடமையை நினைத்து ஆசிரியர் ஆற்றுவரென்ப தென்னையோ என நினைத்தலும்கூடும். ஆற்றலுடையார், ஆற்றல் வீணாகச் சோம்பித் திரிதலும் கூடும். கடமையை மறந்து உரிமையையே பாராட்டி, இன்பத்தை நாடி நிற்றலும் கூடும். அலையும் மனத்தை நிறுத்தி, ஏற்ற முறையில் முயன்றாலே கடமையைச் செய்யலாகும்.

### அகண்ட தத்துவம்

இறைவனது அருள்வயமாய் இருக்கும் நிலையில் படைக்கப் பெற்றவை யாவும் பொருந்தி நிற்கும் அகண்ட தத்துவம் (universality) ஆசிரியனிடத்தில் தோன்றுமாற்றான், அண்டம் முற்றையும் ஒருசேரக் காணும் பரந்த நோக்கம் வந்தமைகின்றது. எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் ஆதரித்து நோக்கும் ஆற்றல் ஏற்படுமாற்றான், வெறுப்பற்ற தன்மையில் எதைக் கருதினும் அதை உள்ளவாறு அறியும் ஆற்றல் எய்துகிறது. அருட்பெரும் புலவர் இயற்றும் பெருநூல்களில் உலகின் பலவகை இயற்கைப் பொருள்களும் உயிர்களும் இயற்கையாக வமைந்த பலவகைத் தன்மைகளோடு இயங்கக் காணலாம். பொதுவாக, மக்கள் விரும்பாதவற்றையும் வெறுக்குமவற்றையுங் கூட, அன்ன புலவர் ஆதரித்து நோக்குமாற்றான், அவற்றின் தன்மைகளையும் போக்குகளையும் கூட உள்ளபடி உணர்வாராகையான், அன்னவை உண்மையாக நின்றியங்கும் பெற்றிகளைத் தாம் இயற்றும்

நூல்களில் அமைக்க வல்லுநராகின்றனர் செகப்பிரியர் நூல்களிலுள்ள பெருந்தொகையினரான நாடக உறுப்பினர், பல தனித்தன்மைகளையுடையவர்; அவர் பலரையும் ஒருசேர நோக்கும்போது, ஒரு உலகமே படைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அருளாற்றலின் திறந்தானென்னே! இராமனைத் திருமாலின் அவதாரமாகக்கொண்ட கம்பர், தாம் பாடிய இராமாவதாரத்தில், இராமனையும் சீதையையும் உயர்ந்த குணங்கள் பல அமையப் பெற்றவர்களாக ஆக்குவித்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், அவர் தன்மைகளோடு பொருந்தாத தன்மைகளையுடைய இராவணன் சூர்ப்பணகை போன்ற உறுப்பினரை ஆதரித்து ஆக்கியுள்ள திறம் கருதிக்கருதி வியக்கத் தக்கது. இராமனுக்குப் பகைவனான இராவணன் அளவற்ற தவங்களியற்றி, எல்லையற்ற வலியும், ஒப்பற்ற செல்வமும் ஒருங்கே பெற்றவன்; விண்ணவர்களையும் ஏவல் கொண்டவன்; மூவுலகங்களிலும் தவத்திலும் ஆற்றலிலும் செல்வத்திலும் அவனை ஒப்பாரும் மிக்காரும் இலரெனத் தக்கவன். அவனிடத்தே இருந்த குறை அறந்திறம்பிப் பிறனில் விழைந்ததே யாகும். இக்கருத்துக்களுக் கிணங்க, இராவணனுடைய பெருமையையும் பேறுகளையும் விரித்துரைக்கும் செவ்வியில் கம்பருடைய கோட்டமற்ற நெஞ்சின் பான்மையையும், தெய்வத் தலைவனுக்குப் பகை யென்றிகழாது அவனுடைய பெருமையையும் பேற்றின் மேம்பாட்டையும் பரக்கக் கூறும் தன்மையில் அவருடைய ஆதரித்து நோக்கும் செவ்வியையும் காணலாம். இவ்வாறு அகண்ட தத்துவமமையப் பெற்ற இலக்கியப் பேராசிரியர், தாம் பிறந்த நாட்டுக்கும் தம் தாய் மொழிக்குமே யன்றி உலகம் அனைத்துக்குமே உரியவராவர்.

### ஆழ்ந்த நோக்கு

[1]சிறந்த கவிஞர் ஆழ்ந்த நோக்குடையவராவர். அவர் பல பொருள்களும் உயிர்களும் மேவிய இவ் வுலகம்

1. "The seeing eye! It is this that discloses the inner harmony of things; what nature meant; what musical idea



முற்றும், அன்றி, இப் பேரண்டத்தி லடங்கிய எண்ணரிய உலகங்கள் பிறவும் அடிப்படையான ஒரு தெய்வ அமைப்புடையன வென்றும், [1]உயிர்களும் பொருள்களும் தம்மிடைப் பொருந்திய இயைபுடையன வென்றும் உணர்வர். பொருள் உயிர்களின் அமைப்பில் தோன்றும் முருகும் பல வண்ண மலர்களிடை மேவும் இனிய மணமும், மயில் முதலிய பறவைகளின் சாயலும், அன்னப்புள் ஆதியவற்றின் நடையழகும், குயில் முதலிய பறவைகளின் இன்னிசையும், உயிர்களின் உள்ளத்திடை யெழுந்து அவற்றைக் கட்டிப் பிணித்து நிற்கும் நேயமும் உலக அமைப்பின் பல வேறு வாயில்களில் மணக்கும் ஒரு பண்பாடே யாகும்.

### உள்ளத்தெழுச்சி

இயற்கைக் காட்சிகளிற் பொலியும் திரு எப்படி உள்ளத்தைக் கவருமோ, அதுபோன்றே, கவியின் கருத்திலெழும் கற்பனைகளும் உள்ளத்தைப் பிணிக்கும் தன்மையனவாம். உள்ளத்தில் ஆர்வம் பொங்கியெழுகின்ற நிலையில் அவரிடம் ஆக்குந் திறம் வந்தெய்துகின்றது;

nature has wrapped up in these rather rough embodiments. Something she did mean. To the seeing eye that something were discernable.... At bottom, it is the poet's first gift, as it is all men's, that he have intellect enough.... To the poet, as to every other, we say first of all see. If you cannot do that it is of no use to keep stringing rhymes together, jingling against each other, and name yourself a poet.

—Thomas Carlyle, Hero as poet.

1. "When to the new eyes of thee
All things by immortal power,
Near or far,
Hiddenly
To each other linked are,
That thou can'st not stir a flower
Without troubling of a star
Oh seek no more."

—Francis Thompson, The Mistress of Vision, stanza: XXII.

வேட்கை மிகவே, அக் கற்பனைகளை மொழியுருவில் ஆக்கும் திறம் அரும்புகின்றது. ஆக்குந் திறத்திற்கு முதல், வேட்கையால் எழும் உணர்ச்சியின் முதிர்வேயாம். [1]நுண்கலைகளிற் சிறந்த பாவும் உள்ளத்தெழுந்து தங்கு தடையின்றி மொழியுருவில் மலரும் முதிர்ந்த உணர்ச்சிகளின் வடிவேயாம். இவ் வகையில் தோன்றும் பெற்றியான், இலக்கிய நூல்கள், கற்போர் உள்ளத்தை யள்ளுந் தன்மை பொருந்தப்பெற்றுள்ளமை இயல்பேயாமன்றோ?

**உள்ளத்தகவு**

உடல்போல்வது கருத்து; அதன் உயிர் போல்வது உணர்ச்சி; அவ் வுணர்ச்சியும் கருத்தில் உள்ளபடி ஆர்வமிருந்தாலன்றி எழுவதில்லை. எனவே, உண்மையின்வழியே ஆர்வமும் மனவெழுச்சியும் எழுவனவாம். உள்ளத்தே முதிர்ந்தெழும் உணர்ச்சிகளின்றிக் கவியும் இல்லை. எனவே, உண்மையுணர்ச்சியே பாட்டுக்கு உயிராகும். உள்ளத்தைக் கவருமவற்றில் உள்ளபடி கருத்துப் பதிந்து துய்த்துச் சுவையை யறிந்து உவந்து கொள்ளும் நிலையிலும், பிறர்க்கு வந்தெய்தும் நிகழ்ச்சிகள் தனக்கே வந்தெய்தினவாகக் கொண்டு துய்த்து நிற்க, உணர்ச்சி முதிரும் நிலையிலும் கவிஞன் பாடும் ஆற்றலுடையவனாவான். தன் நண்பனாகிய சுக்ரீவனது துன்பத்தை ஒழிக்கும் பொருட்டுத் தனக்கு யாதொரு தவறு மிழைக்காத வாலியைக் கொல்ல நினைத்து, மறைந்து நின்று அம்பெய்தான் இராமன். இச் செயல் அறத்தின் பாலதேயோ என்று பலரும் ஐயுறத்தக்கது. அந் நிலையில், வாலியினது உள்ளத்தின் நிலைமை எவ்வாறு இருந்திருக்கக்கூடும். அவன் இராமனோடு எவ்வாறு

1. “Poetry is the spontaneous overflow of powerful feelings.”
—W. Wordsworth, Poetry and Poetic diction.

“What is poetry but the thoughts and words in which emotion spontaneously embodies itself.”
—John Stuart Mill, Poetry and its varieties.



உரையாடி யிருக்கக்கூடும் என்று கருதிப் பார்த்துப் பாடத் தொடங்கியபோது, கம்பன், தன்னை இராமன் அம்புக் காளாகிய வாலியாகவே கருதி, அந்நிலையி லெழும் உணர்ச்சி மிகாத நிலையில்,

“அரக்கரோ ரழிவு செய்து கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மநுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கமெங் குகுத்தா யென்பா லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி விதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்.”

என்ற இப் பாட்டும் பிறவும் பாடுதற்கு இயன்றிருக்குமோ? இதுபோன்றே, காப்பியத்திலும் நாடகத்திலும் பிற இடங்களிலுமுள்ள உறுப்பினரின் அனுபவம் தன் அனுபவமாகவே கொண்டு ஆசிரியனுக்கு உணர்ச்சி மிகாத நிலையில் செய்யப்பெறும் நூல்கள் விழுப்பம் பொருந்தத் தோன்றா.

**கருத்துண்மை**

இப்படிப் பிறர் அனுபவங்களையும் விளையும் சுவைகளையும் இன்பதுன்பங்களையும் தம்மவாகக் கருதுதற்கு உண்மை உணர்ச்சி இன்றியமையாததாகும். பிறர் ஆக்கமும் அழிவும் தம்மவாகக் கருதும் உண்மை நிலையிலேயே உள்ளவாறு உணர்ச்சி மிகுந்து இலக்கியம் அரும்பும். எனவே, இலக்கியத்தின் கருத்திற்கு உயிரளிக்கும் உணர்ச்சியும், உணர்ச்சியின் தோற்றத்திற்கு இன்றியமையாத உண்மையும் பரந்த நோக்கமும் முறையே இன்றியமையாதனவாம். இப் பரந்த நோக்கமும் பல வேறு தன்மைகளையுடைய பொருள்களையும் உயிர்களையும் ஆதரிக்கும் மனப்பான்மையிலேயே எழுவதாகும்.

**இலக்கியம் இயற்கையாகத் தோன்றுதல்**

எனவே, கவி, தெய்வத்தின் அருளால், தானாகவே எழுவது: [1]பெரும் புலமை படைத்த கவிஞனும் கூடக்

1. “Poetry is not like reasoning, a power to be exerted according to the determination of the will. A man cannot say, ‘I will compose poetry’.” —Shelly. A Defence of Poetry.

கவி தன் உள்ளத்தில் அரும்புவதற்கு முன் ஒன்றைச் செய்வதாக நுதலிப் புகுந்து செய்யலாவதொன்றன்று. இனி, கருத்தில் உதித்த பொழுதேயுங்கூட, அவ்வப்போதும் அது யாக்கவல்லது மன்று. அரும்பிய கருத்தில் உணர்ச்சி புகுந்து வளப்படுத்த, அக் கருத்தை மொழியுருவாக்குதற்கு ஆர்வமெழும்; மொழியுரு வளிக்கப்படாத நிலையில், ஆர்வம் இடையிடையே மேலும் மேலும் மிகும்; அங்ஙனம் கூர்ந்தெழும் ஆர்வத்தோடு யாக்கும் ஆற்றலும் மிகவே, தோன்றிய கருத்துக்கு உரு அளிக்காதிருத்தற்கியலாத நிலையில் இலக்கிய நூல் செய்யப்பெறும்.

### இலக்கியம், இயல்பில் இயற்கையா? அன்றிச் செயற்கையா?

இயல்பாகவே நற்சுவை யுணர்வு அமையப்பெற்ற புலவர்களின் உள்ளத்தில் இறைவன் திருவருள் வந்தெய்துமாற்றான், நூல்களை யாக்கும் திறம் மிகும். உலகிற்குக் காரணமான ஆக்கவியற் றிறமே பெரும்புலவர் நூல்களுக்கும் காரணமாக அமையும் பெற்றியினால் அவர் நூல்களில் இயற்கையமைப்பு மேவி மணக்கின்றது. எனவே, இலக்கிய நூல்களின் அடிப்படையான தன்மை இயற்கையேயாம். எனினும், ஆக்கவியலோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையிலிருந்து, நூல்களை யாக்கும் முயற்சியில் ஆராய்ச்சித் துறையில் நுழையும்போது, நூல்களில் செயற்கைத் திறமும் வந்தமையலாமென்று நினைத்தலும் கூடும். இயற்கைப் பரிசில் படிந்த மனமாகையான், அந்நிலையிலுங்கூட அதன் போக்கு இயற்கை நற்போக்கையொட்டியதாகவே யிருக்கும். எனவே, கவி முதலிய இலக்கியங்கள் அடிப்படையாக இயற்கை அமைப்புடையன என்றே துணியலாகும்.

### இலக்கியம் இயற்கையினும் மேம்பட்டது

இயற்கையைச் சார்ந்தெழுந்து இயற்கைப் பரிசு மணக்கும் செவ்வியினதே யாயினும், தரையைச் சார்ந்து அதன் ஆதரவில் நிற்பினும் பொற்கலசங்களை யேந்திய



உச்சி வானளாவிட நிவந்து நிற்கும் கோபுரங்களையுடைய திருக்கோயிலை யொத்து, இயற்கையை இகந்து சென்று வானளாவிய திருவொடு திகழ்வதேயாகும் இலக்கியம்: மொழியுருவுடைமையான் மண்ணைச் சார்ந்ததே யாயினும், மண்ணிடையே காணாத செவ்வி நிரம்பக் கொள்ளும் தன்மையில் விண்ணளாவியதுமாகும்; அறிவின் பரிசு திகழுமாற்றான், ஒருசார் மக்கட் சமூகத்தின் பரிசுடையதே யாயினும், தெய்வத் திருவருள் வாய்ப்பில் எழுமாற்றான் அருள் தேசு சிந்தும் அதன் சிகரங்கள் திருவருள் வான் வெளியை அளாவி நிற்பனவேயாகும்.

எனினும், அருள் நிலையினின்று முற்றும் பிளவுபட்டு நிற்கும் நிலையில், முயற்சியால் மட்டுமே செய்யப்படும் நூல்களில் இயற்கைப் போக்கு அமைவதில்லை. பெரும் புலவர்களும்கூட அருள்நிலையிலிருந்து இடையிடையே பிரிந்துநிற்பர். அந்நிலையில் நூல்களின் கருக்கள் தோன்றா. இயற்கைத் திறம் அமையப்பெறாது தாம் கற்ற நூல்களின் அமைப்புகளைத் தம் அறிவின் முயற்சியான் மட்டுமே அறிந்துகொண்ட போலிச் சுவையுடையோரால் செய்யப்படும் நூல்கள் வறிய செயற்கைத் தன்மையுடையனவாம். அருட்புலவர்களும்கூட அருள்நிலை தப்பியபோது இயற்கைப் போக்கினின்றும் நெகிழ்ந்து செய்யும் நூற்பகுதிகள் போலித் தன்மைகள் அமைந்தனவாம். சிறந்த நூல்களில் சிற்சில இடங்களில் காணப்படும் இயற்கைக்கு மாறான அளவு கடந்த கற்பனைப் பகுதிகள், அளவுக்கு மிஞ்சி அணிசெய்து அழகைக் கெடுத்துக் கொள்ளும் மகளிர் உருவங்களை யொக்கும்.

### எழிலமைப்பு

எனவே, இலக்கியமாதிய அருங்கலைகள், அண்டத் தோற்றத்தின் இயல்புக்குப் பொருந்த, அதனிடை யரும்பி அழகுபட மலர்வனவாகும். பொருள்கள் அவற்றின் இயற்கையமைப்பில் அழகுபட அமைந்துள்ளன. உயிர்கள் தோன்றி உரு நிறையும் தன்மையில் பலவகை வனப்புக்க

ளுறப் பொலிகின்றன. பூவரும் பொன்று தோன்றி நாளொடு வளர்ந்து உரு நிறைந்து மலரும்போது, நிறஞ் செறிந்தும் இதழ்கள் அழகிய வடிவொடு விரிந்தும் தாதுகளைச் சிந்தியும் மணம் கதித்துக் கமழ்ந்தும் முறுக்கவிழ் தலையொத்தே, இயற்கையாக உயிர்கள் தம் நிறைவை எய்துந் தன்மையில் பலவகை வனப்புக்களும் நிரம்பி மணக்கின்றன. எனவே, தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அழகு மலர்வது உண்மை: உயிர்களின் அமைப்பில் செறிந்து நிற்கும் உண்மைப் பண்பு, அவை வளருந் தன்மையில் அழகொடு மலிந்து சிந்துகிறது. அவ்வழகு வடிவில் நிறைந்து ததும்புகிறது; செறிவிற் செருக்கி, சாயலிற் சிந்தி, மெய்ப்பாட்டில் தெறித்து, நடையில் துள்ளிப் பொதுளுகின்றது; மொழியில் இசைத்து இனிக்கின்றது; உள்ளத்திற் செழித்து, கருத்தில் உருவாகி ஒழுக்கத்தில் மலர்கின்றது.

**எழிலுணர்ச்சி**

இப்பரிசில் தோன்றும் அழகைத் துய்க்கும் உணர்ச்சியும் அவ்வுண்மையின் ஒரு கூறேயாகும்: அழகுடன் அவிழ்ந்து பொலிவுற நிற்கும் செவ்வியும் அச்செவ்வியை நுகரும் உணர்ச்சியுமென உண்மை இரு கூறுகளாய்ப் பிளவுபட்டு மலர்கின்றது. [1]கங்குல் பகலற்ற எல்லையிலிருந்து கங்குலும் பகலும் பிளவுபட்டு ஒன்றையொன்று பின்னிக் கிடக்கும் இயல்புடைய இத்தோற்றத்தில், பண்புகளும் அவற்றை வேட்கும் உணர்ச்சியும், அதனையொட்டி அவற்றைக் கவர்ந்து நின்று துய்த்துச் சுவைக்கும் செயல்களும் ஒன்றையொன்று மருவி நிற்கின்றன.

1. "ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகி
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி."
—பெரியபுராணம்: தில்லைவாழந்தணர் – க.



அவை பெண்மையும் ஆண்மையும் போன்று, [1]ஒன்றையொன்று கௌவி நிற்கின்றன.

எனவே, எழிலுணர்ச்சி மக்களிடம் இயல்பாயமைந் துள்ளமை தென்படும். மக்கள், தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைத் தேடும் முயற்சியோடு எழிலையும் விரும்பிப் போற்றுகின்றனர்; எழிலுருவங்களை வரைகின்றனர்; எழில் வடிவங்களை அமைக்கின்றனர்; தங்கள் குரலில் எழிலுரு வமையும் வண்ணம் இசைக்கின்றனர்; மெய்ப்பாடுகளை அழகமையத் திருத்திக் கொள்ளுகின்றனர்; தங்கள் கருத்துக்களைத் தக்க மொழியுருவில் அழகுபட விள்ளுகின்றனர். இம்முயற்சிகளின் வாயிலாகவே, ஓவியம் சிற்பம் இன்னிசை நிருத்தம் இலக்கியம் ஆகிய அருங்கலைகள் எழுந்துள்ளன. இன்னும், குறவர் முதலிய நாகரிகமற்ற ஏழை வகுப்பினருங்கூடத், தங்கள் வறுமை ஒன்றையே பொருட்படுத்தி உயிர் வாழ்வதற் கின்றியமையாதனவற்றையே நாடி நிற்பாரல்லர்: தங்கள் அழகுணர்ச்சிக்கு ஏற்றவாறு பாசிகளைச் சரஞ்சரமாகக் கோத்து அணிந்தும், உடம்பில் பச்சையிட்டெழுதியும் அழகு செய்து கொள்ளுகின்றனர்; இன்னிசை முரல்கின்றனர்; ஆடுகின்றனர்; இனிப் பயிற்சியில்லாத பிள்ளைகள், உள்ளத்தில் மகிழ்ச்சி யெழும்போது இசைக்கின்றனர்; ஆடுகின்றனர். எனவே, அருங்கலைகளுக்கு அடிப்படையான அழகுணர்ச்சி யாவருள்ளத்தும் அமைந்து கிடத்தல் தெள்ளிதாம். இவ்வகையில் எழில் மலர்வதற்கு உணர்வற்ற களன்களாயமைவன உயிரில்லாதன; மக்களல்லாத உயிருள்ளனவும் எழில் அவற்றில் மலர்வதை அறியாதனவேயாம். [2]மக்களிற் பலர் அம்மலர்ச்சியை

1. "எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்."
—இராமாவ. பாலகாண். மிதிலைக்காட்சி, 35.

2. "One morning in the flower garden a blind girl came to offer me a flower chain in the cover of a lotus leaf.

உணர்வாரல்லர்; சிலரே உணரும் ஆற்றலுடையவர். அவரிடையும், அழகுணர்ச்சியும் ஆக்குந்திறமும் நிரம்பியவரே அருங்கலைஞராவர்.

**உண்மை அழகுபட மலரும் வகை**

இப்பேரண்டம் ஒரு பருவத்தில் அரும்பி, உரு நிறைந்து, இப்போது மலர்ந்து நிற்கின்றது. எனவே, இது சாம்பிக் கூம்பித் தேயும் பருவமும் உண்டென்பது உறுதி. இங்ஙனம், அதன் தோற்றத்துக்கும் மறைவுக்குமிடையே மலர்ந்து நிற்கும் இப்பருவம் தோன்றியே பல கோடி யாண்டுகள் கழிந்திருக்க வேண்டுமென்பதாகத் தெரிகிறது; இம்மலர்ச்சி கூம்புதற்கும் பல கோடி யாண்டுகள் கழியவும் வேண்டும். இப் பேரண்ட வளர்ச்சிக்குக் காரணமான உண்மை, சங்கினிடை அதைச் சமைத்த உயிர் மறைந்து நிற்பதையொத்து, இவ்வண்டத்தின் உயிர்நிலையாகிய இதயம் போன்று, இதனிடைத் தொக்கு நின்று இதனை இயக்குகின்றது. அளத்தற்கரியதாய் அமைந்து நிற்கும் இப்பேரண்ட மலர்ச்சியினிடை யாண்டுதோறும் மாறி வரும் பருவங்களும், கங்குல் பகல்களிடையமைந்து மாறி வரும் சிறுபொழுதுகளும் இவ்வுண்மையினின்றே மலர்ந்து சாம்புகின்றன. நோக்குக்கும் பிற புலன்களுக்கும் பொருளாகும் இவ்வண்டத்தின் தோற்றத்துக்கும் அளிப்புக்கும் முதலாகிய உண்மை ஐம்புலன்களுக்கும் பொருளாகாததேயாகும்; ஆறுவது புலனுக்கே ஒரு சிறிது பொருளாகி, மாறிச் செல்லும் பருவங்களின் தன்மையற்று, என்றும் மூவாது மறையாய் நிற்பதுமாகும்.

என்ன புதுமை! மாறிச் செல்லும் பருவங்கள் மேவிட ஐம்புலன்களுக்கும் பொருளாகும் இவ்வண்டத்தின் முதலாகிய உண்மை, அப்புலன்களுக்குப் பொருளாகாது, பருவ இயல்பு பொருந்தாது, நிலையாயிருப்பது எங்ஙனம்? முல்லை மலர்கள் கொடியினின்றன்றே தோன்றுகின்றன? எனினும், அவை அரும்புதற்குமுன் அக்கொடியை முற்றும் துருவிப் பார்த்தாலும் அரும்புகள் தென்படுமோ? அன்றி, அவற்றின் மணமேனும் அறியப்படுமோ? அவற்றின் மணமும் நிறமுமற்ற கொடியினின்றும் அவை தோன்றும் வியப்புதானென்னே! அரும்பு மலர்ந்து சாம்பும்போது கொடி சாம்புவதுமில்லை. இப்பெற்றியே, பருவமு மழிவு மற்ற உண்மையினின்றும் அண்டமும் அதனிடை மேவும் யாவும் தோன்றிப் பருவ இயல்பு அமையப் பெற்றுள்ளன.

I put it around my neck, and tears came to my eyes, I kissed her and said "you are blind as the flowers are, you yourself know not how beautiful is your gift."

—R. Tagore. The Gardener. 58.



பருவத்தின் தன்மைகளாகிய எழுச்சி நெகிழ்ச்சிகள் பாரின் வடிவத்திலும், ஒலி ஒளிகளின் அலைப் போக்குகளிலும், கங்குல் பகல் ஆதிய பொழுதுகளின் பெற்றிகளிலும், உள்ளத்தின் ஊக்கச் சோர்வுகளிலும், அன்றி இன்ப துன்ப உணர்ச்சிகளிலும் பிறவற்றிலும் மேவி நின்று இயங்குகின்றன. பகலொளி இன வண்ணங்களமைந்த எழுவகை யொளிக் கூறுகளாக மலர்வதை யொத்தே, தோன்றித் தேயும் பலவகைப் பண்புகளமைந்த அண்டமும் அதன் பரப்பிலுள்ள பொருள்களும் மாறுத முருகுடைய உண்மை அல்லது ஆக்கவியலினின்றும் மலர்ந்துள்ளன.

**உண்மை எழில்பட மலரும் தன்மையில் அருங்கலைகள் தோன்றுதல்**

பொருள்களிலும் உயிர்களிலும் பல பண்புகளாக எழில்பட மலரும் ஆக்கவியல், இரு கூறுகளாகி, ஒரு கூறு, மக்கள் உள்ளத்தில் அரும்பி, அறிவில் தழைத்து, குரல் நடை உருவம் வண்ணம் மொழியாதிய களன்களில் அருங்கலைகளாக மலர்கின்றது; மற்றொரு கூறு, அக்கலைகளிலுள்ள நலன்களைச் சுவைக்கும் உணர்வாக அரும்பி மலர்ந்து, அப்பண்புகளின் நலன்களை அவாவிப் பொருந்தி இன்புறுகின்றது. பண்புகள் மலருந் தன்மையில், அவற்றில் தோன்றும் அலைப்போக்கு, அவற்றைத்

துய்க்கும் உணர்வுகளிலும், அவற்றிடை யமைந்த சுவைகளிலும், அவற்றினின்றும் பிறக்கும் இன்ப உணர்ச்சிகளிலும் அமைந்து நிற்கின்றது.

வரிவடிவிலும் ஒளி நிழல்களிலும் நிற வேறுபாடுகளிலும் தோன்றும் செறிவு சோர்வுகள் ஓவியத்திலும் சிற்பத்திலும் அமைந்து உருத்து நிற்கின்றன. உள்ளத்தின் எழுச்சியிலும் நெகிழ்ச்சியிலும் பிறக்கும் இருவினச் சுவைகளை யொட்டி ஓசையில் எழுந்தும் இழிந்தும் அலையெனச் செல்வது இசை; அச் சுவைகளை யொட்டிய உணர்ச்சிகள் உள்ளத்தில் தோன்றி மெய்ப்பாட்டில் அரும்பி ஆட்டத்தில் மலர்வது நிருத்தம்.

உரிய பருவம் அணுகும்போது செடிகளும் கொடிகளும் செழித்து மலர்களைச் சொரிகின்றன; அப் பருவ இறுதி அணுகும்போது அவற்றின் செழுமை படிப்படியாகத் தேய்ந்து மறைகின்றது; மீண்டும் உற்ற பருவம் அணுகும்போது, அவை மீண்டும் செழித்து மலர்களைச் சொரிகின்றன. இப் போக்கு அருங்கலைகளிலும் அமைந்துள்ளது; அவற்றுள்ளும் இசையிலும் நாடகத்திலும் விளக்கமாக உணரக்கிடக்கின்றது.

**பா**

இவ்வகை மலர்ச்சியின் இயல்பு, கருத்தில் கருவாய்த் தோன்றி உருவெய்தும் செய்யுளின் தன்மையிலும் அமைந்து நிற்றல் இயல்பே யாகும். அதன் கூறுகளில் ஒன்றாகிய 'பா' உணர்த்தும் பண்பின் சிறப்பை யொட்டிப் போலும் செய்யுளைப் பா வென்பது. [1]"பா வென்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து, இன்ன செய்யுளென்று உணர்த்துதற்கு ஏதுவாகிப் பரந்து பட்டுச் செல்லுவதோர் ஓசை." பா, செய்யுளின் ஒரு கூறாகிய பரந்துபட்டுச் செல்லும் ஓசையைக் குறிக்குமாயினும், பரந்துசெல்லும் ஓசையைக்

1. தொல். பொருள்: 313, உரை.



குறிப்பது போன்றே, செய்யுளின் இயல்பை முற்றிலும் உணர்த்துவதாகவும் கொள்ளுதல் கூடும். ஆக்கவியலாகிய உண்மை மலர்ந்து பரந்து வரும் தன்மையில் உருவாகி நிற்கும் உலகிலுள்ள பொருள்களிலும் உயிர்களிலும் பரந்துபட்டு நிற்கும் அவ் வியல், மீண்டும் உரியவர் உள்ளத்தே தோன்றி, அறிவிற் கருவாகி, உருவெய்தித் தக்க மொழியுருவில் அழகுபட மலர்வதே செய்யுளாகும்.

பா என்னும் எழுத்தின் வரி வடிவை நோக்கும்போது, அதன் ஒரு பகுதியாகிய 'ப'வின் இரு கோடுகளும் அகன்று நிற்க, அதன் கவிழ்ந்த உருவுடைத்தாய், அதன் வீக்க ஒலியை உணர்த்தும் "ா" அதன் மருங்கே நிற்பதைக் காண்கின்றோம். இவ் விரு பகுதிகளையுடைய எழுத்தின் வடிவம், வளர்ந்து கதிர் வணங்கத், தாங்கி நிற்கும் நெல்லாதிய பயிரின் செவ்வியையும், உதிர்ந்த பொங்கர் கீழே கவிழ்ந்து கிடக்க நாண்மலரேந்தி அருகில் நிற்கும் செடியின் தன்மையையும் ஒத்துள்ளது: எனவே, அதன் உருவம் செழித்து மலர்ந்து பொங்கும் பரிசை உணர்த்தி நிற்பதாகும்.

இப் பண்பை யொட்டியே பிற உயிர் மெய்யின் நீண்ட ஒலியைக் குறிப்பதற்கும் அவ் வெழுத்துக்கள் பெரும்பாலனவற்றின் அருகில் "ா" வடிவம் அமைக்கப்பெறுகிறது. இப்படிப் பொலிவெய்தி பரந்து பட்டு வரும் போக்கு, தட்பம் வெப்பம் ஆதியவற்றிற்கும் உண்டெனினும், அழகுடைய பொருள்களும் உயிர்களும் இருக்க, அப் பண்பிற் சிறந்த மகளிரையே அழகென்னும் பொருளுள்ள மாதர் காரிகை யென்ற சொற்களைக் கொண்டு குறிப்பது வழக்காயது போன்று, பரந்து வருவனவற்றுள்ளும், உயிர்களிற் சிறந்த மக்களிடை, அருள் வாய்ப்பில், ஆசிரியருள்ளத்தில் அரும்பும் உண்மை, அறிவில் உருவெய்தி, அருள்மணக்க மலரும் அருங்கலை பலவற்றுள்ளும் சிறந்த இலக்கியத்தின் சிறப்புக் கூறாகிய செய்யுளின் ஓசையைக் குறிப்பதாகி, பின் செய்யுளின்

பொதுத் தன்மையும், அவ்வாறே பரந்துபட்டு வருவதை வைத்து அச் சொல்லைக் கொண்டே குறிப்பது வழக்கில் வந்தது போலும். இப் போக்கு செய்யுளுக்கே யன்றி, அதன் இனமாகிய உரைக்கும் பிற அருங்கலைகளுக்கும் பொதுவாக நிற்பதாகும். என்னை?, இலக்கியத்திற்கு முதலாகி, உரியவ ருள்ளத்தில் தோன்றும் ஆக்க வியல், இவ் வுலகொன்றுக்கே யன்றி, அனைத்துலகங்கட்கும் பொதுவா யமைந்து, இவ் வுலகைச் சார்ந்தவரையுங்கூட, அருங்கலை யுருவம் பிறவற்றிலும் ஆன அளவு மலரும் தன்மையதாகி, இலக்கிய வடிவிலும், உலகத்தின் சிறந்த பல மொழி யுருவங்களிலும் மலரும் தன்மையதாகலின். எனினும், அச்சொல், அருங்கலைகளிற் சிறந்த இலக்கியத்தில், உரையைக் காட்டிலும் உள்ளப் பரிசின் மிகுதியும் ஓசைச் சிறப்பும் பெற்று நிற்கும் செய்யுளையே, சிறப்பு நோக்கிக் குறிப்பதாயிற் றென்க.

**இலக்கியக் கருவின் சிறப்பு**

உண்மை பொலியுந் தன்மையில், அது இயற்கை யுலகத்தில் மலரும் வண்ணமே, அருட்பெரும் புலவர் உள்ளத்திலும் தோன்றி, மொழியுருவிற் றிகழும் பல வனப்புக்களும் மலரத்தக்க வகையில் உரு வெய்துமெனினும், இலக்கியக் கரு, தன்மையில் மிக உயர்ந்தது: பொருள்களினும் பிற உயிர்களினும் எத்துணை மேம்பட்டவரோ மக்கள், அவ்வளவிற்கும் ஓரளவு விஞ்சிய சிறப்பினதாகும் இலக்கியக் கரு. இவ் வேறுபாடு காமத்திற்கும் காதலுக்கும் இடையே உள்ளதை ஒக்கும். உலகின் இயற்கைப் பகுதி, உயிரில்லனவொடு தொடங்கி ஐயறிவுடைய உயிர்களை யடக்கி நிற்கும். மனிதனோ, உடற் கூற்றில் ஒருசார் விலங்கை ஒத்திருப்பினும், ஆறறிவுடைமையினும், அன்பிற் றோன்றி அறிவின் பயனா யமையும் ஒழுக்கமுடைமையினும் தெய்வத்தன்மை பொருந்தியவனாகும். இன்ன பரிசுடைய மக்களிடையும், இறைவன் திருவருளுக்கு இலக்கா யமையும் சிறப்புடையோராய், பரந்த நோக்கமும் ஆழ்ந்த நோக்கும் கூர்த்த எழிலுணர்ச்சி



யும் நூல்களைச் செய்தளித்தலில் தடுப்பரும் ஆர்வமுமுடைய ஆசிரியர் கருத்தில் புலனெறி வழக்குக்கேற்ப அமைந்து, காட்சியின் வழி யரும்பிவளரும் கரு, உலகின் இயற்கைப் பகுதியில் பிற களன்களில் தோன்றுமவற்றினும் மிகமிக மேம்பட்டதே யன்றோ! இனி, கலைகள் பிறவற்றிற் கமையாத சிறப்புடையன அருங்கலைகளாகவும், அவற்றிடைத் தனிச் சிறப்புடையது இலக்கியமாகலின், அதன் கரு பிறவற்றின் கருவகையினும் மேம்பட்டதேயாகும்.

அறிவிலே சினைப்பவை அருங்கலைகளுள்ளிட்ட கலைகளனைத்தின் கருவகைகளெனின், அவற்றிடை அருங்கலைகட்கும், அன்றி இலக்கியத்திற்கும் சிறப்பும் தனிச் சிறப்பும் அமைதல் எங்ஙனமென்பதைப் பிறிதொரு வகையானும் ஆராய்வாம். அருங்கலைகள், உண்மை மலருந் தன்மையில் அழகுபடத் தோன்றுவனவாம்; பிற கலைகள் அவற்றின் வழி வரும் பயனைக் கருதியே வளர்க்கப்பெறுவனவாம். பிற கலைகளின் கரு கருத்திலே, தோன்றி நிற்ப, அருங்கலைகட்கு ஆதியான ஆக்கவியல், ஆசிரியர் உள்ளந் தோய்ந்தெழும் உண்மையாகத் தோன்றிக் கருத்தில் உரு நிரம்பி, மொழியாதிய வடிவில் நிறைவெய்தும். எனவே, அருங்கலைகள் அறத்தைச் சார்ந்தெழுபவை; பிற கலைகள் அவற்றின் பயனைப் பொருட்படுத்துவோர் கருத்துக்கேற்ப அறத்தாற்றினும் அமையும்; அன்றி, அல்லாத வகையினும் அமையும். அறன் சார்பில்லாத நூல், மொழியிலக்கணத்தின் பரிசுடைத்தாய் மெருகமையப்பெற்று மயக்குதலும் கூடும், ஆன வழியும் இலக்கியமாகாது. இலக்கியத்தின் நலனை ஆராயும் வழி, பிற அருங்கலைகட்கில்லாத அதன் சிறப்பைப் பேசுவாம்.

அளத்தற் கியலாததாய் எல்லையற்றுப் பரந்த நீல வானிடை யமைந்த எண்ணிடற் கமையா நாள்களும் கோள்களும் கொண்ட பேரண்டத்திடை, அந்தரத்தே திரிந்து நிற்கும் இம் மலர்தலை யுலகின் இயற்கை யமைப்பு, இயற்கைப் பொருள்களிடையும் பிற உயிர்களிடையும்

அமைந்த மக்களின் வாழ்க்கைப் பரிசு, நாகரிகப் போக்கு, கலை வகை, பல நாகரிகங்களிடையும் தோன்றிடும் ஒரு பெற்றித்தாய அருங்கலைகள், பிற கலைகளுக் கமையாத அவற்றின் சிறப்பியல்பு, அவற்றிடைத் தலைசிறந்த இலக்கியம் தோன்றும் பெற்றி, இறைவன் திருவருள் வாய்ப்பில் இலக்கியம் செய்யும் ஆசிரியன் வாழ்க்கைப் பரிசு, அவன் இறைவன் கைக்கருவியாக வமைதல், ஆசிரியன் சிறப்பியல்புகட் கமைய அவன் உள்ளத்தெழும் உணர்ச்சிபற்றி அவன் கருத்தில் இலக்கியக் கரு அரும்பும் வகை, அக் கருவின் சிறப்பியல்பு ஆயவற்றை இப்பகுதியிற் செப்பினும். இனி, அக் கரு உருவெய்தும் வகையாதியவற்றை "உரு" என்னும் இந்நூலின் அடுத்த பகுதியில்ஆராய்வாம்.

# உரு

### இலக்கியத்தின் முதல்

வரவிருக்கும் வடிவினைத் தன்னில் அடக்கி நிற்கும் கருவே இலக்கியத்தின் முதலாகும். மொழியுருவில் வெளி வருவதற்குமுன் இது கருத்தில் அமைந்து வளராநிற்கும். இலக்கியம் என்னும் பெயர் உண்மையில் இக்கருவிற்கே பெரிதும் உரியதாகும்.

தொன்றுதொட்டு வந்த தம் முன்னோர் அறிவு அனுபவம் ஆயவற்றையொட்டி ஆசிரியர் உள்ளத்தில் மேவிடும் உணர்வுகளின் பரிசு பொருந்தியனவா யிருக்கும் இக்கருவினம். பலரும் கண்டு மகிழுமாறு அழகிய உருவினை யேந்தி நிற்கும் திருக்கோயிலைத் தாங்கித் தரைக்குள்ளே பொதிந்து நிற்கும் அதன் புதைகால் போன்று, நூலில் நுவல விருக்கும் பொருள்களைத் தாங்கி நிற்பதாகும் இக் கருவினத்தை யாதரித்துத் தோய்ந்து மறைந்து நிற்கும் உணர்வின் கூறுகள். எனவே, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மக்கள் உணர்வுகளின் ஆக்கத்திறம் வளம் ஆயவற்றை யொக்கும் பரிசுடையனவேயாம் அவ்வந்நாட்டின் இலக்கியமாதிய அருங்கலைகளென்பது பெற்றும். தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்கள் சிறந்த சிற்ப உருவங்களமைந்தன; ஆடல் பூடல்களிலும் சிறந்து விளங்குகிறது இந்

நாடு; இனி, இலக்கிய மாண்பிலும் வளத்திலும் உலக மொழிகளில் ஒரு சிலவே தமிழ்மொழிக்கு ஒப்பிடத் தக்கவை என்று அறிஞர் கூறுவர். எனவே, இலக்கியமாதிய சிறந்த அருங்கலைகளை உலகிற் களித்தற்கான மாண்பும் வளமும் பொருந்திய உணர்வுகளும் திருவருட்பேறுமுடையதாகும் தமிழர் வாழ்க்கையென்பது பெற்றும். நாகரிகத்தின் சீரும் சிறப்பும் வந்தெய்துதற்கு வாய்ப்பும் இவ்வகையிலேயே அமையும்.

### யாத்தல் ஒரு தனிக் கலை

இக்கருவினத்திற்கு மொழி யுருவைத் தரும் செயலே யாத்தலெனப்படும். யாப்பென்பது பாட்டையும், யாத்தலென்பது கருத்தைப் பா வுருவில் ஆக்குதலையுமே குறிப்பனவாமெனினும், உரை நூல் செய்தலினும் சில முறைகளைக் கையாள வேண்டுமாதலானும் பா உரையாகிய இரண்டையும் கொண்ட இலக்கியத்தை ஆக்குதலை யாத்தல் என்னும் ஓர் பொதுச்சொல்லைக் கொண்டே குறிப்பாம். இலக்கியக் கருவினோடு தொடர்புடைத்தாகி அதன் பரிசுக்கமைந்ததே யாயினும் யாத்தல் ஓர் தனித்த செயலேயாகும்; அதனை ஓர் தனிக்கலை யென்று கொள்ளினும் இழுக்கில்லை. ஒவ்வொரு மொழியிலு முள்ள பல ஆசிரியன்மாருடைய யாத்தற் செயல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், யாக்கும் திறத்தில் பல ஏற்றத்தாழ்வுகளையுடைய இயற்கை ஆற்றல் வேறுபாடுகளும், கையாளும் முறைகளில் பல படித் தரங்களுள்ள செப்பமும் அமைந்து கிடத்தல் தெள்ளிதாம். ஆசிரியன்மார் அனுபவம் மிக மிக, யாக்கும் ஆற்றல் மிகும் தன்மையினால், யாத்தல் ஒரு தனிக்கலையே யென்னும் கருத்தும் வலியுறும். யாத்தற் கலை இலக்கிய அருங்கலைக்குத் தொழும்பு செய்யும். இலக்கிய அருங்கலையாசிரியர் தம் யாத்தற் கலைத்திறத்தை வளபடுத்திக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்: கருத்தை விள்ளுதற்கான மொழியைத் தருதற்கு ஏற்றவாறு சொற்றொகை யறிவை வளப்படுத்தி விள்ளுந் திறத்தையும் செப்பஞ்செய்து கொள்ளுதல் வேண்டும்.



கருவிற்கு ஏற்ற உருவினை யளிக்கும் நோக்கத்தோடு, தக்க உரைநடை யாப்புருவங்களைத் தேர்ந்து, கருவின் பரிசிற்கு அளவில் அகன்றதும் குறுகியதுமின்றி, ஏற்ற அளவினதாயும், கருவின் பண்பு முற்றும் மணத்தற்கான தன்மையுடையதாயும், கருவின் உருவை உள்ளபடி விள்ளுதலிற் கண்ணாடி போன்றதாயும், இன்னும் கருவிற்கு உறைபோலாது, அணியமைந்த எழிலுடம்பு போன்றும் அமையும் மொழியுருவில் உண்மை மலர நுதலுதலே ஏற்புடைத்தாகும். உடலுருவினைக் கொண்டு உயிர்ப்பண்பினை அறியலாவது போல், மொழி யுரு கருவிற்கு ஏற்றதாயும் அதற்கு அணிசெய்வதாயும் சமைதல் வேண்டும்.

### யாக்கும் திறம் இயல்பாக அமைதல்

பறவை யினங்களிற் பல, அவை தங்குவதற்குக் கூடும் பிறவும் அமைத்துக் கொள்வதில்லை. நாளெல்லாம் இருந்தும் திரிந்தும், தத்தியும் பறந்தும், ஊடியும் கூடியும், பேசியும் கூவியும், ஆடியும் பாடியும் பொழுதைக் கழிப்பவை, பொழுது சாயவும், புதல் செடி மரம் ஆயவற்றைச் சேர்ந்து இருந்து, இரவைக் கழிக்கும். ஆனால், அவையுங்கூடக் கூடு கட்டிக்கொள்ளும் பருவமு முண்டு. கருவுற்றபின், அக் கரு முட்டையாவதற்குள் கருவுற்ற பேடும் அதன் துணையும் கூடுகட்டத் தொடங்கும். அப்பருவத்தில், இரை தேடுதலையுங்கூடப் பொருட்படுத்தாது, புல்லும் செத்தையும் பிறவும் தம் அலகிற் கொணர்ந்து கூடமைக்கும்; வேட்கை மீதுற இணைந்து கொஞ்சிக் கூடியிருக்கக் கழியும் பொழுது போக, எஞ்சிய பொழுதில், அவற்றின் சிந்தை பிறவற்றைக் கருதாதும் நாடாதும் கூடு கட்டுதலிலேயே மிகுந்த வேட்கையோடு படிந்து நிற்கும். ஆக்கவியலின் செயலால் அமையும் கருவினம் முதிர்ந்து உருவாகும் முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் வளர்ந்து சிறகுகள் முளைத்தபின் வெளிப்படுவதற்கு வாய்ப்பளிக்கும் கூடு, கருவுற்ற பறவை அதன் துணை ஆயவற்றின் உள்ளத்தெழும் உந்துதலினால் கருவுறும் பருவத்திலேயே அமைக்கப் பெறுவது போன்றே,

தோன்றவிருக்கும் நூலின் கருவாகிய கருத்து அரும்பிய பின்னரே அதனை விள்ளுதற்கு வேண்டிய முயற்சிக்கான உந்துதலும் நூலாசிரியர் உள்ளத்திலேயே இயற்கையாகப் பிறக்கும். இவ்வாறன்றி, நூலின் கரு தோன்றுதற்கு முன்னரே நூலொன்று யாத்தலை நுதலி யாக்கப் புகுதல், மலடி யொருத்தி குழந்தையை வளர்ப்பதற்கானவற்றைத் தேர்ந்து வைப்பதை யொக்கும்.

**கருவற்ற எனவே, உயிரற்ற போலி நூல்கள்**

இவ்வகையில், இயற்கையாகத் தோன்றும் குழவி போலாது, குழவியின் மீதுள்ள வேட்கையினுல், வடிவில் குழவியை யொக்க அமைத்து வைத்துக் கொள்ளும் பாவை போன்று, பொருள்வேட்கை புகழ்வேட்கைகள் உந்த, இயற்கை யாற்றலமைந்த புலவர்களின் முறைகளைத் தழுவிச் செய்யப்பெறும் போலிநூல்கள் பல நாளும் வெளிவருகின்றன. தூய இலக்கிய வேட்கையும் இலக்கியச் சுவை யறிவு மற்றவர், வகுப்புப் பற்றுக்களும் பிற நோக்கங்களும் உந்த அவ்வகை நூல்களை ஆதரித்து, அவற்றின் ஆசிரியன்மாரைப் போற்றுதலுமுண்டு. போலிச் சுவையானும் பிற நோக்கங்களானும் தோன்றி ஆதரவுபெற்று நிலவும் அவை ஒரு சிறு காலவரம்பில் மங்கி யழிதலும் இயல்பே.

**ஆக்கவியலின் உருவம் அழகு**

இலக்கியத்திற்கு முதற்காரணம் ஆக்கவியலே யாகுமென்பதை உணர்ந்தாம். இயற்கை நற்காட்சிகளை யளிக்கும் பொருள்கள், வடிவழகும் வண்ணமும் தாங்கி இயங்கும் உயிர்கள், ஆயவற்றின் உரு இயக்க நலன்களிற் பொலியும் ஆக்கவியலே உயிர்களிற் சிறந்த மக்களிடை, அழகுணர்ச்சி மிக்க ஆசிரியர் உள்ளத்தில் அரும்பி, அன்னவர் அறிவில் வளர்ந்து, மொழியுருவில் இலக்கியமாக மலர்ந்து மணப்பதாகும். ஆக்குந் திறம் மக்கள் பலரிடத்தும் அமைந்துள்ளது. மணலில் மாடமும் அரங்கும் பிறவும் அமைத்து ஆடலில் திளைக்கும் பிள்ளைகளின்



ஒழுக்கத்திற்குக் காரணம் இத்திறமேயாம். சிறுபோது, விளையாட்டில் இயற்கையாக மலரும் இத் திறம், அச் சிறார் வளர்ந்து பருவமெய்திய பின்னர், அன்னவரிற் பெரும்பாலோர் கருத்துக்கள் பொருட்பயன் விழையும் போக்கில் செல்லுமாற்ருன், நசிந்து மறைந்து நிற்க, அழகுணர்ச்சியுடைய ஒரு சிலருடைய கருத்துக்களில் வளர்ந்து மலர்வதாகும். என்னை? ஆக்கவியலின் உருவம் அழகேயாதலின். அழகுணர்ச்சி நிரம்பிய கலைஞர் தருவனவே அருங்கலைகள். அருங்கலைகளில் தலைசிறந்ததே இலக்கியம்.

அழகுணர்ச்சி முதிர்ந்து வளர்ந்து நிறைவெய்திட ஆசிரியர் கருத்தினின்றும் மொழியுருவில் வெளிவரும் பாவும் உரையு மடங்கிய இலக்கியம், வாழ்க்கையின் உயிர்ப் பண்புகள் அமையக் கொண்டு, துய்க்கும் மக்களின் அழகுணர்ச்சியின்வழி எழும் வேட்கைக்கு உகந்ததாகி, அவ்வுணர்ச்சியை வளர்த்து மேம்படச் செய்யும் உருவழகுடன் மலர்ந்து மணக்கும்.

**இலக்கியத்திற்குரிய பொருள்**

எனவே, இத்தகைய விளைவைக் கற்போர்க்குத் தருவதற்கு, ஏற்றவாறு உள்ளக் கிளர்ச்சியைத் தந்து அழகுறுத்த வல்ல நிகழ்ச்சி காட்சிகளாதியனவே இலக்கியத்திற்குரிய பொருள்களாகுமென்க. கோழை யுலகில், அன்றன்றும் நேரும் நிகழ்ச்சிகளும், உடலைப் போற்றுதற்கும் உடல்வழி மேவு மின்பத்தை வளர்ப்பதற்கும் பயன்படும் பொருள்வகையும், அவற்றைப்பற்றிய பலவகைச் செய்திகளும், பலர் விரும்பத் தக்கனவேயா மாயினும், அவற்றல் விளையும் பயன் உளதாமேல், சிறு கால எல்லையில் சுவை தேயு மியல்பினவே யாயினமையானும், அவை மக்கள் நோக்கங்களை மேம்படுத்தி அழகுணர்ச்சியை வளர்த்து நிலைத்த உயிர்க்குறுதி யளிக்க மாட்டாவாகையானும், அவை புலனெறி வழக்கின்வழி ஒரு சிறை ஏற்றுக்கொள்ளும் வழியேயன்றி, முற்றும் இலக்கியத்துக்குப் பொருள்களாகா.

**பொருள் வகை**

இனமணியொளி காலும் விண்மீன்களும் ஞாயிறு மதி யாதிய கோள்களும் திரிதரும் எல்லை யற்ற வான வெளியும், அதனிடையே தவழும் முகிலினங்களும், மாறிச் செல்லும் பருவங்களால் முயக்குண்டு நலன் பல சிர்தும் நீல வான் மலைகள் சார்ந்த காடுகள் ஆறுகள் ஏரிகள் குளங்கள் சோலைகள் முதலியன மேவிய நிலப் பரப்பும், முத்து பவழம் சங்கு சிப்பி இனங்களைக் கொழிக்கும் கருங் கடலின் அலைப் பரப்பும், மணிநிறத் தூவி போர்த்து இசை முரல்வனவொடு அணிநடை பயிலும் புள்ளினமும், நிறமும் சாயலும் பீடும் பொருந்திய மருள் மா நோக்கின் மானாதிய மாவினமும் அடங்கிய கைபுனைந்தியற்றுக் கவின்பெறு வனப்புடைய இயற்கை யுலகமும், மழலை விள்ளும் மடமை யுருவின் குழவிகளும், ஒப்பரு நலனுடைய மெல்லியன் மாதரும், அன்பு அருள் வீரம் அழுக்காறு ஆதியவற்றால் சமூகத்தில் நிகழும் பல சிக்கலுடைய மக்கள் வாழ்க்கைமுறையும் இலக்கியத்திற்குப் பொருள் களாம். இவற்றையும் இவை போல்வன பிறவற்றையும் பொருள்களாகக் கொண்ட இலக்கியம் தோன்றும் வகை, அதன் இயல்பு, அதன் பயனாதியவற்றை அழகுறக் கருத் துட்கொண்டு விள்ளற் குரியனவும் இலக்கியத்திற்குரிய பொருள்களாம். இனி, அழகுணர்ச்சி மிக்க ஆசிரியர் கண்டு அனுபவித்தவாற்றான் ஏற்புடையனவாமெனக் கொள்ளும் பிறவும் அன்ன பரிசினவேயாம். கருதிப் பார்க்கும்போது, ஆசிரியன்மாரால் பொருட்படுத்தலாகும் எவ்வகைப் பொருளும் இலக்கியத்துக்குரிய பொருளாகும் என்பதும் போதரும்.

ஆசிரியன்மார் ஏற்புடையனவாமெனக் கொள்வன வற்றுள், பல பொருள்களைப்பற்றிய அவர் கருத்துக்கள், மக்கள் ஒழுக்கமுறைகள், காதல் வீரம் கையறுநிலைக ளாதிய உணர்ச்சிகள், பழக்க வழக்கங்க ளாதியனவும் ஆசிரியர் உணரும் செம்முறைபற்றியும் விள்ளும் நுட்ப திட்பங்களையொட்டியும் இலக்கியப் பொருள்களாம். புற



நானூற்றுப் பாட்டுகள் பெரும்பாலனவும் இவ்வகைகளில் அடங்கும்.

எல்லா நூல்களும் கருத்துக்களையொட்டியே எழுவன வாமெனினும், கருத்துக்களென்று முன்னே கூறப்பட் டவை ஆசிரியருடைய சொந்தக் கருத்துக்களாம். சிறப் பியல்புடைய நாட்டின் இலக்கணத்தை "நாடு" என்னும் அதிகாரத்தில் ஆராய்ந்து, அச்செவ்விகள் பலவும் அளவு படக் கூறியுள்ளார் பொய்யாமொழியார். ஆனால், [1]நிலப் பகுதியின் நலன், அப்பகுதியில் நல்ல ஆண்மக்கள் உள ராயவழியே அமையுமென்று ஔவையார் கூறியுள்ளார். இது அவர் சொந்த உறுதிப்பாடான கருத்து: என்னை? நாட்டின் சிறப்புக்குப் பிறவற்றைக் காட்டிலும் நல்ல ஆடவர் உளராதலே இன்றியமையாததாகும் என்று அவர் எண்ணியிருந்தாராதலின். நிலத்துக்கெனப் பெரி தும் தனிப்பட்ட இயல்பொன்றில்லையென்பதும், அங்குள் ளோர் தன்மைகளையொட்டியே நிலப்பகுதிகள் நல்லனவும் தீயனவுமாமென்பதும் கருத்து. ஆடவரென்பது ஆற்ற லுடையோர் என்னும் பொருளை உணர்த்தி நின்றது, ஆடவர் ஆற்றலுக்கும் மகளிர் மென்மைக்கும் சிறப் புடையோராகலின். நாட்டைப் பண்படுத்துதற்கு ஆற்றல் வேண்டுமாகலின் அங்ஙனம் கூறப்பட்டது.

ஒழுக்கத்தைப் பொருளாகக் கொண்டெழுந்த நூல்களுள் தனிச் சிறப்புடையது திருக்குறள். அதனிடை ஆராயப்பெறும் பொருள் வகையையும், அவற்றை வகுத் துக் காட்டியும் விளக்கியும் சுட்டியும் செல்லும் தன்மையை

---

1. "நாடா கொன்றோ காடா கொன்றோ
*அவலா கொன்றோ †மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு: 187.

* அவல் - பள்ளம்.

† மிசை - மேடு.

யும், உண்மைகளை இடித்துரைக்கும் செவ்வியையும் நோக்க, அது தமிழ்நாட்டுக்கேயன்றி, உலகம் முழுதுக்கும் ஊழியூழிக் காலமும் பொய்யாமொழியே யாகுமென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. அதன் பொருளை முற்றிலும் உணர்த்தும் ஒரு சொல் உளதாமேல் அது ஒழுக்கமே யாகும்.

இதனைப் பொருளாகக் கொண்டு தமிழில் எழுந்த நூல்கள் பல. அவற்றுள் பொருள் வகையின் நிறைவும், கருத்துக்களின் அழகும் செப்பமும், நுதலும் நுட்ப திட்பங்களும் குறளில் அமைந்த வண்ணம் பிற நூல்கள் எவற்றிலும் அமைந்தில.

காதல் வீரம் ஆகிய உணர்ச்சிகளைப்பற்றிப் புலவர்கள் காப்பியங்களிலும் பிற நூல்களிலும் சித்திரித்துள்ளார். மானத்தினும் பொருட்படுத்தத் தக்கது பிறிதொன்றில்லை என்னும் பொருள்படச் [1]சேரமான் கணைக்காலிரும்பொறை சொல்லித் துஞ்சிய பாட்டினுள், உணர்ச்சியின் உறைப்பு எத்துணை ஓங்கி நிற்கின்றது! மானத்தைப் பொருட்படுத்துதல் யாவர்க்கும் இயல்பேயாயினும், சிலரிடம் அப் பண்பு மிக்கிருக்கும்; அவர் மானமழிய நின்று வாழார். அத்தகையாரிடையும் சிறந்த ஒருவர் தம் மானத்தைக் காத்து உணர்ச்சி துளும்பப் பாடிய இப் பாட்டில் உயிரின் உயர்வு சாய உடம்பைப் பேண இசையாது, உயிரின் பெருமையை நிலைநிறுத்திய பான்மை மக்கள் இனத்துக்கே சிறப்புச் செய்து நிற்கின்றது; இத்தகைய உணர்வை யூட்டும் இப்பாட்டை நினைவுகூரும்போதெல்லாம் மக்கட் பிறப்பின் உயர்வையுன்னி, உள்ளம் இறுமாந்தெழுகின்றது.

1. "குழவி பிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத் தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்மரோ விவ் வுலகத் தானே." —புறநானூறு: 74.



புறநானூற்றுப் பாத்தொகுதியில், ஈதலின் உயர்வையும் இரத்தலின் இழிவையும் உள்ளத்தில் கச்செனப் படும் பான்மையில் உணர்ச்சியொடு விள்ளும் செய்யுள்களும் பலவுள. இவ்வாறே, பிற உணர்ச்சிகளை உணர்த்தும் பாட்டுக்களும் உள. சில பாக்கள் குழவிப் பருவம் கல்வி ஒழுக்கம் ஆட்சிமுறை யாதியவற்றைப் பற்றியவை. இனி, உள்ளத்துக்கினியார் மறைய, நேரும் கையறுநிலையில் எழும் உணர்ச்சியை விள்ளும் நூல்களின் தன்மை உள்ளத்தை மிகமிக உருகச் செய்வதாகும். [1]இறந்துபட்ட அதியமான் நெடுமானஞ்சியின் குணங்களைக் கூறி ஔவையார் பாடியுள்ள பாட்டு இத்தகையதாகும். பட்டினத்தடிகள், உடல் நீத்துச் சென்ற தம் அன்னையாரைப்பற்றிப் பாடியுள்ள செய்யுள்கள் உள்ளத்தை நனி யுருக்கும் செவ்வியவாம். எல்லாம் துறந்த ஞானியின் அன்பின் மிகுதிதான் என்னே! அன்பையும் துறத்தலோ துறவு!

இனிப் பழக்க வழக்கங்களை வைத்துப் பாடுதலும் மரபேயாம். பகை யரசரை ஒறுத்து வெற்றி பெற்ற வேந்தன், எழுச்சி மீதூரப் பெற்றோனாய், [2]பகைவர் பொருள்களைப் பாணராதியோர்க்கு வழங்கும் மரபு, [3]அரசனை இழந்த குடிகள் மலர் சூடுதலை யொழிக்கும்

1. பிற்சேர்க்கை: ௨ பார்க்க. (புறநானூறு: 235.)

2. "பாணர் தாமரை *மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது †விறன்மாண் குடுமி
இன்னு வாகப் பிறர்மண் கொண்
டினிய செய்திநின் ‡ஆர்வலர் முகத்தே."
—புறநானூறு: 12.

3. "§இளையோர் சூடார் ‡வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே."
—புறநானூறு: 242.

வழக்கம் ஆதியவற்றைப் புலவர் பாடியிருக்கின்றனர். பிற பழக்கங்கள் சிலவற்றை வைத்துப் பாடுதலும் மரபே யாகும். இவ்விலக்கிய வகையில் நாம் காண்பது வறிய பழக்க வழக்கங்களைப்பற்றிய செய்திகள் மட்டுமல்ல; அவற்றை மேற்கொள்ளுவதற்கான நிகழ்ச்சிகளால் விளைந்த உள்ளத்தின் நிலைகளையும் கண்டு உணர்ந்து எழுச்சியும் சோர்வும் அடைகின்றோம்.

உண்மை, எத்துறையினும் எவ்வாற்றானும் போற்றப் பெற வேண்டியதேயாகும். மக்களின் சிறப்பியல்புகளும், அவர் வாழ்க்கை முறையில் கண்டு கொண்ட உண்மைகளும் இலக்கிய நூல்களில் இடையிடையே அறத்தாற்றைக் காட்டி மிளிர்கின்றன. இவ்வகையில் உண்மைகள் பலவற்றையும் பிழிவாகக் கொண்டு சிறந்து நிற்பது திருக்குறள்.

நாட்டுப்பற்று, சமூகப்பற்று, சமுதாயத்தின் சிறப்பு, மொழிப்பற்று, அதிலமைந்த இலக்கிய நூல்களின் மாண்பு, அரசியல் உரிமை, உரிமைப் போர், வெற்றி தரும் மகிழ்ச்சி யாதியனவும் இலக்கியத்துக்குரிய பொருள்களாகும். அமரகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ள இவ்வகைப் பாட்டுகள் நாளும் பாடி மகிழப்பெறுகின்றன.

இனி, மக்கள், தாம் மக்களென்ற சிறப்பு வகையில் எவற்றைப் பொருட்படுத்துவரோ, அப் பொருள்களெல்லாம் இலக்கியத்திற்குரிய பொருள்களாம். முன்னே குறித்த இயற்கை யுலகம் ஆதியவையும் இவ்வகையில் அடங்கும். இனி, ஒரு பொருளையோ அல்லது உயிரையோ மக்கள், தம் சிறப்பியல்புக்கமையவும் பொருட்படுத்தலாம்; அல்லாத வகையிலும் பொருட்படுத்தலாம். மக்களுக்குத் தம் உடம்பின் இயல்பை யொட்டிய விலங்கியல்பும், அன்றி, அன்பு அருள்களின் வழியமைந்த சிறப்பியல்புகளும்

* மலைதல் - அணிதல்.
† விறல் - வெற்றி.
‡ ஆர்வலர் - அன்புடையார்.
§ இளையோர் - இளைஞர்.
$ வளையோர் - மகளிர்.



உண்டு; அவர் அறிவோவெனின் விலங்கியல்பையொட்டியவழியும், அன்றி, சிறப்பியல்பைத் தொடர்புற்றவழியும் தொழிற்படும். காற்று ஒரு பொருளென்ற வகையில், அதன் தன்மையையும் பயனையும் ஆராய்ந்து கொள்ளுதல் அறிவுக்கலை முறையாகும். இவ்வகையில் நம் அறிவு ஒன்றே தொழிற்படுகிறது. ஆனால், அதனை நம் உள்ளம் தொடர்புறும் வகையில், அது நம் சிறப்பியல்புக்குப் பொருளாகுமாற்றானே இலக்கியத்துக்குரிய பொருளுமாகின்றது. இத்தன்மையிலுங்கூடப் பல துறைகளிலுள்ள பலரும் தம் உள்ளப் பரிசிற் கேற்பவே அதனை நயந்திடுவர். கோடை காலத்தில், கதிரவன் வெப்பந் தணிய வீசும் தென்றலின் மென்மையையும் தட்பத்தையும் நயந்து நுகர்தல் பொதுவாக மக்களியல்பாகும். ஆனால் காமப் பெருந் தீயின் வாய்ப்பட்டு உழல்வோருக்குத் தென்றல், அவர் வேட்கையை மிகுவித்து வருத்துமாற்றான், இன்பம் பயவாது துன்பத்தை விளைவித்து உயிரைக் கவரச் சீறிப் பாய்ந்து வரும் புலியை யொக்கும். இங்ஙனம் பிறழ்ந்த வகையில் உணரச் செய்யுமாற்றான் காமம் நோயென்றும் விகாரமென்றும் எண்ணப்படுகிறது. இவ்வகை அனுபவமும்கூடப் பலருக்கும் உளவாதல் இயல்பேயானமைபற்றி, ஓரளவு அதுவும் இலக்கியங்களில் அமைத்துக் கொள்ளப்படும். இவ்வகையில் மனம் எவ்வளவு வேதனையுற்று நிற்கின்றதோ, அதற்கும் விஞ்சிய அளவு இன்பத்தை யெய்தும் தனக்கினியார் சேர்க்கை கிட்டியபோது. இத்தகைய காமமும் அறத்தாற்றினமைந்ததாயின் அஃதே விரும்பத் தக்கது; அஃதே காதலெனப்படும்; அஃதே இலக்கியத்துக்குரிய பொருள்களில் சிறந்ததொன்றாகும். அன்றி, வறிய காமமோவெனின், இலக்கிய நூல்களில் காணப் பெறினும், மறைமுகமாகக் காதலின் பெருமையை உணர்த்துதற்கெனவே பெரும்பாலும் கொள்ளப்படும். இராமாவதாரத்தில், இராமனுக்கும் சீதைக்குமிடையே நிகழ்ந்த காதலையும், இராமனிடம் சூர்ப்பணகை கொண்ட ஒருதலைக் காமத்தையும் நோக்கின் இம் மரபைக் காணலாகும்.

**பொருட்பரிசு**

இவ்வாறே, அறத்தாற்றிற் பெயரும் நிகழ்ச்சிகளே யன்றி, அல்லாத வகையிற் பெயரும் செயல்களும் இலக்கிய நூல்களில் இடம்பெறும். ஆனபோதும் அவை அறத்தை விரும்பச் செய்யும் வகையில் அமைந்து நிற்கும்; அறத்தை யுணர்த்தி, அவ்வழி இன்பத்தை யளிக்கும். எனவே, தூய உள்ளத்தில் இயல்பாகவே அமைந்த அன்புணர்ச்சியின்வழி யமைந்த அறிவின் மெய்யுணர்வும் அதன்வழியமைந்த ஒழுக்கமுமேயன்றி, அல்லாத வழியில் தொழிற்படும் அறிவின் ஆற்றலும் அவ்வழி யமையும் ஒழுக்கும் பொருட்படுத்தத் தக்கவையல்ல என்றபோது, ஆக்கவியற் பெருங்கோயிலின் உச்சியில் அருங்கலைகளின் நடுநிற்கும் இலக்கியத்தில் அவற்றை ஆதரித்துக் கொள்ளுமாறு எங்ஙனம்? உலகின் காட்சிகள் நிகழ்ச்சிகள் ஆயவற்றில், ஓரளவு புலனெறி வழக்கை யொட்டி, இலக்கிய நூல்களில் அவை இடம்பெறும். ஆனபோதும், நூல் அழகையே உணர்த்தும். நேர்முகமாகவும், அன்றி மறைமுகமாகவும் உணர்த்தும்.

**அழகில் அறம் நிலவல்**

அழகுறுத்தவல்ல பொருள்களே இலக்கியத்துக்குரிய பொருள்களாகும் என்றெல்லாம் சொல்லி வந்து, இப்போது அறத்தைப்பற்றியே பெரிதும் பேசுவதென்னை? இது முன்னொடு பின் மாறுபடக் கூறியதாகாதோ? என்று எண்ணுதலுங் கூடும். [1]அழகென்றபோதே அறத்தையும் குறித்ததாகும்; அழகில் அறம் தொக்கு நிற்கின்றது. அழகு, பருப்பொருள்வெளி, அறிவுவெளி, அறவெளி, ஆன்மவெளி ஆயவற்றை யெல்லாம் சார்ந்து நிற்கின்றது. தூய உள்ளத்தில் அரும்பும் அன்பின்வழி யமைந்த அறத்தின் வரம்புகடந்து செல்லாததே அறிவுக்கு அழகு. அவ்வழியில் தோன்றுவனவே அருங்கலைகள். அறிவு, ஆதரித்தற்கும் தொழிற்படும்; ஒறுத்

1. "The Beautiful is higher than the Good; the Beautiful includes in it the Good."
—Goethe.



தற்கும் தொழிற்படும். இவற்றுள், வேண்டற்பாலது எப்பரிசு என்று சொல்லவும் வேண்டா. இதழை இகந்து நிற்கும் பல் பெரிதாயும் இருக்கலாம்; வன்மையுடையதாயும் இருக்கலாம்; ஆனால் அழகுடையதாகாது. இவ்வாறே, அறிவு ஆற்றலுடையதாயு மிருக்கலாம்; கூர்மையுடையதாயு மிருக்கலாம்; ஆனால், அறத்துக்கு இகந்துபட்டால் அது அழகொழிந்ததேயாகும். அழகில்லையெனவே, அறத்திற்குப் புறம்பாயது என்பது ஒருதலை; எனவும் அதனால் விளைவதும் இன்பமன்று; அதன் புறத்ததேயாகும். என்னை? "அறத்தான் வருவதே இன்ப" மாகலின்.

**அறத்தான் வருவதே இன்பம்**

எனவே, அழகு இன்பத்தின் வடிவம் என்பது, "அறத்தான் வருவதே இன்பம்" என்னும் பொய்யாமொழியின் கருத்துக்கு மாறுபட்டதன்று என்பது இப்போது புலனாகும்; எனவும், வேசியின் அழகு எவ்வகையில் வைத்து எண்ணப்படும் என்னும் வினாவெழலாம். உடலின் வடிவம் அவளுடைய நிலைத்த பண்பை உணர்த்தும்; அதனினின்றும் பொலியும் எழிலோ, அவள் குலம் கல்வி சார்புகளை யொட்டி யமைந்த உள்ளப் பரிசிற்கேற்ப அமையும். உள்ளம் அறத்தின்வழி நிற்கவில்லை யென்றால், அதன்வழி யமைந்த ஒழுக்கமும் அழகொழிந்ததேயாகும்; எனவும், அவள் அழகுடையளாய்க் காணப்படுகின்றாளேயெனின், முள்ளிலுள்ள இரை, மீனைக் கவருந் தன்மை யுடையதேயெனினும், அதனைக்கொண்ட தூண்டில் அழகுடையதாகாது. [1]கவரும் தன்மை உடை

1. "திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமென்றது அழகு. இஃதென் சொல்லியவாறோவெனின், யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக்கண்டவற்கு அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடு கூடிய அழகு. அதன்மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்த வுருவும் நலனும் ஒளியும் எவ்வகையானும் பிறிதொன்றிற் இல்லாமையால், திருவென்பது அழகுக்கே பெயராயிற்று."
—திருக்கோவையார், உரை.

மையானன்றே அழகு திருவெனப்படுவது! ஆனபோது, கவர்ச்சி யிருந்தும் அழகு இல்லாமற் போனதென்னை? என்ற வினா எழுகின்றது. ஆம்; அழகில்லை யென்றபோது, உண்மை யழகே இல்லை யென்றது: கணிகையின் அழகு போலி யழகு; அதனான் விளைவதும் போலி யின்பமே யாகும்.

### வாழ்க்கை தோன்றுமிடத்திருந்தே இலக்கியமும் தோன்றும்

சொல்லற்கரிய தூய்மையுடைய இறையின் கடந்த உள்ளத்தே இயல்பா யமைந்த அன்பொடு அறிவு தோய்ந்து நிற்குமாற்றானே எல்லையற்ற இன்பம் இயல்பாய் அதன்பால் அமைந்து நிற்கின்றது. அதனை முதலாகக் கொண்ட உலகத்தின் பல துறைகளிலும், சிறப்பாக, உலகத்தின் மாண்பு மிக்க கோயில்களாய அருங்கலைகளிடத்தும் சென்று மலர்வது இவ்வியல்பே என்பதும் உறுதி. ஆகவும், மாறாத எழிலொடும் இளமையொடும் நிலவித் தேயாத இன்பத்தை யளிக்கும் இலக்கியமாதிய அருங்கலைகளில் சச்சிதானந்தமாகிய இறையின் செவ்வி பொருந்தி நிற்கும். இப்பரிசை நோக்கும்போது, வாழ்க்கை எங்கிருந்து தோன்றுமோ அங்கிருந்து தோன்றுவதே இலக்கியமும் என்பது பெறப்படும். இறை, தோற்றமும் மறைவுமின்றி என்றுமுள்ளது (சத்து); எல்லையற்ற ஆற்றலுடையது (சித்து); வரம்பற்ற இன்பமயமானது (ஆனந்தம்). சத்தென்பது உண்மை: என்றுமுள்ளது. (உள் + மை); இக்கூறே அண்டமனைத்துக்கும் உள், எனவே, உள்ளமாகும்; உள்ளத்து நிகழ்வதே அன்பு அல்லது இயல்பாக எழும் இனிய உணர்ச்சி; இதனைப் பொருந்தி நிற்பதே சித்து அல்லது எல்லாம் வல்ல இயல்பின் ஆற்றல். அன்பின் (சத்தின்) ஆதரவில் நிற்குமாற்றானேயே அறிவில் (சித்தில்) மெய்யுணர்வு நிலவும்; மெய்யுணர்வொடு இன்பம் இயல்பாகப் பொருந்தி நிற்கும். எனவே, இன்பத்திற்கு முதலாவது அறத்தை ஈனும் அன்பு நிலவும் உள்ளம் என்பது பெற்றாம்.



அந்தண்மை உள்ளம் பற்றியது; தனித்து நிற்கும் அறிவைப்பற்றியதன்று. அறம் அத்தகைய உள்ளத்தெழுவது. அறத்தான் வருவதே இன்பமுமாகும். ஆகவே, இன்பம் உள்ளச் செம்பரிசை யொட்டியது என்பது பெற்றாம். இன்ப மயமான பரத்தினை "அறவாழி அந்தணன்" என்ற தொடரால் குறித்திருக்குமாற்றானும் இக்கருத்துக்கு ஆதரவமைந்துள்ளமையும் போதரும்.

தூய உள்ளத்தை ஒன்றி நில்லாதவழி, அறிவால் விளைவது அறமன்று; அவ்வழி தோன்றுவது இன்பமுமன்று. எனவே, பொதுவாக அறிவு எனக் குறிக்கப்படுவது அறத்தை ஒன்றி நிற்கும் அறிவேயாகும். [1]எதனைக் குறித்தாகிலும் உள்ளத்திற்கும் அறிவிற்கும் மாறுபாடு உண்டாகுமெனின், தனிப்பட்ட அறிவின்வழியன்றி உள்ளம் உணர்த்தியவாறே ஒழுகுதல் கடமை என்பது அருட் பெரியார் கருத்து. தனித்த ஒருவரின் நாகரிகமும், அன்றி ஒரு வகுப்பினர் நாகரிகமும் பெரிதும் அன்னவரின் உள்ளப் பரிசை யொட்டியே அளவிடப்படும். என்னை?, நாகரிக மென்பது கண்ணோட்டம்; கண்ணோட்டமும் உள்ளம் பற்றியதேயாகு மாகையான். நாகரிகத்தின் மாண்பு மிக்க கோயில்கள் அருங்கலைகளெனின், அறந் தோன்றும் அன்பு நிலவும் உள்ளத்திற்கும் இலக்கியத்துக்கும் எத்துணைத் தொடர்புடையதென்பது இப்போது புலனாகும்.

எனவே, கலைகளுக்கும் அருங்கலைகளுக்கும் களனாவது அறிவேயெனினும், அறத்தொடு ஒன்றி நிற்குமாற்றான் அழகுற்ற அறிவினின்றும் ஆக்கவியல் முகைக்க அதனினின்றும் மலர்வனவே இலக்கியமாதிய அருங்கலைகளாகும்; அறிவுக் கலையாதிய கலைவகை தோன்று மறிவு அறத்தை யொன்றி நிற்க வேண்டுமென்பதில்லை. அணுக்குண்டை ஆக்கியது அறத்தை

1. "In a conflict between the heart and the brain follow the heart." —Life of Swami Vivekananda Vol. II, page, 767.

யொன்றிய அறிவின் திறனோ? அன்றி, அறத்தைச் சாராத அறிவின் திறனோ? கூறவும் வேண்டுங்கொல்?

இலக்கியத்திற்குரிய பொருள்களைப்பற்றி ஆராய நுழைந்தவழி, இலக்கியத்தின் தன்மையைப்பற்றிப் பேசலுற்றோம். அவ்வழி எய்திய முடிபுகளைப் பொய்யாமொழியிலுள்ள உண்மைகளாய உரை கற்களிலிட்டு, அம்முடிபுகளின் உண்மையைக் கண்டாம். மீண்டும், வாழ்க்கை எங்கிருந்து தோன்றுமோ அங்கிருந்தே அதன் சிகரமாகிய இலக்கியமும் தோன்றுமென்பதும் உணர்ந்தாம். இங்ஙனம் தோன்றும் அது வாழ்க்கையின் சிறந்த அணியாகவும் விளங்குகின்றது.

இனி, இலக்கியத்துக்குரிய பொருட்பரிசு இன்னதென்று கொண்ட முடிபை முற்றும் காப்பியம் நாடகமாதிய பரந்த நூல்களிலேயே காணலாகும். தனிச் செய்யுள்களிலும், அன்றிக் கட்டுரை போன்ற சிறு நூல்கள் ஒவ்வொன்றிலும் காண்பதரிதேயாகும். அத்தகைய சிறு நூலினங்களின் பொருளமைதி பெரும்பாலும் அந் நூல்களைச் செய்யும் ஆசிரியரின் மேம்பட்ட அழகுணர்ச்சியான் அமைந்த சுவை யறிவைப் பற்றியதே யாகும். அன்றி, நோக்கும் மாண்பானும் யாக்கும் திறத்தானும் தாம் எடுத்துக்கொண்ட எப்பொருளை வைத்தும் சிறந்த இலக்கிய நூல்களைத் தரும் திறமுடையோராவர் சிறந்த ஆசிரியன்மார்.

**கரு உருவெய்தும் வகை**

இலக்கியப் பொருள், ஆசிரியர் விரும்பியவழி கருத்தில் கருவாய் அமைந்தது முதல் இலக்கிய வடிவில் வெளிவரும் வரை இரு வகைகளில் நிறைவெய்தும்: ஒன்று, கருத்தில் உரு நிறைவெய்துதல்; அதன்பின் மொழியுருவில் உரு நிறைவெய்தும் வகை பிறிதொன்றாகும்.

உருவெய்தும் கருத்துக்கு வடிவளிப்பன கருத்துண்மைக்கேற்ற ஆழமுடைமை, ஆசிரியனுடைய மதி, கோட்



பாடு, பொருளின் பண்புக்கேற்பவும் பண்பை உட்கொள்ளும் உள்ளப் பரிசிற்கேற்பவும் விளையும் விருப்பு வெறுப்பு முதலிய உணர்ச்சிகள், மனவெளியில் எவற்றையும் உருவகப்படுத்தும் ஆற்றலின் வழியாகப் படிப்போர் கருத்தில் அக் காட்சிகளை யமையச் செய்யும் கற்பனைத் திறன், ஆசிரியன் கல்வி, பருவம், அனுபவம், தனிப்பண்பு ஆதியனவாம்.

இனி, இயற்கை உலகிற்கண்ட போக்கை யொட்டியும், இயற்கையை யொட்டி மேம்பட்டெழுந்த இலக்கியங்களிலமைந்த அரும் பெருந் திறங்களை யொட்டியும், செயலுண்மையைக் கடைப்பிடித்து, நூலில் நுதலவிருக்கும் பொருளை முற்றும் முதலில் சுருங்கச் சொல்லி, உள்ளுறைக்குத் தக்கபடி உறுப்புக்களைக் குறைவுபடாமலும் மிகைபடாமலும் அளவுபட அடங்கி யிருக்குமாறு அமைத்தல், இடத்திற்குப் பொருந்தச் சுருக்கமாகவும் விரிவாகவும் நுட்பமாகவும் குறிப்பாகவும் மொழிதல், நூலின் பகுதிகள் ஒன்றற்கொன்று இயைந்து நிற்குமாறு புணர்த்தல், நுவலக் கொண்டவற்றை ஏற்ற வரிசையில் அமைத்தல், முதல் நடு கடை மாறுகோளில்லாமல் யாத்தல், மயங்க வைக்காமல் விளக்கமாக உரைத்தல், திறம்பட மொழிதல், சந்தவின்பம் மேலிட இனிமை பயக்குமாறு அழகுபட விள்ளுதல் ஆதியவை யாக்குந் திறக் கூறுகளாம். யாத்தற்குரிய விதிகளிற் பெரும்பாலன சொல் யாப்பு அணி யிலக்கணங்களிற் காணப்படும்.

யாத்தற்குரிய விதிகள் பல உளவாமெனினும், அவற்றைக் கடைப்பிடித்து யாக்கப்பெறும் நூல் செப்பமா யமையுமெனினும், அன்ன நூலின் தன்மை பெரும்பாலும் அதன் கருவின் பெற்றியதே யாகும். சாணையின் உதவியால் கற்களுக்கு விரும்பத் தக்க உருவங்கள் பலவும் கொடுக்கவியலுமெனினும், அவ்வாற்றான் கற்களின் ஒளி அவற்றின் அழகிய உருவங்களினின்றும் மிகுந்து வெளிப்படுதலைக் காணலாகுமெனினும், அன்ன சாணையின் உதவியினால் கருங்கல்லை வயிரமாக்கவும் இயலுமோ?

ஆகாதெனின், இலக்கியக் கருவி லமையாத சிறப்பு யாக்கும் முறைகளைக் கடைப்பிடித்திடுமாற்றானேயே நூலில் அமைந்திடா தென்க. அல்லி யரும்பு தாமரையாக மலர்வதும் உண்டோ!

### கருத்தின் தெளிவு

இனி, நூற் கரு, எத்துணைத் தெளிவாகக் கருத்தில் அமைந்து நிற்குமோ, அவ்வளவினதேயாகும் நூலின் விளக்கமென்பதில் ஐயமில்லை: கருத்தின் தெளிவே மொழியின் தெளிவுக்கு முதலாகும். எனவே, சொல்லப்பட வேண்டும் பொருள் இன்னதென்பதையும், இன்ன வகையில் மொழிதல் வேண்டுமென்பதையும், ஐயந்திரிபறத் தெளிவாகக் கருத்தில் செப்பஞ் செய்து கொள்ளுதல் வேண்டும்; அதன் பின்னரே தக்க மொழியுருவில் வெளியிடத் தொடங்கல் வேண்டும். யாத்தற்குரிய விதிகள் பிறவற்றினும் இஃதே முதலிடம் பெறுதற்குரியது.

### கருத்தின் ஆழம்

காப்பியம் நாடகம் ஆதிய பெரு நூல்கள் வாழ்க்கையின் விரிவும் ஆழமும் உடையனவாகும். வாழ்க்கை இயங்குதற்குக் காரணம் இன்னதென்பது அதன் பரப்பில் காணுதற்கில்லை; அது வாழ்க்கையினிடையே பொதிந்து நின்று அதனை இயக்குகின்றது. இக்கருத்தொன்று இருப்பதைப் பலர் உணரார்; பிற சிலர் கருத்தென்பது ஒன்று இல்லையென்றும், ஏதோ காரணமின்றித் தோன்றியதேயாகும் வாழ்க்கை யென்றும் கூறுவர்; இன்னும் சிலர் கருத்துண்மை உளவாதல் வேண்டுமென்பதை உணர்ந்தும், அது எஃதாமென்பதில் மாறுபட்ட கொள்கையுடையவராவர்; அவ்வுண்மையை ஐயமறக் காணுதற்கில்லை. மக்கள் வாழ்க்கை தொடர்ந்து இயங்காநிற்கும் இப் பல்லூழி காலமும் உண்மை ஐயமின்றி யாவரும் காணுமாறு அமைந்ததில்லை; இனியும் அறியவியலாததேயாகும்போலும்: வாழ்க்கையின் உண்மை அவ்வளவு ஆழமாக அதனிடை யமைந்துள்ளது. பெரிய இலக்கிய



நூல்களின் அடிப்படையான கருத்துக்களும் அவ்வண்ணம் ஆழமுடையனவேயாம். நூலின் கரு அரும்பும் போதே இத்தன்மை பொருந்தி நின்று, கரு வளர்ந்தெழும் போது, அதனிடையே பொதிந்து நிற்றல் வேண்டும். வாழ்வு அறத்தைச் சார்ந்ததேயாகும். வாழ்க்கை பல துறைகளை யுடையது; மக்கள் தன்மையும் பல திறத்தது; எனினும், வாழ்வு மட்டும் அறத்தைச் சார்ந்ததேயாகும். அறத்தின்வழி நின்றார் உய்வார்; உய்வில்லை அதனின் மாறுபட்டு நின்றார்க்கு; எத்துணைச் செல்வம் படைக்கப் பெற்றவரே யாயினும் அறத்தின் சார்பில்லாதார்க்கு வாழ்வில்லை. இவ்வுண்மையைத் தாம் இயற்றிய இராமாவதாரத்தில் பொதிய வைத்துள்ளார் கம்பர்.

பெருவலி படைத்த ஐம்புலன்களும் வலித்திழுத்தலைப்பினும் அறத்தாற்றினின்றும் பிறழாத குடிகளையுடைய கோசல நாட்டின் தன்மையை [1]அக்காப்பியத்தின் முதற் செய்யுளிலேயே சொல்லி, அவ்வாற்றான் பின்னே வரவிருக்கும் அதன் மேம்பாட்டையும் குறிப்பாக உணர்த்தும் ஆசிரியர், சுந்தர காண்டத்தில் இராவணன் தலைநகரியைப்பற்றிப் பேச நேர்ந்தபோது, தேவர்களுடைய தொழும்பும் இந்திரனுக்குமில்லாத செல்வமும் போகமும் கொண்ட அன்னவன் நகரத்தின் புற மதிலை, [2]அறக் கடவு

---

1. "*ஆச †லம்புரி யைம்பொறி ‡வாளியும்
§காச லம்புமு லையவர் கண்ணெனும்
$பூச லம்பு¶நெ றியின்பு றஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்."
—இராமாவ. பாலகாண். ஆற்று. 1.

2. "**கறங்கு ||கால்புகா கதிரவ னொளிபுகா ‡‡மறலி
§§மறம்பு காதினி வானர் புகாரென்கை வம்பே
$$திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த அணிமதிட் கிடக்கைநின் றகத்தின்."
—இராமாவ. சுந்தர. ஊர்தேடு. 23.

* ஆசு - குற்றம்.
† அலம்புரி - மிகவும் செய்கின்ற.

ளுங்கூடக் கடந்து உள்ளே நுழையலாகாத காவலமைந்த தென்று அதன் பெருமையைச் சொல்வது போன்று, இழிவை யுணர்த்தி, அவ்வாற்றான் அந்நகரமும் அதன் அரசனும் அடையவிருக்கும் கேட்டினையும் உணர்த்தி யுள்ளார். அவ்வாற்றான், அறத்தின் வழியதே யின்பமாக லின், இடையில் துன்புற்றபோதும், அறத்தாறு செல்வார் பின் இன்பமெய்துதலையும் அறம் வழுக்கி நிற்பார் செல்வ மும் பொறியின்பமும் நனியுடையரேனும், அன்னவர் முடிவில் துன்புறுதல் உறுதி யென்பதையும் அக் காப்பி யத்தில் பொதிய வைத்துள்ளார் அதன் ஆசிரியர். இவ் வுண்மை, பரப்பிலே குறிப்பாய் நின்றபோதும், நூலிடை ஆழத்தில் நின்று பொலிகின்றது.

எனவே, தெளிவு ஆழம் ஆதியன கருத்தளவிலேயே கருவுடன் தோன்றி நிறைவெய்த நிற்பனவாதலின், மொழி யுருவளிக்க முயல்வதற்கு முன்னரே அவற்றைக் கருத்தளவிலேயே செப்பஞ்செய்து கொள்ளுதல் இன்றி யமையாததாகும்.

**வேட்கைப் பித்தம்**

[1]கருவின் உரு நிறைவெய்துதற்கும், மொழி யுருவில் மலர்தற்கும் ஆசிரியன் மதி யாதிய திறம் பலவும் வாய்ப் பும் வசதியு மளிப்பனவாமெனினும், அவை யனைத்தையும் தொழிற்படச் செய்வது ஆசிரியன் விருப்பமே யாகும். எனவே, விள்ளுதற் கமைந்த செவ்வி முற்றும் கருத்தில் உருவெய்த, உள்ளப் பான்மையை யொட்டி யெழும் உணர்ச்சியால் உயிர்பெற்றெழும் அவ்வுருவம், மேன் மேலும் நிறைவெய்தி, உள்ளம் அடக்கி நிற்றற் கியலாத பருவம் அணுகவும், அக் கருவினை உயிர்க்கக் கொண்ட வேட்கை மிகுந்து பித்தம் பிடித்திடும் நிலையே இலக்கியம் பிறப்பதற்குப் பெரு வாய்ப்பளிப்பதாகும். [1]இராமாவதா ரத்தைச் செய்யப்புகுந்த கம்பர், தம்மைப் பித்தராகவும் பத்தராகவும் தெரிவித்து அவையடக்கம் கூறுமாற்றான், தம் நிலையையே உள்ளபடி உணர்த்தி யுள்ளாரென்பது இப்போது விளங்கும். பித்தம் பிடித்த வேட்கைநிலை மீண் டும் மீண்டும் எழுந்து தணியவும், இடையிடையே கருதிப் பார்த்துத் தேர்ந்தவகையில் நூல் உருக் கொள்ளலாகும். இவ்விடை எழுந்த கருத்தும் அதை யொட்டிய உணர்ச்சி களும் பொருட்படுத்தத் தக்க செவ்வி யுடையனவல்ல வெனின், அவற்றிற்கு நூலுருவம் எய்துவிக்கும் வேட்கை அவிந்து போம்; தகுதி யுடையனவெனின் வேட்கை மிகும். இங்ஙனம் பித்தமேறிய நிலையிலும் பலகால் எழுந்து அடங்கும் உணர்ச்சி செறிந்த கருத்திற்கேற்ற மொழி யுரு எஃதாமென்பது தானுகவே அமைய நேரும்.

**நூலின் படிவம் முற்றும் ஒருசேர அமைதல்**

இலக்கிய நூலின் கரு, அந்நூலின் பல உறுப்புக் களும் ஒருங்கே அமையப் பெற்று, பல்லாயிரம் மக்கள் கூடிய ஒரு குழுவிற்கு நிழலை யளிக்கத் தக்கவாறு பரந்து வானுற ஓங்கி வளரும் ஆலமரம் ஒன்று தோன்றுவதற்

---

‡ வாளி - அம்பு.
§ காசு - மணி, பொன் ஆயவற்றாலான அணிகலன்.
$ பூசல் - போர்.
¶ நெறி - வழி : அறநெறி.
** கறங்கல் - சுழலல்.
†† கால் - காற்று.
‡‡ மறலி - யமன்.
§§ மறம் - வலி.
$$ திறம்புகாலம் - யாவும் கெட்டொழியும் இறுதிக்காலம்.

1. "ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
*பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி†ய றையலுற் றேன்மற்றிக்
‡காசில் கொற்றத் திராமன் கதையரோ."
—இராமாவ. பாயிரம்.

* பூசை - பூனை.
† அறைதல் - சொல்லல்.
‡ காசு - குற்றம்.

1. "முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் *பன்னப் பெறுபவோ."
—இராமாவதாரம், அவையடக்கம்.

* பன்னல் - சொல்லல்.

கான கருவை அகத்தே அடக்கி நிற்கும் ஒரு சிறு விதையைப் போன்றே, ஒரு சிறு உருவினதாகும். கரு உருவாகும்போது, உறுப்புக்களும் தக வளர்ந்து திட்ப நுட்பங்களெல்லாம் ஒருங்கே செவ்விதின் வாய்ப்ப நிறைவெய்தும். இந்நிலை எய்தும் வரை நூலின் உருவம் ஆசிரியன் கருத்தாகிய கருப்பையிலேயே வளரும். நூலின் தோற்றத்தில் இந்நிலையெய்தும் பெற்றியே மிகச் சிறப்புடையதாகும். [1]என்னை? பின்னே வரவிருக்கும் நூலின் படிவம் முற்றும் கருத்தில் நிற்கும் இவ்வுருவின் செவ்வியையொட்டியே அமையுமாதலின். கம்பர் விருத்தங்களைப் பாடத் தொடங்குவதற்கு முன்னரே இராமாவதாரத்தின் பெரும் பகுதியையும் பாடிவிட்டதாகக் கூறினாரென்பதும் நூலின் கரு உரு நிறைந்த நிலையிலேயே நிகழ்ந்ததாக இருத்தல் வேண்டும்.

**ஆசிரியன் மதி நுட்பம்**

இங்ஙனம் கருத்தில் நிறைவெய்திய உருவினைச் செவ்வனே உலகிற் களித்தலை ஆசிரியன் தக்கபடி கருதிச் செய்வான். எனவே, ஆதரிக்கும் போக்கில் அமையும் பரந்த ஆழ்ந்த நோக்கம் எத்துணை இன்றியமையாததோ, அத்துணை இன்றியமையாததேயாகும் ஆசிரியர்க்கு மதி நுட்பம். நூலின் முழு உருவினை அமைக்கும் வகையில், அதன் பகுதிகளைத் தேர்ந்து கொள்ளுதல், அவற்றின் அளவு வரிசை அவற்றிடை வேண்டும் இயைபு, நூலின் உள்ளுறைக்கோ அன்றி ஆணிக் கதைக்கோ கிளைக் கருத்துக்களும் கிளைக் கதைகளும் அடங்கி நிற்க அமைத்தல், புலனெறி வழக்குக்கேற்ப யாத்தல் ஆதியவற்றைக் கருத்தில் தேர்ந்து கொள்வதற்கும், அன்றி நூற் பகுதிகளை

1. "We can hardly at the present day understand what Meander meant, when he told a man when he enquird as to the progress of his comedy that he had finished it, not having yet written a single line, because he had constructed the action of it in his mind."

—Mathew Arnold. The choice of subjeots in Poetry.



உருவத்திலும் நிறைவிலும் தேசு விரிக்கும் அவற்றின் படிவ மெருகிலும் செப்பமாகச் செய்வதற்கும் மதி தொழிற்படும்.

நூலின் உருவத்திற்கு முழுமையும் ஒருமையும் அளிக்கும் நோக்கத்தோடு, பல கதைகள் கொண்ட பெரிய புராணத்தைத் திரு. சுந்தரர் இப் பாரிடைத் தோன்றுவதற்கான நிகழ்ச்சியின் வரலாற்றோடு தொடங்கிப் பின் அவர் வரலாற்றின் முற்பகுதியை மட்டும் கூறி முடித்து, இடைப் பகுதியினைப் பிற நாயன்மார்களின் வரலாறுகளுடன் இடையிலும் செருகி, மீண்டும் நூலை அவர் வரலாற்றின் இறுதிப் பகுதியைக் கொண்டே முடிக்கும் சேக்கிழாருடைய திறம் மிகமிகச் சிறந்ததென்று நினைவுகூருந்தொறும் உள்ளம் வியந்து போற்றுகின்றது. ஒரு தலைவன் பலரை மணந்து துய்த்து இன்புற்று இருந்து துறந்ததைப்பற்றிய பல கிளைக் கதைகள் சீவக சிந்தாமணியில் அமைந்துள்ளன. ஆனால், அந்நூலின் தலைவன் ஒருவனே; பல காரிகையாரின் வரலாறுகளும் கூட அவன் வரலாற்றிலே அடங்கி அமைந்து நிற்கின்றன. பெரிய புராணத்திலோ தனிப்பட்ட பலர் வரலாறுகள் உள்ளன; சில கூட்டத்தாரின் சிறப்புக்களும் ஒரு சில பகுதிகளில் அமைந்துள்ளன. இவ்வாறாகவும், நூலை ஒருவர் வரலாற்றோடு தொடங்கி, அவ் வரலாற்றின் இடைப் பகுதியைப் பிற கதைகளுக்கிடையும் செருகி, பின் அவ் வரலாற்றின் கடைப் பகுதியைக் கொண்டே முடித்துள்ளமையினால், ஒரு தனிக் கதையைக் கொண்ட ஒரு காப்பியத்தின் முழுமை ஒருமைத் தன்மைகள் அதன்பால் அமைந்து நிற்கின்றன. இனிக் கருதிப் பார்த்து அமைக்கப்படாமல், நூலின் கரு காட்சியின்வழியன்றோ தோன்றியிருத்தல் வேண்டும்? ஆகவும், இச் சிறப்பை ஆசிரியர் மதி நுட்பத்தைப் பேசும் பகுதியில் கூறுவதென்னை, என்று வினவலும் கூடும். ஆசிரியன் கருத்தே நூலின் கரு அமைந்து நிறைவெய்துதற்குக் களனாகுமென்றபோது, அக் களனின் பரிசுக் கேற்றவாறேயாகும் காட்சி

யின்வழி அவண் தோன்றும் கருவும் என்பாம். எனவே, மதியின் நுட்பத்தைத் தோய்ந்தே யமையும் காட்சியும் யாக்கும் திறமும் என்பது போதரும்.

கம்பர், தம் கருத்திலே யமைந்த அரிய காட்சிகளுக் கமைய நாடு நகரங்களாதியவற்றின் ஓவியங்களைச் செய்யு ளுருவிற் றந்தவாறே, அரசின் சீரிய பரிசும் இத் தன்மைத் தாக வேண்டுமென்பதாகத் தம் கருத்தில் தேர்ந்து அமைத்துக் கொண்ட இலக்கணத்தைத் தயரதன் மீதேற்றி மொழியுரு வளிக்குந் தன்மையில் காட்டும் செவ்விகளுள்,

"உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்."
—கம்பர். இராமாவ. பாலகாண். அரசியல், 10.

என்றுங் கூறியுள்ளார். கம்பர் காலத்தே குடியரசென்னும் ஆட்சிமுறை வழக்கிலில்லை; நாட்டின் தலைவன் அரசனாகவே இருந்தான்; நாட்டின் சீர்மையும் கேடும் அவனையே சார்ந்து நின்றன. [1]அந்நாள் வாழ்க்கை முறையில் அரசனே நாட்டின் உயிராக அமைந்து நின்றான். அவனைப் பின்பற்றியே குடிகள் நடந்து சென்ற காலமது. அதுபற்றியன்றே, "அரச னெவ்வழி குடிக ளவ்வழி" என்று அன்று நிலவிய வழக்கின் உண்மையைத் தெரிவிக்கும் பழமொழி இன்றும் நிலவுவது! அவ்வாறாகவும், அரசனுடைய அதிகாரத்திற்கு முதற் காரணம் குடிகளின் உரிமையே என்றும், அவனுடைய மேம்பாடு குடிகளை மேம்படுத்தற்கே அமையுமென்றும் பொருள்படத் தன் நாட்டிலுள்ள உயிர்களெல்லாம் உறையும் உடம்பு அர

1. "நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."
—புறநானூறு: 186.



சென்று கூறியுள்ளார் கம்பர். என்னை? உடம்பை வளர்ப்பது உயிரை வளர்ப்பதற்காகவேயன்றோ! உடம்பைப் போற்றுவது, அதனுள் உறையும் உயிர்க்குறுதி தேடுவதற்கென்பதே பெரியார் துணிவு. இது பற்றியன்றே திருமூலர், தம் திருமந்திரத்தில்,

"உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே,"

என்று கூறியுள்ளதும், பலர், புலன்களார இன்பம் துய்த்தற்கும் பிற நோக்கங்களை முன்னிட்டும் உடலை வளர்ப்பா ரெனினும், உயிர்ப் பண்புகளாய அன்பு அருள் அறிவு ஆயவற்றை வளர்த்தற்காகவே, அதற்கான முறையில் அவ்வுயிர் கொண்ட உடம்பைப் பேணவேண்டுமென்பதே உயர்ந்த நோக்கமாகும். இஃதேயன்றி, உயிரின் தன்மை அவ்வுயிர் கொண்ட உடம்பின் அறிகுறிகளிலிருந்து தெரிந்துகொள்ளலாவது போலவே, அரசனுடைய நிலையிலிருந்தே குடிகளுடைய நிலைமையு மறியக்கிடக்கு மென்பதும் கம்பருடைய கருத்துப் போலும். நாட்டின் தலைவனுடைய நிலைமை நாட்டினரின் தன்மையை உணர்த்தாதொழியின், அம்முதல்வன் நிலைமை உண்மைக்கேற்ப அமைந்ததன்று; வேடமேயாகும். [1]இனிப் பெரியார் உயிர்க்குறுதி கிட்டும் மட்டுமே உடம்பை வேண்டுவர். இன்னவாறே குடிகளின் நன்மையின் பொருட்டன்றி அரசும் வேண்டற்பாலதொன்றேயாம்; அவ்வழி, அரசுரிமை பூண்டவன் இருப்பினும் இருக்கலாம்; ஆனால், அன்னவன் அரசுரிமை தாங்குதற்கு அமைந்தவனாகான். இப் பரிசுகளெல்லாம் குறிக்கும் பான்மைத்தாய உண்மையை அமைத்துப் பாடிய கம்பருடைய மதிநுட்பம் சாலவும் மாண்புடையதாகுமன்றோ!

1. " ......... ......... .........
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மைஇந் நிலைபதியு மட்டுமே
பதியாயி ருந்ததேகப்

**உணர்ச்சியும் நூல் வடிவும்**

இனி, ஒரு நூலைச் செய்ய வெடுத்துக் கொண்ட
வாங்கு, அந் நூலின் பொருள் தன் உள்ளத்தில் எப்
பெற்றித்தான உணர்ச்சிகளை எழுப்புமோ, அவ்வுணர்ச்சி
கள் மலரும் பெற்றியிலேயே அந் நூலைச் செய்தல் ஆசிரி
யன் கடமையாகும். உள்ளத்தே யெழும் உணர்ச்சிகளுக்
கேற்ப முக மெய்களின் படிவம் பொலியும். இதை
யொத்தே, நூற்கருவும் அதனைத் தோய்ந்து நிற்கும் ஆசிரி
யர் உணர்ச்சிகள் திகழ நூல் வடிவினைக் கொள்ளும். இப்
பரிசு, பெரும்பாலும் புறநானூற்றில் அடங்கியவற்றை
யொத்த தனிப் பாட்டுக்களில் காணலாகும். [1]வேந்தனது
வெற்றியை யறிந்து மகிழ்ந்து இறுமாந்த நெஞ்சின்
தன்மை, சாத்தந்தையார் பாடிய பாவில் மலர்ந்து நிற்கின்
றது. [2]அதியமான் நெடுமானஞ்சியை இழந்து, கையறு

*பவுரிகுலை யாமலே ‡கௌரி‡குண் டலியாயி
§பண்ணவிதன் அருளினாலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் .........”

—தாயுமானவர், சித்தர்கணம்: 4.

* பவுரி - கூத்து.
† கௌரி - பார்வதி (கிரியின் புத்திரி)
‡ குண்டலியாயி - குண்டலி சத்தி.
§ பண்ணவி - தேவி.

1. “ ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெய *லுருமின் முழங்கலா னாவே
யார்கொ லளியர் தாமே யார்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
†கவிகை ‡மள்ளன் கைப்பட் டோரே.” —புறம் : 81.

2. “ இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் §பீலி சூட்டி $நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
¶கோடுயர் **பிறங்குமலை ††கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே.”-புறம்: 232.



நிலையில் ஔவையார் பாடிய பாட்டில், அவர் மனம் வாடி
வெறுப்பு மேற்கொண்டது ஒலிக்கின்றது.

இனிச் செய்யும் நூலில் இடையிடையே யமையும் சில
பொருள்களின்பால் ஆசிரியர்க்குப் பலவகை உணர்ச்சிகள்
தோன்றுதல் இயல்பேயாம். களவியலுக்கு உரை யெழுதப்
புகுந்த நக்கீரர், காமம் நன்றுமாறு கூறுமிடத்தே [1]பெண்
ணுடம்பின் தன்மையை யொட்டி யெழுதி யுள்ளவை
வெறுப்பால் அமைந்தவையாகும். அவற்றைக் கூறுமலே
அவர் கொண்ட முடிவுக்கு வருதலும் இயலும். இன்னும்,
பெண்ணுடம்பின் தன்மையை யொத்ததேயாகும் ஆணு
டம்பின் கூறுமாகையான், முன்னதன் தன்மையைச்
சுட்டிக் கூறலும் அவ்விடத்தே வேண்டற்பாலதோன்று
மன்று. தொல்காப்பியம் முதலிய நூல்களின் களவிய
லுக்கு உரை யெழுதிய பிறர் இவ்வாறு கூறிற்றிலரென்ப
தும் நினைவுகூரற்பாலது. இவ்வாறாகவும், நக்கீரர் தம்
உள்ளத் தெழுந்த அருவருப்பை மொழிந்ததே சிறப்
பென்க. என்னை ?, ஒரு பொருளைப்பற்றிப் பலர் எழுதுங்
கால், அவரவர்க்கெழும் கருத்துக்களில் பல ஒற்றுமை
யுடையனவாமெனினும், எழுதப் புகுந்தவர் மனப்பான்
மையையொட்டிப் பல விகற்பப் போக்குகளும் எஞ்சிய
கருத்துக்களிலிருத்தல் இயல்பேயானமைபற்றியும், எழு

* உரும் - இடி
† கவிகை - குடை.
‡ மள்ளன் - வீரன்.
§ பீலி - மயில் தோகை.
$ நாரரி - கள்.
¶ கோடு - சிகரம்.
** பிறங்குதல் - பொருந்துதல்.
†† கெழுவிய - நிறைந்த.

1. “பெண் என்பது எற்புச் சட்டகம்; முடைக்குரம்பை; புழுப்பிண்டம்; பைம் மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகைமைத்து; ஐயும் பித்தும் வளியும் குடரும் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திர புரீடங்களும் என்ற இவற்றது இயைபு; பொருளன்று; பொருளாயின், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றால் புனைய வேண்டா வன்றே, தான் இயல்பாக நன்றாயின் ?

—நக்கீரர். இறையனார் அகப்பொருளுரை

தப் புகுங்கால், தாம் உணர்ந்தபடி நுதலுதலே முறையானமைபற்றியும், அப்போக்கில் எழும் நூல்களின் உருவில் நிலவும் இத் தனிப்பண்புகள் சிறப்பினவேயாம் என்னும் உண்மையான். பெண்ணுடம்பின் தன்மையைப்பற்றி இப்போக்கினதே அவர் கருத்தென்பதைத் தருமி செய்த "கொங்குதேர் வாழ்க்கை" என்று துவங்கும் பாட்டில் அவர் பொருட்குற்றம் கண்டதாகவுள்ள கூற்றையொட்டியும் அறியக்கிடக்கின்றது. இத்துணைப் பதிந்த கருத்துக்களை நேர்ந்தபோது வெளியிடுதல் இயல்பேயானமைபற்றியும், அங்ஙனம் வெளியிடுதலே இலக்கியத்திற்கு உண்மை வடிவினை யளிக்குமாற்றான், விரும்பத் தக்கதானமைபற்றியும் இன்றியமையாததுமாம். இத்தகைய கருத்துக்களடங்கிய பகுதி நூலின் ஒரு சிறு கூறேயாமாதலின் நூலின் உருவத்தைப் பெரிதும் பதப்படுத்தாதென்று கருதுதலும் கூடும். அற்றன்று: இத்தகைய பதிந்த கருத்து ஆசிரியருக்கு உளதாமாற்றான், பிற இடங்களில் வெளிப்படையாகக் கூறப்படாதபோதும் நூலின் உருவை யமைக்கத் தொழிற்படா திருத்தற்கில்லை. எனவே, வெறுப்பால் எழுந்த கருத்துக்களை யொட்டி உருவமைதலைக் கண்டாம். பிற உணர்ச்சிகள் தோயப் பெற்ற கருத்துக்களும் இங்ஙனமே நூலுக்கு வடிவளித்தலிற் பங்கு கொள்ளும்.

**பொய்யடிமையில்லாத புலமை**

கரிகாற் பெருவளத்தானை உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலையில், அவன் தலைநகராகிய பட்டினத்தின் சிறப்பைக் கூறி,—

[1]"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே .........
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே."

1. பட்டினப்பாலை: 218 - 220, 299 - 301.



என்று திறம்பட உண்மையைக் கூறி முடித்துள்ளது வியக்கத்தக்க தொன்றேயாம். ஒவ்வொரு துறையிலுள்ளார்க்கும் அரசின் செங்கோன்மை யாதரவினால் துய்ப்பு மிகுமாயினும், அவ்வாதரவால் எய்தலாகும் பயனையுங்கூட அவரவர் நிற்கும் துறையின் வாயிலாகவே நுகரக் கிடக்குமாற்றானே, காதலில் அழுந்திக் கிடப்பானொருவனுக்கும் காதலின் வயத்ததே இன்பமாகலின், உருத்திரங் கண்ணனார் கூறியது உண்மையே யாயினும், கரிகாலனைச் சிறப்பித்துக் கூறுமாறு செய்யும் செய்யுளின்கண், அவன் கோலினும் (தன் காதலியின்) தடமென்றோளே "தண்ணிய" என்னும் உண்மையைக் கண்டவாறே கூறும் மனத்திண்மை சால உறுதியானதேயாம். பொருளையும் பிறர் ஆதரவையும் விழைந்து, உண்மையை மொழியாது, பொய்யடிமை பூண்டொழுகும் மரபு பலர்க்கும் பொருந்தாதெனினும், சிறப்பாகப் புலவர் அப்போக்கை அகற்ற வேண்டுமென்பது "பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்" என்னும் அடி உணர்த்தி நிற்கின்றது. இதனான், உண்மையைக் கண்டவாறும் தாம் உணர்ந்தவாறும் மொழிதல் புலவர் கடமையாகுமென்பது அறியக் கிடக்கின்றது. எல்லா உண்மைக்கூறுகட்கும் தாயகம் இறைவனேயாயினமையின், பொய்யடிமை யில்லாத புலவர்களிடத்தில் அவன் அருள் உண்மைபற்றி, அத்தன்மையரான புலவரின் மேம்பாட்டைக் காட்டா நிற்கின்றது மேலே குறித்த பாட்டின் பகுதி. உணர்ந்தவாங்கு உண்மையை மொழிதல் புலவர் கடமையெனவே, நூல் வடிவமெய்துதற்கு அஃதொரு சிறந்த வாய்ப்பாகுமென்பது ஆராய்ச்சி முறையான் மட்டுமே யன்றி அருட்பெரியார் பாட்டாலும் அறிந்தாம்.

பொய்யடிமை யில்லாத புலவரெனவே, பொய்யடிமை பூண்டொழுகுவார் சிலர் உளராதலும் உண்மை போலும் எனக் கொள்ளுதலும் கூடும். புலவர் தம் சிறப்பியல்பு குன்றி வறிய மக்களாகும்போது, மக்களுடைய இழிந்த சில பண்புகளை யுடையராய் இருத்தலும் வியப்பன்று. அந்நிலையில் அன்னவரிடம் காணலாகும் இழிந்த ஒழுக்கங்

களும் புலமையை யொட்டினவாகா: மன்பதையின் இழிந்த தன்மையையே காட்டும். அன்றி, அறிவின் நுட்பத்தானும் மொழியாட்சித் திறத்தானும் பாவலர் பிற ரறியாதவாறு பொருள்களைப் பொதிய வைத்து விளக்கிக் காட்டும்போது ஏமாற்றமடைவோர் [1]அவரைத் தூற்றுதலுமுண்டு. இனி, உள்ளபடியே புலவர் ஒரோஒவொருவழி கொடியராதலும் உண்டெனக் கொள்ளினும், அன்னபோது அன்னவர்தம் சிறப்பியல்பிற் குன்றியவரேயாயினமையின், நிகழ்ந்த இழிவும் புலமையைப்பற்றியதாகாது. என்னை? ஒளியும் இருளும் ஒருவழி நில்லா வாயினமையின். அன்றியும், ஒரு வகுப்பினரின் பண்பை அன்னவரிடையும் உயர்ந்தோர் தன்மையை வைத்தே அளவிட வேண்டுமாகையான், புலவரிடை இழிந்தோர் குறைகளை வைத்துப் பொதுவாக அவ்வினத்தின் தகவு மாசுடைத்தெனலும் ஒழுங்கன்று.

### கோட்பாடும் நூலுருவும்

இனி, நூலாசிரியரின் கோட்பாட்டுக்கிணங்க நூலின் கருத்துரு அமைதலும் இயல்பே. கல்வியின் வாயிலாகப் பல பொருள்களைப்பற்றிய செய்திகளை அறிந்தும் தேர்ந்தும் அறிவைப் பண்படுத்திக் கொள்ளல் கூடும்; கேள்வியால் பல பொருள்களைத் தெளிதலும் கூடும்; சார்ந்துள்ளோர் குண வொழுக்கங்களுக்கிணங்க குணமும் ஒழுக்கமும் அமைதலும் பொருந்தும். தம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கை யமைப்புக்களுக்கேற்ப வாழ்க்கையின் நோக்கம் உருவெய்துதலும் உண்மையே; வாழ்க்கையில் வாய்க்கும் பொன் பொருள் ஆகிய வாய்ப்புக்களுக்கேற்ப வாழ்க்கையைப்பற்றிய கருத்து உருவெய்துதலும் இயல்பே.

---

1. "போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடின்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே."

—கம்பர் தனிப்பாடல்.



ஆயினும், இவை யாவும் இவ்வனுபவங்களுடையவரின் இயற்கைத்தன்மையை யொட்டியே அவர் கருத்து ஒழுக்கமாதியவற்றைத் தழுவி நிற்கும். பலருக்கு வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் இன்னதென்று தென்படுதலே இல்லை. பிறர் ஒவ்வொருவருடைய அறிவும் இயற்கைக் குணங்களும் அவருடைய பிற வாய்ப்பு வசதிகளும் வெவ்வேறு திறத்தினவே யானமைபற்றி, வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள் இன்னதென்று அமைத்துக்கொள்ளுதலில் வேறுபாடு உளவாதலும், ஒரு பெற்றித்தான கோட்பாடு ஒவ்வொன்றையும் பல தர உறுதித் திட்பத்தோடு கொள்ளுதலும் இயல்பேயாகும். நூலாசிரியர் பலரிடையுள்ள இவ்வகை வேறுபாடுகளினால் நூலுரு வேறுபடுதலும் இயல்பே. "அவனை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையின், களவியல் என்னும் குறி பெற்றது," என்று களவியலுக்கு நக்கீரர் பொருள் கூறினராக, அதற்கே "பிறர்க்குரித்தென்று இரு முதுகுரவராற் கொடை யெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின்" ........... என்று தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை செய்துள்ளார் நச்சினார்க்கினியர். இவ்விரு கூற்றுக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் களவென்பதன் பொருள் இரு வேறு வகையில் கொள்ளப்பட்டிருக்கும் பான்மை வெளியாம். வாழ்க்கையின் சிறந்த உறுதிப்பொருள் வீடென்பது உலகம் துணிந்து கொண்ட தொன்றெனினும், பெண்ணின் நலத்தை விழைந்தா னொருவனை வஞ்சித்து அவ்வீட்டை எய்துதற்கான நன்னெறிக்கண் உய்க்கும் வழி 'களவு' என்று நக்கீரர் கூறிய பொருள் அவருக்கே சிறப்புரிமையுடையதாகும். அவர், தம் இயற்கையை யொட்டியும், கற்றும் கேட்டும் சிந்தித்தும் உறுதி செய்து கொண்ட வழியைக் கடைப்பிடித்து நின்றவாற்றானும், வீட்டின் பெருமையே பிற பொருள்களின் சிறப்பை யிகந்து அவர் மனத்தே நிலைத்திருந்தவழி, பிற பொருள்களைப்பற்றி எண்ணிய வழியும் முற்பொருளின் சார்பாகவே நினைக்

கும் மனப்பான்மை அவரிடம் அமைந்து கிடந்ததெனக் கொள்ளுதல் பொருந்தும். இனி, நூலின் தொடக்கத்திலேயே களவிற்கு அவர் இவ்வண்ணம் கொண்ட பொருள் ஒன்றைக் கொண்டே நூலின் உருவம் முற்றும் அந்நோக்கத்தை யொட்டி அமைந்ததாகக் கொள்ளுதல் பொருந்துமோ எனின், நூலின் அடிப்படையான கருத்தாகிய களவிற்குப் பொருள் இப்பெற்றித்தாக அவர் கொண்டமையான், களவியலின் ஆராய்ச்சியாகிய அந்நூலின் பிற பகுதிகளை அவர் அமைக்கும்போதும் அக்கோட்பாடு அப்பகுதிகளையும் தழுவி யிருத்தல் இயல்பே யாகும் என்று கொள்ளற் கமையாதோ!

### ஆசிரியன் பருவமும் நூற்போக்கும்

நூலாசிரியர் ஒருவர் பல நூல்களை இயற்றியிருப்பின், அவருடைய பல பருவங்களிலும் சிறிது மாறி யமையும் அவர் நோக்கங்களுக்குப் பொருந்த அவ்வப்பருவங்களிலே செய்யப் பெற்ற பல நூல்களின் கருத்துக்கள் அமைந்து கிடத்தல், உற்று நோக்கின் தெரிய வரும். ஒருவருக்கு இளமைப் பருவத்தில் பரந்த நோக்கமும் ஆழ்ந்த கருத்துக்களும் அமைவதில்லை; நாட்கள் கழியக் கழியப் பல வேறு நிகழ்ச்சிகளையும் காணக் காண நோக்கம் விரிவெய்தும். செகப்பிரியர் செய்த நூல்களுள், அவர் பருவம் முதிர முதிர, வாழ்க்கையைப்பற்றிய அவர் கருத்துக்கள் முதிர்ந்து சென்றிருப்பதைத் தெளிதல் கூடும்.

### ஆசிரியன் அனுபவமும் நூலமைப்பும்

அன்றியும், ஆசிரியர் அனுபவத்தை யொட்டியும் நூலின் தன்மை அமைதலும் கூடும். கல்வி கேள்விகளாலும் சிந்தனையினாலும் ஆசிரியர்க்குப் பல உண்மைகள் புலனாயிருக்கக் கூடும்; அவற்றை உறுதியாகக் கொண்டிருத்தலும் கூடும். எனினும், அவர் வாழ்க்கையில் அமையும் இன்பமும் துன்பமும் விளைக்கும் பல நிகழ்ச்சிகளுக்கும் நிகழ்ச்சிகளின்மைக்கும் ஏற்பவே நூலின் பல சுவைத் திட்பங்களும் அழுந்தியும் அழுந்தாதும் இருத்தல்



இயல்பேயாம். [1]உள்ளத்தை முற்றும் கொள்ளை கொண்ட காதலினால் சீதாபிராட்டியாரையே விழைந்திருந்த இராமனுக்கு எப்பொருளிலும் அவர் சாயலே தோய்ந்து கிடந்ததாகக் காணப்பட்டது. இவ்வுண்மை, ஒவ்வொரு துறையில் நிற்போர்க்கும், அனுபவத்தின் அழுத்தத்தினால் ஏற்படும். தன் காதல் மைந்தன் அம்பிகாபதியை இழந்த பின்னரே கம்பர் இராமாவதாரத்தைப் பாடியிருக்க வேண்டுமென்றும், அதுபற்றியே அந்நூலில் அவலச் சுவையுள்ள பகுதிகளெல்லாம் படிப்போருள்ளத்தையும் கேட்போருள்ளத்தையும் உருக்குந் தன்மையில் அமைந்துள்ளனவாதல் வேண்டுமென்றும் அறிஞர் கருதுகின்றனர். இவ்வண்ணமே, பிற ஆசிரியருடைய நூல்களில் சிறப்பாகக் காணப்படும் குணங்களைத் தேர்ந்தால், அப் பண்புகட்கும் ஆசிரியர் அனுபவங்கட்கும் தொடர்புகள் இருத்தல் தென்படும்.

### மொழி வழக்கும் நூல் வடிவும்

பொருளிலக்கணம் தமிழுக்கே சிறப்பாயமைந்தது. இதனுள், புறப்பொருட் பகுதியிலுள்ள பல பொருள்களைப் பற்றியவற்றை, அவ்வந்நாட்டின் வழக்கையொட்டிப் பிறர் வெவ்வேறு கலைகளாகக் கொண்டுள்ளனர். ஆனால் அகப்பொருட் பகுதி மட்டும் தமிழுக்கே தனி யுரிமைத்தாகும். இப் பொருட்சுவையைத் துய்த்தவாற்றான் பெரிதும் அதனைப் பொருட்படுத்தும் கம்பர், தாம் வழி நூலாக அமைக்க நுழைந்த இராமாவதாரத்தில், முதல் நூலில் இல்லாதவாறு, தலைவனும் தலைவியும் சந்திக்கும் வாய்ப்பை யளித்து, அவரிடை யெழுந்த காதலைத் தக விரித்துரைத்துச் செல்கின்றார். இப் பகுதி முற்றும் தமிழ்

---

1. "அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளி நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
*தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வாயவே."
—இராமாவ, பால, மிதிலைக்காட்சி. 142.

* தெருள் - தெளிவு.

மொழியின் சிறப்பு வழக்கை யொட்டியது. இராம காதையில் சிறப்புடைய பகுதிகளி லொன்ருகிய இது, இலக்கியச் சுவை ததும்பும் ஒரு சிறப்புப் பகுதியா யமைந்து, நூலுருவை அணி செய்து நிற்றலைக் கருதி இன்புறற்பாலதாம். இப்பகுதியேயன்றி, அகப்பொருட் சுவைக்கு அமைந்த பிற இடங்களிலும் அச்சுவை மணக்க அப்பகுதிகளைச் செய்தலையும் மறந்திலர் கம்பர்.

**காட்சித் திறமும் நூலின் செவ்வியும்**

அருட் பெரும் புலவர் நூல்களுக்கு முதல் அவர் காட்சிகள் அல்லது கனவுகளேயாம். கனவுகள் பொதுவாக நுண்மாண் நுழைபுலத்தின் சோதனைக்கு நில்லாவாயினும், அத்தகைய புலவர் கனவுகளோ அத்தகைய சோதனையில் அழியாது நிற்பதோடு, [1]அறிவைக் கடந்த செவ்வியுமுடையனவாம். ஆக்கவியலின்வழி யெழுவன ஆனமை பற்றி அவை இப்பரிசுடையனவாம். காணுத மலர் வனத்திற் ருேன்றி, மெல்லிய பூங்காற்றிற் றவழ்ந்து வந்து, மாசுற்ற புகையும் துகளும் மலிந்த ஊரிடை மேவி, நுகரும் மக்கள் புலனுக்குப் பொருளாகும் நறுமணம் போல்வதாகும் அவ்வகைக் கனவு. பெருங்கவிஞர், மக்களையும் பிற உயிர்களையும் இயற்கைக் காட்சிகளையும் திறம்பட ஓவியப் படுத்திக் காட்டும் ஆற்றல் வாய்ந்தவர். திருமுருகாற்றுப்படையில், [2]துனியில் காட்சி முனிவரது உரு

1. " துனியில் காட்சி முனிவர்—யாவதும்
கற்ருே றறியா வறிவினர்."

—திரு முருகு: 132, 133, 137.

2. " *சீரை தைஇய வுடுக்கையர் †சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ‡ரிகலொடு
§செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்



வத்தைப்பற்றிய பகுதியைப் படிக்கும்போதும் நினைவு கூரும் போதும், அம் முனிவரின் படிவம் நம் மனக் கண்ணின் முன்னே யெழுந்து நிற்கக் காண்கிருேம். நாம் காண்பது அவர் பரு உடலின் உருவம் மட்டுமே யன்று; அவ்வுடலில் அவர் தவத்தின் குறிகளையும் காண்கின்ருேம்; அவர் முகத்திலோ கற்ருேரும் அறியலாகாத அறிவின் தெளிவு, பகை செற்றங்கள் நீங்கிய மனத்தின் தூய்மை, கடுஞ்சினமும் காமமும் கடிந்த காட்சியையறியும் திட்பம், இடும்பை எதனையும் அறியாத அமைதி பொருந்திய இயற்கை, ஆதிய பண்புகளும் மணக்கக் காண்கின்ருேம். இராமாவதாரத்தில், கங்கைக் கரையில் இருந்து வந்த நாவாய் வேட்டுவரின் தலைவனை, சிற்றமின்றியும் தீயெழ நோக்குமியல்பும், கூற்றமஞ்சக் குமுறும் குரலும் கள்ளமறியாத நெஞ்சினின்றும் பொங்கி யெழுந்து வழியும் அன்பும் பிறங்கும் தோற்றத்தையுடைய மதமலை போன்ற [1]குகனைப்பற்றிய விருத்தங்களைப் படிக்குந் தோறும் நினைக்குந் தோறும் நம் மனவெளியில் அவன் வடிவத்தைக் காண்கின்ருேம். இவ்விரு புலவர்

கற்ருே ரறியா வறிவினர் கற்ருேர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய $ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் ¶மேவரத்
**துனியில் காட்சி முனிவர்."

—திருமுருகு: 126—137.

* சீரை - மரவுரி.
† சீர் - அழகு.
‡ இகல் - பகை.
§ செற்றம் - கோபம்.
$ இடும்பை - துன்பம், வருத்தம்.
¶ மே வர - உள்ளம் பொருந்துதல் வர.
** துனி - வெறுப்பு.

1. பின்னிணைப்பு: ௩. பார்க்க.
(இராமாவ., அயோத்தியா, கங்கைப் படலம், 28—36)

களும் இப்போக்கிற் சிறந்தவரென்று சொல்லும் போதுங் கூட, அவருடைய தனிப்பண்புகள் அவ்வொரு போக்கி லுங்கூடத் தோய்ந்து கிடக்குமென்பதை மறத்தலாகாது. நக்கீரதேவர் தாம் விவரிக்கப் புகும் காட்சியினைச் சில சொற்களால், அதனைக் கருதுவோர் மனவெளியில் அக் காட்சி சென்று தோன்றுமாறு காட்டும் பேராற்ற லுடை யவர். அவர் பாடிய நெடுநல்வாடையிலுள்ள பல காட்சி களும் இத்தன்மையனவாம். வெற்றிக்கொடி தாங்கிய பீடத்து யானை நுழைந்து செல்லத் தக்கவாறு உயர்ந் தகன்ற நிலையினை யுடைய மலைச் சிகரம் போன்று உயர்ந்த கோபுரத்தை யேந்திய வாயில், தூ நிறக் கவரிமாவேறும் அன்னப் புள்ளும் திரியும் புதுமணல் போர்த்த முன் கடை, தனிமையைக் காட்டும் குரல்பட உணவைக் குதட் டியபடி பந்தியில் நிற்பதை வெறுத்த குதிரைகளுள்ள நிலையம், நிலா முற்றத்தினின்றும் வழியும் மழைநீரைத் தாங்கும் மகரவாய்ப் பந்தத்தினின்றும் இழிந்து செல்லும் அருவி, மெல்லிய குரலோடு ஒதுங்கும் கலாப மயிலின் குரல், ஆயவை மேவிடக் குறிஞ்சி நிலத்தோற்றத்தை யளிக்கும் அரசனுடைய கோயிலின் காட்சியானது,[1] அதன் வருணனை யடங்கிய பகுதியைக் கருதும்போது நம் கருத்

1. “*ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழம் சென்றுபுகக்
†குன்றுகுயின் றன்ன வோங்கு நிலைவாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்
றருமணன் ‡ஞெமிரிய §திருநகர் முற்றத்து
நெடுமயி $ரெகினத் தூநிற ¶வேற்றை
குறுங்கா லன்னமோ **டுகளு முன்கடைப்
††பணைநிலை ‡‡முனைஇய §§பல்லுளைப் $$புரவி
புல்லுணாத் ¶¶தெவிட்டும் ***புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
†††கிம்புரிப் பகுவா ‡‡‡யம்பண நிறையக்
கவிழ்ந்துவீ ழருவிப் §§§பாடு$$$விறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் ¶¶¶வயிர்மரு ளின்னிசை
****நளிமலைச் ††††சிலம்பின் ‡‡‡‡சிலம்புங் கோயில்,”
—நெடுநல்வாடை: 86—100.



திடை அப்படியே யெழுந்து நிற்கின்றது. இதனோடு நகரப் படலத்தில் (இராமவதாரம், பாலகாண்டம்.) நகரத் தின் சிறப்பைக் கூறுவான் தொடங்கி, அதனைச் சுற்றிலு மிருந்த அகழ், அதனிடை யமைந்த மதில், அதன் நான்கு வாயில்களைக் கொண்ட கோபுரங்கள், இடையே இனமணி களாற் சமைந்து கொடிகளை யேந்தி நின்ற வானளாவிய மாளிகைகளைக் கொண்ட நகர், ஆதியவற்றைச் சித்திரித் துக் காட்டும் காட்சியை ஒப்பிட்டு நோக்கும்போது, கம்ப ருடைய பெரு வளப்பம் பொருந்திய கற்பனைத் திறம் தெற் றென விளங்கும். பருப்பொருள்களின் காட்சிகளே யன்றிக் கருத்தி லெழும் காட்சிகளையும் அவற்றைக் கருதுவோ ருள்ளத்தில் சென்று படியும் வண்ணம் ஓவியங்களாக அமைத்துக் காட்ட வல்லவர் கம்பர். தொல்லாழியில் அறிதுயில் கொள்ளும் பரமன், சுதரிசனமாகிய தன் ஆழி யைத் துறந்து, அதற்கு ஈடாகக் கோதண்ட மென்னும் குனி வயிரச் சிலையை யேந்திய இராமனாக அவதாரஞ்

* ஐயவி - வெண் சிறு கடுகு.
† குயிலல் - இழைத்தல்.
‡ ஞெமிரிய - பரப்பிய.
§ நகர் - மாளிகை.
$ எகினம் - கவரிமா.
¶ ஏற்றை - (ஏறு) ஆண்.
** உகளல் - குதித்தல், பாய்தல்.
†† பணை - பந்தி.
‡‡ முனைஇய - வெறுத்த.
§§ உளை - குதிரையின் பிடரி மயிர்.
$$ புரவி - குதிரை.
¶¶ தெவிட்டுதல் - குதட்டுதல்.
*** புலம்பு - தனிமை.
††† கிம்புரி - மகரவாய்.
‡‡‡ அம்பணம் - பந்தம்.
§§§ பாடு - ஓசை.
$$$ விறந்து - செறிந்து.
¶¶¶ வயிர் - ஊது கொம்பு.
**** நளி - செறிந்த.
†††† சிலம்பு - ஒலி.
‡‡‡‡ சிலம்பல் - ஒலித்தல்.

செய்து, சீதையின்பால் தனக்கு உண்டாகிய காதலாகிய ஆழியில் துயருழந்து கிடப்பவன், எல்லாழித் தேரினை யுடைய ஞாயிறு தன் இளங்கதிர்களாகிய கைகளால் அவன் அடிகளை வருடி அனந்தல் தீர்க்கவும், இருளாகிய ஆழியின் கரையைக் கண்டான் என்னும் கருத்தினைக் கொண்ட [1]விருத்தம், அதனைக் கற்போர் கருத்தின் வெளியில் கண்ணிற் கண்டதனை யனைய காட்சியை அளித்து அவர் உள்ளப் பிணிப்பினின்றும் என்றென்றும் நீங்காத அழகு வாய்ந்தது.

**புலனெறி வழக்கும் நூல்வடிவும்**

இனி, இலக்கியம் புலனெறி வழக்குக் கிணங்கவும் வடிவ மெய்தும். "நெடுநல்வாடையில்," வானம் புதுப் பெயல் பொழிந்தெனத் தோன்றிய வெள்ளத்தை வெறுத்த கோவலர், தம் ஏறுடை இன நிரையை வேறு புலத்தே பரப்புதல், கடும் புனற் சாய வெதிர்ந்து செல்

1. "கொல்*லாழி நீத்தங்கோர் †குனிவயிரச்
‡சிலைதடக்கை கொண்ட கொண்டல்
எல்§லாழித் தே$ரிரவி யிளங்கரத்தா
லடிவருடி ¶யனந்த றீர்ப்ப
அல்**லாழிக் கரைகண்டா னுயிரவாய்
மணிவிளக்க மழலுஞ் ††சேக்கைத்
தொல்‡‡லாழி துயிலாதே துயராழி
நெடுங்கடலுட் டுயில்கின் றானே."
—இராமாவதாரம், பால. மிதிலைக்காட்சி, 154.

* ஆழி - சக்கரம் (சுதரிசனம்.)
† குனி - வளைந்த.
‡ சிலை - வில்.
§ ஆழி - தேருருளை.
$ இரவி சூரியன்.
¶ அனந்தல் - நித்திரை.
** (அல்)ஆழி - (இருள்)கடல்.
†† சேக்கை - படுக்கை.
‡‡ தொல்லாழி - பழமையான (பால்)கடல்.



லும் கய லினங்களை யிருங் களி பரந்த ஈர வெண்மணற் பரப்பின் மீது நின்று பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி செவ்வரி நாரையொடு எவ்வாயுங் கவருதல், முதலிய கார்கால நிகழ்ச்சிகள் உலகின் இயற்கைக் காட்சி களாம்; மடப்பத்தினையுடைய மகளிர், பூந்தட்டிலே யிட்டு வைத்த பிச்சி யரும்புகள் மலர்ந்து மணக்கையினாலே மாலைப்பொழு தணுகியதை யறிந்து, நெல்லையும் பூவையும் சிதறி, தெய்வத்தை வணங்கி மாலைக்காலத்தை வரவேற் றல் உலக வழக்கை யொட்டிய காட்சி; "மணிபுறத்திட்ட மாத்தாட் பிடியொடு பருமங் களையாப் பாய்பரிக் கலிமா இருஞ் சேற்றுத் தெருவி னெறி துளி விதிர்ப்ப வேந்தன் புடைவீழ் துகிலிட வயிற் றழீஇ" வன்காளை யொருவன் தோள்மீ தமைத்த கையனாய், முகனமர்ந்து, யாமத்தும் பள்ளி கொள்ளானாய்ப் பெருஞ் செய் ஆடவர் விழுப் புண் காணிய சிலரொடு திரிதருதல் நாடக வழக்கு. தனக் காகப் போரில் முனைந்து நின்று பகைவரைத் தாக்க, அவரால் தாக்குண்டு புண்பட்ட வீரர் நிலைமைக்கு அரசன் இரங்குதல் இயல்பே; அவரைத் தேற்றுவித்துப் பரிசு வழங்குதலும் இயல்பே. எனினும், நள்ளெனும் யாமத்தும் தூங்காது, அவரை நேரிற் சென்று காணுதற்காகக் குழை சேறு வதியும் தெருவினூடு நடந்து, சேற்றுநீர் தன்மீது தெறிக்க, நெகிழும் மேல்வேட்டியை ஒரு கையால் இடுக் கிக் கொண்டு, பெய்யும் மழையையும் பொருட் படுத்தாது செல்லுதல் இயற்கையை இகந்து, தன் நலம் கருதாது, செய்ந்நன்றி யறிந்து, பிறர் துன்பங் கண்டிரங்கி, தனக்கு நேரும் துன்பத்தையும் கருதாத உயர்ந்த ஒழுக்கமாகும். அரசன் நேரிற் செல்லாது, தன் வினைவரை யனுப்பி வீரரைத் தேற்றியிருப்பினும் சாலும். அவ்வாற்றானன்றித் தன் வருத்தங் கருதாது, பிறர் நலத்தைப்பொருட்படுத்தி, நன்றி யறிந்து, மழை பெய்யும் நடு யாமத்தில், தன் உயர்ந்த பதவிக்கு ஏற்ற இறுமாப்பைத் துறந்து, வீரன் ஒருவன்மீது, அவன்பால் தோழமை தோன்ற, ஒரு கையை வைத்தவனாய், நேரிற் சென்று அவரைத் தேற்றி யது உலகிடைக் காணாத தொன்றேயாம். இனி, அவன்

அன்பின் மிகுதியை மக்கள் மட்டும் அறிந்ததோ டில்லை; அவன் குதிரையும் யானையும் அவன் அன்புத் தளையால் கட்டுண்டு அவனைத் தொடர்ந்து செல்லுகின்றன. அவை செல்லுதலினால் சிதறும் மண் தோய்ந்த நீர்த்துளிகள் அவன் மீது தெறிக்கின்றன. இவ்வகைத் தூய அன்பின் மிகுதியும் உலக வழக்கை இகந்தேயாம். எனவே, இந் நிகழ்ச்சி நாடக வழக்கேயாகும். நாடக வழக்கும் உலக வழக்கும் மருவியெழுந்த இச் செய்யுளில் புலனெறி வழக்கு அமைந்து திகழ்கின்றது. இனியும், காதலரைப் பிரிந்த மடவார் அவர் வரவை நசைந்து எதிர் நோக்கித் துன்புறுதல் உலகிடை இயல்பேயா மெனினும், முல்லை நிலத்தில், கார்ப் பருவத்தில், அப் பருவத்திற்கேற்ப அந் நிலத்திலுள்ள உயிர்கள் பொலிந்து நிற்ப, இடையிடையே அந் நிகழ்ச்சியை முல்லைப்பாட்டில் அமைத்துக் காட்டியிருத்தல் புலனெறி வழக்கேயா மென்க. உலக வழக்கும் நாடக வழக்கும் அமையக் கொள்வது புலனெறி வழக்கென்னும் பான்மையை யொட்டித் தாம் செய்யப் புகுந்த காப்பியத்தில் இப்போக்கே அமைவதா மென்பதை [1]முதற்பாட்டிலேயே குறிப்பாக உணர வைத்திருக்கிறார் கம்பர். மாதர் நோக்கும் ஆடவர் பொறிகளும் நெறியிடை யொழுகுதலும் அதன்புறஞ் செல்லுதலும் உலக வழக்கு; அவை நெறியின் புறஞ் செல்லாதனவாக அமைத்துக்

1. "*ஆச †லம்புரி யைம்பொறி ‡வாளியுங்
§காச ‖லம்பு முலையவர் கண்ணெனும்
¶பூச லம்பு **நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்"
—இராமாவ. பால. ஆற்றுப்படலம், 1.

* ஆசு - குற்றம்.
† அலம்புரி - மிகவும் செய்கின்ற.
‡ வாளி - அம்பு
§ காசு - மணி பொன் ஆயவற்றாலான அணிகலன்.
‖ அலம்பல் - ஒலித்தல்.
¶ பூசல் - போர்.
** நெறி - வழி: அறநெறி.



TAMIL ... LIBRARY No. 101882

காட்டத் துணிந்ததாகக் குறித்துள்ளமை உலக வழக்கை யொட்டிய புனைந்துரை கொண்ட நாடகவழக்கு மருவி நின்ற புலனெறி வழக்கே யாகும். இக்கவியும் இச்செவ்வியி லமைய வேண்டியதற் கிணங்க, தம் [illegible] அமையுமென முதல் விருத்தத்திலேயே உணர்த்தியுள்ளமை அருந் திறலேயாம்.

கார்காலமும் மாலைப்பொழுதும் மேவிய முல்லை நிலத்தில், அந் நிலத்திற்குரிய மக்களும் மாவும் பொருந்தித் தோன்றிடக் காதலரைப் பிரிந்த மகளிர் கற்பொழுக்கத்திலமைந்திருந்து, வானம் புதுப்பெயல் பொழிதலோடு, பிரிந்தவர் திரும்புவதற் குணர்த்திய பருவம் தோன்றவே, அவர் வரவைப் பெரிதும் நசைந்து நோக்குதலும் அதனை யொத்த பிற காட்சிகளும் புலனெறி வழக்காமை,—

O-119 N56

"[1]முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை."

என்னும் முறை பற்றியது. இம் முறையும், இயற்கையையும் வாழ்க்கையையும் நோக்கி, ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும் சிறந்தவை எவையாமெனத் தேர்ந்து கொண்டதேயாகும். என்னை?, அன்பின் ஐந்திணை நிகழும் இடத்தைச் சார்ந்த அகன்ற நானில வகையும், பரந்த வெளியும், பருவங்கட்கேற்ப மாறியமையும் அவ் வெளியின் தோற்றமும், நிலப்பகுதியின் பொலிவும் பொன்றும், அவற்றிற்கேற்பப் பொருந்தி நிற்கும் அந் நிலத்திலுள்ள மரம் பறவை விலங்கு முதலியவற்றின் செவ்வியும் இயக்கமும், பின்னணிகளாகவும் சார்புகளாகவும் அமைந்து அன்பின் ஐவகை ஒழுக்கங்களின் பரிசுகளை நிரப்புவித்தலின்.

குறித்த பொருள்களின் குணங்களை நிறைவெய்தச் செய்யும் நிமித்தம் இம் முறையைப் பிற அருங்கலைகளிலும் கையாளுவதை நோக்கின், இதன் சால்பு தெற்றென விளங்கும். சிற்பத் திறம் பொலியும் திருக்கோயில்களையும்

1. தொல். பொருள், 3.

மாளிகைகளையும் அவற்றிற்கு ஏற்ற சார்புகளி னிடையி லேயே அமைப்பது வழக்கு. "கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு"டைய மலைக் குவடுகளிலும் ஆறுகளின் மருங்கேயுள்ள மருதநிலச்சோலைகளி னிடையும் ஆற் றிடைக் குறைகளிலும் அமைக்கப் பெறும் திருக்கோயில் களின் செவ்வி மலிந்து திகழும். ஓவியங்களில், குறித்த பொருள் உயிர்களைத் தக்க பின்னணிகளுக்கிடையே அமைத்தலும் வழக்கு: இடம், பருவம், பொழுது, ஒளி, நிழல், சார்ந்து நிற்கும் பிற பொருள்கள், ஆதியவை ஒன்றும் பலவும் பொருந்தியுள்ள முறையில் பின்னணி (background) நிறுவிக் கொள்ளப்பெறும். இசையரங்கு, பாட்டு இயங்களின் ஒலிகள் தக்கவாறு இயங்குவதற்கான முறையில் சமைக்கப்பெறும். இன்னும், நடு நின்றிலங்கும் வாய்ப்பாட்டு குழலிசை ஆதியவற்றிற்குப் பொருந்தச் சார்பிசைக் கருவிகள், ஏற்ற நடையில் முரலும் வகையில் அமைத்துக் கொள்ளப் பெறுதலும் வழக்கு. கதை தழுவி யனவும் தழுவாதனவுமான கூத்துகள் நிகழ்தற்கேற்ற அளவு வடிவங்களொடு சமைந்து எழினி அணி ஆதிய வற்றின் ஒப்பனைகளை யேந்திய ஆடரங்குகளும், அவற் றிடை தவழும் ஒளியின் அளவு, நிறம், தோன்றுமிடம், படரும் பக்கம், மருங்கே அமைக்கப் பெறும் உருவங்கள், ஆதிய சார்புகளும், பின்னணி இயங்களும், ஆடுவோர் வடிவமைதியும், அவர் உடம்பின் உருவத்திற்கேற்பவும் கூத்தின் வகை நடிப்போர் உணர்த்தக் கொண்ட மெய்ப் பாடு முதலியவற்றிற்குப் பொருந்தினவுமான அணி ஆடைகளும், இவை போல்வன பிறவும் கூத்தின் கவருஞ் செவ்விகளைக் கதித்தெழச் செய்வனவாம். இப் போக்கில், இலக்கிய நூல்களில் ஒழுக்க வகைக்கமைந்த நிலம் பருவங் களைச் சார்புகளாகக் கொள்வது புலனெறி வழக்காகும்.

**சார்புகள்**

ஒவ்வொரு கலையும் அதற்கேற்ற சார்புகளிடை யமைந்து இயங்குவதனால், அதன் இயல்பில் எவ்வண்ணம் மிக்கு விளங்கு மென்பதை இங்கு ஆராயப் புகுவது மிகை



யேயா மெனினும், கலைகளின் சிறப்புக்கு அவை இன்றி யமையாதன என்பதை மறத்தலாகாது. இசைப்பாட்டும் கூத்தும், அரங்குக ளின்றியும், பிற சார்புக ளின்றியும் நிகழக்கூடுமெனினும், அங்ஙனம் நிகழும்போது அவற்றின் செவ்வி நிரம்பக் காணாமையின், அவற்றின் சால்புகள் திகழ விரும்பியவழி, அவற்றைத் தக்க சார்புகளிடை அமைத்தல் இன்றியமையாததா மென்பது ஒருதலை. இம் முடிபே பிற அருங்கலைகட்கும் பொருந்தும். ஆயவழி, முதல் கருப் பொருள்களை யமைத்துக் கொள்ளு மாற்றால் இலக்கியத்தின் செவ்வி நிரம்பப் பெறும் வண்ணம் யாங்ஙனம் என்பதை இங்கே சிறிது ஆராய்வாம்.

ஒவ்வொரு சமூகத்திலும், மக்களுடைய பழக்க வழக் கங்களிடை யமைந்த சடங்குகள் ஏற்பட்டதற்குக் காரணங் களும் அமைந்த முறைகளும் உண்டு. அவ்வச் சடங்குகள் தோன்றிய பின், சில காலம் வரை அவை மக்கள் நினைவி லிருந்து நாளடைவில் மறையும். பின் அவற்றை நினைவு கூராது, சடங்குகளை மட்டும் செய்து முடித்தல் பழக்கத் தின் கீழ் வந்திருத்தல் வேண்டும்.[1] இது போன்றே, முதல்

1. நச்சினார்க்கினியர், தம் உரையில் (தொல். பொருள் 5, 6, 7, 8.) ஒருவாறு இப் பொருளுக்கு விளக்கம் கூறுகிறாரெனி னும் அவ்விளக்கம் முற்றும் பொருந்தியதாகவில்லை: ஐந்தாம் நூற்பாவின் விளக்கத்தில் "இனி, முல்லை குறிஞ்சி மருதம் நெய் தல் என்ற முறை யென்னையெனின், இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்க மாதலின்,......" என்றும் "புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற் பொருட்டாகிய குறிஞ்சியை அதன்பின் வைத்தார்," என்றும் பொதுப்படக் கூறியவர் 6-ஆம் நூற்பாவின் விளக்கத்தில், "இனிக் குறிஞ்சியாவது புணர்தற் பொருட்டு. அஃது இயற்கைப் புணர்ச்சி முதலியனவாம். இயற் கைப்புணர்ச்சி நிகழ்ந்தபின் களவு நீட்டிப்பக் கருதுந் தலைவற்கு அக் களவினைச் சிறப்பிக்குங்கால், தலைவி அரியளாக வேண்டு மெனவே அவ்வருமையை ஆக்குவது ஐப்பசியும் காத்திகையு மாகிய கூதிரும் அதன் இடை யாமமு மென்பது," என்று கூறியுள்ளது எங்ஙனம் பொருந்தும்? என்னை? புணர்ச்சியென்றது களவு கற்பு ஒழுக்கங்களிடை நிகழும் புணர்ச்சிகளைப் பொதுப்படக் குறிக்குமெனக் கொள்ளுதலே ஏற்புடைத்தாகும்; புணர்ச்சி என்றது இல்லறத்தில் நிகழ்தலைக் குறிக்குமென்று பொதுப்படக்

கருப் பொருள்களை அன்பினைந்திணை நிகழ்ச்சிகட்குத் தக்க சார்புகளாக அமைத்தவகை இன்னதென்பது நூல்களில் பொருந்தக் கூறப்படவில்லை. பயில்வோரும் கருதிப் பார்ப்பதில்லை. பிற்காலத்தே தோன்றிய இலக்கிய நூல்களில், அவற்றைச் சார்பா யமைத்தலை மரபெனவே பின்பற்றி யிருத்தலைக் காண்கின்றோம்.

## முதற்பொருள்

குறிஞ்சி நிலம் இயற்கை வனப்பில் மிக்கது; தேன் பழம் கிழங்கு ஆகிய இயற்கை உணவுகள் மலிந்தது. மலைக் குவடுகளில் மீண்டும் மீண்டும் வந்து மேவித் தூவல் வழங்கி நீங்கும் முகிலினங்கள், கூட்டங் கூட்டமாக மேவி நிற்கும் பல வண்ணத் தூவிகள் போர்த்த அழகிய பறவைகள், தாமாகவே வளர்ந்து மக்களால் சிதைக்கப் பெறாது அழகொடு பூத்துப் பொலியும் புதல் வகைகள், மர வகைகள், ஓயாது இழிந்து தெறித்து ஒலித்து நற் காட்சி யளிக்கும் அருவிகள், ஆகிய இயற்கைப் பொருள் களும் உயிர்களும் காதலர் கருத்தைக் கவர, அவற்றின் வனப்பில் தோய்ந்து கிடந்து இன்புறும் காதலரின் மனம், பின் அவர் இருவர் செவ்விகளிலும் மாறிப் புகுந்து திளைத்துக் களிக்குமாற்றான், இயற்கைச் செவ்வி பொருந்

---

கொண்டு, பின்பு களவில் நிகழ்வதைக் குறிக்குமென அவர் கூறியுள்ளமை பொருந்துமாறில்லை. இஃதேயன்றி, இதுபோன்ற பிறவுமுள. எனவே, முதல் கருப் பொருள்கள், அவற்றிடை நிகழும் அன்பினைந் திணைகளுக்கு எங்ஙனம் பொருந்திய சார்புகளா மென்பதை இந்நூலில் அடுத்துக் கூறுமிடத்து அவர் கருத்துக் களுக்குச் சிறிது மாறுபடக் கூறுதலும் வேண்டற்பால தாயிற்று.

தொல்காப்பியர் நூல் செய்ததிலிருந்து அவர் நூற்பாக்களின் பொருள், எழுதப்பெறாமல், மாணவர்வழி, தலைமுறை தலைமுறை யாகப் பாடமாக வழங்கி வந்திருத்தல்வேண்டும். காலம் கழியக் கழிய நூலின் சில பகுதிகளின் பொருள்விளக்கம் மங்கியிருத்தலும் கூடும். அதன்பின் எழுதப்பட்ட உரையின் சிற்சில பகுதிகள் நூலின் கருத்துக்களுக்குப் பொருந்த அமையாதிருத்தலும் இயல்பேயாகும். உரையாசிரியர்களின் கருத்துக்களிடை நிலவும் வேற்றுமைகட்கும் காரணம் இஃதேயாதல் வேண்டும்.



தப் புணர்ச்சியை விழைந்து மேவும்வழி இன்பம் நிரம்புத லுறும். ஆங்கு, உயிர்வாழ்தற்கு வேண்டிய உணவுப் பொருள்கள், மக்களின் முயற்சியின்றியும், அன்றி, சிறு முயற்சியோடும் கிடைப்பனவாம். நீர் வளத்தில் சிறந்த மருதமும் இத்தன்மையில் அந்நிலத்திற்கு ஈடாகாது. மா பலா முதலிய கனிகளும் கிழங்குவகைகளும் தேனும் மக்க ளின் முயற்சியின்றியே விளைவனவாம். எனவே, அவற்றை விலை கொடுத்துப் பெற வேண்டியதில்லை யாதலின், விலை கொடுப்பதற்கு வேண்டிய பணத்தை வருந்தி ஈட்ட வேண்டுவதுமில்லை. ஆகவே, மெய்யும் மனமும் வருந்தாது வைகலும் காதலர் ஒருவரை யொருவர் பிரியாது உட னிருந்து களித்தற்குப் பெரு வாய்ப்பளிப்பதாகும் அந் நிலம். அந்நிலத்தில் அமைதி பொருந்தி நிற்கும். மீனினங் களின் ஒளிக் கற்றைகள் வானிருளின் வீக்கத்தையே காட்டுவது போன்று, அருவிகளின் ஒலியும் புள்ளினங் களின் குரலும் அமைதியின் வீக்கத்தையே காட்டும். எனவே, அந்நிலம், விழைந்தவற்றை மனம் கடைப்பிடித் தற்கு ஏற்ற களனாகும். இது பற்றிப் போலும் தவ மியற் றும் முனிவர் அந் நிலத்தைச் சார்வது! கடவுளின்பால் காதலும் மிகு மென்று தெரிந்து போலும் திருக்கோயில் களை ஆண்டு அமைப்பதும்!

குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுது கூதிரும் முன்பனியும்; சிறுபொழுது யாமம். பிற நிலங்களிலும் வெளியே செல்லுதலை விரும்பலாகாத அப் பருவங்களில், குளிர் இயற்கையில் மிகுந்த மலைநாட்டில், அதனினும் யாமத்தில், காதலர் இல்லத்திலேயே இருத்தல் இயற் கையே. அதனினும், குளிரினால், மனமே யன்றி மெய்யும் தன் இயற்கையில் இடையீடின்றித் தான் நசையும் துணையின் உடம்பை இணைந்து துய்க்க அவாவும். அன்றி, மனத்தை வேறு வழியில் இழுத்து அலைக்கும் பொன்னும் பொருளும் வாழ்க்கையின் பொருட்படுத்துதற்குத் தகாத செயற்கை அலுவல்களும் பிறவும் அந்நிலத்தே இல்லை. புதுமணம் * புரிந்தோர் இணைபிரியாதிருந்து இன்புறு

தற்கு மேல்நாட்டின் வழக்கை யொட்டி நாடும் தனிமை (honeymoon) அங்கே இயற்கையில் அமைந்துள்ளது. எனவே, புணர்தல் புணர்தல் நிமித்தங்களுக்குக் குறிஞ்சி நிலம் இணையற்ற களனாகும். வழக்கில், புணர்ச்சி எந்நிலப் பகுதியிலும் நேருமாயினும், அத்திணைக்குரிய வாய்ப்புகள் பிறநிலப்பகுதிகளிலில்லாதவாறு நிரம்ப அமைந்துள்ளமை பற்றி, புலனெறி வழக்கில், புணர்ச்சிக்குச் சிறந்தது குறிஞ்சி நிலமே யாகும்.

இயற்கை வளத்திற் சிறந்த குறிஞ்சி நிலத்தின் தன்மை இஃதாக, செயற்கைத் திருவிற் சிறந்த மருதத்தை நோக்குவாம். அந்நிலம் நீர்வளம் செறியும் நன்செய் நிலந்தரும் தள்ளா விளையுளுடையது. பல தொழில் வல்லுநரும் பெருந் திரளாகக்கூடி யமைத்த பல பொருள்களும் பிற நிலங்கள் தரும் பொருள்களும் வதியும் அங்காடிக ளமைந்த நகரங்களை யுடையது. மக்கள் வாழ்க்கைக்குரியனவும் இன்பம் பயப்பனவுமான உயர்ந்த ஆடை அணி சாந்து வகைகளும் பிறவும் மிக உடையது. மக்கள் நாடி விளையாட்டயரும் நீர்நிலைகளை யுடைய சோலைகளும் நந்தன வனங்களும் நிரம்பியது; மனத்தைக் கவர்ந்து இன்பத்தை யளிக்கும் அருங்கலைகள் செழிக்கும் கண்டம் அரங்கு திருக்கோயில் முதலியவற்றை அமையக் கொண்டது. எனவே, இரவும் பகலும் பெருந் திரளாகக் கூடிக் கலைகள் கற்பாரும் தொழில்கள் செய்வாரும் வாணிகஞ் செய்வாரும் ஆடரங்கு முதலியவற்றில் பொழுதை இன்பமாகக் கழிப்பாரும் பொன்னும் மணியும் சாந்தும் சுண்ணமும் அணிந்த பருவ மங்கையரோடு சோலையும் பிறவும் நாடி இருந்து திரிந்து திளைத்து இன்புறுவாரும் நிறைந்து வதியுமாற்றான், நள்ளிருள் யாமத்தும் அந் நகரங்கள் அமைதி யறியாதனவாம். செயற்கை வளம் பொருந்திய பொருள்களால் மனம் கவரப் பெற்று அலைக்கப் பெறும் திருவினை யுடையது அந்நிலம்; செயற்கை முறையால் இரவையும் பகலாகக் கொண்டு வாழ்தற்கு வசதி யளிப்பது. அன்றியும், அம் முறையானே பல பருவங்களின்



செவ்விகளையும் விரும்பியபோது திளைத்தற்கு வினைத் திறத்தால் அளிப்பது. எனவே, அந் நிலத்திற்கு உரிய தனிப்பட்ட பெரும்பொழுது இல்லை. பின்னிக் கிடக்கும் காதலர் மனம் இடையிடையே அத்தகைய திருவினால் கவரப்படுமாற்றான், ஊடற்றிணைக்குப் பெரு வாய்ப்பளிப்பதாகும் அந்நிலம்: காதலன் மனம் வேறு ஒருத்தியின் திருவினால் கவரப்பெற்றதெனவும், தன் மனதைக் கவர்ந்த அணி முதலியவற்றை உடனே வழங்கினனில்லையெனவும், பிற நிமித்தங்களைக் கொண்டும் காதலி ஊடுதற்குப் பிற நிலப் பிரிவுகளினும் அது சிறந்த களனாகும்.

இயற்கை வனப்பு மிகுந்து மக்கள் தொகை மிகக் குறைந்த குறிஞ்சிநிலத்திற்கும், செயற்கைத் திருநிறைந்து மக்கள் பெருங்கூட்டமாக வாழும் மருதநிலத்திற்கும் செவ்வியில் இடைப்பட்டதாகும் முல்லைநிலம். மலைநாட்டைச் சார்ந்துள்ள அந்நிலம், அதற்கு அடுத்தபடி யமைந்த இயற்கைத் திருவுடையது; ஆனால், அன்னதைப் போலாது சமூக வாழ்க்கையில் ஈடுபட்ட மக்கள் சிறு கூட்டங்களாக வாழும் சிற்றூர்களையுடையது. இனி, மருதத்திலுள்ள செயற்கைவளமும் மக்கட் பெருங்கூட்டமும் கலைவளப்பமும் தொழில்வகை பலவும் ஆங்கு இல்லை. மணற் கரைகளினிடை விசையாகப் பெயர்ந்து செல்லும் சிற்றாறுகளையுடைய காடுகளினிடையில் அமைந்த சிற்றூர்களையுடையது அந்நிலம். உழவு நிரைமேய்த்தல்களைத் தவிர தொழில் வேறு ஆங்கில்லை; எனவே மனதை அலைக்கும் மருதநிலத் திருவும் ஆங்கில்லை; அன்றிப் புணர்ச்சி வேட்கையையே மிகுவிக்கும் குறிஞ்சி நிலத்தின் பரிசும் ஆங்கில்லை. ஆனதுபற்றி, அது கணவனைப் பிரிந்து கற்பொழுக்கத்தில் அமைந்திருப்பார்க்குத் தகுந்த களனாகும். இனி, அந் நிலத்தினிடையும், புள்ளும் மாவும் தம் துணைகளோடு இணைந்து, தம் இருக்கையை நாடும் மாலை நேரமும் புதுப்பெயல் பிலிற்றும் கார்காலத்தின் முற்பகுதியும் கணவன் வரவை நசைந்து நோக்கியிருக்கும் கற்பொழுக்கத்திற்குச் சிறந்தனவாம்.

பாரின் இயற்கைநலன் திரண்டு உருவெய்தியதன்ன இயற்கைநலம் சிறந்து வானளாவியது மலைநாடென்றால், உயரத்திலும் வளத்திலும் மிகத்தாழ்ந்தது பாரின் பெரு மணற்பகுதியாகிய நெய்தலே யாகும். மீண்டும் மீண்டும் ஓயாது எழுந்து, சுருண்டு, இழிந்து, உடைந்து, திரைந்து, தாக்கி மீளும் கடல்நீரினால் வளம் முற்றும் கவரப் பெற்று வறிய மணலாய் எஞ்சி நிற்கும் நிலம் அது. ஓயாது அரற்றித் திரியும் பரந்த நீர்ப்பரப்பு உள்ளத்திற்குச் சோக உணர்ச்சியைத் தருமியல்பினது. துய்க்கும் இன்பத்தையும் மேலே எய்தவிருக்கும் இன்பத்தையும் நினைந்து நினைந்து உள்ளம் மதர்த்து நிவந்து நிற்றற்கு அமைந்த களனாவது குறிஞ்சிநில மென்றால், இழந்த இன்பத்தை நினைந்து இரங்குதலுக்கு ஏற்ற களன் நெய்தலே யாகும். வெப்பம் முதிர்ந்து நிற்ப, உடலுக்குச் சோர்வையும் மனதிற்கு ஊக்க மெலிவையும் அளிக்கும் பிற்பகற்பொழுது அந்நிலத்திற்கு ஏற்புடையதே யாகும். என்னை? கதிரவன் வெப்பத்தின் விளைவால் வெதும்பும் வெயிலிடை, பசை முற்றும் இழந்து, நெகிழ்ந்து, காற்றினாலுங்கூட அதன் பரப்பின் உருவம் திரைந்து திரியும் மணல் நிலத்தை [1]வைகலும் பித்தம் பிடித்தவாறு அலைந் தலைந்து திரைந் தரற்றும் கடல்நீர் தாக்கும் காட்சி, காதற்குரியாரை யிழந்து இரங்கி நிற்கும் காதலரின் ஒழுக்கத்திற்கு மிகப் பொருந்துமாற்றான் என்க.

நெய்தல் நிலத்திலேனும் தட்பத்தைத் தரும் கடல் நீரும் கடற்கரைச் சோலைகளும் உளவாக, பாலை

1. "போவாய் வருவாய் புரண்டு விழுந்*திரங்கி
†நாவாய் ‡குழற நடுக்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல §ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று."
—நளவெண்பா, கலிநீங்கு. 23.

* இரங்கல் - ஒலித்தல்.
† நாவாய் - மரக்கலம்.
‡ குழற - தடுமாற.
§ ஆர்கலி - ஒலிக்கின்ற கடல்.



நிலத்திலோ, நீரென்பதும், அன்றித் தட்பத்தைத் தரும் எவற்றையுமே காண்பதரிது. பாலைத்திணைக்கு உரிய பெரும்பொழுது வேனிலும் முன்பனியும்; சிறுபொழுது நண்பகல். [1]நள்ளிரவிலும் வெப்பம் ஆறாத அந்நிலத்தில், யாண்டின் வெப்பம் கூர்ந்த பருவத்தில், நண்பகலில், வெப்பத்தின்மிகுதி எப்பெற்றித்தாம் என்பதைச் சொல்லுதல் எளிதோ! [2]இத்தகைய அளவுகடந்த வெப்பத்தின் நினைவு எழும்போதே உள்ளம் தட்பத்தை நாடுவது இயற்கை. பொருள் ஈட்டக் கருதியும் பிற நிமித்தத்தினாலும் தலைவியைப் பிரிய நினைக்கும் தலைவன், வெஞ்சுரத்தின் வெப்பத்தை நினைக்க நேருங்கால், பிரிவினால் காதலிக்கு நேரக்கூடும் இன்னலையும் கருதும்; கருதுமாற்றான் பிரிய நினைந்த துணையினோடு கூடியிருப்பின் விளையும் இன்பத்தை இயல்பில் உணரும். இன்னும், பிரியின், நலன் அழிய அவள் உயிர்வாழாள் 'என்றும்

1. "*படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியுமே முடியமூ டுருளும்வான் †முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னில்வே றியாவைவே வாதவே."
—இராமாவ. பால. தாடகைவதை, 6.

2. "கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் ‡தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே."
—திருவருட்பா, அருள்விளக்க மாலை.

" திருமா §வளவன் ‖தெவ்வர்க் ¶கோக்கிய
வேலினும் வெய்ய கான மவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே."
—பட்டினப்பாலை: 299—301.

* படி - பூமி.
† முகடு - உச்சி.
‡ தரு - மரம்.
§ வளவன் - சோழன்.
‖ தெவ்வர் - பகைவர்.
¶ ஓக்கிய - அறுதியிட்டு வைத்த.

செலவழுங்கும். பிரிய நேரினும் காதல ரிருவரும் கழிந்த நிகழ்ச்சிகளை நினைந்து மேன்மேலும் எழும் காதலின் பெருக்கையே உள்ளத்தே திளைப்பர். எனவே, வெறுப்பைத் தரும் வெப்ப மிகுதி இன்பத்தைக் கருதச்செய்யு மாற்றான், வெப்பம் மிகுந்த வேனில் முன்பனிக் காலங்களில், பாலைநிலம், பிரிதல் பிரிதல் நிமித்தங்களுக்குக் களனாகி, இன்பத்தையே விளைக்கும் காதலரின் காதற் பெருக்கும் வன்மையும் இத்தகையனவென உணரச்செய்வதற்கு அமைந்ததென்பது போதரும். [1]மாதர், முதுவேனிற் பருவத்தில், பிற பருவங்களின் செவ்விகளையும் அவ்வப் பருவங்களில் துய்த்து இன்புற்றவற்றையும் விழைவாராய்த் தம் துணையோடிருந்து அப் பருவங்களின் வரவை விழைதலை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியிருத்தல் இவ் வியற்கைப் போக்கிலே யமைந்ததாகும்.

**கருப்பொருள்**

முதற்பொருளே யன்றிப் பாலைநிலத்தின் கருப்பொருள் பலவும் பாலைத்திணைக்கு அமைந்த சார்புகளாம். வலியழிந்த யானை பாம்பு முதலிய விலங்குகளும், கழுகு பருந்தாதிய பறவைகளும், கருப்பொருள் பிறவும் வெறுப்பை யளிக்கும் காட்சிகளா யமைந்து, இன்பம் பயத்தற்குரிய துணையையும் பொருளையும் கருதச்செய்து, அவ்வழி விருப்பை வளர்க்கும்: உள்ளத்தைக் கவர்ந்த காதலியையும் அவளைச் சார்ந்த சார்புகளையும் கருதச் செய்யும். [2]அவ்வாறேயன்றி, வற்கடம் மிகுந்த அந் நிலத்திலுள்ள புள்ளும் மாவும் அன்பின் பெருக்கினால், தம்மைப்

1. **பின்னிணைப்பு**: ௬ பார்க்க (சிலப். ஊர் காண். 94...119.)
2. “......... ......... ......... .........

அடிதாங்கு மளவின்றி *யழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுட்
†துடியடிக் ‡கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;



பொருட்படுத்தாது, தம்மினத்தை ஆதரிக்கும் காட்சியும் காதலியைப் பிரிந்து அந்நிலத்தின் வழிப்போவானுக்குக் காதலை மிகுவிக்கும் பான்மையதாம். இன்னவாறே, பிற நிலங்களின் கருப்பொருள்களும் உரிப்பொருளுக்கு அமைந்த சார்புகளாம்.

**உரிப்பொருள்**

முதற் கருப்பொருள்களுக்கிடை, அவற்றிற்கியைந்த ஒழுக்கங்களிலமைந்தார் உருவங்களை ஓவியங்களில் தீட்டினால், இயற்கைச் செவ்வியை யொட்டி யோங்கிய நலன் சிறக்கத் திகழ்தலைக் கண்டு மகிழக்கூடும். நெய்தல்நில ஊரே யாயினும், மருதநிலத்தின் வளம் பொருந்திய வாற்றான், அவ்விரு நிலங்களுக்கும் பொருந்தும் செல்வங்களிற் சிறந்த பட்டினத்தில், மாதவியின் ஆடலும் பிற

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த §உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை $அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் ¶புறவெனவு முரைத்தனரே;

**கன்மிசை ††வேய்வாடக் ‡‡கனைகதிர் §§தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்$$பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் ¶¶கலையெனவு முரைத்
......... ......... ......... ......... [தனரே.”
—பாலைக்கலி: 11.

* அழல் - தீ.
† துடியடி - உடுக்கை போன்ற அடி.
‡ கயந் தலை - யானைக்கன்று.
§ உலவை - மரக்கொம்பு.
$ அசைதல் - இளைத்தல்.
¶ புறவு - புறா.
** கல் - மலை.
†† வேய் - மூங்கில்.
‡‡ கனை - நெருங்கிய.
§§ தெறுதல் - வருத்துதல்.
$$ பிணை - பெண்மான்.
¶¶ கலை - ஆண்மான்.

காட்சிகளுமமைந்த இந்திரவிழா நடக்கும் செவ்வியும், கோவலன் ஊடல்நிலையும், ஊடல் தேய அவனை மாதவி கூடுங் காட்சியும், மற்றொரு சார், கடற்கரையின் மணற் பரப்பில், காதலரைப் பிரிந்து துன்புறுவதாகக் கற்பனை செய்த பாட்டுகளை அந்திப்பொழுதில் பாடி, அதனால் வெறுப்புற்று அவர் இருவரும் பிரிந்து புலம்பும் காட்சியும், கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் மதுரைக்குச் செல்லும் வழியில், கன்னியொருத்தியைக் கொற்றவைக் குரிய அணிசெய்து, கலைமாவின்மீது அமரச்செய்து புடைசூழ்ந்து வரும் எயினர் கொற்றவைக்கோயிலை அடைதலும், அங்கே நிகழ்பவற்றின் காட்சியும், பிற காட்சிகளும் இயற்கைச் சார்புகளினிடையே பொருந்திய முறையில் அமைந்துகிடத்தலைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். உடனிருந்தும், கோவலனும் கண்ணகியும், நிலத்தின் இயல்புக்குப் பொருந்த, ஒருவர் நலத்தை யொருவர் புணர்ந்திலரென்பது, பாலைநிலத்தில் நிகழ்ந்ததென, [1]" கருந் தடங் கண்ணி" என்னும் தொடரால் குறிப்பாய் உணர்த்தப் பெற்றிருத்தலையும் மறத்தலாகாது.

முதல் கரு உரிப்பொருள்களென்று கூறிய வரிசையில், ஒன்றினும் ஒன்று சிறந்ததென்பதும் வழக்கு. அன்றி, முதல் கருப்பொருள்களின்றி உரிப்பொருள் ஒன்றை மட்டுமே இலக்கியப் பொருளாயமைக்கக்கூடுமென்பதைப் பட்டினப்பாலை போன்ற நூல்களில் காணக்கூடும். வழக்கு இதுவாக, உரிப்பொருளுக்கு முதல் கருப்பொருள்கள் சார்புகளென்பது போதரும். இம்முறை இலக்கியங்களில் காணப்பெறுமாறே இலக்கணத்தில் விதித்திருத்தலையும் அறிவோம். எனினும், இம்முறை, வழக்கென்ற மாத்திரத்தானேயே அமைந்ததோ, அன்றி அவ்வழக்கும் இயற்கை முறையான் அமைந்ததேயோ வெனும் ஐயம், முதல் கரு உரிப்பொருள்களென்னும் முறையை இழுக்காது கடைப்பிடிக்கும் கலித்தொகை போன்ற இலக்கியங்களைப் பார்க்கும்போது எழுதல் இயல்பேயாகும்.

1. சிலப். காடு காண். 136.



முதல் கருப்பொருள்கள் உரிப்பொருளுக்குத் தகுந்த சார்புகளாமென்று முன்னே குறித்தவற்றை நினைவு கொள்ளின் ஐயம் மறையுமென்பது ஒருதலை. இனி, நாம் ஒரு மலையின் உச்சியை அடைவோமானால், அல்லல்கள் மருவிய வாழ்க்கை நிகழும் இருக்கைகளையுடைய ஊர்கள் அமைந்துள்ள நிலப்பரப்பிலிருந்து நாம் சேரும் இடம் உயர்ந்து நிற்பதற்கேற்பவே, நம் மனமும் வாழ்க்கையின் இழிந்த பெற்றித்தாய கூறுகளைக் கடியும் உயர்ந்த போக்கிலேயே படர்ந்து சென்று மகிழ்தலைத் துய்க்கக் கூடும். அன்றியும், நம் இல்லங்கள் வாழ்க்கை நிகழ்தற்கு இன்றியமையாத வாய்ப்புக்களமைய வேண்டிய நோக்கத்துடனேயே பெரும்பாலும் சமைக்கப் பெறுமாற்றான், வாழ்க்கை நிகழ்ச்சிகளை யிகந்த பரந்த நோக்கங்கள் எழுதற்கு ஏற்ற இடங்களாகா. இப் பெற்றித்தான இருக்கைகளிலிருக்கும் சிலருக்குப் பரந்த நோக்கங்களிருக்குமெனின், அஃதும் சார்புகளின் பிணிப்பைக் கடந்து செல்லக்கூடும் அன்னவர் மனப்பான்மையா னுயதாகும். மலைக்கே யன்றி, ஊரிடையுள்ள ஒரு பூங்காவுக்குச் செல்வோமாயின், நம் வாழ்க்கையிலுள்ள சிறு பிணிப்புகளைச் சிறு பொழுதளவாகிலும் மறந்து மகிழ்கின்றோமன்றோ! இவ்வுண்மையை ஒட்டியதே யன்றோ "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் முதுமொழியும்! என்னை?, [1]" திருக் கோயில்களில் கடவுளின்பால் அன்பை வளர்த்தற்கு ஏதுவாய் நிற்பன அருங்கலைகள்............எண்ணரிய உயிர்களிற் சிறந்த மக்களுக்கெனச் சிறப்பாயுள்ள ஆறுவதறிவே களனாகவும் தத்துவங் கடந்து நின்ற அந்தணன் அருள் மணக்கவும் அரும்பி மலரும் சிற்பம் இசை நாடகம் முதலிய அருங்கலைகளைத் தெய்வங்களுக்கு உரிமையாக்கிப் பூசனை செய்யவும், அக் கலைகளில் மணக்கும் எழிற் றன்மையில் மகிழ்ந்து பொருட் பற்றொழிந்து நிற்கும் மனம், தன்னை மறந்து, தெய்வத் திருவின் அருள் வெள்ளத்திலே ஆழ்ந்து நிற்றற்குமாம்." செப்பமான

1. எழில், முன்னுரை.

உள்ளத்தினர், பல நிலப்பகுதிகளில், அவற்றிற்கு ஏற்ற பொழுதுகளில் தங்கினால், அவற்றிற்குச் சிறப்பாய திணைகட்கு அவை பொருந்தியிருத்தலை உணர்வர்.

தமிழ ரொழியப் பிறர், முதல் கரு உரிப்பொருள்களின் தன்மைகளை யறிந்து பாகுபாடு செய்திற்றிலர். எனினும், இப் பாகுபாடு இயற்கையைத் தழுவிய தாயினமையின், ஆராய்ந்து பார்த்தால், பிற மொழிப் புலவரும் இயற்கையையொட்டி ஓரளவாயினும் இப் போக்கைத் தழுவியிருக்கக் கூடுமென்பது புலனாம். கவி தென்னிசன் தம் உயிர்த் தோழர் இறந்ததற் காற்றாராய்ப் பாடிய [1]"Break, Break, Break." என்னும் இரங்கற் பாவில், கடல்நீர் அலைந்து திரைந்து இரங்கி மோதி யலம்பிப் புலம்பும் கடற்கரையையே பின்னணியாக வைத்துள்ளார். எனவே, நெய்தல் நிலம் இழந்த தன்மையைத் தருதலிற் சிறப்புடைத்தென்பது தமிழர் வழக்கறியாத ஆங்கிலப் பெரும்புலவர் ஒருவர் செய்யுளின் வாயிலாக அறிந்தாம். [2]இனி, வேனிற்பருவத்தில், நண்பகலில், வெயிலின் வெப்பம் மிகுந்து நிற்கும் போது, காதலியைக் காதலன் பிரிதலைக் கவி இரவீந்திரர் அகப்பொருளைத் தழுவிய [3]"தோட்டக்காரன்"

1. பின்னிணைப்பு: ௫ பார்க்க.
2. "It was mid-day when you went away.
The sun was strong in the sky.
.......... .......... .......... ..........
The doves cooed tireless in the shade, and a bee strayed in my room humming the news of many distant fields.
.......... .......... .......... ..........
I had forgotten to braid my hair. The languid breeze played with it upon my cheek.
.......... .......... .......... ..........
It was mid-day when you went away; The dust of the road was hot and fields panting."
—R. Tagore, The Gardener, 55.
3. The Gardener.



என்னும் நூலில் பாடியுள்ளார். பொருளிலக்கணமறியாத இவ் வங்கக் கவியரசர் கையாளும் முறையிலிருந்தும உரிப்பொருளின் தன்மையைத் தக விள்ளுதற்குத் தமிழர் வழக்கை யொட்டி, முதல் கருப்பொருள்கள் தக்க சார்புகளாயமைதல் புலனாகும். இயற்கையை யொட்டி யெழுந்த இச் சீரிய முறையைப் பல்லாயிர வாண்டுகட்கு முன்னரே நம் முன்னோர் தக்கபடி பாகுபாடுசெய்து, இலக்கியங்களிற் கையாண்டு இலக்கண முறைகளாகச் செப்பஞ்செய்து கொண்டதை நினைத்தால், தொன்று தொட்டே அவருடைய உள்ளம் அழகுத் துறையில் எத்துணை ஈடுபட்டிருந்ததென்பதை ஒரு சிறிது உணர்தல் கூடும். இதுபற்றி யன்றோ, இலக்கிய வளமிக்க ஒருசில உலக மொழிகளில் ஒன்றாய் நம் மொழி திகழ்வதும்!

தட்ப வெப்ப மாறுபாடுடைய பல நாடுகளில், நிலத்தின் தன்மையும் பருவச் செவ்வியும் மாறுபடுமாற்றான் விருப்பு வெறுப்புகட் குரியவற்றிலும் வாழ்க்கை முறையின் சில போக்குகளிலும் வேற்றுமை இருத்தல் இயல்பேயாகும். வெப்பம் மிகுந்த நாடுகளிலுள்ளார் தட்பத்தை யவாவலும், குளிர் நாட்டினர் வெப்பத்தை யவாவலும் இயல்பே. ஆயினும் இலக்கியங்களில் நேரும் நிகழ்ச்சிகளின் தன்மை தக வெளிப்படும் வண்ணம் அவற்றிற்குப் பொருந்திய சார்புகளிடையும் பொருந்தாச் சார்புகளிடையும் அமைத்துக் காட்டும் வழக்கு பல மொழி இலக்கியங்களிடையும் நிலவுகின்றது.

**பொருந்தாச் சார்புகள்**

பொருந்திய சார்புகளிடை அமையக் காட்டிடும் நிகழ்ச்சிகளின் திறன் நிரம்பித் திகழ்தலைப்பற்றி முன்னே குறித்துள்ளாம். பொருந்தாச் சார்புகளிடையும் காட்சி நிகழ்ச்சிகளின் தன்மை நிரம்பித் தோன்றுதலுமுண்டு. முல்லைத்திணைக்குரிய கார்ப்பருவத்தே, மாலைப்பொழுதில், உடம்பு வெப்பத்தை நாடவும், மலர்களை யேந்திய முல்லை யாதியவை துய்ப்பின் நினைவை யளிக்கவும், புள்ளும் மாவும்

தம் துணையை மேவித் தம்மிருக்கை சேருதலைத் தனித்திருந்து காண்பாளொருத்தி, தானும் அவற்றை யொப்பத் தன் கணவனோடு இருந்து பருவத்தின்பயனைத் துய்த்தற்கு இல்லையே யென்று சிந்தித்து, அவன் வரவை நசைந்து நோக்கு மாற்றான், அத்திணையின் செவ்வி நிரம்பித் தோன்றுகிறது. [1]அத்தகைய பருவத்தில் தனித்திருக்கும் அரசி, மெழுகு வழித்த மேற்கட்டியின்மீது புதிதாக எழுதிய படத்தில், திங்களோடு பிரிவின்றி நின்ற உரோகிணியை நோக்கித் தானும் அரசனோடு பிரிவின்றி யிருத்தலைப் பெற்றிலோமே யென்று நினைத்து, கடைக்கண் நீர் பனிப்ப நெட்டுயிர்த்து வருந்தித் துணைவன் வரவை நசைதலை ஓவியப்படுத்திக் காட்டுமாற்றான், பொருந்தாத சார்பிடை, குறித்த பொருளின் பெற்றியை மிகுவிக்கும் முறையை நக்கீரனார் நெடுநல்வாடையில் கையாண்டுள்ளார்.

எனவே, தக்க சார்புகளிடை பொருந்தி நிற்குமாறும் பொருந்தாது நிற்குமாறும் அமைத்திடுமாற்றான் காட்சி

1. "... ... ... படமிசை
... ... ... ...
விண்ணூர்பு திரிதரும் *வீங்கு செலன் மண்டிலத்து
†முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு ‡நிலைஇய
வுரோகிணி நினைவன நோக்கி நெடிதுயிரா
§மாயித ழேந்திய மலிந்துவீ $ழரிப்¶பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
**புலம்பொடு வதியு நலங்கிள ரரிவை."

—நெடுநல்வாடை : 159-166.

* வீங்கு செலன் மண்டிலம்-மிக்க செலவினையுடைய ஞாயிறு.
† முரண்மிகு சிறப்பின் செல்வன்-மாறுபாடு மிகுந்த தலைமையினையுடைய திங்கள்.
‡ நிலைஇய - திரியாமல் நின்ற.
§ மா - கறுப்பு, நீலம்.
$ அரி - அழகு.
¶ பனி - நீர்த்துளி.
** புலம்பு - தனிமை.



நிகழ்ச்சிகளின் செவ்வி பொலிவுற்றுத் திகழ்தலும், முதல் கருப் பொருள்கள் அவ்வண்ணம் சார்புகளாய் அமைதற்குரியவை யென்பதும் கண்டாம். ஆகவும், புலனெறி வழக்கை யொட்டிப் புனைந்துரைத்தல் இகந்துபடாமல் இருத்தலும் வேண்டும்.

## இலக்கியம் இன்னதென்பது

இவ்வாறு ஆக்கவியல் உந்தத் தோன்றும் விருப்பத்தினால், சுவைத் திறமறிந்த ஆசிரியர் உள்ளத் தெழுந்தீதுளும்பும் உணர்ச்சியானது மதிநுட்பம் அனுபவம் காட்சித்திறம் புலனெறி வழக்கு மொழிமரபு ஆதியவற்றிற்கேற்பக் கருத்தில் அரும்ப, அங்ஙனம் அரும்பும் கருவின் முதலை இவ்வுலகின் அமைப்புக்குத் தக்க கருவாகக் கருத்தில் நிறைவெய்தக் கொண்டு ஏற்ற மொழியில் பாடப்பெறுவதும் உரைக்கப் பெறுவதும் முறையே பாவும் உரையும் அடங்கிய இலக்கியமாம். இனி, இலக்கியத்தை இயல் இசை நாடகமென விகற்பித்துக் கூறுவதே பெருவழக்காகும். இவ் விகற்பம் முன்னே கூறிய பாகுபாட்டிற்கு மாறுபட்டதன்று. இலக்கிய நூல்கள் பெரும்பாலும் பாவடிவிலேயே செய்யப்பட்டு வந்தமையினால், முன்னோர் உரைநடையை ஒரு தனிப்பகுதியாகக் கொண்டாரில்லை. ஆனால், கால வியல்புக் கிணங்க, இப்போது உரைநடையிலும் நூல்கள் போற்றி யெழுதப்பெறுமாற்றான், அதனை ஒரு பிரிவாகக் கொள்வது முறையே யாகும்.

## பாவுக்கும் உரைக்கும் உள்ள தொடர்பு

எம் மொழியிலும் பா, உரைக்கு முன் பிறந்ததாகவே தெரிகிறது. இவ் விருவகை இலக்கியங்களின் இயற்கையமைப்பை நோக்குங்கால், இத் தோற்ற வரிசை இயற்கையே யென்பது தெள்ளிதாம். அவற்றிற்குரிய பொருள்களைத் தேர்ந்து, அவற்றிடையுள்ள வேறுபாடுகளை நோக்கி வரம்பறுத்தல் எளிதல்ல. பல பொருள்களும் அவற்றிற்குப் பொதுவாமெனினும், அவற்றின் உருவ வேறுபாட்டிற்கிணங்க அவற்றின் உள்ளுறையின் தன்மை

வேறுபடுதலும் இயல்பேயாகும். யாப்புருவைப் பெற்று அலைப் போக்கில் பெயரும் பாவிற்கும் உரையுருவி லமைந்து நடக்கும் உரைக்குமிடையே, பல வனப்புக்க ளமைந்த உருநலன் முறுக்கவிழ நிறைந்து மணக்கும் மாதர் நலன், இனி வரவிருக்கும் வாழ்க்கை யின்பங்களை நோக்கி யெழுந்த உணர்ச்சியால் கதித்தெழ, சுவைகளைப் பேணி, அணிகளை விரும்பித் தாங்கி, சாயல் சிந்த அடி பெயர்க்கும் மங்கையின் நடைக்கும் சுவைகளிலும் அணி களிலு முள்ள விருப்பம் தேய, சமம் செய்து சீர் தூக்கும் மன மமையப் பெற்று, நலன் முற்றும் நென்னலே மலரப் பெற்று, மறை சிறிது நீங்க, வாழ்க்கையின் தன்மையைத் தேர்ந்த தெரிவையின் நடைக்கும் இடையே யுள்ள வேற் றுமை யுண்டு. பருவம் கழிந்த பின்னரும் உள்ளப் பான் மைக்கு இயை பில்லாத மங்கைப் பருவப் போக்கைப் பின் பற்றும் போலிநடையும், நலன் முற்றும் வெளியிடற்கு வெள்கி மறைக்க முயலு மாற்றான் விளையும் மறையை யிகந்து நலன் சிறுகத் துளும்பும் போக்கும் உலகிடை நிகழ்தல் உண்மை யன்றே! இங்ஙனம், அமைந்த பா உரைகளு முண்டு; அன்றி, நலங்கள் அமையாத வறிய யாப்பும் நலன் பல பொதிந்த உரைச் செய்யுளு முண்டு. எனவே, வடிவத்தைக் கொண்டே செய்யு ளென்றும் உரை யென்றும் கொள்வது பொருந்தாது. [1]இதுபற்றியே, பேராசிரியருட் சிலர் பாவுக்கும் உரைக்கும் இடையே உள்ளபடியே வரம் பொன்றில தென்று கூறுவர்.

[2]"அவளும் ........ பற்பன்னூராயிரவர் கண் ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதி போலச் செல்வா ளென் பது முடிந்தது."

1. "The distinction between poets and prose writers is a vulgar error"

—P. B. Shelly, A defence and poetry.

"Whether he writes at all; and if so whether in prose or in verse, will depend on accidents."

—Carlyle, The Hero as poet.

2. இறையனார் அகப்பொருள்: சூ. 2 உரை.



என்னும் பகுதி, அதனிடை யடங்கிய பொருள் உள்ளத் தைப் பிணிக்கும் செவ்வி வாய்ந்ததன் பயனாய்த் தோன் றிய அழகும் மாண்பும் ஒருங்கே யமைந்த உவமையொடு சுவை ததும்ப மொழியப் பெற்றிருக்கிறது. இன்னும்,—

[1]"யாங்ஙனம் நிற்குமோ? எனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோக மும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாக மும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகை யும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக் குயில்கள் இசை பாட, தண் தென்றல் இடை விராய்த் தனிய வரை முனிவு செய்யும் பொழிலது நடுவண் ஒரு மாணிக்கச் செய்குன்றின் மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண் தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண் டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து, தம் செம்மலர்ச் சீரடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலர்க் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்த இடத்து, மரகதமணி விளிம் படுத்த மாணிக்கச் சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழு நிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடிப்பிடித்துத் தகடு படு பசும்பொன் சிகரங்களின் முகடு தொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து மணி வரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணி கிளரருவி ஆடகப் பாறைமேல் அதிர் குரல் முரசின்

1. இறையனார் அகப்பொருள்: சூ. 2 உரை.

கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக் குயிலும் கிளியும் பாட, தண் தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித் தலத்து மிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போல் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முளை இள ஞாயிற்று இளவெயில் எறிப்ப, ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்."

என்னும் பகுதியில், கற்பனையின் செழுமையும், அதனிடத்தெழுந்த உணர்ச்சியைப் பிணித்தெழுப்பும் அழகிய காட்சிகள் பலவும், தக்க அடைகளோடு திறம்பட வருணித்திருக்கும் திட்ப நுட்பங்களும், மோனைபட அமைந்து அலைப் போக்கிற் பெயரும் மொழியுருவில் செறிந்த சுவையை யளிக்கின்றன. யாப்பிலக்கணத்தை யொட்டி யாக்கப்பெறாத நிலையிலும், பொருட்செவ்வியானும் மொழியமைப்பானும் கவியின்பத்தை யளிக்குமாற்றான், இப் பெற்றித்தான உரைப் பகுதிகள் உரைச் செய்யுள்களெனக் கொள்ளலாகும் தகுதியுடையனவாம்.

"நீலனும் குமுதனு நெடிய குன்றமே
போலுயர் சாம்பனும் புணரி போர்த்தென
மேலெழு சேனையும் விரைவின் வந்துறச்
சால்புடை மதுவனந் தனைய ழிப்பவே."

—இராமாவதார. சுந்தர. திருவடி தொழு, 38.

எனும் விருத்தத்தில், உரையுருவில் மொழியலாகாத பொருள் ஒன்றும் கண்டிலம். ஒரு பெருங்காப்பியத்தின் பல பகுதிகளில் இத்தகைய செய்யுள்கள் அமைதல் இயல்பே. எனின், என் சொன்னவாறோ எனின், உருவொன்றையே வைத்துத் தூக்கென்றும் உரையென்றும் கொள்ளலாகா தென்பதே. எனவே, உரைச் செய்யுளும் யாப்புரையும் உளவா மென்பது போதரும். ஆனது பற்றி, இப் போக்கில் செய்யுளுக்கும் உரைக்கும் வேறுபாடு இன்னதென்று கூறுதல் எளிதன்று.



எனினும், பாவிற்கும் உரைக்கும் வேறுபாடு இல்லாமலும் இல்லை. [1]எழுச்சியின் மிகுதியினால் உள்ளம் அலைப் போக்கில் துளும்பும்போது இசைத்தெழும் கருத்தே யாப்புருவைப் பெறத்தக்கது. அன்றி, வழக்கு ஆராய்ச்சிகளைப் பற்றிய செய்தி கூறுமாற்றான் நுவல வெடுத்துக்கொண்டவற்றை உரையிலேயே யெழுதக்கூடும். மற்றும், சிறிது உள்ளத்தின் எழுச்சி யிருந்தபோதும், எழுந்த கருத்தை உரையிலேயே சொல்லக் கூடுமாயின், அங்ஙனம் சொல்லுதலே பொருந்தும். உள்ளுறையானது பாவிற் கியையாதிருக்கும். உரையில் தக விள்ளக் கூடியவற்றிற்கு யாப்புருவைத் தருதல், மிகையே யன்றி, அழகொழிந்த செயலுமாம். எனவே, இங்ஙனம் தோன்றும் நூல் இலக்கிய மன்று: அதன் போலியே யாகும். என்னை? கருத்துக்கேற்ற உருவ மமையப் பெறாமையான்.

கருத்தில் அரும்பும் கருப்பொருளுக்கு ஏற்ற மொழியுருவங்களை யளித்தல் ஒரு தனி ஆற்றலேயாம். அன்றியும், அது ஒரு கலையே யென்றும் கூறலாகும் செயலுமாகும். இலக்கியத்திற்காம் கருப் பொருளின் கூறு பலர் உள்ளத்திலும் அரும்பும். காதல் வயமும் உள்ளத்தை யள்ளும் பிற உணர்ச்சிகளின் வயமும் அழுந்திக் கிடக்கும் நிலையில், பலரும் அவரவர் இயற்கைப் பெற்றிக் கேற்பக் கவிஞர்களே யாவர். எனினும், இயற்கை யமைப்பில் பிறரைக் காட்டிலும் மேம்பட்ட சுவையறிவின் வழி உணரும் பரிசு மிக உடையராய், உணர்ந்தவற்றை எழில் பட விள்ளும் ஆற்றலுடையவரே கவிஞராவர். உரைநடையாசிரியர் இப் போக்கில் கவிஞரினின்றும் பெரிதும் வேறு

1. It is only when the heart of him is wrapt into true passion of melody, and the very tones of him, according to Coleridge's remark, become musical by the greatness, depth and music of his thoughts, that we can give him right to rhyme and sing....Rhyme that had no inward necessity to be rhymed; it ought to have told us plainly, without any jingle, what it was aiming at.

—Carlyle, The Hero as poet.

பட்டவராகார். நக்கீரர் போன்ற சிறந்த கவிஞர் சிலர் நல்ல உரைநடை ஆசிரியராகத் திகழுமாற்றானும் இக் கூற்றின் உண்மை அறியலாகும்.

உணர்ச்சியின் மிகுதியினால் அலைப்போக்கில் துள்ளி யெழுந்து பெயர்வது பாவாகு மெனவே, அதன் மொழி யுருவும் அலைப்போக்கிற் செல்லும் யாப்பாகும். சீமம் செய்து சீர்தூக்கும் உள்ளப்பான்மையில் எழும் கருத்தோ, நேராகப் பெயர்ந்து செல்லுமாற்றான் அதன் மொழி சமமாகச் செல்லும் உரையாகும். உணர்வு சற்று ஆறிய பொழுது, இடையிடையே உலகிருப்பதை உணர்தலே யன்றி, கவிஞன் தன் காட்சியிலேயே தன் உள்ளம் அழுந்தப் பெற்றிருப்பான். உலகம் தன் செய்யுளை எவ்வண்ணம் மதிக்குமென்பதைப் பெரிதும் மதியான். உரைநடை யாசிரியனோ, நூலைச் செய்யும்போது அதனை உலகம் சோதித்துச் சீர்தூக்கிப் பார்க்குமென்ற எண்ண முடையோனாவன். ஆனது பற்றி, உரை நூலமைப்பில் அறிவு பெரிதும் தொழிற்படுமாற்றான் அதில் பாவைக் காட்டிலும் காரண காரியப் போக்கு மிக அமைந்து கிடக்கும்.

### பா உரைகளுக்குரிய மொழிவகை

பொருளிலும் யாக்கப் புகும் போக்கிலும் இவ் விரு இலக்கிய வகைகட்கிடையே யுள்ள சிறு வேறுபாட்டுக் கமைய உருவிலும் வேறுபாடமைதல் இயல்பேயாகும். யாப்பிலுள்ள நூலொன்றை உரையிற் பெயர்த்தெழுதினால், முன்னதிலுள்ள பொருள் முற்றும் பின்னதில் வந்துறு மெனினும், அவற்றிடை வேறுபாடுமுளவாகு மென்பது வெளிப்படை: பொருட் பரிசிற் கேற்பவும் உணர்ச்சியின் பெற்றிக் கேற்பவும் அவை தொனிக்கும் இயல்புக் கேற்பவும் பொருந்தும் யாப்பின் செவ்வியும், சொல் நிரலும், ஓசையும், பிறவும் யாப்பில் அமையக் கூறுமாறு உரையிற் செய்தற் கியலாது. அதற்கேற்பவே சொல்லும் தொடரும் அமைக்கும் முறையும் பாவிற்கு ஓரளவு சிறப்பு வகையானும் அமையும். ஒரு சாரார் இவ் வேறுபாடு



வேண்டற்பால தன்று என்றும் கூறுவர். ஆனால், இலக்கிய மரபை நோக்கும்போது, இவ் வேறுபாடு அமைந்திருத்தலைக் காண்கின்றோம். கதை நாடக நூல்களின் சில பகுதிகளிற் சேரி மொழி பொருந்துதலன்றி, பிற இலக்கிய வகைகளில், அவற்றுள்ளும் செய்யுளில் அவை பயின்று வருதல் அருமை. இனி, வழக்கிலுள்ள சொற்களே யன்றி, சிறப்பாக இலக்கியங்களிலே வழங்கும் தனிவகைச் சொற்களும் செய்யுளில் பயின்று வரும். ஆயின், உலக வழக்கி லில்லாத சொற்றொகுதிகளை வழங்கு மாற்றானேயே செய்யுளுக்கென்று ஒரு தனிச்சிறப்பு செய்விக்கும் முறையோ விது, எனின், அற்றன்று: பொருள் தோன்றிப் பொலியும் பரிசிலேயே சொற்றொடர்களையும் அவற்றின் வரிசை முதலிய முறைகளையும் ஏற்றுக் கொள்ளுதலே யொழிய, இம் முறையை மாற்றி யமைத்து மயங்கவைத்தல் மரபன்று. மனவெழுச்சி யுறும்போது ஒருவர் நடை பீடு கெழ வமைதல் இயல்பே யன்றோ? மனப்பான்மைக்கேற்ற நடையே போன்று, கருத்தின் தன்மையதேயாம் நூல் நடை யென்பது. அன்றி, காரிகையாருள்ளும் இயற்கை வனப்புக்கள் பலவும் பொருந்தப் பெற்றவர் இயல்பாகவே பிறரைக் காட்டிலும் அணி நடை யுடையவராவர். அன்னவாறே, வழக்கு மொழியினும் செய்யுள்மொழி ஓரளவு சிறப்பும் அணியும் அமையப் பெற்றதேயாகும். அவ் விலக்கணம் நிரம்பிய காரிகையாரும், மன வெழுச்சியும் நெகிழ்ச்சியும் எய்துமாற்றான் செருக்கியும் தளர்ந்தும் நடக்கும் இயற்கையை யொட்டியே, செய்யுளின்கண்ணும் நடை விகற்பப்பட்டு வருதலும் இயல்பேயாம். இனி, அவ் வணி நடையார் பெயரும் செவ்வியை மிகுவிக்கும் சிலம்பும் பிற அணிகளும் போன்றே, மொழியின் பெயர்தற் பண்பைச் செழுமைப்படுத்துவன நூற் கருத்தை யொட்டி யெழுந்த உணர்ச்சியைச் சார்ந்த அணிகளாம். எனவே, உணர்ச்சி மிகுந்து அலைப்போக்கிற் செல்லும் செய்யுள் நடைக்கும் அறிவு மிகுதியாகத் தொழிற்படும் உரை நடைக்கும் வேறுபாடு உளவாதல் இயல்பே யென்பது கண்டாம்.

### செய்யுள் மொழி

கோழை யுலகிற் கண்ட வழக்கினைத் தன்னகத் தடக்கி உயர்ந்த போக்கை யுணர்த்தும் செய்யுளில் உரை நடையிற் பயிலாத சில சொற்கள் விரவி வருதலும், எதுகை மோனை யாதியவற்றை நோக்கி, அவற்றிற்கேற்ற சொற்களை வைக்கு மாற்றான் திரிசொற்கள் பயின்று வருதலும், அந் நோக்கம் பற்றியும் உணர்ச்சியின் மிகுதி பற்றியும் சொல் தொடர்களின் வரிசை மாறி வருதலும், ஓசை பற்றியும் பிற காரணம் பற்றியும் நீட்டல் முதலிய செய்யுள் விகாரங்கள் அமையக் கொள்ளுதலும், பொருளணியும் சொல்லணியும் பயின்று வருதலும் பிறவும் செய்யுள் நடைக்குச் சிறப்பாகும். உரைநடை, இவையின்றியும், அன்றி ஒரோஒவொருவழி ஓரளவு பெற்றும் நிலவும்.

### உரைநடை மொழி

செய்யுளின் உரை எழுதப் புகும் வழியும் திறன் ஆயப் புகும் வழியும் பல மொழிகளிலும் உரை நூல்கள் முதன்முதல் தோன்றிய வென்ப. விளங்காத பொருளை விளங்க வைக்கும் வழியும், அறிஞர்களே யன்றி மாணவர் களும் திறனை எளிதில் உணரும் பொருட்டும் அறிவின் பரிசால் பொருளை எளிமையாக்கப் புகுமாற்றான், அணிகள் பயிலாது, பொருளைப் பொதியாது விளங்க வைத்து, நேர் வழியாகப் பெயர்ந்து செல்லும் தன்மையொடு தோன்றிய தாகும் உரை. இவ் வகை நூல்களிலும் கூட, அறிஞர் களுக்கென்றும் அவரிடம் பாடங் கேட்கும் மாணவர்க் கென்றும் எழுதப்பெற்றவை கடு நடையினவாக அமைந் திருத்தலும் கண்டதொன்றேயாம். அன்றியும், உரை செய்தலும் ஆராய்ச்சி மேற்கொள்ளுதலும் ஒழிந்த கதை எழுதுதல் போன்ற பிற துறைகளில் கையாளப்பெறும் உரையும் ஆசிரியர் இயல்பையொட்டிக் கவிநயம் பொருந்தி யிருத்தலும் உண்டு. இனி, உரையும் ஆராய்ச்சியுமே செய்ய நுழைந்தவழியும், நக்கீரரைப்போல் இயற்கையில் கவிப் போக்குடையோரால் செய்யப்பெறும் நூல்கள் உரைநடையினவே யாயினும் கவிச்சுவை தழுவியனவாம்.



### கருத்தும் மொழியும்

மொழி யுரு வெய்துவது கருத்தே யானமை பற்றி, அக் கருத்தின் பெற்றிக்கும் உறுதிக்கும் அதைத் தோய்ந்து நின்றியங்கும் உணர்ச்சியின் எழுச்சிக்கும் ஏற் பவே அம் மொழி யுருவம் அமையும். விரும்பிக் கொண்ட உறுதிப்பாடான கருத்து மிக்க வலிமை யுள்ளது. கருத் தின் உருவச் செவ்வியே சமூக நிலையிலும், சிறப்பாகக் கலை வடிவ நலங்களிலும் திகழுகின்றதென்றே சொல்லக் கூடும். சமூகத்தின் தலைவர்கள் கருதியவாறே நாகரிகம் வளர்வதாகும்; ஒவ்வொரு நாகரிகத்திடைத் தோன்றிய கலைஞர்களின் அடிப்படையான கருத்துக்களை யொட்டியே அவ் வகுப்புக்குரிய கலைகளும் உருவெய்தா நிற்கும். என்னை? வல்லான் வகுத்ததே வாய்க்காலாயினமையின். வல்லான் வகுத்தற்கு மூலமும் கருத்தேயாகும். இங்ஙனம் ஆற்றல் வாய்ந்த கருத்துக்கள், எனவே ஆக்கவியல்பு வாய்ந்த கருத்துக்கள், புலவர் உள்ளத்தில் தோன்றும் போது, அவை நிறைவெய்துதற்குத் தக்க மொழி யுருவங் களை யெய்தும். பிற கலை யுருவங்கள் தோன்றும் வழியும் இப் பெற்றித்தேயாம். ஆக்கத் தன்மை யமைந்த கருத்து எவ்வாற்றானும் தனக்குரிய உருவத்தை யடைந்தே தீரும். இலக்கியங்களில் நுட்பமும் திட்பமும் வாய்ந்த பகுதிகளை யறிந்து வியப்படைகின்றோம். திருக்கோயில் முதலிய சிற்பத் திறன் திகழும் நிலையங்களில் சிலை யுருவங்களின் அழகில் ஈடுபட்டு, மீண்டும்மீண்டும் வியப்பெய்துகின்றோம். காணுந்தோறும் கருதுந்தோறும் அவற்றைத் தந்த தச்சர்களின் ஆற்றல்களைப் பெரிதும் போற்றுகின்றோம். நலன் மிக்க சிலைகளை எங்ஙனம் உருவாக்கியது அவர் ஆற்றல் என்று எண்ணிப் பார்த்துத் தேரலாகாத வகையில், அவர் ஆற்றலை மறையெனவே கருதுகின்றோம்; கல்லும் அவர் கையில் மெழுகாய் மாறியதோ! என்றும் ஐயுறுகின்றோம். கல்லை மெழுகாய் ஆக்கிய தன்மையில் வடிவெய்திய சிலைகளைப் போன்றே, மொழியைத் திறல் வாய்ந்த வகையில் கையாளுவதன் பயனாய் எழுவது இலக் கியம். ஆக்குந் திறமையுள்ள கருத்துக்களுக்கு, தக்க

உருவில் நிறைவெய்தித் தோன்றும் ஆற்றல் இயல்பாகவே யுண்டு. இவ் வாற்றலுக்கு ஆதரவளிப்பது உருவெய்தநிற்கும் கருத்தைக்கொண்ட புலவன் ஆர்வமாகும்.

இவ்வாறு உருவெய்தும் கருத்து, உயிரை யொத்து, மூப்பும் அழிவும் அற்றது. அதன் மொழி யுரு ஒரு சிறை உடலை யொக்கும். காலங் கழியக் கழிய வளர்ச்சியை யொட்டி மொழியின் வடிவம் சிறிது மாறிக்கொண்டே போகும்: சில சொற்கள் வழக்கா றற்றுப்போம்; சில புதியனவாகக் கையாளப்பெறும். மொழியின் நடையும் சிறிது மாறக்கூடும். இலக்கிய வகைகளுள்ளும் பழையன சில கழிதலும் புதியன சில புகுதலும் உண்டு. இதைக் குறித்துக் 'காலப் போக்கும் இலக்கியமும்' என்னும் பகுதியில் மீண்டும் பேசுவாம்.

தன் தன்மையைக் குறிப்பாகக் காட்டும் உடலை உயிர் எடுத்துக் கொள்வது போலவே, என்றும் உண்மையாய் நிலவும் கருத்துக்கள் தம் தன்மைகள் மலரும் மொழி யுருவங்களை யெய்தும். ஒரே தன்மையான கருத்துக்கள், பல புலவர் வாயிலாக மொழி யுரு வெய்தும்போது, உயிர் செறிந்த கருவின் இருக்கைச் சிறப்பு உருவில் தோய்ந்து நிற்பதை யொத்து, புலவரின் தனிப்போக்கு கல்வி அறிவு சார்புகள் காலப்போக்கு ஆதியவற்றிற்கேற்பவும் உருவம் அமையக் கொள்ளுதல் இயல்பேயாகும்.

கருத்துப் பொதிந்து நிற்கும் இவ் வடிவம், மெய்யை மூடி நிற்கும் சட்டை போலாது, உயிரின் உடம்பே போல்வதாகும். கருத்தைப் பற்றி நிற்பது மொழி: மொழியுருவை மாற்றினல் கருத்தும் மாறுதலெய்தும். மொழியின் தோற்றம் தூவியோடமைந்த பறவையின் வடிவத்தை யொக்கும். உருவமும் தூவியும் நடையுங்கொண்ட உடல் பறவையினின்றும் வேருகாதது போன்றே, மொழியும் கருத்தினின்றும் வேருகாது.



மககள, கற்ருரும் கல்லாதாரும் பல செய்திகளை யறிந்தவரேயாவர்; ஏதுமறியாதவர் ஒருவருமே இலர்; பலர் உயிர் வாழ்தற்கு வேண்டியவற்றையே அறிந்திருப்பர்; சிலர் பிற செய்திகளைக் கேட்டவாற்ருனும் கற்றவாற்ருனும் ஆராய்ச்சியானும் அறிந்திருப்பர். இவரிடை அறிவின் நுட்பமும் அளவும் பற்றிப் பல படித் தரங்களும் உளவாகும். பல வகையானும் அறிந்தவற்றை அறிந்த அளவிலே மட்டும் பொதிந்து கொண்டவர் தொகையே மிகப் பெரிதாகும்; அறிய வாய்ப்புள்ளவற்றைத் தம் அறிவின் ஒளியிலிட்டுத் தேர்ந்து, அவற்றின் தன்மைகளை உள்ளவாறு உணர்வாரின் தொகை குறைந்ததாகவே யிருக்கும்; அவ் வண்ணம் வாய்த்த செய்திகளைத் தம் உணர்வைக் கொண்டு தழுவிக் கொள்பவர் தொகை இன்னும் குறைந்ததேயாகும். அப்படித் தேர்ந்து உணர்ந்து கொண்டவற்றைக் குறித்துத் தம் சொந்தக் கருத்து வாய்க்கப் பெறுவோர் தொகை அதனினும் குறைந்ததேயாம்; அப்படி ஏற்படும் கருத்து, செப்பமானதாகவும் உலகம் அறியத் தக்கதாகவும் கொள்வார் தொகை அரிதேயாகும்; அதனினும் மிக அரிதாகும் அச் சிறப்பு வாய்க்கப் பெற்ற கருத்துக்களைச் செறிந்த உணர்ச்சியோடு கொண்டு அவ்வாற்ருன் விள்ளும் ஆற்றலுடையவர் தொகை. இன்னவரே இயற்கை யாற்றல் அமையப் பெற்று உரையும் பாவும் தரவல்ல புலவராவர். எந் நாட்டிலும் இலக்கிய ஆசிரியர் தொகை மிகமிகக் குறைந்திருத்தற்குக் காரணம் இஃதேயாகும். இத்தன்மையாக விள்ளும் ஆற்றலுடையவர் ஆக்கும் இலக்கிய நூல்களின் மொழி பெயர்ந்து செல்லலே நடை யெனப்படும். விள்ளத் தகுந்த பொருள் இருந்தாலன்ரே விள்ளும் முறையும் அமையும்! விள்ளற் கமைந்தவை இல்லாதபோது, விள்ளற்கேற்ற முறை அல்லது நடை எங்ஙனம் அமையும்? உலகிலுள்ள பெருந்தொகையினரும் பேசுவதும் எழுதுவதும் பலரும் அறிந்தவற்றைப் பலரும் பழகி யறிந்த முறையிலேயன்ரே! எனவே, அன்னவர் பேச்சிலும்

எழுத்திலும் நடையெனப் பொருட்படுத்தத் தகுந்த தொன்றில்லை யெனின் வியப்பென்னை! மக்களாய்ப் பிறந்து கண்ணுடையார்களில் எவரே ஞாயிற்றின் தோற்றத்தைக்கண்டு விரும்பி அதன் இளவொளியைத்துய்த்து இன்புறுதவர்? எனினும், எத்தனை பேர், [1]கம்பரையொத்து அதன் பரிசை விள்ள வல்லார்? இப்படியே பலரும் அறிந்த பலவற்றைக் குறித்தும் பல புலவர் தம் சிறப்பியல்பு மலரப் பாடியுள்ளவையும் எழுதியுள்ளவையும் வியப்பை யளிப்பனவாம்.

**மொழித லுண்மை**

இலக்கிய நூல்கள், அவற்றின் ஆசிரியருடைய கருத்துக்களையும் அக் கருத்துக்கள் தோன்றும்போது உடன் எழும் உணர்ச்சிகளையும் உள்ளவற்றை உள்ளபடியே பொருந்தக் கொண்டு விள்ளுதல் வேண்டும். பெண்ணின் முகத்தைப்பற்றிச் சொல்ல நேரும்போது "மதிமுகம்" என்னும் வழக்கிலுள்ள தொடரைப் பயன்படுத்தின், அத் தொடர் பலகால் அறிந்ததொன்றாகலின், அதன் சொற்பொருள் சுவையை யளிப்பதில்லை. பல மொழிகளிலும் இத்தன்மைய வழக்குத் தொடர்கள் பல உள. பழக்கத்தில் சுவை தேய்ந்து போன அன்னவற்றை இன்றியமையாத விடத்திலன்றி வழங்குதலை ஒழித்தல் வேண்டும். "முத்தனைய மூரல், முருந்தனைய மூரல், அஞ்செஞ்சீரடி, துடியிடை, அகலல்குல்" என்னும் தொடக்கத்தனவெல்லாம் அப் பெற்றியனவேயாம். தம் கருத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்றபடி, தம் ஆற்றலுக்கும் தனிப்பண்புகட்கும் அமைந்த வகையில் நூல்களைச் செய்தலே சால்புடைத்தாகும். சட்டை யொன்று சிறந்ததே யாயினும் உரியவர் உடம்புக்கன்றி, பிறர் உடம்புகட்கு அது தகுந்த தாகாது; இக்காலத்திலோ வெனின், பலரும் அணிந்து கொள்ளுமாறு தைத்து விற்கப்பெறும் உடைகள் உளவாதலை யொத்தே, பொருட் பொருத்தத்தை

1. பின்னிணைப்பு: ௬ பார்க்க. (இராமாவதாரம், பாலகாண். மிதிலைக்காட்சி, 150 - 153.)



நோக்காது சொற்களையும் தொடர்களையும் வழங்கும் வழக்குமுண்டு. இவ் வழக்கு வறுமொழி நூல்களுக்கன்றி இலக்கிய நூல்களுக் காகா.

இயற்கை யாற்றலுடைய ஆசிரியன்மாரும் தம் கருத்துக்களைத் தக்கவாறு விள்ளும் விதியை எப்போதும் மறத்தலாகாது; விழிப்பாகக் கருத்தில் வைத்தல் வேண்டும். மொழித லுண்மை இவ் வழியே நிகழ்வதாகும். ஆசிரியன்மார் மொழியாட்சி, தொடக்கத்தில் குறைந்த அளவினதாகவே யிருக்கும். விள்ளும் உண்மையைக் கடைப்பிடித்தே அவ் வாற்றலைப் பண்படுத்திப் பெருக்கிக் கொள்ளுதல் முறையாகும். [1]ஆசிலித்து என்னும் ஆங்கில உரைநடை ஆசிரியர், துவக்கத்தில் ஒருகால் ஒரு பொருளைப் பற்றித் தாம் இருபது முறை எழுத முயன்றும் எழுதக் கூடாமல் கைவிட்டதாகக் கூறுகின்றார். இது உண்மையின்வழி ஒழுகும் முறையாகும். கருத்துக்குப் பொருத்தமில்லாத சொற்களால் முழக்குதலிற் பயனில்லை.

உலகின் பல மொழி இலக்கியங்களுக்கும் தொன்று தொட்டு இதுகாறும் பொருளாவன இயற்கைக் காட்சி காதல் வீரம் முதலியனவாம். பலகாலும் இப் பொருள்களை இலக்கியங்களிற் கண்டாலும் அவற்றிடம் நம் மனதுக்கு வெறுப்புத் தட்டுவதில்லை. அவ் வகைப் பொருள்கட்கும் நமக்கும் இடையேயுள்ள இயைபு இதனால் தெரிகின்றது. எப்படித் திங்களை மீண்டும்

1. "I sat down to the task shortly afterwards for the twentieth time, got new pens and paper, determined to make clear work of it, wrote a few meagre sentences in the skeleton style of a mathematical demonstration, stopped half way down the second page; and after trying in vain to pump up my words, images, notions, apprehensions, facts or observations, from that gulf of abstraction in which I had plunged myself for four or five years preceeding, give up the attempt as labour in vain and shed tears of helpless despondency on the blank unfinished paper. I can write fast enough now.

—Hazlitt, My first acquaintance with poets.

மீண்டும் காணுந்தோறும் அது நம் மனதைக் கவர்கின்றதோ, அது போன்றே, பலரறி பொருள்களே தோன்றுதொட்டு நமக்கு இலக்கியங்களிலும் பிற அருங்கலைகளிலும் இன்பத்தை யளிக்கின்றன.

**தனித்தன்மை**

இவ் வியையை யொட்டிய ஒற்றுமை நிற்க, குறித்த ஒரே பொருளைப்பற்றிப் புலவர் பலர் பாடினால், அவர் பாடும் பாட்டுக்களிடை ஒப்புடைத் தன்மைகளோடு கருத்திலும் மொழியும் முறையிலும் விகற்பங்களு முளவாகும். எப்படி வானவில்லைப் பன்னூறாயிரவர் ஒரே சமயத்தில் நோக்கினும், அவர் ஒவ்வொருவர் நோக்குக்கும் அமையும் வானவில் வேறாகுமோ, அங்ஙனமே பல பொருள்களையும் புலவர் பலர் நோக்கும்போது, அவர் காட்சிகளில் வேறுபாடு அமைந்து கிடக்கும். இக் காட்சிகளை அன்னவர் கண்டவாறு உள்ளத்தே கொண்டு பாடும் போதும், அவர் தனித்தன்மைக் கேற்பவும் கல்விக் கேற்பவும் காலப்போக்குக் கேற்பவும் சார்புகளுக் கேற்பவும் பல வேறு வகையினவாம். ஆக்க வியலே அருங்கலைகட்கு மூலகாரண மென்று கூறியிருக்க, இப்போது அவ் வியல் மலர்தற்குக் கருவிகளா யமைந்துள்ள புலவரால் தரப்பெறும் இலக்கியங்களில் வேறுபாடமையும் என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும், என்ற ஐயமெழக் கூடும். ஒரே தன்மையான தண்ணீர் பல நிலங்களிற் சார்ந்து ஊறி எப்படி நில வகைக் கேற்பவே வெவ்வேறு பண்புகளோடு அமையுமோ, அவ்வாறே, பல காலப் போக்குகளிடையும் பல சார்புகளிடையும் பலவகைக் கல்வி கற்ற தனித்தன்மை யமைந்த புலவர்களிடம் அவ் வாக்கவியல் உருவெய்தும்போது, பலவகை உருவங்களை எய்துதல் இயல்பேயாம். விசும்பின் பல கோடி மீன்களும் உருவிலும் ஒளியிலும் பல வகையினவாம். எனினும், அவற்றின் தோற்றத்திற்குக் காரணம் ஆக்க வியல் ஒன்றேயாம். பல வேறு தோற்றமுடையன வெனினும் அவற்றை அடங்கலும் ஒரு கூட்டமாக நோக்கும்போது, அவ் வொவ்



வொன்றும் அத் தொகுதிக்கு உறுப்பாய் நின்று, ஒரே திரண்ட தோற்றத்தை நிறைவெய்தச் செய்யும் தன்மையில் ஒற்றுமையுமுடையனவாம். அங்ஙனமே, இவ் வண்டத் தோற்றத்தின் பல கூறுகளிலும் பல வேறு தோற்றங்களிலும் திரண்ட தன்மையில் மணக்கும் ஆக்கவியலின் ஒற்றுமை காணப்படும். உலகிலுள்ள இலக்கிய நூல்கள் பலவும் தம் ஆசிரியரின் தனித்தன்மைகளை மணக்கக் கொண்டுள்ளன வெனினும், அவை யனைத்தும் ஒரே இலக்கியத் தொகுதியின் பல கூறுகளாகவும் சமைந்துள்ளன.

தம் தனித்தன்மைகட்கும் பிற சார்புகளுக்கு மேற்பப் புலவர் நூல் செய்யப் புகும்போது, உலகின் பல துறைகளிலும் தொழிற்படும் ஆக்கவியல் அன்னவர் உள்ளத்தில் நின்று, அறிவின் வழியாகத் தொழிற்படும்போது, அன்னவர் தனிப் பண்புகட்கும் பிறவற்றிற்கும் ஏற்பத் தனித்தன்மை மணக்கத் தோன்றும் இயல்பிற்று இலக்கியம். அத் தனிப் பரிசு மணக்கவில்லையேல், அவர் செயலில் உண்மைச் செவ்வி இல்லையென்பது ஒருதலை. சாந்திற்பட்ட காற்று, அச் சாந்தின் மணத்தை யுடையதாகும்; மண்ணில் தோய்ந்த நீரும் மண்ணின் நீர்மையை யுடையதாம். அல்லாதவழி, அக் காற்றும் நீரும் சாந்தொடும் மண்ணொடும் படிந்தும் அவற்றோடு தோய்ந்தன வல்ல வென்பதன்றி வேறு என்ன முடிபுக்கு வரக்கூடும்? தாமரையிலையில் நிற்கும் நீர்த்திவலைகள், அவ் விலையொடு பொருந்தாது நிற்பதே போன்று, நம் மனம் சில கருத்துக்களைக் கண்டவாறும் கேட்டவாறும் தோயாது வைத்திருந்து வெளியிடுதலும் கூடும். இடையனொருவன் வாணிகத்தின் பொருட்டுப் பல ஆடுகளையும் ஆத் திரள்களையும் வைத்திருத்தல் கூடும். அப் போக்கில், அவை, எனவே, அவற்றின் உடலங்கள் அவனுடையனவேயாம். அவற்றை விலைக்கு விற்கும் உரிமையும் அவனுக்கு உண்டு ஆனால், அவற்றின்பால் அவன் தன் உள்ளமறிய உரிமைபாராட்டி அன்பு செலுத்துவானல்லன். அவையும்

அவனிடம் அன்புகொள்ளா. இப்படிப் பல நிரைகள் அவனிடம் வந்து நீங்கும். எனினும், பொருள்பற்றி யன்றி அவற்றைப் பொருட்படுத்தான். ஆனால், அன்னவனும் தன்னதாகக் கருதும் ஆடும் ஆவும் உடையனாதலும் உண்டு. அன்னவற்றை அன்பொடு பேணி வளர்ப்பான். அவையும் அவனிடம் அன்புடையனவாம். அவற்றிற்குக் கழுத்தில் மணியும் பாசியும் கட்டி மகிழ்வான்; அவனுக்குள்ள அன்பையொட்டிப் பிறவும் செய்வான். இத்தன்மையேயொத்து, பலருக்கும் பொதுவான கருத்துக்களுங்கூட, ஆசிரியன் தன் அறிவொடும் உணர்ச்சியொடும் தழுவிக் கொள்ளுமாற்றான் அவனுடைய தனிப்பண்புகளைப் பொருந்தியனவாம். இங்ஙனமே, கருத்துண்மையைக் கடைப்பிடித்தலே யன்றி, நூலுக்கு உருவளிக்கும் வகையிலும் ஆசிரியன், தான் தகுதியென்றுணர்ந்தவழி, செயலுண்மையைக் கடைப்பிடித்தலும் செய்யக் கடவன். அவ்வண்ணம் செய்யப்பெறும் நூல்களின் உருவங்களில் ஆக்கியோன் தனிப் பண்புகள் திகழும். நளனுடைய கதையைப் புகழேந்தியாரும் அதிவீரராமபாண்டியரும் காவியங்களாகச் செய்துள்ளனர். ஒரே கதையைப் பற்றியனவாயினும், ஆசிரியர் தனிப் பண்புகட்கேற்ப அவை வேறுபட்ட தன்மைகளோடு திகழ்கின்றன. ஆசிரியன்மார் தனிப் பண்புகளின் விளைவுகளை விளக்குவதற்கு இவ்விரு நூல்களைப்போல் தமிழிலேயும், அன்றிப் பிறமொழிகளிலேயும் வேறு தக்க சான்றுகள் காணப்பெறா.

இனி, நூல் செய்யப் புகும் புலவர், அக் காலத்திற்கு முன் நிலவி வந்திருக்கும் கதைகளில் ஒன்றும் பலவும் கொண்டு, தாம் கருதியவாறு உருவை மாற்றித் தனித் தனி நூல்களாகச் செய்தலும் வழக்கு. செகப்பிரியர் நூல்களில் பெரும்பாலன இங்ஙனம் இயற்றப் பெற்றவை. அவ்வாறல்லாமல், நூலாசிரியர், பிறர் கருத்துக்களை அப்படியே தம் நூல்களில் இடையிடையே வைத்துக் கொள்ளுதலும் உண்டு. கம்பர், தாம் செய்த பெருங்காப்பியத்தில் பல நூல்களிலுள்ள கருத்துக்களைப் புகுத்தி



யிருப்பதாகச் சொல்லுப. இங்ஙனம் பிறர் கருத்துக்களைத் தாம் செய்யும் நூலில் இடந்தெரிந்து அமைத்துக் கொள்ளுதலும் தம்மதாகச் செய்து கொள்ளும் திறமேயாகும். புலனெறி வழக்கென்பது உலகவழக்கு நாடக வழக்கு என்னும் இரண்டும் பொருந்தக் கொண்டதேயாம். இயற்கைக் காட்சிகளையும் உலக வழக்குகளையும் கண்டவாறே வேண்டிய அளவு நூலில் அமைத்துக் கொள்ளுதலோடு, நூல் செய்யப்புகும் காலத்தில் நிலவும் நூல்களின் கருத்துக்களையும் சிறு பகுதிகளையும் ஏற்றவாறு அமைத்துக் கொள்ளுதலுமுண்டு. அங்ஙனம் புகுத்திய கருத்துக்களையும் பகுதிகளையும் நீக்கியபோதும், நூல் அவையின்றியும் தன் பொருளைத் தருமாயின், அவற்றைச் சேர்த்துக் கொண்டதனால் மட்டும் வசைபடுமென்று கொள்ளற்காகாது. இவ்வாறன்றி, வஞ்சித்துப் பிறர் கருத்துக்களைத் தன் கருத்துக்களாகக் காட்டும் முறை இழிதகவுடையதேயாம். அன்றி, நூல் யாக்கப்பெறும் காலத்தில், முன்னோர் கருத்துக்களையேயன்றிச் சொற்களையும் போற்றிக்கொள்ளுதல் மரபாயின், அங்ஙனம் செய்யப்பட்ட நூல்களைக் குறை கூறுதலும் சரியன்று. பிறர் செய்த கதை முதலிய செய்திகளையும் கருத்துக்களையும் சொற்றொடர்களையும் ஆசிரியன் தன் தனித்தன்மைக் கேற்பவும் செய்யப் புகுந்த நூலுக்குப் பொருந்தவும் தழுவிக் கொள்வானேல், அப்பொருளும் பிறவும் அவனுக்கு உரிமையுடையனவேயாம். [1]இப்

1. "In point of fact, it appears that Shakespeare did owe debts in all directions and was able to use whatever he found. ......"

"Great men are distinguished by range and extent, than by originality. ...... The greatest genius is the most indebted man. ......"

"Thought is the property of him who can entertain it; and of him who can adequately place it. A certain awkwardness marks the use of borrowed thoughts; but as soon as we have learnt what to do with them, they become our own."

—R. W. Emerson, Shakespeare or the poet.

போக்கை ஆங்கிலப் பெருங் கவிகளாக விளங்கும் செகப்பிரியரும் மில்டனும் கையாண்டுள்ளனர்; ஆங்கில உலகமும் அதைக் குறையாகக் கொள்ளவில்லை. பேராசிரியரின் திறமையை அன்னவர் சொந்தக் கருத்துக்களையும் தனித்துச் சிதறுண்டு கிடக்கும் கற்பனைகளையும் நூல் செய்யும் முறையில் கையாளும் தம் சொந்தப் போக்குகளையுமே வைத்து மதித்தலாகாது. [1]அவருடைய பரந்த நோக்கம், ஆக்கத் திறம், அகன்ற செயல்முறை, நூலின் விரிவு, அதன் முழுவடிவைக் கோலி அதற்கேற்றபடி பகுதிகளைப் பொருந்தச் சமைக்குந்திறம், ஆகியவற்றையே பெரிதும் பொருட்படுத்தி மதித்தல் வேண்டும். இப் போக்கிலே, பிறர் கருத்துக்களையும் தாம் ஏற்றுத் தம் உணர்வின்பாற்படுத்தித் தம்மதாக்கிக் கொள்ளலுமுண்டு. தனிப்பட்ட பகுதிகளில் காணப்படும் கற்பனைத் திறம் பொருட்சுவை சொற்' சுவைகளின் சிறப்பால் மட்டுமன்றி, உள்ளுறைக்குத் தகுந்த வண்ணம் முழுமையும் முடிவும் நிறைவும் அளிக்கும் இராமாவதாரத்தின் முழுவடிவை ,வரம்பறுத்துக்கொண்டு, அகப்பொருட் சுவையைப்பெய்து கதையை வளப்படுத்திச் சிற்சில நிகழ்ச்சிகளைத் திருத்தியமைத்துத் தூய்மைப்படுத்தியுள்ள கம்பருடைய சீர்த்த திறமையை முன்னதாக எண்ணி மதித்தல் வேண்டும்.

ஒரு பெரிய மாளிகையை அமைக்கப் புகும் சிற்பியொருவன், பலரால் செய்யப்பட்ட செங்கற்களையும் வாயில்

"Special attention will have to be paid to the use to which these borrowings are put by "the greatest of plagiarist" (Milton) and the skill with which he adopts them and so makes them his own."

—W. H. Hudson, An introduction to the study of literature.

1. "What distinguishes the artist from the mere amateur says Goethe, is Architectonice in the highest sense; that power of execution which creates forms and constitutes; not the profoundness of single thoughts, not the richness of imagery, not the abundance of illustration."

—Mathew Arnold, The choice of subjects in Poetry.



நிலைகளையும் கதவுகளையும் பலகணிகளையும் பிறவற்றையுங் கொண்டு அமைப்பானெனில், அம் மாளிகையைச் சமைத்த திறம் அத் தச்சனுடையதாமோ? அன்றி, செங்கல் தொகுதிகளையும் பிறவற்றையுமளித்த பிறருடையதாமோ? ஆனால், செய்ய வெடுத்துக்கொண்ட நூலில் அமைத்துக் கொள்ளப்பெறும் பிற நூற் கருத்துக்களும் பகுதிகளும் மாளிகையை அமைத்தற்காகும் செங்கல் தொகுதி ஆகியவற்றை யொவ்வாவென்றும், நல்ல வேலைப்பாடமைந்த கற்கந்து விட்டம் முதலிய பகுதிகளை யொக்குமென்றும் சொல்லுதலும் கூடும். அற்றேயாயினும், ஒரு பெரிய மாளிகையின் இத்தகைய பகுதிகள் பல இருப்பின், மாளிகையின் முழு அமைப்பின் சிறப்புக்கு ஆதாரமாயுள்ளவை இப் பகுதிகளேயோ? இனி, அவற்றை ஏற்ற இடத்திலும் அமைக்கும் முறையிலும் வைத்து அமைக்காவிடின் அப் பகுதிகளாகப் பொருந்துமாறென்னை? எனவே, மாளிகையின் அழகும் செயல் திறத்தின் செப்பமும் அதனைச் சமைக்கும் சிற்பியின் திறமையைச் சார்ந்தனவாமென்பது பொருந்திய கூற்றேயாமன்றோ? அவ்வாறன்றி, அரிய உருவங்களமைந்த கற்கந்து ஆகியவற்றின் அருமையையும் அவற்றை எவ்வகையில் கட்டடத்தில் வைத்து அமைத்தல் பொருந்துமென்பதையும் அறியாதவறியோன், ஒரு குடிலை அமைக்கப் புகுவான் அவற்றை அக் குடிலில் பொருந்தாதவகையில் வைத்துக் கட்டிடுவானேல், அவன் திறக் குறைவும் அப்பகுதிகள் அக்குடிலின் பகுதிகளாகப் பொருந்தி நில்லாமையும் தெற்றென விளங்கும். பிறர் கருத்துக்களையும் நூற்பகுதிகளையும் செய்ய வெடுத்துக் கொண்ட நூலில் அமைக்கப்புகும் பெருந்திறல் வாய்ந்த ஆசிரியர் ஆற்றலும், திறமையற்ற வறுமொழியாளர் நொய்ய செயன்மையும் இப் பெற்றியனவாம்: அம் மாளிகையின் அமைப்பில் பிறரால் ஆக்கப்பட்ட பகுதிகள் வேற்றுமை யின்றிப் பொருந்தி நிற்கும்; அக் குடிலிலோ அவ்வகைப் பகுதிகள் பொருந்தாது நிற்கும்.

இஃதன்றியும், ஒருவர் வெளியிட்டுள்ள கருத்தை, அவ் வழியிற் கண்டறியாது, பிறர், தாமே யறிதலுமுண்டு.

பல கருத்துக்கள், இங்ஙனம் பல நூல்களில் நிலவுதலும் இயல்பேயாகும் :—

[1]"கரியகுழன் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி"

என்று, காதலியின் அடிச் சுவடுகளின் செவ்வி காதலன் உள்ளத்துறுதலைக் கூறும் அருணகிரிநாதர் பாட்டை யறியாத கவி இரவீந்திரர்,—

[2]"I know well the rhythm of thy foot steps; they are beating in my heart."

என்று கூறியிருத்தலையும் இவை போல்வன பிறவற்றையும் நோக்கி இவ் வுண்மையை யறிதல் கூடும். எவ்வாற்றானும், ஆசிரியர் தனித் தன்மை, அவர் செய்யும் நூல் முதலிய வற்றில் மணக்கு மென்பது இலக்கிய நூல்களிலும் பிற அருங்கலைச் செல்வங்களிலும் காணப்பெறும் உண்மை களில் ஒன்றாகும். ஆனால், இதை உணர்ந்து கடைப் பிடித்தல் மேல்நாட்டினர்க்கே சிறப்புடைத்து. கீழ்நாட் டினரோ, தம்மா லியன்றவரையும் தமக்கெனச் சிறப்பா யுள்ள இயல்புகளை மறைக்கவே முயல்வர். எங்கும் நிறைந்த பரம்பொருள், எவரையும் எவற்றையும் கடவும் முதல் காரணமெனத் தெளிந்த இன்னோர், தம் சிறப்பியல்பு களை மறைக்க முயல்தல் வியப்பன்று. கீழ்நாடுகளில், இப் போக்கு சிறப்பாகச் சிறப்ப அருங்கலையிற் காணப்படும். தென்னிந்தியத் திருக்கோயில்களிலுள்ள சிறந்த பல சிலை களில் விளங்கும் ஒவ்வொருவகைச் சிற்பத் திறனும் ஒரே பெற்றித்தாகவே காணப்படும்; சிற்பிகளின் தனிப் பண்புச் சிறப்புகளை அவற்றில் காணுதல் அருமை. தென்னாட்டு நடனக்கலையுங்கூட இத்தன்மையதேயாம். அதனுள்ளும் பல வகைகள் இருப்பினும், அவற்றிடை ஒவ்வொரு ஆசிரியன் தன்மை தனிப்பட மலர்வதில்லை யென்று கூறுப; வகுப்புப் பண்புகளே விளங்குவனவாம். இலக்கி

1. திருப்புகழ், திருப்பழனிமலை.
2. R. Tagore, The Gardener, 12.



யங்களிலோ, இவ்வாறன்றித் தனித்தன்மையை மறைக்கப் பெறும் செயலை இகந்தும் ஆசிரியரின் தனிப் பண்புகள், அவர் அறியாதவாறு அவர் செய்யும் நூல்களில் இயல் பாகவே மலரும். இறையனார் அகப்பொருளுரையில், ஆசிரியர் அறிவின் நுணுக்கமும் அகற்சியும் கல்வி யறிவுமே யன்றி, அன்னவருடைய இயற்கைக் கவி யாற் றலும், அவர் கோட்பாட்டையும் இகந்து வெளிப்பட்டு நிற்கின்றது.

**தனித்தன்மை மலர்தலில் இயற்கைப் போக்கு**

தனித்தன்மையும் இயற்கையை யொட்டியே மலரு மாகலின், இலக்கிய நூல்களில் இயற்கைச் செவ்வி அமைந்து கிடக்கும். பொருளைத் தக விள்ளற் கமையும் இப் போக்கு நடையில் மலரும். நுவலப்புகும் காட்சியின் பரிசிற்கேற்பவும், அக் காட்சியைக் கண்டவாற்றான் எழும் உணர்ச்சிக் கேற்பவும் மொழியுருவமும் ஓசையும் விசையும் அமைவனவாம். "கௌவுதல்" என்னும் மொழியுருவில், விழைந்து பற்றுதல் என்னும் பொருள் தொனிப்பது நன்றாகப் புலனாகின்றது. "அவாவுதல்" என்பதன் ஓசை யில், தன் னிலையினின்றும் இகந்து சென்று பிறவற்றை விரும்பி நாடும் போக்கு அமைந்துள்ளது. இன்ன பிற சொற்களும் உள. தனிச் சொற்களிலே யன்றிச் சொற் றொடர்களிலும் இத் தன்மை அமையும்.

[1]"நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ் சிவப்ப,"

என்னும் அடிகளில், அன்னப்புள்ளின் வெண்ணிறமும் அதன் காலின் செந்நிறமும் பரந்துபட்டுப் படர்ந்து முறையே சோலை நிறத்தையும் நீரின் நிறத்தையும் தழுவிப் பொலியுந் தன்மை தொனிக்கின்றது.

[2]"சிலம்புகள் சிலம்பிடை செறித்த கழலோடு
நிலம்புக மிதித்தன ணெளித்த குழிவேலைச்"

1. நளவெண்பா, சுயம்வர. 23.
2. இராமாவதாரம், பால. தாடகை வதை: 47.

சலம்புக வனற்றருக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்றொடர வந்தாள்."

என்னும் பாட்டின் ஓசையில் செருக்கிய மனப்பான்மையை யுடைய தாடகை வன்மைபட அடிபெயர்த்து வைத்தல் நன்றாகப் புலனாகின்றது. இவ்வாறே யன்றி, ஒலிக்குறிப்பு முதலிய சொற்களைப் பெய்து ஓசை முதலியவற்றை உணர்த்துதலும் மரபு :—

[1]"......... ......... ......... வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்."

என்னும் பகுதி நிகழ்ந்த ஒலிகளைத் தரும் சொற்களைக் கொண்டு அவ்வொலிகளை உணர்த்துகின்றது. கண்ட போது வெறுப்பும் அச்சமும் சினமும் பிற எழுச்சி பொருந்திய உணர்ச்சிகளும் தோன்றுது, அழகுபட வெழும் வியப்பும் சிறு மகிழ்ச்சியும் இவற்றால் இன்பமும் விளைதற்கு வாய்ப்பாயுள்ள நாடு நகரக் காட்சிகள், தட்பந்தாங்கி மதர்த்த தென்றலை யொத்து, அணிகள் செறிய மெல்லென அசைந்து செல்லும் நடையில் வருணிக்கப்பெறும். நிகழ்ச்சிகளைச் செப்புமாற்றான் பெயரும் நடை, நிகழ்ச்சிப்போக்கின் மெது விரைவுகளை யொத்துச் செல்லும். மாட்டாமைக்கு இரங்கிப் புலம்பும் செய்தியைத் தெரிக்கும்,—

[2]"மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டேன்
அலம்பு வார்கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு."

என்னும் செய்யுளின் நடை மாட்டாமையை யுணர்த்தி மெதுவாய்ப் பெயர்ந்து செல்லுகின்றது.

1. நெடுநல் வாடை: 184—187.
2. நளவெண்பா, சுயம்வர. 33.



[1]"இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மானம் அழிந்ததுநாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து."

என்னும் வெண்பாவில் இருங்காதலால் எழுந்த வெங்காமத் தீ பரவும் தீவிரத்தை யொத்து, நடையும் விரைந்து செல்லுகின்றது. அன்றி,—

[2]"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது."

என்னும் பாட்டில் அந்திமாலையைப் போன்றே, நடையும் மெல்லப் பெயர்தல் அமைந்து கிடக்க,

[3]"மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா."

என்னும் தூக்கில், தேர் செல்லும் கடுவிசையை யொத்தே, நடையும் விரைந்து ஓடுகின்றது.

நடையின் செலவானே யன்றிப் பாட்டின் தொடக்கத்திலேயே "மோடு" சுட்டிப் பின், "ஏற மாட்டாமை" உரைத்திருத்தலும், "இற்றது," "அற்றது" என்னும் சொற்களொடு தொடங்கும் அடிகளையுடைய செய்யுள் செயலறு தன்மையை உணர்த்தியிருத்தலும் உய்த்து நோக்கத் தக்கனவாம். இங்ஙனமே பிற இயல்புகளும் சுவைகளும் உணர்வுகளும் ஏற்றவண்ணமே நடையில் மலரும்.

1. நளவெண்பா, சுயம்வர. 38.
2. " " 99.
3. " கலிநீங்கு. 45.

### பொருளைத் தகவிள்ளும் நடையின் இயல்பு

நடை, உரையேயாயினும் யாப்பேயாயினும், கருத்தையும் அதைப் பொருந்திய உணர்ச்சியையும் தகவிள்ளும் தெளிவுடையதாயிருத்தல் வேண்டும்; [1]தெளிவின்றி மயங்க வைப்பதாய் இருத்தலாகாது. கூடியவரை தெளிவுடையதாய் இருப்பினும் பொருள்விளங்காது இருத்தலும் கூடும். அது நடையின் குறைபாடன்று. வழக்கிலில்லாத கருத்துக்களும், அன்றி வழக்கிலுள்ளபோதும், ஆசிரியர் சொந்தப் போக்கு அழுந்தியதாயிருப்பினும், பலரால் அறியக்கூடாததாய் இருத்தலுங் கூடும். கருத்துக்கள் தனித்தனியாய்ப் பெயர்ந்து செல்லும்போது, நடையும் தெளிவாயும் எளிதாயும் ஆற்றொழுக்குப் போன்றதாய் அமையும். ஒரு கருத்தில் பல கருத்துக்கள் கிளைத்து, முதலதைத் தழுவி, ஒரு மல்லிகைப் புதலைப்போன்று எழும்போது, நடையின் தன்மையும் அத் தன்மையதேயாம். வருணனைப் பகுதிகளின் நடையும், சிறப்பாக வளப்பம் மிக்க கருத்துக்களை யுடைய ஆசிரியர் நடையும் இங்ஙனம் பின்னிச் செறிந்த தன்மை யுடையனவாம். எளிதாக்கும் நோக்கத்தோடு அவற்றைத் துணித்தால், துணிக்கப் பெற்றால் உயிரொழியும் மல்லிகைப் புதலையொக்கும். உள்ளத்தெழும் உணர்வு தோய்ந்த கருத்துக்களை மெய்ப்பாடுகளின்வழி மலர்வித்தல் பலர்க்கும் இயல்பாக அமைந்த செயலாயினும், சிலருக்கு அங்ஙனம் விள்ளும் ஆற்றல் இயல்பாகவே சிறந்திருத்தலும், அன்னவரிடையும் பயிற்சி பெற்றவர், தம் கருத்துக்களைத் தக்க முறையிலும் அழகு மணக்கவும் விள்ளுதலில் மேம்பட்டவராயிருத்தலும் போன்றே, கருத்துக்களை நுவல்வதில் இயற்கையாற்றல் அமையப் பெற்றவராயும், மொழியாட்சி நன்றாய் வாய்க்கப் பெற்றவராயுமுள்ளோரே ஏற்றவாறு

1. "*பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்ப்போய்ப்
புன்கவி யெனத் தெளிவின்றி."
—இராமாவதாரம், பாலகாண். நகர. 14.

* பொன்விலை மகளிர் - வேசியர்.



திறம்பட உரைக்கவும் பாடவும் வல்லுநராவர். நடையின் உறைப்பும் நுணுக்கமும் அளவுபடவே அமைதல் வேண்டும். மெய்ப்பாட்டில், அளவுக்கு மிஞ்சி அழுந்த நுவல்தல் காண்பார்க்கு எங்ஙனம் வெறுப்பைத் தருமோ, அங்ஙனமே கருத்தின் உறைப்புக்கு மிகுந்த நுணுக்கமும் அழுத்தமும் அமைந்த மொழி நடை, கற்போர்க்கு இன்பத்தை நல்கிடாது. கருத்தோடு அமையாத விஞ்சிய நுணுக்கமும் சாயலும் வீண் பிலுக்காகவே முடியும்.

### அணியற்ற செந்நடை

மகிழ்ச்சி மேவும்போது அணிகளை விரும்பிக் கொள்ளுதலும் நெகிழ்ச்சி மேவும்போது அணிகளை வெறுத்து நீக்குதலும் மாதர் இயல்பு. இப் போக்கை வாழ்க்கையில் நேரும் பல சடங்குகளிலும் மேற்கொள்ளுதலுண்டு. இவ்வாறே, மொழிநடை, அணிகளோடு திகழ்தலும் அணிகளின்றிப் பெயர்தலு முண்டு. இயற்கையாக அமைந்த அழகை மேம்படுத்தும் பெற்றியதே அணி. மாதர் பூணும் அணிகளும் இத்தகையனவேயாம். அன்னவரிற் சிலர் பொருந்தாத அணிகளையும், அன்றி, அளவுக்கு மிகுந்த கலன்களையும் புனைந்து கொள்வர். இஃது அழகை மிகுவிக்கும் செயலன்று: அதனை யொழிக்கும் செயலேயாகும். இயற்கையாகவே நிரம்பிய அழகுடையவர், சகுந்தலையை யொத்து, அணிகளில்லாமலும் கண்டாரைக் கவரும் திருவுடையோரேயாவர். இப் போக்கிலே, இலக்கிய நடையும் அணிகளில்லாதமைந்தும் விரும்பத் தக்க இயற்கைச் செவ்வியை யளிக்கும். பாண்டியன் பாசறைக்குச் சென்றானைத் தனித்திருந்து அணிகளைத் துறந்து துயருழக்கும் அவன் கோப்பெருந்தேவியின் உருவத்தின் தன்மையை,—

[1]"நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து."

1. நெடுநல்வாடை: 139 - 142.

என்று பாடியுள்ள பகுதியில், அணிகளை யொழித்தும் செய்யுளுக்குரிய பல சிறப்பியல்புகளை யொழித்தும் எளிய நடையில், அணிகள் நீங்கிய உடம்பில் திரு நீங்காது நிற்கும் பரிசைத் திறம்படக் காட்டியுள்ளார் நக்கீரர். கலன்கள் நீங்கிய தன்மையை "வறிது" என்ற சொல்லால் வெளிப்படையாக மொழிந்திருத்தலோடு, திரு உறைவும் உண்மை "வலம்புரி வளை" என்னும் சொற்களால் குறிப்பாக நயம்பட உணர்த்தப் பெற்றிருக்கின்றது. இனி, கணவனோடு மதுரைக்குச் சென்ற கண்ணகி, அவனை இழந்த பின், தன் பொன் வளையல்களை உடைத்து நீக்கி, வறியளாய், மதுரையினின்றும் நீங்கிய செய்தியை,—

> [1]"கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்
> கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
> மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென."

என்று இளங்கோவடிகள் புனைந்துரையின்றி எளிய நடையில் அழகுபடக் கூறியுள்ளார். முன்னே எடுத்துக் காட்டிய நெடுநல்வாடைப் பகுதியில் உள்ளவாறே, இப் பகுதியிலும் "வறிய" என்னும் சொல் வழங்கப் பெற்றிருத்தலும் ஆசிரியர் இருவரும், இடத்திற்குத் தக்கபடி, செய்யுளுக்குரிய சிறப்புகளை நீக்கியே, கூற வந்த பொருள்களின் தன்மையைத் தக மொழிந்துள்ளதும் ஒப்பிட்டு நோக்கி நயந்து கொள்ளத் தக்கனவாம். சினம் அவலம் முதலியன வெளிப்படும் தறுவாயில், உணர்ச்சியின் உறைப்பு கதித்துத் தோன்றுமிடங்களில், அணிகளை ஒழித்தலோடு கருத்துக்களை மிகக் குறைந்த சொற்களால் விள்ளுதல் முறையாகும். காதல் உள்ளே செறிந்து நிற்கும்போது கருத்துக்களை மிகக் குறைந்த சொற்களாலேயே வெளியிடுகிறோம்; அவற்றை விள்ளுதற்கும் நாவெழுதல் அருமையே யாகின்றது. சினம் மிகுந்து நிற்கும் வேளையிலும் அனுபவம் இப் பெற்றியதேயாம். கையறு நிலையில் பேசுதலே அருமை. அந் நிலையையும் அதை யொட்டிய நிகழ்ச்சிகளின் செய்திகளையும் நுவலும்போது

1. சிலப். கட்டுரை. 181 - 188.



ஆசிரியன்மாரும் அப் போக்கைப் பின்பற்றுதல் இயற்கையேயாம். கொலைக்களத்தினின்றும் புறப்பட்ட கண்ணகி, பாண்டியன் கோயிலை யணுகிய செய்தியை,—

> [1]"என்றா ளெழுந்தா ளிடருற்ற தீக்கனா
> நின்றா ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்சோர
> நின்றா ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்துடையாச்
> சென்றா ளரசன் செழுங்கோயில் வாயில்முன்."

என்று சுருங்கிய சொற்களால் இளங்கோவடிகள் பாடியிருத்தலைக் கருதுந்தோறும், கண்ணகியின் உள்ளத்து, அடக்குதற்கமையாத துயரம் செறிந்திருப்ப, அவள் அடைய நினைந்த அரசர் கோயிலைத் தளர்ந்த நடையோடு பிற ஒன்றையும் நோக்காது சென்றடைந்த தன்மை புலனாகின்றது. இரண்டாமடியின் பெரும்பகுதியும் மூன்றாமடியில் மடங்கி வந்து அவள் உள்ளத்தே துயரம் மீண்டும் மீண்டும் விம்மி யெழுதலைக் காட்டா நின்றது. படாத துயர் பட்டும் கண்ணகி பேசாதிருக்கவில்லையே, பேசியதாகவேயன்றோ அவள் உரைகளை நூலில் காண்கின்றோமென்றால், துயரத்தின் உறைப்பு, சற்றுக் குறைந்த போதோ, இல்லையேல், மன வன்மையினால் துயரத்தைச் சற்று அடக்கி வைத்துக்கொண்ட நிலையிலோதான் பேசியிருத்தல் வேண்டும். இனி, தளர்ந்துபட்டுச் செல்லும் அவ்வடிகளின் சீர்களுக்கிடையிலுள்ள விட்டிசைக்கும் பெற்றி துயரத் தாழ்ந்த கண்ணகியின் நடை, இடையிட்டுத் தளர்ந்துபட்டதைத் தெரிக்கின்றது.

### அணிகொண்ட வள நடை

பொருந்து மிடங்களில், நடையில், தக்க சொற்சுவையும் பொருட்சுவையும் அமைதல் வேண்டும். உவமை வகைகளோடு நகை மறை எதிர்மறைப் பொருள்கள் கேளிக்கை யாதியனவும் நூலில் பொருட்சுவையை வளப்படுத்துவனவாம். இவை அலைப்போக்கி லமைந்து, நடையின் கடுமையைத் தணித்து, அழகை மிகுவித்துப் பருவப்

1. சிலப். ஊர்சூழ். 72 - 75.

போக்கில் நூலின் கவர்ச்சியை மிகுவிக்கும். இவை பலவும் ஒவ்வொரு நூலிலும் காணப்பெறு; நாடகத்திலும் நாடகக் காப்பியத்திலும் பெரு வழக்குடையனவாம். இனி, இவை பலவற்றையும் ஒவ்வொரு இலக்கிய ஆசிரியரும் கையாளும் திறமையுடையவராகார். தம்முடைய இயற்கை மனப் பான்மைக் கேற்றவற்றையே ஆசிரியர் கையாளுதல் முறையாகும். மோனை யெதுகை இயைபு ஆதியவை சொற்சுவையை வளப்படுத்துவனவாம். பொருட்சுவை இல்லாதவழி சொல்லணிகள்மட்டுமே சுவையை நிறைவிக்கா. இப்பெற்றியன பாவாகா: வறிய யாப்புகளேயாம்.

**பொருளின் பெற்றி, நடையின் ஓசை விசைகளில் மலர்தல்**

நடையின் ஓசை, பொருளின் சுவைக்கேற்றவாறு அமையும்; ஓசையைக் கொண்டே பொருட்சுவையை உணர்தல் கூடும். செருக்கும் மென்மையும் அமையக் கொண்டவர் தன்மைகள் அன்னவர் நடைப்போக்கில் அமைந்திருத்தலைக் காண்கின்றோமன்றோ! அவ்வாறே, பலவேறு தன்மைகளை யுடையவர் நடைகளிடை வேறுபாடுடைமையும் உண்மையேயாம். இஃதிவ்வாறாகவே, இலக்கிய நடையும் பொருளுக் கேற்றவாறே யமைதல் இயற்கையேயாமன்றோ! தாடகை நடந்துசெல்லும் போக்கைக் கூறும்,—

[1]“ சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடு
நிலம்புக மிதித்தன ளெளித்தகுழி வேலைச்
சலம்புக வனற்றறு கணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்றொடர வந்தாள்.”

என்னும் செய்யுளை சீதாபிராட்டியார் அடிபெயர்த்த செவ்வியை யுணர்த்தும்,—

[2]“ வல்லியை யுயிர்த்தநில மங்கையிவள் பாத
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பினளெ னத்த
னல்லணி மணிச்சுடர் தவழ்ந்திடந டந்தாள்.”

1. இராமாவதாரம், பால. தாடகை. 47.
2. இராமாவதாரம், பால. கோலங்காண். 24.



என்னும் விருத்தத்தோடு ஒப்புநோக்கின், வல்லரக்கியாகிய தாடகையின் இயற்கைத் தன்மையும் நல்லியல் மங்கையர் வணங்கும் மெல்லியல் நங்கையாய பிராட்டியின் தன்மையும் அன்னவர் நடையைப்பற்றிய பாக்களின் நடைவகையில் மலர்ந்து மணத்தல் நன்றாகப் புலனாகின்றது. எனவே, பண்பொடு உள்ளத்தே மிகும் உணர்வின் வகைக்கேற்ப நடையமையும் உண்மை, மக்கள் நடைக்கும் இலக்கிய நடைக்கும் ஒக்கப் பொருந்தும். இவ் விருசெய்யுள்களும் ஒருவகை யாப்பாலேயே யாக்கப் பெற்றுள்ளனவேனும், இவற்றில் குறிக்கப்பெற்றுள்ள பெண்களின் குணநலத்தையொட்டி, அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்புமின்றி நடக்கும் தாடகையின் தன்மையையொத்ததாகும் முதற்பாட்டின் நடை; அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்புமுடைய பிராட்டியார் செவ்வியையொத்ததாகும் இரண்டாம்பாட்டின் நடை. முதல் விருத்தத்தின் முதற்சீரின் முதலசை நிரையா யமைந்து, நீண்டொலிக்கின்றது; இரண்டாம் விருத்தத்தின் முதலசை நேரசையா யமைந்து, அதன் ஓசையையும் வரம்பறுத்தற்கு அடுத்தபடியாகப் புள்ளி ஒவ்வொரு அடியிலும் நிற்கின்றது. எனவே, அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்பும் பிராட்டியாரின் அடிபெயர்க்கும் செயலை அடக்கி அமைத்தற்கேற்பப் பாட்டின் ஓசை யமைந்துள்ளதும், முதல் விருத்தத்தில் அஃதின்மையும் வெள்ளையாகத் தெரிகின்றது.

**ஓசை**

இன்னவாறே, பிற பண்புகளும் சுவைகளும் நடையில் மலரும். இலக்கியத்தில், அதனுள்ளும் செய்யுளில், ஓசை ஒரு சிறந்த பண்பாகும். பழக்கத்தினால், பண்பு சுவைகளுக்கேற்ற ஓசைகளைச் செம்மையாக அமைக்கும் ஆற்றல் மிகும். இப்படிப் பழகிச் சிறந்த ஆற்றலைக்கொண்டு, கருத்தமையா விடத்தும் நடைப் போக்கினால் கருத்தமைதியுள்ளதுபோல் காட்டி மயக்குதலும் கூடும். இப் பெற்றித்தான செயல், சுண்ணத்தைப் பூசி உடம்பின் நிற நாற்றங்களை மாற்றியும், மெய்ப்பாடுகளை மலர்த்தும் திறத்தால்

அகத்தே இல்லாத குறிப்புகளைத் தந்தும் ஏமாற்றும் சிலர் ஒழுக்கத்தை யொத்ததேயாகும். இது போலிச் செயலென்று கூறவும் வேண்டா.

எனவே, பொருளுக் கேற்றதேயாகும் அதை விள்ளும் மொழியின் ஓசை. ஒருவகைச் சொற்களைக் கொண்டே, தறுவாய்க்கேற்பவும் சொல்வான் கருத்துக்கேற்பவும் ஒலிக்கும் முறைபற்றியும் உவகை வெறுப்பு உடன்பாடு எதிர்மறை யாதிய பொருள் விகற்பங்களை எப்படி வழக்கில் உணர்த்துகின்றோமோ, அவ்வாறே, இலக்கிய நூல்களில், பொருள்களை விள்ளும் முறைகள் பலவாம். சிறந்த ஆசிரியன்மார் கையாளும் முறைகளையொட்டி விதிகளும் பல உள. எனினும், குறித்த பொருளைக் குறிப்பிட்ட இடத்தில் திறம்பட மொழியும் முறை ஆசிரியர்க்கு இயற்கையாகவே அமைந்திருக்கும். இலக்கண விதிகளை முற்றும் பின்பற்றிய ஒரு நூல் சுவை அற்றதாய் இருத்தலும் கூடும். அவ்வண்ணமே இலக்கண விதிகளை ஒரு சிறை கடைப்பிடியாத ஒருநூல் சுவை மலிந்து, அழகொடு விளங்குதலும் கூடும். எனவே, முதன்மையாக இயற்கைச் சுவையறிவை யொட்டியதேயாகும் நூலின் தன்மை. ஆகவும், நூலின் ஓசை, ஆசிரியன் இயற்கைச் சுவை யறிவையும் பழக்கத்தையும் பற்றியதாகும். அன்றியும் ஆக்குவோன் மன அமைதிக் கேற்பவும் அஃதமையும். இதுபற்றியன்றே, ஆசிரியர் பலரால் ஆக்கப்பெறும் நூல்கள் பலவகை ஓசை அமையப்பெற்று நிலவுவதும்! இலக்கியங்களோடு பழகுவாரை முன்னின்று கவர்வன அவற்றின் ஒசை வடிவங்களேயாம். இயற்கைச் சுவை யறிவால் ஏற்ற ஓசைகளை யறியும் புலவர்களும், அவ் வறிவை முயற்சியின் வழியமைந்த பழக்கத்தினாலேயே செப்பஞ் செய்துகொள்ள வேண்டியவராவர். இதனை யொட்டி யெழுந்ததன்றே "செந்தமிழும் நாப்பழக்கம்" என்னும் கூற்றும்! என்னை? தமிழின் செந்தண்மை அஃதுணர்த்தும் கருத்தைப்பற்றி யமைவதாமெனினும், நாம் பழக்கத்தினால் பொருந்தியதென்று தேர்ந்துகொண்ட



மொழியின் செப்பமான ஓசை யுருவத்தைக் கொண்டும் அதன் உள்ளுறையை உணர்தல் கூடுமாதலானும், கேட்பவர் கேட்டபோதே அவர் கருத்தைப் பிணிப்பது ஓசையாதலானும், தமிழின் திறத்தை ஓசையைக் கொண்டே அறிதல் கூடுமென்பதும் உண்மையேயாகும்.

பழக்கத்தினால் செப்பஞ்செய்துகொண்ட இயற்கை யாற்றலினால் கருத்துக்கமைந்த ஓசைபட யாத்தல் இசையு மெனினும், செய்யுளாயின் உணர்ச்சி தோய்ந்த கருத்துக்கு ஏற்ற யாப்பைத் தெரிந்து அவ் வடிவில் விள்ளுதலினால் ஓசை யமைதிக்கு யாப்பும் உதவும் :—

[1]"இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழுநாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீ இய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே."

என்னும் அகவற்பா கையறு நிலையில் பாடப்பட்டது. பாடியவர் உள்ளத்தின் நிலை நடையில் ஒலிக்கின்றதை உணர்கின்றோம். எனினும்,—

[2]"அருந்தே ரானைச் சம்பர னைப்பண் டமர்வென்று
இருந்தார் வானோ ருன்னரு ளாலே யினிதன்னார்
விருந்தா கின்றா யென்றனள் வேழத் தரசொன்றைப்
பிரிந்தா ரன்பிற் றாழ்பிடி யென்னப் பிரிவுற்றாள்."

என்னும் விருத்தத்தில், கையறு நிலைக்கேற்ற சந்தம் அமைந்து, மீண்டும் மீண்டும் எழுந்து இழிந்து அளவில் பெயரும் ஓசையினால் கையறு நிலையில் எழுந்து விம்மி இழிந்து நையும் உணர்ச்சி நன்றாகப் புலனாகின்றது. பிற உணர்ச்சிகள் பொருந்திய இலக்கியப் பகுதிகளையும் இவ் வண்ணமே ஒப்பிட்டு நோக்கின் தக்க ஓசையைத் தருதலில் யாப்பின் சிறப்பியல்பு தென்படும்: எனவே, ஓசையினால்

1. புறநானூறு: உ௩௨.
2. இராமாவ. அயோத்தியா. தைல மாட்டு. 68.

பொருளின் கருத்து உணர்ச்சிகளைத் தெரிக்கும் வாய்ப்பு உரையினும் பாவுக்குச் சிறந்திருத்தலும், பாவினுள்ளும் பொருந்திய யாப்பினமும் உளவாமென்பதும் போதரும்.

### நூலின் வடிவம்

முல்லை யரும்பு மலர்ந்து முல்லை மலரே யாகும்; மல்லிகை யரும்பு மலர்ந்து மல்லிகைமலரே யாகும்; ஒன்று மற்றொன்றாக மலர்வதில்லை. இஃதேயன்றி, அரும்பின் செழுமைக்கும் அளவுக்கும் தகுந்த அளவும் வளப்பமு முடையதே யாகும் அதன் மலர். இப் பெற்றியே, கருத்தானது, மொழி முதலிய அருங்கலை யுருவங்களை யெய்தும் போது, அதன் பண்புக்கும் அளவுக்கும் தக்க உருவத்தையே இயற்கையில் பெறுதல் வேண்டும். [1]ஒவ்வொரு உயிரின் உருவமும் அவ் வுயிரின் பண்புகளைத் தகவிள்ளும் தன்மையதாம். இலக்கியக் கரு, மொழியுரு வெய்தநேரின், அதற்கேற்றது பா வுருவேயோ, அன்றி உரை யுருவேயோ, என்பதைத் தேர்ந்தபின்னரே ஏற்ற வடிவில் அமைத்தல் முறையாகும். பா வுருவே பொருந்துமெனின், கருத்திற்கு ஏற்ற யாப்பிலேயே அதற்கேற்ற வுருவை யளித்தல் வேண்டும். பொருள் வகைக்கேற்ற யாப்புவகை யெவை என்பது வழக்கிலே யுண்டு. கருத்தின் திறம் தக மலர்தற்கு வாய்ப்பளிக்கும் யாப்பே அக் கருத்து மலர்வதற்கு ஏற்றதாம்.

### நூலின் அளவு

இனி, மொழியுருவம், உரையேயாயினும் யாப்பே யாயினும், உள்ளுறைக்குத் தகுந்த அளவினதாய் இருத்தல் வேண்டும். இலக்கியங்கள் பலவற்றில், சிற்சில இடங்களில், அளவுகடந்து வீங்கிய உறுப்புக்கள் இருத்தலைப் பல மொழியிலும் ஆராய்ச்சியாளர் கண்டுள்ளனர். வீக்கம் விகாரத்தைத் தருமெனின், அஃதமைந்த வடிவத்தில் அழகொழியுமென்று சொல்லுதல் மிகையே

1. "For body and soul, word and idea, go strangely together here as everywhere."

—Carlyle, The Hero as Poet.



யாகும். எனவே, அழகொழிந்த உறுப்புக்கள் இலக்கியங்களுக்கு அமையாவெனக் கூறுதலும் வேண்டா. அநுமன், அசோகவனத்தை யழித்த செய்தியை வால்மீகியார் ஏழு சுலோகங்களால் பாடியதை, கம்பர் முப்பத்தொரு விருத்தங்களில் விரித்துரைக்கிறார். இதைக் குறித்து ஓர் உரையாசிரியர், "அனுமன் அசோகவனிகையை முறித்து நாசமாக்கிய செய்தியை ஸ்ரீ வால்மீகி பகவான் ஏழு சுலோகங்களாற் சுருக்கமாகக் கூறியுள்ளார். அதனைக் கம்பர் தமது கற்பனா சக்தியால் விரித்துக் கூறியுள்ளாரென அறிக," என்று செப்பியுள்ளார். கம்பர் மிகுந்த கற்பனையாற்றலுடையவரென்பது உண்மையே. ஆனால், பொருளுக்கு அமைந்த அளவைக் காட்டிலும் மிக விரித்துக் கூறுதல், உடம்பைக் காட்டிலும் பன்மடங்கு அளவுள்ள சட்டை திறம்பட யாக்கப்பட்டதேயாயினும் பொருந்தாததை யொக்கும். படித்துப் பார்த்தால், கம்பர் பாடியுள்ள பொழிலிறுத்த செய்தி பொருளுக்கு மிகமிக விரிந்ததே யென்பது தெள்ளிதாம். அந்நூலின் வேறு சில பகுதிகளும் இங்ஙனம் அமைந்துள்ளன. இப் பகுதிகளைப் படிக்கும்போது மனம் களைப்படைகின்றது. தேனில் உள்ள சுவைப்பொருள் அதன் அளவுக்குத் தக்க படியே அமைந்ததாகும். தேனின் சுவைப்பண்பைப் பொருட்படுத்துவோர், அதனைப் பேரளவிற் கொள்ள வேட்கைகொண்டு, அதனில் நீரைப்பெய்து கலந்தால், அதன் சுவை நசிந்துபோதலோடு, அதனைத் தேனென்று கொள்ளுதற்கில்லாத தன்மைத்தாய் விடுகின்றது. எனவே, உள்ளுறைக்குத் தக்க படிவத்தில், நூலை அளவாக அமைத்தலே முறையாகும்.

### பேச்சும் நூலும்

இப் போக்கில், பேசும் மொழிக்கும் எழுதும் மொழிக்கும் வேறுபாடுண்டு. பேசும் மொழியின் திட்பமும் விளக்கமும், எனவே அளவுங்கூட, கேட்போர் தகுதிக்கு ஏற்றவையாகும். ஆனால், எழுதும் மொழியோ, எழுதப்படும் காலத்திலுள்ளவர்க்கேயன்றி, ஊழியூழிக்காலமும் பின்னே

வரவிருப்பவர்க்கும் உரியதாகுமானதுபற்றி, அறிவுடையோர் விரும்பும் வகையிலேயே ஆக்கப்படுதல் வேண்டும்; அறிவு போதாதவர் அறிந்தவரிடம் விளக்கம்பெற வேண்டியவரேயாவர். எனவே, இலக்கிய நூல்கள் வரம்பு கடவாத அளவினவாகவே இருத்தல்வேண்டும். இன்னும், சொற்பொழிவானது, அதனை ஆற்றும்போதும் மேலே வரும் சிறுபோதிலுமே கேட்போரால் சிந்திக்கப்பெறுமாகையான், அதன் பொருள் தரும் உணர்ச்சி மேலீட்டில் ஆழ்ந்திருக்கும் மக்கள், சொற்பொழிவின் இலக்கணம் முற்றும் ஆராய்ந்து அதன் செவ்வியைத் தேரப்புகார். ஆனால், நூலோவெனின், நீண்டகாலமும், மீண்டும் மீண்டும், அறிவுடையோரால் ஆராயப் பெறுமாகையான், அது தக்க அளவிலும் செப்ப வுருவிலும் செய்யப்பெறுதல் வேண்டும்.

எழுதும் மொழி யென்பது, அறிக்கைத் தாள்களிலும் வெளியீடுகளிலும் சிறு காலவரம்பிற்கே நிலவுதற்கெனச் சேர்க்கப்படும் பகுதிகளொழிந்தனவும், அவற்றுள்ளும் சிறப்பாக இலக்கிய நூல்களின் மொழியுமேயாகும். மாறிச் செல்லும் சமூக வாழ்க்கையின் பருவங்களில், ஒரு பருவத்தில் பெருவழக்காயுள்ள உடை அணி பழக்கவழக்கங்கள் அடுத்துவரும் பருவங்களில் சிறுகச்சிறுக வழக்காறற்றுப் போகின்றன. ஆனால், இயற்கை யுலகமும் மக்களின் நிலைத்த பண்புகளும் ஒழுக்கங்களும் என்றும் ஒரு பெற்றித்தாக நிலவும் தன்மையினவாம். இன்னவற்றையே பொருள்களாகக் கொண்டு தக்க அளவிலும் அழகுபடவும் செய்யப்பட வேண்டும் இலக்கிய நூல்கள். காலையில் ஆவலொடு எதிர்நோக்கிக்கொள்ளும் நாள்தாளின் சுவை மாலையில் தேய்ந்து மறைகின்றது. இலக்கிய நூல்களோ பல்லூழிக்காலம் பழகினும் சுவை வளம் குன்றாதனவேயாம். இதற்குக் காரணம் அவற்றிலுள்ள பொருள்வகைப் பரிசும் காட்சித் திறமும் அவற்றை மொழியும் திறமையுமேயாம்.

சொற்பொழிவுகளில், பொருட்பொருத்தமும் தொடர்பும் ஒருசிறிதே காணப்பட்ட வழியும் சொற்களையும்



தொடர்களையும் மோனையும் எதுகையும் அமைய அடுக்கியடுக்கிச் சொல்லுதலுண்டு; சொன்னவற்றையே மீண்டும் மீண்டும் மொழிதலுமுண்டு. கேட்கும் மக்களின் உணர்ச்சியைத் தாம் வேண்டும் வகையில் மிகுவிக்கும் நோக்கத்தையொட்டி இங்ஙனம் செய்வர். அரசியற் போட்டிப் பூசல்களையொட்டிய மேடைப்பேச்சுக்களில் இம்முறை பெருவழக்காயுள்ளது.

பேச்சரங்கிலுள்ள மக்கள் வாணிகராயின், வாணிகத்துறைப் பழக்கவழக்கங்களையும் செய்திகளையும் பற்றிப் பேசிக் கூடியுள்ளவர் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை யளிப்பர். இங்ஙனமே, பிறதொழில் மக்கள் கூடும் அரங்குகளில் அன்னவர் உவக்கும் செய்திகளைப் பற்றிப் பேசுவர். அன்றியும், பேச்சரங்குள்ள ஊரிலோ அதன் அருகிலோ நிகழ்ந்தவற்றைக் குறித்து, அவ்வழியில் கருத்துக்களை விளங்கவைத்தலும், குழுவினர் அறிந்த சிலவற்றைப் புகழ்ந்து பேசுதலும் சிலவற்றை இகழ்தலும் மரபு.

இத்தன்மையனவெல்லாம் குறித்தகால இட வரம்புகளுக்கு வெளியே சுவையற்றுப் போமாதலின், ஊழியூழிக்காலமும் நிலவும் இயல்புடைய இலக்கிய நூல்களில் அவ்விஞ்சிய அளவில் கையாளப்பெறா.

**எளிய நூலினம்**

இனிப் பேச்சேயன்றி, நூல் வகையில் அறிவின் உறைப்பு குறைந்த அளவில் அமையப்பெற்று நிலவும் இனமும் உண்டு. இவற்றுட் பெரும்பாலன உரைநடையில் அமைந்து, பொழுதுபோக்குக்கேற்ற முறையில் கதை தழுவியனவாகச் செய்யப்பெறுவனவாம். இவ் விலக்கிய வகை மேனாட்டு வழக்கிலிருந்தே தழுவி யமைத்துக் கொண்டதாகும். ஆசிரியர் உதவியின்றியும், பொருளை யறியவேண்டும் முயற்சியின்றியும், இலக்கியப் பயிற்சி வேண்டுவார்க்கேற்ற உருவில், தற்கால உலகப்போக்குக்கான முறையில் எழுந்ததென்னலாம் இவ்வகை இலக்கியம். இப் பிரிவின் எளிமை யொன்றையே பொருட்படுத்தி,

சேரிமொழியில், வைகலும் உலகில் நிலவும் பல நிகழ்ச்சிகளை யொட்டி யெழுதப்பெறும் போலிநூல்கள் இற்றை நாளில் பெருவெள்ளமாக வெளிவருகின்றன. உயர்ந்த போக்கிலே யமைந்த எளிமைக்கும் நாகரிகந் தோயாத வறுமைக்குமுள்ள வேறுபாடுபோன்றதேயாம் இவ்வகை இலக்கிய நூல்களுக்கும் போலிநூல்களுக்குமிடையே யுள்ள வேற்றுமை.

**உணர்ச்சி தோயப்பெறாத நூற்பகுதிகள்**

இலக்கிய நூல்களிலுள்ள வருணனைப் பகுதிகளும் செய்திகளை விள்ளும் பகுதிகளும் உணர்ச்சி தோயப்பெற்றனவாக அமைதல் வேண்டும். அவ்வாறன்றி, பொருட்பட்டிகளாயுள்ளவை இலக்கியத்திற்கேற்ற பகுதிகளாகா; அவை சுவைத்து இன்புறுதற்கமைந்த தன்மையில் அமைதல் வேண்டும். சில நூல்களில், [1]மதிலுறுப்புக்களின் வருணனைகள் பொருட்பட்டிகள் போன்று அமைக்கப் பெற்றுள்ளன. மதிற் பொறிகளின் தன்மையும், அவற்றை இயக்க நேரும்வழி விளையும் பயனும் கண்டாரையேயன்றி, அவற்றைப்பற்றிய செய்தியைக் கேட்போரையும் அச்சுறுத்தும் வகையும் ஆசிரியரால் பொருட்படுத்தப்பெற்று, அன்னவர் தனித் தன்மைக்கேற்ப

1. "...... ...... வளைவிற் பொறியும்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையுந்
தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையு
மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையு
மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவு
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில். ...... ...... ......"

—சிலப். அடைக்கல. 207 - 21



நுவலப்பெறின், அன்ன பகுதிகளும் சுவை பொருந்தப் பெற்றனவாகும். அல்லாதவழி, அவற்றைக் கொண்ட மதில், நகருக்குக் காவலா யமைந்து, மாற்றாரை யொறுக்கும் தன்மை யாதியவற்றை உணர்ச்சியொடு கூறின், அத்தகைய கூற்றும் இலக்கியத்திற்குப் பொருந்திய பகுதியாம். பிறவற்றைப்பற்றிய பகுதிகளும் இப்பெற்றியே மதிக்கப்பெறும். [1]உணர்ச்சிகள் தோயப்பெறாத பொருட்பட்டிகள் இலக்கியப் பகுதிகளாகா: நூலின் செத்த பகுதிகளேயாம். [2]குறிஞ்சிப்பாட்டில் தொண்ணூற்றொன்பது மலர்களின் பெயர்ப்பட்டி காணப்படுகிறது. இப்பட்டியில் சில மலர்களின் பெயர்கள் அடையொடு நுவலப்பெற்றிருப்பினும், இக்கூறு முற்றும் உணர்ச்சியொடு தோயாத இலக்கியச் சுவையற்ற பகுதியேயாகும். சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையின் பெரும்பகுதியும் அரங்கின் இலக்கணத்தையும் கூத்தின் இலக்கணத்தையும் கூறுவதனால், அந்நூலைக் கற்போர் பலரும் அப்பகுதியை விரும்பிப் படிப்பதில்லை. அரங்கின் தோற்றமும் மாதவியாடிய கூத்தின் காட்சியும் எவ்வண்ணமிருந்தனவென்று பல உவமைகளால் விளக்குவதோடு, உள்ளம் அவற்றை எவ்வண்ணம் விழைந்து நிற்குமென உணர்ச்சி தோய்வுறச் செய்யப்பட்டிருந்தால், அப்பகுதி உள்ளத்தை அள்ளும் பரிசினதாம் என்பதில் ஐயமில்லை.

**நூலின் உறுப்புக்கள்**

இலக்கிய நூல் ஒவ்வொன்றும் குறுகிய வடிவமுடையதேயாயினும், நெடிய வடிவமுடையதேயாயினும், உடல் கொண்ட உயிரே போன்று, ஒரு முழுமையுடையதாகும். ஒவ்வொரு நூலுக்கும் முகமும் உடம்பும் அடியும் உண்டு. உள்ளப் பரிசை முற்றும் காட்டும் முகம் போன்று, நூலின் முற்பகுதி, நூலில் அடங்கியுள்ள பொருள் முழுதையும்

1. "Bare information on facts is not literature, because it gives us merely the facts which are independent of ourselves."
—R. Tagore, What is art.

2. **பின்னிணைப்பு**: எ பார்க்க. (குறிஞ்சிப்பாட்டு, 62 - 96.)

பிண்டமாகக் கூறும்; நூலின் உடல், முகத்தில் குறித்த பொருள்களை விரித்து அளவில் அழகுபடக் கூறும்; கடைப்பகுதி அல்லது முடிவு, விரித்துரைக்கப் பெற்ற வற்றின் கருத்தின்ன தென்பதை வடித்துக் கூறும்; எனவே, நூற்பொருளைக் கருவாகக் கொண்ட முற்பகுதியைப் பெரிதும் ஒத்திருக்கும் கடைப்பகுதி.

**நூற்பகுதிகளின் வரிசை**

இம்முறையேயன்றி, பரந்த நூலின் ஒவ்வொரு பகுதியும் வரிசையாக ஒன்றன்பின் ஒன்ருக அணிபட நிற்கும். இவ்வொழுங்கு, உயிர்களின் பருவப் போக்கிலும் உலகின் பருவப் போக்கிலும் அமைந்து கிடக்கின்றது. இப்பகுதிகளுக்கு இடையே, தொடர்புபட, அவற்றைச் சேர்த்து நிற்கும் இயைபுமுண்டு. இவ்வமைப்பினுல் நூல் முற்றும் முழுமைப் பண்புடன் ஒருயிர் போன்று அமைந்து நிற்கும். இவ்வியற்கைப் பண்பையொட்டியே, ஒவ்வொரு நூலும் பல அதிகாரம் முதலிய பகுதிகளாகக் கூறிடப்பெற்று, வரிசையில் அமைக்கப்பெறும்.

**உள்ளுறையும் பகுதிகளும்**

இனி, நூலின் திரண்ட தன்மையைப் பண்படுத்தி நிற்கும் பிற இயல்புகளுமுண்டு. நூல், கதை தழுவியதாயின், கிளைக்கதைகள், முதற்கதைக்கு அடங்கி நிற்றல் வேண்டும்; கதை தழுவாததாயின், நூலின் அடிப்படையான கருத்துக்குப் பிற கருத்துக்கள் இடமறிந்து அடங்கி நிற்றல் வேண்டும். அண்டங்கள் பலவற்றிற்கும் ஈர்க்கும் ஆற்றலுண்டு. ஆனல் ஒவ்வொன்றின் ஆற்றலும் வெவ்வேறு அளவுடையதாகும். அன்றியும், இவ்வண்டங்களின் நடுநாயகமாக நிற்கும் பகலவன் ஆற்றலோ, யாவினும் பன்மடங்கு விஞ்சியதாகும். ஆனதுபற்றியே, அதனுல் கவரப்பட்ட பிற அண்டங்கள், அதனைச் சுற்றிலும் ஏற்ற தொலைவிலிருந்து சுழன்று திரிகின்றன. இன்னும் ஒவ்வொரு அண்டத்திற்கும் பிறவற்றிற்குமுள்ள தொலைவும் நிரலும் அவை பலவற்றின் அளவையும் ஆற்றலையும் பற்றி முறைபட அமைந்தனவேயாம். இப்



பரிசதேயாம் நூலின் உள்ளுறை நடுக்கதைகட்கும் கிளைக் கருத்து கிளைக் கதைகளுக்குமுள்ள இயைபும் படித்தரமும். இவ்வமைதி கெடின், இதழை யிகந்து நிற்கும் மூரலையொத்து அழகொழியும்.

**அலைப்போக்கு**

அண்டங்கள் நிற்கும் நிலைக்கும் அவற்றின் சுழற்சிக்கு மேற்பவே, சிறுபொழுதும் பெரும்பொழுதும் கொண்ட பருவங்கள் அமைதலையொத்து, நூற்பகுதிகளின் நிரலுக்கும் அவற்றைத் தோய்ந்து நிற்கும் உணர்ச்சிக்கும் தக்கபடி, நூலில் அலைப்போக்கி னமைந்த பருவச் செவ்வி பொருந்தி நிற்கும். கங்குலுக்குப்பின் இயல்பாக வருவது பகலே போன்றும், ஊடலின் விளைவு கூடலே போன்றும், நூற் பகுதிகளிலும் இவ்வலைப்போக்கு முறைபட நிற்கும். நின்று திகழும் வருணனைப் பகுதிக்குப்பின் பெயர்ந்து செல்லும் பரிசுடைய கதைப்பகுதி இனமணி நிரல் போன்று அமைந்து நிற்கும். இவ்வாறு அமையவில்லையெனின், பகலின் நீட்டிப்பாலும் வேனிலின் நீட்டிப்பாலும் எப்படி உடல் களைப்படைந்து நெகிழ்ச்சியை யடையுமோ, அஃதே போன்று, அத்தன்மைத்தான நூலின் தன்மையும் கற்போர் மனதுக்குக் களைப்பையும் இன்ப மெலிவையும் பயக்கும்.

**நூலாசிரியன் அமைதி**

ஒவ்வொரு நூலையும் செய்தளித்தற்கு ஏற்ற இயல்பமைந்த ஆசிரியர் அமைதியும் உண்டு. ஒரு பெரிய கண்காட்சி நிலையத்தைக் காண ஆயிரக் கணக்கான மக்கள், தேன் கூட்டைப் பற்றும் ஈக்களையொத்து, பெருந்திரளாகக் கூடிக் காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றனர். சிருர், பாவை பந்து முதலிய விளையாட்டுப் பொருள்களால் பெரிதும் கவரப் பெறுகின்றனர். என்னை? அன்னுர் கருத்து பெரிதும் விளையாட்டிலேயே பொதிந்து நிற்குமாற்ருன். பிறரோவெனின், பெரும்பாலும் அன்னவர் சுவையை யொட்டிய பொருள்களையே பொருட்படுத்துவர்.

இனி, ஓவியமாதிய அருங்கலைக் கருவூலங்கள் பலரையும் கவர்வனவாம். எனினும், ஒவ்வொருவர் விருப்பமும், பெரிதும் அவர் சுவை வகையை யொட்டியே பல பொருள்களின் மீது பல படிகளுள்ள தீவிரத்தோடு செல்லும். இப்பரிசே, இயற்கை யுலகிலும், மக்கள் மனம் அன்னவர் இயல்பை யொட்டிப் பலவேறு துறைகளிற் செல்லும். எனினும், அவர் பலரும் இசை முதலிய அருங்கலைகளை விரும்புவர். அக்கலைகளினிடையும், தம் சுவை யறிவைப் பற்றித் தமக்குப் பெரிதும் இன்பமளிக்கும் கலையும் உளதாகும். இனிச் சுவைத்திறம் நனியுடைமையோடு, அக்கலைச் செல்வங்களை ஆக்கும் ஆற்றல் மிகுந்தவரும் சிலரிருப்பர்.' இவர்களே அருங்கலைஞர்கள். இவர்களுள்ளும், ஒவ்வொரு வகைக் கலையாசிரியரிடையும் தம் தனித்தன்மைபற்றிப் பலவேறு பொருள்களைப்பற்றிய கலைமணிகளை யாக்கும் சிறப்புடையார் பலரிருப்பர். இலக்கியத் துறையிலும், ஒவ்வொரு ஆசிரியரும் பலவகை நூல்களையும் தர வல்லுநரல்லர். [1]எனவே, இவர் ஒவ்வொருவரும் தம் ஆற்றலுக்கும் தனித் தன்மைக்கும் ஏற்பத் தாம் தருதற்குச் சிறப்பாயமைந்த நூல் எதுவாமென்பதை நன்கு ஆராய்ந்தறிந்த பின்னரே அதனைச் செய்யப்புகுதல் வேண்டும். தன்னையன்றி, செய்யப்புகும் நூலை, வேறொருவர் தருதற்குக் கிழமையுடையராகார், தானே அதைத் தருதற்கு உரியவனென்ற துணிபு எழுந்த பின்னரே ஆசிரியன் அதைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

அங்ஙனம் செய்தளிக்கும் நூலின் நடையும் நூலெய்தும் உருவமும் ஆசிரியருடைய இயற்கைப் போக்கு கல்வி நூற் பொருளின் தன்மை அப்பொருள் ஆசிரியர் உள்ளத்தில் தோற்றுவிக்கும் உணர்ச்சி ஆயவற்றை ஒட்டியனவே

1. "The author has something to say which he perceives to be true and useful, or helpfully beautiful. So for as he knows, no one has said it; so far as he knows, no one else can say it. He is bound to say it, clearly and melodiously if he may; clearly at all events."

—Ruskin, Sesame.



யாம். பெரியபுராணம் பழுத்த நடை யமையப் பெற்ற நூலென்று கற்றோர் போற்றுகின்றனர். "ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்கிடும்" மூத்த அறிவும் "கூடு மன்பினாற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டாத" வெற்றியும் உடையவரைப் பற்றிய நூலாயினமை பற்றியும், அன்னார் பெருமையையே பொருட்படுத்தும் ஆசிரியர் உள்ளத்தே யெழுந்த பொருளுலகத்தைக் கடந்த தகவினில் உருத்தெழும் தன்மை பற்றியும் அந்நூல் பழுத்த நடை யமையப் பெற்றுள்ளமை இயல்பேயாகும். நூற்பொருளைத் தக்கவாறு போற்றும் உள்ளமுடைய பெரியார் இந்நூலைச் செய்ய நேர்ந்தது ஒரு பெரும் வாய்ப்பாகும். எனவே, நூற்பொருட்குப் பொருந்திய நடை அமைந்துள்ளது. இனி, நூற்பொருளை விரும்புவோரன்றி, அப்பொருள் பற்றிய நூலைச் செய்யப் புகுவாரிலரெனவே, அந்நூலுக்கு அமைந்த ஒரு பெரு வாய்ப்பென்று போற்றுதலென்னே? என்று அறிவுடையோர் வினவலும் கூடும். அழகு நனியுடையாளொருத்தியைப் பலரும் விரும்புதலியல்பே யெனினும், அன்னவர் ஒவ்வொருவரும் அவள் கேண்மைக்குத் தக்கவரென்று கொள்ளுதல் சால்புடைத்தாமோ? அதனோடொப்புமை யுடையதாமோ நூற்பொருளுக்கும் ஆசிரியருக்கும் உள்ள சம்பந்தம் எனின், ஒருவாறு ஒப்புமை யுடையதேயாகு மென்பாம்.

எனவே, ஒவ்வொரு நூலின் உருவமும், அவ்வந்நூற் பொருளை ஆசிரியர் உள்ளத்தே கொள்ளத் தோன்றிய கருவின் செவ்வியை யொத்ததேயாகுமென்பது போதரும். நளன் சரிதையை நினைத்தவாற்றான் புகழேந்தியார் உள்ளத்தே யெழுந்த இனிமையே அந்நூலின் இன்னோசையாக மலர்ந்துள்ளது. நூலின் பிற பண்புகள் மலர்தலும் இன்னவாறேயாம்.

### நூலுக்கு உருவளிக்கும் தறுவாயில் ஆசிரியன் உள்ளத்தின் நிலை

குறித்த நூலைத் தருதற்கு ஏற்ற ஆசிரியன், தன்னுடைய உள்ளத்தில் அந்நூலை அளிக்கச் செய்யும்

உந்துதல் தோன்றிட, அவ்வழி எழும் விருப்பத்தால், அந்நூலைச் செய்யாமல் இருக்க வொண்ணாத நிலையிலேயே அதனைச் செய்யத் தொடங்க வேண்டும். அந்நிலையிலேயே இறைவன் அருள் வாய்ப்பு வந்தெய்தும். அருள் வாய்ப்பில், கருத்தரும்பும் தறுவாயில், அறிவு அடங்கி நிற்கும் நிலையிலிருந்து அது தொழிற்பட்டு நூலை யாக்கப் புகும் நிலை சிறிது பிளவுபட்ட நிலையேயாகும்: உணர்ச்சியின் மிகுதியினால் உள்ளம் துளும்பிய நிலையானது சற்று ஆறி, திட்பமெய்திய நிலையேயாகும். [1]எனவே, நூலுருவெய்தும் கருத்தினுட் செறிந்த உணர்ச்சி அந்நிலையில் சற்று ஆறிய தன்மைத்ததேயாகும். உலகில் நிலவும் உணர்ச்சிகள் செறிந்த கருத்துக்களா லமைந்த சிறந்த இலக்கியங்களுங் கூட இவ் வாறிய நிலையிலேயே உருவெய்தினவாமெனின், அருள்நிலையில், அவ்விலக்கியங்களைத் தந்த பெரும் புலவரின் உள்ளத் தமைந்த உணர்ச்சி செறிந்த கருத்துக்களின் பண்பு எத்தன்மைத்தாமென்று முயன்று முயன்று அமைத்தாலும், கருத்தில் தக அமைக்கலாகாததொன்றேயாம்! எனலும், அப்பரிசை விள்ளுத லென்பது இயைவதொன்றேயோ?

**யாத்தற்குரிய பொழுது**

இன்ன மேம்பாடமைந்த உள்ளத்தனைய ஆசிரியனும், காட்சி எழுந்தவாற்றானே, அப்போதே யாத்தல் செய்வானல்லன். காட்சியொடு செறிந்து உடனெழுந்த உணர்ச்சி சிறிது சிறிதாகத் தணிந்த பின்னர், தன் காட்சியைக் கருதிப் பார்த்து, அது அமைவதற்கேற்ற மொழியுருவினைத் தேர்ந்து நிற்கவும், இடையிடையே உணர்ச்சியானது எழுந்தெழுந்து ஆறி நிற்கவும், மீண்டும் காட்சியொடு உடனெழுந்த உணர்ச்சியின் திட்பம் தோன்றித்

1. "But when composition begins inspiration is already on the decline, and the most glorious poetry that has ever been communicated to the world is probably a feeble shadow of the original conception of the poet."

—P. B. Shelly, A defence of poetry.



துளும்பும் நிலையில் ஆசிரியன் யாக்கப் புகுவான். மனதில் அவ்வப்போதும் பல கருத்துக்கள் பதிதலுண்டு. ஒரு பொருளைப் பற்றி முதலிலெழுந்து மனதில் பதிந்த கருத்தே உண்மையானதென்று கொள்ளுதற்கில்லை. எனவே, அக் கருத்தோடு உடனெழுந்த உணர்ச்சி ஆறிய பின்னர், அறிவைக்கொண்டு ஆராய்ந்து தெளிந்த பின்னரே, அக்கருத்தின் வழியோ, அல்லது அதனைத் திருத்திக் கொண்டவழி, திருத்தி யமைந்த கருத்தின்வழியோ சென்று, நூலை யாக்கப் புகுதல் முறையாகும். கருத்து முதலில் தோன்றியதற்கும், அதனை அறிவைக் கொண்டு ஆராய்ந்து அதன் திறத்தைத் தெரிவதற்குமிடையே, ஒரு கணம் மட்டுமே கழிதலும் கூடும், அன்றி, நீண்டபொழுது கழிதலும் கூடும். எனினும், முறை ஒன்றேயாகும். உணர்ச்சி பெரிதும் தோயாத உரைநூல் வகைகளைச் செய்யும் முறையும் இஃதேயாகும். குறுகிய கால வரம்புக்குள், கருத்தின் அமைதியைத் தேர்ந்து, அதனை விள்ளுதற்கு முற்படுமளவில், அறிவு தொழிற்படும் நிகழ்ச்சி, புலப்படா திருத்தலும் கூடுமெனினும், நிகழ்தல் உண்மையேயாகும். நூலுக்கு முதல், காட்சியாயின், அக்காட்சி, உண்மையின் கூறாக எழுவதாயினமைபற்றி, திருத்தியமைத்தற்குரிய தொன்றன்று. அது தோன்றும்போதே செப்பமானதாகும். எனினும், சோதனை செய்த பின்னரே, காட்சியோ பிறிதோ என்று உறுதி செய்து கொள்ளப்படும்.

**யாக்கும் வகையை மறைத்து விடுதல்**

இப்படி நூல் செய்யும் ஆசிரியன், கையாளும் முறைகள் பலவற்றுள்ளும், தான் நூல் செய்த வகையை மறைத்து விடுதலும் ஒரு அருங்கலை முறையேயாகும். உலகிலுள்ள பொருள் பலவற்றிலும் செறிந்து கிடக்கும் பொருட் கூறுகள் இன்னவையென்பதும், எவ்வகைப் பங்கீட்டில் அவை கலந்து நிற்கின்றனவென்பதும், அறிவியற் கலை வல்லுநர் தெரிந்து வெளியிடுகின்றனராயினும், அப்பொருள்களைத் தாமே யாக்குதற்கு வல்லுநரல்லர். இதையொத்தே, இலக்கிய ஆராய்ச்சியில் வல்லுநர்

இலக்கியங்களின்பெற்றியை அறிந்து கூற வல்லவரேனும், அவற்றை ஆக்கும் திறமையுடையவரல்லர். ஆக்குந் திறமை அறிவின் வயத்ததன்று: இறைவன் அருளால் வாய்க்கும் ஒரு தனிப்பட்ட ஆற்றலேயாம். இவ்வாற்றலுடைமை பற்றி, நூலை யாக்கும் வகையைப் பிறரறியாதவாறு மறைத்து விடுதலும் மரபாகும். இதனை இலக்கியமொன்றிலேயன்றி, அருங்கலைகள் பிறவற்றிலும் மேற்கொள்ளுதலுமுண்டு. இவ்வொழுக்கு இயற்கையையொட்டியதேயாகும்: இறைவன் உலகத்தைப் படைத்தவகையும், அன்றி, ஒவ்வொரு உயிரைப் படைக்கும் பெற்றியும் அறிதற்காவதொன்றேயோ!

யாத்தற் கலைத்திறத்தை ஒல்லும் அளவு ஆராய்ந்து அறிதலும் கூடுமெனினும், அவ்வகை ஆராய்ச்சியாலேயே இலக்கியப் பயனை எய்துதற்கியலாது. அத்தகைய ஆராய்ச்சி, இலக்கியத்தைத் துய்த்தற்கு உதவி புரியும் வகையை வைத்து ஆதரிக்கத் தகுந்ததேயாகும். எனினும், அதனையே பொருட்படுத்தி, இலக்கியத்தைத் துய்த்து இன்புறுதலை நெகிழவிடுதலாகாது. இசைப் பாட்டின் கலைத்திறத்தை அறியாதாரும் அதனைத் துய்த்து இன்புறுதல் கூடும்; ஆனால் அதன் கலைப் பரிசை அறிவார், வகை யறிந்து அதனைத் துய்த்தல் சிறந்த முறையேயாகும். எனினும், கலைப் பரிசையே பொருட்படுத்தித் துய்ப்பை நெகிழவிடுதல் பயனையெய்தும் வகையன்று. என்னை? ஆராய்ச்சி அறிவின் கூறு, மனிதவியல்பு அறிவுடைமை யொன்றொடு நிறைவெய்தாது: அறிவொடு உள்ளமும் செப்பமான வகையில் ஒன்றி நின்று தொழிற்பட்டாலன்றி மக்கட்டன்மை நிரம்பாது. இனி, ஐம்புலன்களும்கூட உளவே! எனின், அவை மக்களுக்கே சிறப்புடையனவன்று. அவை மனித இயல்புக்கு அடங்கி நின்று தொழிற்படுமளவில், அவ்வியலுக்குப் பெரிதும் உதவிபுரிந்து மேம்படச்செய்யும். அவ்வாறன்றி, அவற்றின் வழி அஃது இயங்கிடின், விலங்கியல்பே மேம்படுமென்க. அணங்கொருத்தியின் கட்டழகைக் கண்டு இன்புற்று, அவ் வழகொடு தோன்றிய உண்மையை



யுணர்ந்து மேம்பட உதவிபுரியும் கண்கள். ஆனால், அவளுடலை நசையும் புலன்களின் வழி மனித இயல்பு தொழிற்படின், விலங்கியல்பே மிகுமென்பதில் ஐயமென்னை!

### இலக்கியத்தின் செவ்வி

காமம் மீதூரப் பெற்ற வழி, பொருந்திய ஒழுக்குடைய பேடையின் வயிற்றில், உரிய பருவத்தே தரித்த கரு, முட்டையாக வெளிவந்த பின்னரும், அதனன்பு மிகுதியாலமைந்த முயக்கில் உருவாகி வெளிவரும் பார்ப்பு, தன் தாய் மயிலின் ஆதரவால் வளர்ந்து ஏற்ற பருவத்தில், ஒளிரும் நீலம் பச்சையாதிய வண்ணத்தோகையும் தூவியும் போர்த்த அழகிய வடிவமும் கவரும் சாயலும் நிரம்பப் பெறுவதுபோன்றே, அருள் வாய்ப்பில், தக்க ஆசிரியன் உள்ளத்தே எழும் தடுப்பரும் வேட்கையால் கருவுற்று, வளர்ந்து, நிறைவெய்திய அளவில், அவன் அறிவின் ஆதரவால் உருவெய்தி, உற்ற பருவத்தில் கலைச்செவ்வி நிறைந்து சிந்தும் இலக்கியமாய், உலகின் உள்ளத்தை யள்ளும் பெற்றியில், மூவா முருகொடு தெய்வமணம் கமழ ஊழியூழியும் உலகிற்கு விருந்தாய் அமைந்து நிலவும்.

### அதனை முற்றும் மொழிதற் கியலாமை

சாயல் சிந்தும் எழில் வடிவுடைய மயிலின் உருவம் எப்பெற்றித்து என்று என்னதான் திறம்பட வருணித்தாலும் அதன் செவ்வியை உள்ளபடி விள்ளுதல் ஆவதொன்றன்று: மயிலை நேரிற் கண்டு பழகினாலொழிய அதன் வடிவழகும் சாயலும் ஆட்டமும் உள்ளவாறு அறிந்து மகிழ்தற் கியலாது. இன்னவாறே, இலக்கியத்தின் செவ்வியைத் தக்கவாறு முற்றும் எடுத்துரைத்தல் ஆவதொன்றன்று: சுவைக்கும் வகையில் அதனொடு பழகினாலே, அதன் திருவில் திளைத்து இன்புறுதற் கியலும். எனினும், எமது விருப்புக்குகந்த அதன் செவ்வியை இசைந்த அளவு சொல்லப்புகுவாம்.

அங்ஙனம் சொல்லப்புகுதலும், இயல்பாக அமைந்த இலக்கியம் நுகர் திறனை இகந்து நிற்கும் அதன்

செவ்வியைத் தக விள்ளும் ஆர்வம் பற்றியேயாம். கண்டபோதே அனுபவித்தற்காம் ஓவியம் சிற்பம் ஆகியவற்றிற்கும் அவற்றின் திறனுய்வைப் பற்றிய நூல்களும் உள. எனினும், அவ்வருங்கலைகளையும், கண்டு கேட்டவாற்றானேயே நுகர்தற்காம் இசை கூத்துக்களையும், துய்த்தற்கு வேண்டும் சுவையறிவுடன் இலக்கிய நூல்களின் நலத்தில் திளைத்தற்கு மிகுந்த பயிற்சியும் வேண்டுமாகையால், அதன் செவ்வியைச் செப்புதல் மிகவும் வேண்டற்பாலதாயிற்று.

# நலன்

**திரு**

இன மணித் திரள்களை யொக்கும், எண்ணரிய மீன்களும் கோள்களும் திரியும் எல்லையற்ற நீல விசும்பு, காண்பார் மனத்தைப் பிணிக்கும் திரு வுடையது. இஃது ஊழியூழியும், காணுந்தொறும், மக்கட்கு இன்பத்தையும் வியப்பையும் நல்கி, வந்திருத்தல்வேண்டும். எனவே, அவர்களால் பெறற்கரும் பேறுகளென மதிக்கப்படும் இலக்கியங்களிலும் ஓவியங்களிலுமாறும் பருவங்களிடை அமையும் இதன் செவ்வி செறித்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதனிடையே திகழும் இயற்கைக் காட்சிகள் மலியும் நானிலங்களமைந்த பாரும் அதன் பரப்பிலுள்ள பொருள்களும் உயிர்கள் பலவும் திருவுடையனவேயாம். அவற்றுள்ளும் முத்து வயிரம் நீலம் பச்சையாதிய மணிகளும் வண்ணம் பல தோய்ந்த அழகிய இதழ்கள் அவிழும்போது தாதும் தேனும் சிந்தப் பொங்கியெழும் நறுமணத்தை நல்கும் மலர் வகைகளைத் தாங்கும் செடிவகைகளும், உருநலனும் பல வண்ணத் தூவியும் சாயலும் நிரம்பக்கொண்டு பாடியாடி மகிழும் புள்ளினங்களும், அழகிய மாவினங்களும் மக்கள் மனத்தைப் பெரிதும் கவரும் செவ்வியனவாம். திருந்திய உருவத்திலும் சாயலிலும் நடையழகிலும் பண்ணைப் பழிக்கும்

மொழி யிசைக்கும் வண்ணத்திலும் இணையற்ற திருவுடையார் காரிகையார். தோன்றி மறையும் அன்ன வாயில்களில், பருவத்தே இமைக்குந் திரு, என்றென்றும் சாயாது நின்று திகழும் கோயில்களே அருங்கலைகள்.

தம் உள்ளத்தைக் கவருமாற்றான், திருவுடையவற்றொடும் திருவுடையவரொடும் பழகுவதற்குப் பல வாய்ப்புகளைத் தேடிப் பல வசதிகளையும் செய்துகொள்ளுவர் மக்கள். திருவுடைய பொன் மணி யாதியவற்றை அணிகலன்களாகவும், மலர்களை மாலைகளாதிய ஒப்பனைகளாகவும் விரும்பி அணிந்துகொள்ளுகின்றனர்; அழகுடைய இயற்கைக் காட்சிகளைக் காணும் விருப்பொடு பல நாடுகளைக் கடந்து செல்லுவதோடு, சிறந்த இயற்கைக் காட்சிகளை யளிக்கும் மலைகளையும் அவற்றையடுத்த காடுகளையும், அவற்றின் உருவம் குலையாதவாறு அரணிட்டு வளைத்து, உயிர் வாழும் வசதிகள் யாவும் ஆங்கே யமைத்து, பலவகை உயிர்களையும் இயற்கையமைப்பில் அங்கே இருக்கச்செய்து கண்டு மகிழ்கின்றனர்; கிளி மயில் முதலிய பறவைகளின் உரு நலன்களையும் சாயலையும் குதலைமொழிகளையும் இடையறாது கண்டு கேட்கும் வசதி வேண்டிக் கூட்டிலிட்டும் இடாதும் இல்லங்களிலும் கோயில்களிலும் வளர்க்கின்றனர்; இங்ஙனம், ஊரிடைப் பெயர்த்துக் கொணரலாகாத இயற்கைக் காட்சிகளின் உருவங்களையும், எளிதாக வைத்து வளர்த்தற்கமையாத பறவை விலங்குகளின் வடிவங்களையும் நாளும் கண்டு மகிழும் நோக்கத்தோடு படங்களிலும் செம்பு கல்லாதிய சிலை வடிவங்களிலுமமைத்து வைத்துக்கொள்ளுகின்றனர்; அன்றியும், பல நாடுகளிலுள்ள செடிவகைகளையும் பறவை இனங்களையும் விலங்கினங்களையும் ஒரே இடத்தில் காண வசதியமையுமாறு, அவை இருத்தற்கு வசதியுள்ள ஊரிடையுள்ள அரணிட்ட சோலைகளில் வைத்துப்போற்றுகின்றனர். திருவுடைய மெல்லியரைக் காணவும் தேனொக்கும் அன்னவர்மொழி யிசைகளைக் கேட்கவும் அவர் ஆடலை வியந்து விழைந்து நோக்கிக் களிக்கவும், பல வசதி



களைச் செய்துகொள்ளுகின்றனர். திருவின் ஆற்றல்தான் என்னே!

இவ்வாறாகவும், கோழையுலகிடையே காணற்கியலாத குறைபாடற்ற திரு வமைந்த அருங்கலைகளில் முதலில் வைத்தெண்ணப்படும் இலக்கியம், மக்களிற் பெரும்பாலோரால் விரும்பப்படாததேன்? சிற்பமும் ஓவியமும் அவற்றைக் காண்பார்க்குக் கண்டபோதே தம் செவ்வியை விள்ளும் தன்மையுடையனவாம்; கேட்டபோதே திளைக்கத் தக்க பதத்திலுள்ளது இசை; கூத்தோவெனின், கண்டார் மனத்தை அக்கணத்திலேயே அள்ளிக்கொள்ளும் திறத்தினதாகும்; ஆனால் இலக்கியமோ, கற்றுச் சொற்பொருள் உணர்ந்தபின்னும், சுவையைத் தக அறிந்து துய்க்கும் திறமையுடையோராலேயே விரும்பப்படுவதாகும். இலக்கியத்தின் சுவையை அறிவதற்கு இயற்கை உணர்ச்சியோடு மிகுந்த பயிற்சியும் வேண்டும். எனவே, இவ் வருங்கலையை விரும்புவோர் தொகை பண்டுதொட்டு இன்றுவரையும் குறைந்ததேயாம். ஆகவே, பிற அருங்கலைகளிலும் சிறந்த அதன் திருவினைக் கண்டு விள்ளுதல் பெரிதும் வேண்டற்பாலதாயிற்று.

திருக்கோயில்

இவ் வண்டம் இறைவன் உள்ளத் திருவின் உருவம்; அவன் உறையும் திருக்கோயில். இஃது ஆக்க சத்தியால் உருவாக்கப்பெற்றுள்ளது. அச் சத்தியும் அவன் உள்ளத்தே நிறைந்து துளும்பும் மகிழ்ச்சியில் அரும்பி மலர்ந்ததாகும். நாம் புலன்களைக்கொண்டு உணரும் தூய நலனும், அறிவின் நலனும், அறச் செயல்களும், ஆன்ம அனுபவங்களும் அவ் வாக்க வியலினாலேயே எழுவனவாம். [1]அறிவற்ற பொருள்கள் முதல் ஆறறி

1. "Whatever being there is endowed with grandeur, beauty or strength, know that it has sprung only from a spark of my splendour"
—The Bhagavad Gita, chap. X 41, translated by Sri D. S. Sarma, M. A.

வுடைய மக்கள்வரையு மமைந்த களன்களில் அரும்பி மலரும் எல்லா நலன்களும் அவ் வியலின் செவ்வியே யாகும்.

வான்முகடே இப் பேரண்டக் கோயிலின் உச்சியாகும்; அளப்பரிய விசும்பிடை நிலவும் தாரகைககள், மறை நீக்கி யறியலாகாத அக் கோயிலிடை யமைந்த அவியாத விளக்கங்களாம். இப் பேரண்டமே யன்றி, அதனிடை யமைந்த ஒவ்வொரு உலகமும் இறைவன் திருக்கோயிலேயாம். எனவே, ஓரறிவுடைய புல்லாதிய முதல் ஐந்தறிவுடைய விலங்கு பறவைகளடங்கிய உயிர் வகைகளும், உருவிலும் அறிவிலும் பிற உயிர்களிற் சிறந்த மக்களும் அவன் திருக்கோயில்களே என்பது சொல்லாமலே அமையும். [1]இங்ஙனம் எங்கணும் இறைவன் நிறைந்து நிற்றல் விளக்கமின்றிப் பொதிந்த வகையிலேயே யாகும்.

**மிதிக்குங் கல்லும் வணங்குங் கல்லும்**

யாவும் திருக்கோயில்களென்றபோது, ஆலயத்தில் மிதிக்கப்பெறுவதும் வணங்கப்பெறும் திருவுருவச் சிலையாகச் சமைந்துள்ளதும் கல்லேயன்றோ ஆனபோது, இவற்றிடை நின்ற வேறுபாடுதா னென்னை என்று வினவுதலும் கூடும். யாவும் திருக்கோயில்களென்றபோது, அவை எல்லாவற்றிலும் இறைவன் இருப்பது உண்மையே யாகும். ஆயினும், ஒருசில பொருள்களிலும் உயிர்களிலும் அவன் கூறு சிறப்பியல்பொடு நிற்கின்றது: கயிலை கருடப் புள் முதலியன இச் சிறப்புக்குரியன; அன்றியும், ஒருசில உயிர்களிலும் பொருள்களிலும் அவன் எழுச்சியொடு உறைகின்றான்; பிறவற்றில் விளக்கமின்றிப் பொதிந்து நிற்கின்றான். இவ் வுண்மைக் கிணங்கவே மிதிக்குங் கல்லில் விளக்கமின்றி மறைந்து நிற்கின்றான்;

1. "This universe is every where pervaded by me, in an unmanifested form."

—The Bhagavad Gita, chap. IX 4, translated by Sri. D. S. Sarma, M. A.



[1]வணங்கப்பெறும் திருவுருவச் சிலையிலோ, மறைமொழிப் பெரியார் பிற அடியாராதியோர் வேண்டுகோளுக்கிசைந்து இறைவன் தன் சத்திகள் விளங்கப் பொலிகின்றான்.

திருவுருவச் சிலையை எல்லாரும் வணங்குவதில்லையாகையான், இக் கூற்று எல்லோர்க்கும் ஒப்பமுடிவதெங்ஙனம் எனின், பிறர் தொழுகைசெய்யும் திருக்கோயில்கள் மேடைகள் சமயமறைப்படிகள் ஆதியவற்றிற்கு, ஏனையோர் திருவுருவச் சிலைக்கு உரிமையாக்கும் போற்றுதலும் வணக்கமும் செய்வாராதலின் இக் கூற்றில் பொதிந்து நிற்கும் உண்மை யாவர்க்கும் பொருந்தியதே யென்பாம்.

இனித் 'திருக்கோயிலில், மக்கள் வணக்கத்துக் குரியது தெய்வமே யாகும், திருவுருவச் சிலையாகாது, அச் சிலை தெய்வத்தின் நினைவுச்சின்னமே யாகும், என்னும் கொள்கையுடையாரும் ஒருசாரா ருளரென்பதும் உண்மையே. வணக்கத்துக்குரியது வறிய கல்லன்று, இறை யிமைக்கும் திருவுருவச் சிலையேயாகும். 'அற்றன்று; திருவுருவச் சிலையை வணங்குதலென்பது அமையாது; அவ் வணக்கம் அச் சிலையில் இமைக்கும் இறைக்கே உரியதாகும்!' எனின், திரு அதனில் எழுச்சியொடு நிற்கு மாற்றானேயே திருவுருவச் சிலையும் நம் போற்றுக்கும் வணக்கத்துக்கும் உரியதேயாகுமென்பாம். இறைவன் விளக்கமாக நிற்கும் அடியார் திருமேனிகள், அச் சிறப்

1. "That night the Rani had a dream in which the Goddess appeared to her, ordered her to abandon the journey, told her to build and dedicate a temple to Her on the banks of the Ganges. If this were done, She promised to manifest Herself there in the image set up."

"The temple was consecrated. The Divine Mother who is life and consciousness itself was invoked to be permanently present in the beautiful stone image there. The dream of Rasamani was fulfilled, and her devoted heart was over joyed."

—Life of Sri Ramakrishna. 4th edition, pp. 47 & 52.

பில்லாத பிற உடலங்களுக்கமையாத போற்றுக்கும் வணக்கத்துக்கும் உரியனவென்பது வழக்கிலுள்ளதே யாகும். கௌதம புத்தர் மகாத்மா காந்தியடிகள் முதலிய பெரியார் திருவுடலங்களின் எச்சங்களுக்குப் போற்றும் வணக்கமும் உரிமையாக்கும் வழக்கை யுணர்ந்தால், திருவுருவச் சிலையின் செவ்வியும் தெற்றென விளங்கும். தலையும் அடியை யொத்து, உடம்பின் ஒரு உறுப்பே யாகுமெனினும், அடிக்கில்லாத சிறப்பு தலைக்குண்டென்பதை அறியாதார் யார்? சமைய மறைப்படிகளும், தாளும் அட்டையும் கொண்ட பொருள்வடிவில் சமைந்திருப்பினும், அத்தகைய பிற பொருள்களுக்கமையாத போற்றும் வணக்கமும் அப் படிகளுக்குரிமை யாக்குவோமெனின், திருவுருவச் சிலையை மட்டும் பொருளளவில் கல்லெனவே வைத்து மதித்தல் எங்ஙனம் சால்புடைத்தாகும்?

### திரு மணக்கும் துறைகள்

எங்கும் பொதிந்துநிற்கும் இறைவனுடைய திரு, பொருள்வெளி, அறிவுவெளி அறவெளி ஆன்மவெளி ஆய துறைகளில் மணக்கின்றது. இவ் வெளிகள் ஒன்றோடொன்று இணைந்து பின்னிக்கிடக்கின்றன. பொருள் வெளியிடை, வானளாவி முகிலினங்கள் படிய நிவந்து நிற்கும் நீலமலைச் சிகரங்களாதிய உயிரற்ற இயற்கைப் பொருள்கள் முதல் அதற்கு ஒப்பும் உயர்வுமற்ற மாதருருவம்வரை பொலியும் திரு அவனுடையதே; அறிவு வெளியிலோ, இலக்கியம் முதலிய அருங்கலைகளில் அவிழும் திருவும் அவனுடையதேயாம்; இவ் வறிவு தானும் அறத்தைச் சார்ந்ததேயாகும்; அன்றியும், எவர்க்கும் எவற்றிற்கும் நடுநிற்கும் அறமே அவன் திருவுருவமாகும்; இனி, எல்லாம் கடந்து, அணுவுக்கும் அணுவாகி ஆன்ம வெளியில் திருவருள் மணக்கச் சலிப்பில்லா இன்பமாய்த் தோய்ந்து நிற்பவனும் அவனே.

ஒவ்வொரு துறையில் மலரும் திருவும் அவனுடையதேயெனினும், எண்ணரிய உயிர்களிடத்தும் பொருள்களிடத்



தும் அத் திரு பலவகையிலும், அவ் வகை ஒவ்வொன்றிலும் எண்ணரிய வேறுபாடுடனும் ஏற்றத் தாழ்வுகளுடனும் மலர்கின்றது. [1]உரு வழகின் சிகரமாகிய மாதர் வடிவில் மங்கையரே கண்டு விரும்பிப் போற்றும் பேரழகுடைய நங்கைமார் அழகிற்கும் பிறர் உருவழகிற்கும் தர வேறுபாடு உண்டன்றே! இன்ன வேறுபாடு பிற இனங்களிலு முண்டு.

### செஞ்சொற் கலை

கல் மண் சாந்துத் தொகுதிகட்கும் அவற்றாலாய அழகிய உருநலனுடைய ஒரு கோயிலுக்கும் வேற்றுமை யுண்டன்றே? உடம்பானது, எலும்பும் தசையும் பிறவுங் கொண்டு சமைந்ததெனினும், எலும்பு தசை யாதியவற்றின் தொகுதியே உடம்பாகுமோ? சிற்பியின் கருத்தில் நின்று, கல்லையும் சாந்தையும் கோயிலாக உருவாக்குவது ஆக்கவியல். அன்னவாறே, உடம்புகளும் பொருள்களே

---

1. "*இழைகுலா முலையி னாளை
 யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா †வோதி நல்லார்
 களிமயக் குற்று நின்றார்
‡உழைகுலா நயனத் தார்மாட்
 டொன்றொன்றே விரும்பற் கொத்த
தழகெலா மொருங்கே கண்டால்
 யாவரே யாற்ற வல்லார்."
—இராமா. பால. கோலங்காண். 2.

'பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றா லென்படும் பிறருக் கென்றாள்."
—இராமா. ஆரணிய. சூர்ப்ப. 60.

* இழை - அணிகலன்.
† ஓதி - கூந்தல்.
‡ உழை - மான்.

யாகுமெனினும், அவையும் ஆக்கவியலால் உருவெய்துவனவேயாம். அவ்வழி திருந்தவமைவனவே போற்றுக்குரிய ஒப்புயர்வற்ற நங்கைமார் திருவடிவங்கள். கலைகளும் அப்பெற்றியனவேயாம். சொற்கள் அருளுடைய ஆசிரியன்மாரால் ஆளப்பெற்று, நூலுருவெய்தினு லொழிய கல்லையும் மண்ணையும் போன்று வறியனவேயாம். இவ்வாறன்றி, சொற்றெருகுதிகளாலேயே படிப்போர் அறிவை மயக்கி, நூல்களாக நிலவச்செய்யலாமென்று கருதி, முயன்று செய்யப்படும் உயிரற்ற சொற்கூடுகள் எத்தனை வெளிவருகின்றன! இனி, உள்ளபடி உருவாகி வெளிவரும் இலக்கியங்களிலும் தரமுண்டு. இலக்கிய வளம் நிரம்பிய உலகப் பெரு மொழிகள் ஒவ்வொன்றிலும் சிறந்த இலக்கியங்களாக அமைந்தன ஒரு சிலவேயாம்.

**அருங்கலைச் செல்வங்களைத் தருவோர் உள்ளப் பரிசு**

சிறந்த அருங்கலைச் செல்வங்களை நல்கும் நிலையில், நல்குவார் உள்ளத்தின் நிலை, உயிர்வாழ்தற்கு வேண்டியவற்றையே பொருட்படுத்தும் கோழையுலகின் தன்மையைக் கடந்து நிற்கும் உயர்ந்த செவ்வியினதாம்; அது இவ் வுலகின் வாழ்க்கைக்கின்றியமையாத பொருளையும் அதன் வருவாய் நிலைகளையும் பொருட்படுத்தாத மாண்புடையநிலையாகும். இதுபற்றியன்றே சிற்பிகளும், சித்திரகாரரும் புலவர்களும் பெரும்பாலும், தொன்றுதொட்டு, வறியராகவே இருந்து வருதல்! உலகப் போக்கையொட்டியவர், இன்று வாழ்க்கைக்கு இன்றியமையாத இருக்கை உண்டி உடை முதலியவற்றையும் தொடர்ந்து அவற்றைப் பெற வேண்டிய வசதிகளையும் அமைத்துக் கொள்ளப் பெரிதும் முயல்வார். அன்றியும் வேட்கை மீதூரப் பெற்றவராய், அளவுக்கு மிஞ்சிய பொருள்களையும் பிற வசதிகளையும், தங்கள்வழி வரவிருப்போர் ஊழியூழியும் தட்டின்றித் துய்க்குமாறும் சேமித்துக்கொள்வர். இம் மட்டும் நில்லாத சிலர், பிறர், வாழ்க்கைக் கின்றியமையாதவற்றை நாடித் தம்மை யடையும்போது, அன்னாரை ஏவல் கொண்டு அடிமைப்படுத்தி, ஒழுக்கம் வழுக்கிச்



சென்று, சமூகத்திற்குப் பல துறைகளிலும் இடர்ப்பாடும் துன்பமும் விளைப்பர். சமூகத்திற்கு நீதி மன்றங்களும் அரசினர் களரிகள் பலவும் இன்றியமையாதனவாயதற்கு, சமூகத்திலுள்ள பலரின் அவா மிகுதியே பெருங் காரணமாகும். உலகின் உயர்ந்த சிறப்பியல்புகளில் ஈடுபட்டும் காட்சியில் ஆழ்ந்தும் இருக்கும் நிலையில் அருட் கவிஞரும் பிற அருங்கலை வல்லுநரும் தம்மை மறந்து திருவில் நிலைபெறுகின்றனர்: அந்நிலையில் பசியை உணராமையின் உணவு வேண்டார்; நீர் வேண்டார் வேட்கையின்மையின்; இன்று வாழ்க்கைக்கு வேண்டியன எவையெனத் தேராராயினமையின், அவற்றை விழையார்; நாளை வேண்டற்பாலன இவையென எண்ணிப் பாராராயினமையின், அவற்றை ஈட்டவும் சேமிக்கவும் மனங்கொள்ளார்; தம் வறிய நிலையை உணரார்; உலகிலுள்ள குறைகள் பலவற்றையும் கருதார். திருவின் ஆற்றல்தான் என்னே!

**நல்லா றிணக்கத்தை யளிக்கும் கழகம்**

இங்ஙனம், உள்ளம் உன்னத நிலையிலிருந்து, இறைவன் அருளில் திளைத்து நிற்கும் தறுவாயில் பிறக்குமாற்றான், அச் சீரிய உள்ளமுடையாரின் தன்மைகள் மணக்கும் இலக்கியம், அதனைத் தரும் ஆசிரியரின் நல்லுறவைக் கற்போர்க்களிக்கும் வாய்ப்புடையதாகின்றது. இலக்கிய நூல்களை இயற்றி உலகிற்களிக்கும் இயல்பில் ஆசிரியன்மார் சீரியோரேயாவர். அருளின் நீங்கியிருக்கும் நிலையிலுங்கூட, அருள் நிலையில் எய்திய உணர்வுகள் மீண்டும் மீண்டும் வந்து நீங்குமாற்றான், தம் நிலையும் பண்பட்டு நிற்குமென்பதில் ஐயமில்லை. அவ்வாறன்றி, வறிய மக்களையொத்தே ஒழுகும் நிலைக்கு அவர் இழிதலும் கூடும். எனினும், அவர் இயற்றும் நூல்களில் அவர் சிறப்பியல்பன்றிப் பிறிது மேவாதாயினமையின், அருட்புலவர் ஆசிரியரென்ற முறையில் சிறந்தவரேயாவர். அன்னவர் தரும் நூல்களைக் கற்குமாற்றான், அவர் பூத உடம்பு இருக்கும்போதும் மறைந்தபின்னரும், அவர் கேண்மை கற்போர்க்குக் கிட்டும். அவர் சிறந்தோராயினமையின்,

அவர் கேண்மையான் நன்மையன்றிப் பிறிது விளையாது. அன்றி, உயிர்க்குறுதி பயக்கும் தன்மையில் மிக மிக அருமையானதுமாகும்; [1]பெறற்கரும் பேறேயாகும்.

இலக்கிய நூல்களைப் படிக்கத் தொடங்கும்போதெல்லாம் அவற்றின் ஆசிரியரோடு பழகும் வாய்ப்பு அமைகின்றது. பெரியோர் பல நாடுகளிலுமிருப்பர். பழக விரும்புவார், தாம் வாழும் நாட்டிலிருக்கும் பெரியாரோடுங்கூடத் தாம் வேண்டும்போதெல்லாம் பழகுதல் இயலாது. அவரைச் சந்திக்க நேரும்போதும், வேண்டுமளவு பழகுதற்கு வாய்ப்பமைவதும் மிக மிக அருமையேயாகும். எனவே, பிற நாட்டிலுள்ள பெரியாரோடும் உடல் நீத்து நிற்கும் ஆசிரியன்மாரோடும் நேரிற் பழகுதல் எங்ஙனம்! [2]ஆனால், நூல்களோ, அவற்றின் ஆசிரியரோடு எந்த நேரத்திலும், கற்போர் வேண்டிய அளவும் பழகுவதற்கு வாய்ப்பளிக்கின்றன.

உயிர் வாழ்தற்கு வேண்டிய உண்டி உடையாதிய வற்றைக் கொள்வதற்கு வேண்டிய பொருளை நாடிப் பல தொழில்களைச் செய்கின்றோம். பல துறைகளிலமைந்த தொழில்களின் வாயிலாகப் பலருடன் பழக நேர்கின்றது. அன்றி, உடன் பிறந்தார் சுற்றத்தார்களோடும் பழக நேர்கின்றது. இத்தொடர்புகள், பெரும்பாலும் ஒருவருடனொருவர் இணங்க நேர்ந்த நிமித்தம் பற்றி யெழுந்து, செல்வம் துய்ப்பு ஆதிய பயன்களை வேண்டி நிற்கும். ஒரோவொருகால் நிமித்தம்பற்றி யெழுந்த தொடர்பு, பயனை இகந்து, அன்பிலே நிலைப்பதுமுண்டு. இத்தன்மையான கேண்மையே சிறந்தது. என்னை? பொருளையும் துய்ப்பையும் வேண்டி நிற்கும் தொடர்பு, அவற்றொடு முடியுமாதலின். இலக்கிய ஆசிரியர் தொடர்பும் இவ்வகையில் சிறந்ததேயாகும்; இன்னும் அவர் அறிவு திருவருள் பொருந்தியதாயினமையின், தொடர்புக்குக் காரணமான அன்னவர் நூல்கள், பிற பொருள்களைப்போலாது, பொருட் பயன் கருதாதெழுந்த வான்பொருள்களாயினமையானும், அவற்றின் தொடர்பினால் அமையும் அன்னவர் கேண்மை மீண்டும் சிறப்புடையதாகும். அன்ன தொடர்பினால், ஆசிரியர் உள்ளம் போன்றே, தொடர்புறுவார் மனமும் உன்னத நிலையை யடையும்; அன்னவர் அறிவும் விளக்கம் பெறும்; திருவருளமுதின் சுவையும் சிறிது வாய்க்கும்; ஆசிரியன்மாரைப் போன்றே, திருந்திய சுவைகளை யறிந்து துய்க்கும் திறமையும் மேம்படும்.

1. "நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே."
—பட்டினத்தார், திருவேகம்பமாலை, 5.

2. "There is a society continually open to us, of people who will talk to us as long as we like, whatever our rank or occupation;—talk to us in the best words they can choose, and with thanks if we listen to them. And this society, because it is so numerous and so gentle, — and can be kept waiting round us all day long, not to grant audience but to gain it; — kings and statesmen lingering patiently in those plainly furnished and narrow anterooms, our bookcase shelves, — we make no account of that company, — perhaps never listen to a word they would say, all day long!"

—Ruskin, Sesame.



### தவப்பேறு

இன்ன மாண்புடைய இலக்கிய ஆசிரியன்மாரும், வானுலகத்திருந்து இழிந்தவர்களல்லர்: மக்கட் சமூகத்தின் பிள்ளைகளேயாவர். சண்பக மரத்தின் இலைத் தொகுதியினின்றும் உருவத்திலும் நிறத்திலும் மணத்திலும் மாறுபட்டனவாகக் காணப்படலாம் பருவத்தே அவற்றிடைத் தோன்றும் மலர்கள். ஆனால், உள்ளபடி சண்பகத்தின் சிறப்பியல்பின் வடிவமேயாகும் அம்மலர்த் தொகுதியென்பதில் ஐயமில்லை. மக்கட் சமூகத்தில் இவ்வகை அமைப்பும் உண்டு. ஒவ்வொரு சமூகத்திலும், மக்களினத்தின் பொது இயல்புகள் நிலவுவது இயல்பேயாகும்; இனி, அவ்வச் சமூகத்தின் சிறப்பியல்புகளும்

உளவாகும்: நாட்டின் அமைப்பு, பருவப் போக்கு, வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றின் மிகுதி, அருமை, ஆயவற்றைச் சார்ந்து, அந்நாட்டினரிடை இயல்பில் தோன்றி நிலவும் வாழ்க்கையின் குறிக்கோள், பண்பாடுகள், மேவும் கருத்துக்கள், செயல்கள் ஆதியவற்றில் ஒவ்வொரு சமூகத்தினருடைய சிறப்பியல்புகளும் உள. உலகத்திலேயே உயர்ந்த சிகரங்களையுடைய பனி வரையும் அழகிய இயற்கைக் காட்சிகளை யளிக்கும் நாட்டின் பிற பகுதிகளும், வாழ்க்கைக்குப் பொருந்திய தட்ப வெப்ப நிலையும் உணவு உடைகளுக்கு வேண்டிய தள்ளா விளையுளும் அமைந்த இந்நாட்டில், மக்கள், மன நிறைவும் அமைதியும் உடையோராய், தொன்று தொட்டே, அந் நலன்களுக்கு முதலாகிய இறைவன் பெருமையை உணர்ந்து போற்றுவோராய், வாழ்க்கையின் குறிக்கோள், வாழ்க்கையை இகந்த நிலையில் உள்ளதென்பதையும் உணர்ந்து, இந்நோக்கங்களுக்கேற்பவே தம் வாழ்க்கைமுறையை அமைத்துக்கொண்டுள்ளனர். இவ்வண்ணமே, ஒவ்வொரு சமூகத்தின் சிறப்பியல்புகளும் சமூகத்தின் ஆக்கப் பருவங்களிலே மிகுந்து அரும்பி மலரும். அம் மலர்ச்சியில் சிறந்து நிற்பதே இலக்கியம். இவ்வகையில் இலக்கியத்துக்குள்ள சிறப்பென்னையோ? எனின், கலைகளின் தாயகம் என்பது ஒன்றே போதாதோ அதன் சிறப்புரிமைக்கு!

[1]வேண்டுவார் வேண்டுமவற்றை நல்கும் ஆற்றல் செய்தவத்துக்குண்டு. [2]மகனது மேம்பாடு தந்தையின் தவப்பயனாகும்; திருந்திய செல்வத்தின் அளவும் தவத்தளவேயாகும். எனவே, செழும்பருவத்தே, வாழ்க்கையின் சிறப்பியல்புகளிடை மலர்ந்து மணக்கும் இனிய செல்வமாகத் திகழும் இலக்கியம், சமூகத்தில் தலைமுறை

1. "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்."
—திருக்குறள், 265.

2. "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."
—திருக்குறள், 70.



தலைமுறையாக வந்தோர் ஆற்றிய தவப்பேற்றின் சிறந்த வடிவமே யாகுமென்பது உறுதி.

இத்தகைய தவப்பயன் கிட்டுவதற்கு வாயில்களாவார் இலக்கிய ஆசிரியன்மார். எனவே, அன்னவர் நூலியற்றும் உன்னத நிலையமையக் கொண்ட நிலம் மிகச் சிறந்ததேயாதல் வேண்டும்.

**வரனென்னும் வைப்பு**

இப் பாருள்ளிட்ட உலகம் பலவற்றிலுள்ளவர்களும், அவ்வவ் வுலகத்தில் தோன்றியவாற்றான், அவர்களுக்கமைந்த ஐம்புலன் முதலிய தத்துவக் கட்டின் சிறப்பியல்புகளைக் கடந்து, இறையின் திருவில் அழுந்தியவழி எய்தும் நிலம் இஃதேயாகும். காட்சியின்வழி யெய்தும் கனவு மண்டலம் இஃதே; இஃதே பிணியும் மூப்பும் வறுமையுமற்ற விடம்; இலக்கிய ஆசிரியன்மாரும் பிற அருங்கலைஞரும் கண்டு விள்ளும் சிறந்த வடிவங்களும் நறுமணமும் எழில் வடிவும் கவரும் வண்ணங்கள் பலவும் அமையப்பெற்ற வாடாத மலர்களாதியனவும் குற்றமற்ற ஒழுக்கங்கள் முதலியனவும் நிலவும் குறைவும் அழிவுமற்ற நாடு இஃதேயாகும். பொன்னையும் பொருளையும் பொருட்படுத்தாத நிலமிது. தாம் நிற்கும் உன்னத நிலையிலிருந்து பிறவற்றை அவாவாத மனநிலை வாய்க்கும்போது வாய்ப்பது இந்நிலம். கோழையுலகில் காணாதவாறு, தகுதிக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்ற பயன்வாய்க்கும் நிலம் இது. இராமகாதை, உத்தரகாண்டத்தின் இறுதிவரையும் படர்ந்திருக்கவும், அறந்திறம்பித் தமக்குத் துயரிழைத்த பகைவர் மாண்டபின், இராமனும் சுற்றமும் மேம்பட்டுய்ய, உலகுய்யும் காட்சியொடு நூலைக் கம்பர் முடித்துள்ளமை இச் சிறப்புப் பொருந்தியதாகும். [1]அருட்கவிஞர், தம்

1. "I know that thou taketh pleasure in my singing. I know that only as a singer I come before thy presence.

"I touch by the edge of the far spreading wing of my song thy feet which I could never aspire to reach."

—R. Tagore, Gitanjali, 2.

இயற்கையில், தெய்வத்தின் அருளால் இந் நிலையை யடைவர்.

**சமயமும் இலக்கியமும்**

விருப்பும் வெறுப்புமற்று, ஐம்புலக் குறும்பின் பிணிப் பற்று, உள்ளம் பொருந்த நிற்கும் நிலையிலேயே இறைவன் அருள் வாய்க்கப்பெற்று, புன்மையில் காட்சியையுடைய பெரியோர், உலகப் பெரு சமயங்களை நிறுவுதற்கான உண்மைகளை யுணர்ந்தார். அருட்பெருங் கவிஞரும் அந் நிலையிலேயே தம் இலக்கிய நூல்களின் வித்துக்களாய கருத்துக்களை யுணர்வார். தத்துவ ஞானமும் சமயங் களும் எந்நிலத்தில் தோன்றுமோ, அந்நிலத்தில் தோன்று வதுதான் அருட்கவியும். அவற்றின் ஆசிரியன்மார் அடிப்படையான உண்மைகளை உணர்ந்தவராவர். அன்றி யும் திருவருள் வாய்ப்பில் தோன்றும் பாவின் அடிப்படை யும் தத்துவஞானமேயாகும். சமயம், மக்களின் விலங் கியல்பைத் தேய்த்து நல்லியல்பை வளர்க்குமெனின், இலக்கியமும் அத்தகைய பயனை நல்குமாற்றான், தோன் றும் நிலத்திலும் வகையிலுமேயன்றி, நல்கும் பயனிலும் சமயத்தை யொத்ததாகும் இலக்கியம்.

**தத்துவஞானம்**

இப் பேரண்டத்தின் கருத்தோன்றும் பரம்பொருளின் உள்ளத்தே தோன்றுவதுதான் அருட்கவியாதிய இலக் கியமும். தத்துவஞானமும் பிற கலைகளின் கருத்திரளும் அருட்கவியில் செறிந்துநிற்கும். அருட்கவிஞரின் காட்சி யில் தத்துவஞானம் மேவி நிற்கும். உலகத்தின் அமைப்பு, அவ் வமைப்பிலுள்ள பல பொருள் உயிர்களின் இடம், மக்களின் சிறப்பு, அவர் வாழ்க்கையின் குறிக்கோள், அவர் அன்பு அறிவு ஆதிய பண்புகள், காதல் வீரம் ஈகை ஆதிய செயல்கள், சமூக வாழ்க்கை, இன்ப துன்பங்களின் தன்மைகள், இறைவன் பெருமை, இன்ன பலவற்றின் கருத்துக்கள், ஆசிரியன்மார் கல்வி அறிவு சூழல் தனித் தன்மைகளுக்கேற்ப அவர் அறிவில் செறிந்துநிற்கும்.



இவ் வறிவு, அன்னார் செய்யும் நூல்களில், உலகிடை மறைந்து நிற்கும் உண்மையையொத்துப் பொதிந்து நிற்கும்.

**கலைகளின் தாயகம்**

[1]இலக்கியத்தில், தத்துவஞான அறிவே யன்றி, பிற கலைகளின் அடிப்படையான கருத்துக்களும் காணப்படும். பல துறைகளிலுள்ள அடிப்படையான கருத்துக்களிடை தொடர்புண்டு. எனவே, ஆக்கவியலின் வழிவரும் காட்சியா னெழும் இலக்கியத்தில், பல கலைகளின் அடிப்படையான கருத்துக்கள் காணப்படுதல் இயல்பேயாகும். இப் பரிசை ஒவ்வொரு இலக்கிய நூலிலும் காண்பதரிது; பரந்த நூல்களில் காணக்கூடும். திருக்குறள் இவ்வகையில் அமைந்துள்ளமை வெளிப்படை. அந் நூலில், ஆசிரியர்க் குப் பல பொருள்களைப்பற்றிப் பேச வாய்ப்பிருந்தமையான், அதற்கேற்பவே அவற்றைப்பற்றியெல்லாம் கூறப்பட் டுள்ளது. எனவும், பிற நூல்களில் பேச வாய்ப்பில்லாமை யாற் கூறப்படாத வழியும், அந் நூலாசிரியன்மார்க்குப் பல துறைகளிலுள்ள அடிப்படையான கருத்துக்கள் உள வாதல் உண்மையேயோ? என்ற கேள்வி யெழுகின்றது. வெளிப்படையாகக் கூறுதபோதும், அவ் வகைக் கருத் துக்கள் ஆசிரியர்க்கு உளவாகி அவர் செய்யும் நூல்களில், பாலிடைச்செறிந்து நிற்கும் வெண்ணெயை யொத்து, பொதிந்து நிற்றல் இயல்பேயாகும். அறத்தாற்றில் நிற்பா னொருவன், தன்னை யொழிந்த உயிர் ஒவ்வொன்றையும் அறிந்து அவற்றிற்கு அன்பு செய்வானல்லன்; ஆன போதும், எல்லா உயிர்க்கும் பொருந்திய வகையில் அவன் நிலை அமைவதாகும். அவ்வாறே, அருள் வாய்ப்புடைய ஆசிரியர் நூல்கள், அடிப்படையானபிற துறைக் கருத் துக்களுக்குப் பொருந்தவே நிற்பனவாம்.

1. "Poetry is the breath and finer spirit of all know-ledge."

—W. Wordsworth, Poetry and poetic diction.

### எல்லாவுயிர்க்கும் பொருந்திய ஞானம்

அறியத்தக்கவற்றைத் தக அறிந்து, ஒழுகி, அடங்கி, தெய்வத்தை வணங்கி நிற்றல் கல்வியின் பயனெனின், இப் பயனை எய்துதற்கு "எல்லா உயிர்க்கும் பொருந்திய ஞானம்" இன்றியமையாததாகும். [1]கலைமகளருளினால் பெறும் பெறற்கரிய பேறுகளில் இஃதொன்றாகும். இம் மெய்யுணர்வு அறிவியற்கலை யினங்களைக் கற்குமாற்றான் எய்தக்கூடுமோ? அன்றி, இலக்கிய மாண் கலையைப் பயில வமையுமோ? இவ் வுண்மை தத்துவ ஞானத்தின் கூறெனினும், உலகின் செவ்விய மலர்ச்சியை யொட்டி யெழுந்த இலக்கியத்தில் இது பொதிந்து நிற்கும். உண்மையைத் தர்க்க முறையில் ஆராய்ந்துசெல்லும் தத்துவ ஞானக்கலை; இலக்கிய அருங்கலையோ, அவ் வுண்மையின் பொலிவைச் சித்திரித்து அழகுபடக் காட்டும். எனவே, மருந்தின் இயல்பமைந்த உண்மைகளை, முருகு வாய்ந்த மாறாச் சுவைசெறிந்த விருந்தாக நல்கும் திறல்வாய்ந்தது இலக்கியம். மக்கள் விரும்புவது மருந்தோ, விருந்தோ? இன்னும், மருந்தின் பரிசமைந்த விருந்தெனின், எத்துணை உயர்ந்ததென்று கூறுதலும் வேண்டா. இத்தகைய கலையன்றோ கற்கவேண்டியவற்றுள் முதன்மை பெறுதற்குரியது! அறிந்திருந்தும் உலகம் இவ் வழி நில்லாததேன்? பொருள் மயக்கில் ஒடுங்கி நிற்கும் பேதைமையினாலன்றோ!

---

1. "பெருந்திரு வும்சய மங்கையு
மாகியென் பேதைநெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப்
போற்றினெல் லாஉயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப
வேதப் பொருளுந்தரும்
திருந்திய செல்வந் தருமழி
யாப்பெருஞ் *சீர்தருமே."

கம்பர். சரசுவதியந்தாதி: 30.

*. சீர் - புகழ்.



### வான்பொருள்

சமூகத்திலுள்ள மக்களின் வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. அன்னார் அறச்செயல்களுக்கும் இன்ப நுகர்வுக்கும் வாய்ப்பளிப்பது பொருள். பொருளும் அதன் பயனைப் பெறும் உடம்பும், தோன்றிப் பருவத்திற்கேற்ப வளர்ந்து வாடிக் கெடுவனவேயாம். இப் போக்கு நாளும் உலகில் இயங்குகின்றது. பொருளைத் "தீவினை விட்டீட்டி," அதன் பயனை உள்ளபடி யறிந்து, அதன் வீக்கத்திற்கேற்பப் பிறர்க்களிக்கும் கொள்கையுடையார் உலகில் ஒரு சிலரேயாவர். பிறரோவெனின், அவ் வாய்ப்பில் பிறர் மீது ஆணையைச் செலுத்தியும், அதன் நுகர்வால் எழும் இன்பத்தில் களித்தும், செருக்கியுமிருப்பர். அன்ன செருக்கும் அதனை யளிக்கும் ஆணையும் பொருள்களும் இன்பம் நுகரும் உடம்பொடு வாடிப் பிணிவாய்ப்பட்டு ஒழியுமாகையான், [1]பொருளோ விழையத்தக்கது இவ்வுலகில்? அன்றி, அழியும் இவ்வுலகின் சிறப்பியல்புகளை இகந்து, பல்லுயிர்க்கும் பொதுவாய ஆன்ம இயல்புகளைப் பொருட்படுத்தி, பொருளுலகழியினும் அழியாது நிற்கும் இறையின் அருள் வழித் தோன்றிடும் இலக்கியமாதிய அருங்கலை [2]வான்

---

1. "Strange! to think how the Moth kings lay up treasures for the moth, and the Rust kings, who are to their peoples, strength as rust to armour, lay up treasures for the rust; and the Robber kings, treasures for the robber; but how few kings have ever laid up treasures that needed no guarding—treasures of which, the more thieves there were, the better! Broidered only to be rent — helm and sword, only to be robe dimmed; jewel and gold, only to be scattered — there have been three kinds of kings who have gathered these."

—Ruskin, Sesame

2. "வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப்
பொருளுமற் றெப்பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும்
பொருளல்ல பூதலத்தின்

பொருள்களோ விரும்பிப் போற்றற்குரியன? பொருளுடையார் பொருள் வேண்டுவாரையும் தோன்றி மறையும் பிற நலன்களையுடையார் அவற்றை விழைவாரையுமே தம் வயப்படுத்த வல்லவராவர். மக்களுடைய உயர்ந்த தன்மை அவற்றைப் பொருட்படுத்தாததேயாகும். எனவே, பொருளும் வளர்ந்து தேயும் நலன்களை யளிக்கும் பிற உடைமைகளும் அவ்வழி மேவும் சிறப்பும் அழியுமியல்பினவாம். பொருளின்றியும் அறனுண்டு. என்னை? “மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்” ஆயினமையின். இனி, அறத்தான் வருவதே இன்பமுமாகையான், பொருளா லிரண்டும் பெறலாகுமென்ற பொருளில்லாத வழியும் இன்பம் உளவாதலும் கூடும். ஆனால், திருவருள் கிட்டாதவழி அறனும் இன்பமும் உளவாகா. எனவே, அவ்வருளிலே தோன்றி, அறத்துறை பலவுங்கொண்டு, மாறாத இளமையொடு திகழும் இலக்கியமும் பிற அருங்கலைகளும் மக்கள் போற்றியாக்கிக் கொள்ளும் நாகரிக உலகின் நடுவே யமைந்து வானளாவி நிற்கும் திருக்கோயில்களேயாம். உடையவர் நுகர்வினாலும் ஏனையோர் விழைந்து கவருமாற்றானும் பொருள் தேய்ந்து மறையும்; இலக்கியத்தின் நலனோ, விழைவார் எத்துணை கொள்ளினும் தேயாது, மணம்

மெய்க்கும் பொருளு மழியாப்
பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளுங் கலைமா
னுணர்த்து முரைப்பொருளே.”

“பொருளா லிரண்டும் பெறலாகுமென்ற
பொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான்பொரு
ளோபொருள் வந்து வந்தித்
தருளாய் விளங்கு மவர்க்கொளி
யாயறி யாதவருக்
கிருளாய் விளங்கு நலங்கிளர்
மேனி யிலங்கிழையே.”

கம்பர். சரசுவதியந்தாதி: 26, 27



பொதுளிப் பரவுவதாகும். எனவே, மண்ணிடைப் பொருள்களின் தன்மையைப் பழிக்கும் வான் பரிசமைந்த பொருளாயது இலக்கியம்.

### நானிலத்தின் செம்பொருள்

உந்து வானூர்தி யாதியன பருப்பொருளுலகத்தைக் கடந்து அப்புறம் செல்லா. தருக்க அறிவியற் கலைகளாதியவற்றில் இயங்கும் அறிவு, அறனைச் சாராமல் அறிவு வெளியைக் கடந்து செல்லாது. ஆனால், இலக்கியம், பிற பூதங்கள் நான்கினும் பொதிந்து நிற்கும் வானை யொத்து, பொருள் அறிவு அற (திரு) அருள் வெளிகளைச் சார்ந்து நிற்குமாற்றான், அதனை வான் பொருளென்றும், அன்றி, நானிலத்தின் செம்பொருளென்றும் போற்றுதல் பொருந்தும். என்னை? சொல்லளவில் பொருள் வெளியையும், கருத்தளவில் அறிவு வெளியையும், அறனைச் சார்ந்த அறிவால் உருவாகிக் கோழை யுலகில் காணக் கிடையாத நிரம்பிய நலன்க ளமைந்த பொருள்கள் திகழும் அறத்துறை பலவற்றையும் அடக்கி நிற்குமாற்றான் அற வெளியையும், அருள்வாய்ப்பில் தோன்றி அருள் மணக்க நிலவுமாற்றான் அருள்வெளியையும் பற்றி நிற்கும் பரிசினதாயினமையின்.

### மண்ணரசும் மன்னரசும்

இத்தகைய சீரிய செல்வங்களை யளித்து, மக்களின் நல்லியல்புகளை வளப்படுத்தி, மேம்படச்செய்து புரப்பாரை [1]மக்களின் மன்னரசென்று கூறுவதில் மிகையென்னை? கம்பனும் காளிதாசனும் வாழ்ந்த காலங்களில், அந் நாடுகளின் அரசர் யாவரென்பதை இன்று பலரறியார். அறிவார் சிலருள்ளும், அக் கவியரசர் வரலாறுகளை அறியுமாற்றானன்றி அந் நாடுகளின் அரசரை யறிந்து நினைவு

1. “Here, I say is an *English king, whom no time or chance, parliament or combination of parliaments can dethrone.”
—T. Carlyle, The Hero as Poet.

* English king.—William Shakespeare.

கொள்வார் தொகை மிகமிகக் குறைந்ததேயாகும். மக்கள் உடலங்களையும் உடைமைகளையும் பெரிதும் தொடர்பு கொண்டது மண்ணரசு. எனவே, உடம்பு உடைமைகளைப் போன்று சிதையு மியல்பினது அதன் சிறப்பு. அங்ஙன மன்றி, தெய்வத் திருவருளால், மக்களின் சிறப்பியல்பில் முளைக்கும் [1]கவி, வாடாத தன்மைத் தாயினமையின், அக் கவிகளையும் பிற இலக்கிய வகைகளையும் உலகுக்களித்து உய்விக்கும் வள்ளல்களோ, [2]அவர் பரு உடம்பு அழியினும் புகழுடம்பொடு என்றென்றும் அறிஞர்கட் கரசராய்த் திகழ்வர்.

அன்னவர் குடிகளோ, அன்னவர் காலத்தே அவரை அரசராகக் கொண்டவரே யன்றி, அம்மொழி வழங்கும் நாடு, அன்றி நாடுகளில், ஊழியூழியும் பின்னே வந்து அவர் தந்த இலக்கிய நூல்களைக் கற்று இன்புற்றுப் போற்றுவோ ரெல்லாருமே யாவர்.

**பொற்றளை**

நாடுகள் பலவற்றின் பழக்க வழக்கங்கள் வேறுபாடுடையனவாம். இதற்குக் காரணங்களும் பல உள. ஆனால், எல்லோரிடையும் அழகுணர்ச்சி யுளவாகும். இலக்கிய நூல்கள் சிறந்த பொன் (எழில்) வடிவங்களாயினமையின், அந்நூல்களைப் பயின்று மகிழும் பல நாட்டினரிடை நட்பு அமைகின்றது. ஆங்கிலேயர் தம்

1. "Who are you, reader, reading my poems an hundred years hence? ... In the joy of your heart may you feel the living joy that sang one spring morning, sending its glad voice across an hundred years."

—R. Tagore. The Gardener, 85.

2. "கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு."

—நீதிநெறி விளக்கம், 7.



அதிகாரத்தைப் பரப்புவதற்கும் நிறுத்துவதற்கும் இந்நாட்டினரிடை ஆங்கிலத்தைப் பரவச் செய்தனர். அவர் எதிர்பார்த்தபடி அவர் அதிகாரம் வீங்கிற்று; பின் சிறிது தேய்ந்தது; இன்று அவர் அதிகாரம் ஒழிந்தது ; ஆனால், ஆங்கிலம் மட்டும் நீங்கிற்றிலது. வாணிக அலுவல்களுக்காகவும், அம் மொழியிலுள்ள சிறந்த பல கலைகளைக் கற்றுப் பயனெய்துவதற்காகவும், அம்மொழியிலுள்ள சிறந்த இலக்கிய நூல்களைக் கற்று இன்புறுவதற்காகவும், ஆங்கிலம், இன்றும் இந்நாட்டில் பேணப்படுகிறது. அம்மொழியின் இலக்கிய நலனைத் துய்ப்போர், அம்மொழி தோன்றிய நாட்டினரை இயல்பாக விரும்புகின்றனர். அவ்வாற்றான், ஆங்கிலம் வழங்கும் பல நாடுகளிடையும் அன்பு மேவி நட்பு நிலவுகின்றது. இவ்வாறே எம்மொழியும், அது நிலவும் பல நாட்டினரை நட்பில் ஒன்றுவிக்கும் பொற்றளையாகும்.

**தன்மதிப்பு**

இயல்பாக, உள்ளம் பலவற்றை நாடி அவாவுகின்றது; அவாவும் பொருள்களைக் கொள்ள முயல்கின்றது. இப் போக்கில், சில முயற்சிகள் அறத்தின்பாற்படும்; பிற அதற்குப் புறம்பாகும். உலக வாழ்க்கைக்கு அவாவே முதற் காரணமென்னலாம்; அறம் வழுக்கிய அவாவே சமூகத்திலுள்ள சீர்கேடுகளுக்கு முதற் காரணமாகும். உள்ளம், பரப்பிலே திரிந்து பலவற்றையும் விழையும் இயற்கையில், தனக்குப் புறம்பாயவற்றின் செவ்வியையே பொருட்படுத்துகின்றது. ஆனால், ஒரோவொரு சமயம் அது தன் நிலையில் நிற்க நேரும்போது, உயிர் தன் மாண்பை உணரும். இவ்வுணர்ச்சி பலருக்கு எழுவதில்லை. எழுந்தவழியும் பலர் அதனைப் பொருட்படுத்துவதில்லை. தம்மியற்கையிற் சீரியோரே தம் உயர்வை யுணர்வர். சேக்கிழாரடிகள் திருவருள் வாய்க்கப்பெற்று, தெய்வத்தால் அம்மையேயென்று அழைக்கப்பெற்ற காரைக்காலம்மையாரைப் பெரிதும் மதித்து, அவரைக் குறிக்கும்போதெல்லாம் சிறப்புப் பன்மை விகுதியொடு குறிப்பதையும்,

அவர் கணவனானபோதும் அவர்தம் நிலையை யெய்தாத காரணத்தால் பரமதத்தனை அச்சிறப்பொடு குறியாதிருப்பதையும் அவ்வம்மையார் புராணத்தில் கண்டு இவ்வுண்மையை உணரலாம். இந்நிலையில், உயிர் நிவந்து நின்று, உலகிடைப் பொருள்கள் மிகத் தாழ்ந்த நிலையிற் கிடப்பதையுணர்ந்து, தெய்வத்தையும் தெய்வத் திருவருள் வாய்க்கப்பெற்றோரையும் தவிரப் பிறரையும் பிறவற்றையும் மதியாத நிலையில், அற்பமாய்த் தோன்றும் எதனையும் விரும்புவதில்லை. இந்நிலையிலேதான் தெய்வத் திருவருள் வாய்ப்பொடு பொருந்திய நிலையான செயல்கள் தோன்றும். இந்நிலையை இறுமாப்பென்று கொள்ளுதற்கில்லை; தன்னியற்கையை உள்ளபடி உணரும் நிலையேயாகும். விழைவதும் விழைந்தவற்றைக் கொள்வதும் இழிந்த செயலாகத் தோன்றவும், கொடுப்பதே சிறந்ததென்றுணர்ந்து உலகிற்களிக்கும் வள்ளண்மை தழைக்கும் நிலை இதுவேயாகும். இப்போக்கிலே யளிக்கப் பெறுவனவே இலக்கியமும் கைம்மாறு கருதாது அளிக்கப்பெறும் அருங்கலை பிறவும் ஏனையவுமாம். அருங்கலை ஆசிரியருள்ளும் மிகச் சீரியோரே இந்நிலையை எய்துவரென்பது உண்மை. பிறர், தாம் அறியாதவாறுங்கூட, ஆக்கவியலின் உந்துதலால் தம் சிறப்பியற் செயலை உலகுக்களிப்பர். இவ்வுன்னத நிலையில் நிற்கும் உள்ளத்தினரின் உறவு எத்துணைச் சீரியதென்று அளவிடற்கும் ஆவதொன்றோ!

### துறவு

உலகனைத்துக்கும் முதலாகிய தெய்வத்தின் மாண்பையும் உயிரின் உயர்வையும் பொருள்களின் புன்னிலையையும் உணர்ந்தாலே பொருள்களை மதியாத உள்ளப்பான்மையரும்புகிறது; அந்நிலையில், விருப்பும் வெறுப்புமின்றி நின்று பலவற்றையும் துறந்துவிடுதலோடு, அருளினால், தன்னாலியன்றதை உலகிற்கு உவந்தளிக்கவும் முற்படுகிறது உள்ளம். வறுமையை மேற்கொண்டு, தம்மால் தருதற்கியன்ற சீரிய நூல்களைத் தந்தருளிய திருவள்ளுவர்



முதலிய பெரியோரின் நிலை இதுவேயாம். [1]தம் காலத்து அரசரையும் மதியாதிருந்த புலவர் பலருடைய வரலாறுகள், இவ் வுண்மையையே வலியுறுத்துகின்றன. உள்ளம் இப் பான்மையில் நிலைத்திருக்கும்போது எழுந்து உருவெய்து மாற்றால், உள்ளத்தின் தூய்மை, இங்ஙனம் உருவெய்தும் நூல்களிலும் மேவிநிற்கும். இத்தகைய நூல்களைப் பயிலுந்தோறும், மாசுபடத் தன்னைக் கட்டுண்டு கிடக்கச் செய்யும் பொருள்வேட்கை விலகிநிற்கவும், பிறவற்றைப் பற்றாத தூய மகிழ்ச்சி மேவப்பெற்று, இன்பமெய்தும் உள்ளம்.

இறைவன் கைக்கருவிகளா யிருந்து இலக்கிய நூல்களைத் தரும் ஆசிரியர், அளிமிக உடையராகித் தம்மாலியன்றவற்றை உலகிற்கு உவந்தளிக்குமாறென்னை? இங்ஙனம் கூறுதல் முன்னொடு பின்மலையக் கூறுதல் என்னும் குற்றத்தின்பாற் படுமேயென்று நினைத்தல் இயல்பு. ஆனால், உற்று நோக்கின் அத்தகைய முரண்பாடு இல்லையென்பது புலப்படும். இறைவன் கைக் கருவிகளென்றது உண்மை. ஆயினும், கருவிகளா யமைந்தோர் இயல்புகள் முற்றும் அழிந்துபோமென்று கொள்வதற்கில்லை. இறைவன் செயலுக்கு அன்னவர் தக்கவாறு அடங்கி அமைந்து நின்று இயற்றுதலையே கருவிகளென்பது குறிக்கும். இனி, தம்மியல்பு முற்றும் மறையப்பெறின், தனித்தன்மை என்ற ஒன்று உள்ளதாம் வழியுமில்லை. இளவேனில் அல்லது கார்ப்பருவ நலத்தில் திளைத்துத் தம் மியல்பில் மிகும் செயல், கல்லையொத்த உயிரில்லனவற்றிற்கில்லை. இஃது இங்ஙனமாகவும், உயிருள்ளன, தம்மியல்பிற் கேற்பவே பருவச் செவ்வியில் திளைத்து, விளையும் பயனைத் தம் இயல்புகளுக்கு அமையத்

---

1. "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ, உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு."

கம்பர், தனிப்பாடல்.

தம் உருவங்களிலும் செயல்களிலும் காட்டிடும்; செடிகொடிகள் தளிர்த்துப் பல வண்ணமுள்ள அழகிய நறுமலர்களை ஏந்தி நிற்கும்; வண்டினங்கள் இசைக்கும்; குயில்கள் பாடும்; மயில்கள ஆடும்; கிளிகள் இணையிணையாக இருந்து செருக்கி ஒன்றையொன்று கொஞ்சி மகிழும்; மக்களோ, தம் வடிவத்தின் இயற்கைநலம் மேம்பட, ஆடை அணி மலர்களைக்கொண்டு ஒப்பனை பூண்டு, பருவநலனை யளிக்கும் தெய்வத்தை நினைந்து ஏத்தி விழாக்கொண்டாடித் தம்மா லியன்றவற்றைப் பிறருக்கு வழங்குவர். இப் போக்கை யொட்டியே, ஆசிரியன்மாரும், தாம் கண்டு, கொண்டு, துய்த்து, மகிழ்ந்து, தம் மியல்பிற்குன்றாது உலகுக்குத் தம் நூல்களை உவந்தளிப்பர். எனவே, கருவிகளா யமைந்தவர் அளித்தல் இயலாததுமன்று; இயற்கைக்கு மாறுபட்டதுமன்று. அளிக்கும் நிலையிலும், பெரியோர், அவ் வளி, இறைவன் செயலென்று உணராதாருமல்லர்.

## இலக்கிய ஆசிரியர் பெறும் பேறு

இவ்வாறாக நூல்களைச் செய்தளிப்பதற்கு ஈடாக அன்னவர் தக்க கைம்மாறு எதுவும் பெறுவதில்லை. தக்க கைம்மாறு செய்தலும் இயலாது. அன்றியும், கைம்மாறு கருதியும் நூல்களைச் செய்வாருமல்லர். உலகை யெல்லாம் ஆக்கிடும் ஆக்கவியல் தம் உள்ளத்தில் அரும்பி நூல்களைச் செய்யும்படி கருத்தை யுந்தி நிற்குமாற்றானும், அதை வைத்துக் கருத்து, நூலுருவங்களை ஆக்கிடுமாற்றானும் விளையும் இன்ப உணர்ச்சிக்கு எல்லையும் உண்டோ! இதனைக் காட்டிலும் சிறந்த ஒன்றை உலகம் எவ்வகையில் கைம்மாறாக அளிக்கக்கூடும்? அளிக்கக்கூடுமென்று நினைத்தலும் அறியாமையின் பயனேயாகும். மக்களிற் பெரும்பாலோர் இலக்கியத்தை விழைதற்குரிய காமஞ் சாலா இளமைப் பருவத்தினரேயாக, அதனைப் போற்றற்கும் அறியாதவரேயாவர். எனலும், இலக்கிய நூல்களை ஆக்குவோர்க்குக் கைம்மாறு செய்ய வாய்ப்புமில்லை. ஆகவே, கைம்மாறு கருதாதார் என்றது, கிட்டாததை



வேண்டினாரில்லையென்று பெருமையாகச் சொல்லிக்கொள்வதே போலும் என்று கருதுதலுங்கூடும். மக்களிற் பெரும்பாலோர் இலக்கியச் சுவையை அறியாதவரென்பது உண்மை. ஆனால், இலக்கிய ஆசிரியன்மாரும், தம் நூல்களை, வாணிகப் போக்கிலே, கைம்மாறு கருதி உலகிற்களிப்பதுமில்லை. உலகின் மதிப்பும் அவமதிப்பும் சென்று தீண்டலாகாத உயர்ந்த நிலையிலிருந்தே அன்னவர் நூல்களை யளித்திடுவர். அன்றி, உலகமென்பது உயர்ந்தோர் மேலதாகலின், அன்னவர் மதிப்பே உலகத்தின் மதிப்பாகலின், பிறர் அறிந்து போற்றாமை ஒரு குறையாகக் கொள்ளற்பாலதுமன்று.

## புகழும் கடமையும்

இனி, அன்னவர் புகழை விரும்பி நூல்களைச் செய்வர் போலும், என்று கருதுதலுங் கூடும். அருள் நிலையில், பொருளையோ, அன்றிப் புகழையோ அவர் கருதுவதில்லை; விரும்புவதுமில்லை. அருள் சற்று ஆறிய நிலையில் கடமையை நினைப்பர். அந்நிலையில் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளையும் அன்றிப் புகழையும் விழைதலுங் கூடும். அங்ஙனம் அவர் கருதி விழையும்போது, அருள் நிலையினின்றும் உலகியல் மக்கள் நிலைக்கு இழிந்து நிற்கும் பரிசினால், அந்நிலையில் அன்னவர் செயல் ஆசிரியர் செயலெனக் கொள்ளுதற்கில்லை. அந்நிலையிலுங்கூட, அன்னவர், அவற்றைப் பிற மக்களைப் போன்று பெரிதும் விரும்பி நாடார்; கடமையைப் பொருட்படுத்தும் அளவுக்கு அவற்றைப் பொருட்படுத்தார். பெருவலி படைத்த புயலையொக்கும் கடமை யுணர்விற் சிக்குறும் பொருள் புகழ்களின் வேட்கை சிறு துகளை யொக்கும். அன்றி, நூல்களை யாக்கி யளிக்க விளையும் எல்லையற்ற இன்பக் கடலெங்கே, அந்நீத்தத்திற் சென்று மறைந்திடும் பொருள் வேட்கை புகழ் வேட்கைகளென்னும் சிற்றாறுகளெங்கே! பொதுவாக, மக்கள், எதனையும் பிறர் தரப் பெற்றுக் கொள்ளுதலை விரும்புவராயினும், பிறர்க்கு ஈதலால் எய்தும் இன்பத்தைச் சுவைத்தவர், பெறுதலைப் பொருட்படுத்தார்;

ஈதலையே விரும்பிச் செய்வர். இன்னும், அக்கொடை ஊழி யூழியும் நின்று பிறர்க் கின்பம் பயக்குமென்றறிந் தால் எய்தும் இன்பத்திற்கு அளவுமுண்டோ!

**சுவை**

ஒரே பெற்றித்தான கல்வியை நீண்ட காலமும் பயிலும் பலர், கல்வியின் தொடர்பு நீங்கவும், கற்றவழி நில்லாது, பெரிதும் தம் இயற்கையின்வழியே செல்கின்றனர். கற்றதற் கறிகுறியாகப் பட்டங்களைப் பெற்று, வருவாய்க்கு வழிசெய்து கொள்ளும் பொருட்டும், கற்ற கல்வியின்வழி யெய்திய அறிவை வைத்துப் பல தொழில்களைச் செய்து பணத்தை ஈட்டிக் கொள்ளும் பொருட்டுமே பெரும்பாலோர் கல்வி கற்கின்றனர். அதன் பயனைப் பெறக் கருதிய பதவியோ தொழிலோ வந்தெய்தியபோது, கற்றவற்றை மறந்துவிடுவதன்றி, கற்றவழி நில்லாது பலர் கூசாது ஒழுக்கம் வழுக்கியும் நடக்கின்றனர்; கல்வியின் பயன் செப்பமான அறிவின்வழி யமையும் ஒழுக்கமெனக் கொண்டவர் தொகை இற்றை ஞான்று மிக மிகக் குறைந்ததேயாகும். தெய்வநிலைக் குயர்த்திடும் ஒழுக்கமெங்கே, தீவினையின்வழி வரும் பொருளெங்கே! முன்னையதினும் பின்னையதையே நாடி நிற்கும் மன்பதையின் நோக்கம் எத்துணை இழிந்தது! கற்றுப் பட்டம் பெற்றோரிற் பெரும்பாலோர் செல்லும்வழி இஃதெனின், வாழ்க்கையின் சிறந்த தத்துவங்களை யுணர்ந்து துய்த்து இன்புறும் வகையென்னை? எனின், சீரியோரைச் சார்ந்து நிற்பதேயென்க. மக்கட் பிறப்புக்குச் சிறப்பில்லாத நோக்கங்களோடு செல்லும் மாந்தர் பலருங்கூடத் தம் இயற்கைக்கிணங்கப் பல தொகுதிகளாக மேவி நிற்கின்றனரென்றால், சிறந்த நோக்கமுடையாரும் தம் போன்றாரையே மேவி நிற்றல் இன்றியமையாததாகுமன்றே! பறவைகளேயாயினும், அழுகிய இறைச்சியை நாடும் கழுகும் மீனை நாடும் நாரையும் இனமும் வேம்பை யுவக்கும் காக்கையும் தேனையே விழையும் பூஞ்சிட்டும் வெவ்வேறு இனமாகப் பலவேறு துறைகளில் வாழ்கின்றன; ஒன்று



மற்றொன்றின் சூழலையும் துறையையும் அணுகுவதில்லை.

**முதல் இடை கடைச் சங்கங்கள்**

இவ்வாறே, சிறந்த துறைகளில் விளையும் சுவைகள் நல்கும் இன்பங்களை விழைபவரும் அச் சுவைகளை யறிந் தின்புறுவார் கூட்டத்தையே விரும்பி நிற்றல் வேண்டும். இக்கருத்தையொட்டி நிறுவப்பெற்றனவே முதல் இடை கடைச் சங்கங்கள். அத்தகைய சங்கங்களின் உறுப்பினர் நற்சுவைச் சூழலிடை வைகும் வாய்ப்புடையவராவர். எனவே, அன்ன கழகங்கள் இலக்கிய நூல்கள் தோன்றி நிலவுதற்கு ஏற்ற களன்களாகும். கல்வி யறிவுடையோரே யெனினும், அவரிடையும் பலர் நற்சுவை யறியாதாரே யாவர். மக்கட் குழுவிற்குச் சிறப்பை யளிக்கும் அருங்கலைகளின் தலைநிற்கும் இலக்கியம் நற்சுவை நன்கறிவாராலேயே யாக்கப்படுமாகலான், அன்னவர் தரும் நூல்களைப் பயிலுமாற்றான், நற்சுவை யறிவு வளரும். தாமாக நுகர்தற்கியலாதவர் வல்லுநரைத் துணை கொண்டே துய்க்கப்பாலராவர்.

**பருவப் போக்கும் சுவையும்**

பருவ இயல்புகளைக் கடந்து நிற்பவன் இறைவன். அவனை மேவி நிற்கும் வரை மனம் அசைவற்றுப் பிறிதொன்றையும் நாடாது; கங்குல் பகலற்ற எல்லையில் அமைதியாக இருக்கும். பருவ நலனைக் கடந்து நிற்பினும், பருவ நலன்களுக்குப் பிறப்பிடமும் இறைவனேயாம். ஊதா முதல் சிவப்பு வரையுள்ள எழுவகை வண்ண ஒளிகளும் வெள்ளை ஒளியிலேயே செறிந்து நின்று மலரும் தன்மையை யொத்துப் பருவமெல்லாம் பருவமற்ற நிலையிலிருந்தே மலரும். பேரண்டத்தின் பெரும் பருவப் போக்கிலேயே உருவாகி யுள்ளது இவ்வுலகம்; பிற உலகங்கள் தோன்றிய வகையும் இஃதேயாம். இனி, இவ்வுலகத்தில் காணப்படும் நலங்களும் வாழ்க்கையின் முறையும் பருவப் போக்குடையனவேயாம். இலைகளை யெல்லாம் இழந்து

வறிய கொம்புங் கோலுமாய் நிற்கும் மர வகைகள், சில நாட்களுக்குள் கொழுந்துகளையும் குருத்துக்களையும் முகைக் கொத்துக்களையும் ஏந்தி நின்று பொழுதொடு நலன் மாறி வளர்ந்து செழிக்கும் போக்கு மக்களுடைய வாழ்க்கையிலும் அமைந்து கிடக்கின்றது.

வெயிலின் வெப்பத்தால் துன்புறு மொருவன் நிழலை விழையுமாறு போன்றும், குளிரினால் துயருறுவானொருவன் வெப்பத்தை நாடுவதே போன்றும், உள்ளம் தன் நிலைக்கேற்பப் பல சுவைகளை விரும்பும். சுவைகள், இலக்கிய நூல்களில் பருவச் செவ்வியில் அமைந்து கிடக்கும். இப்போக்கு, நூல் செய்யப்பெறும் முறையிலும் அது நுவலும் பொருட்சுவைகளிலும் பொருந்தி நிற்கும்.

நாடகம் காப்பியம் முதலிய பரந்த நூல்களில், உணர்ச்சி மிகுமாற்றான், உள்ளம் எழுச்சியுற்றுப் பின் ஆறி நிற்றற்கான முறையில், பொருள் வகை, நற்சுவைக்குப் பொருந்தியவாறு ஏற்ற நடையில் நுவலப்பெறும். பகற்பொழுதில் தொழிற்படும் உடலும் மனமும் இரவில் சோர்ந்து அயர்ந்து விடுதலை யொத்து, வருணனை நிரம்பிய பகுதிகள், அவற்றை யுணர்ந்து பின்பற்றிச் செல்லும் அறிவிற்கு அதிக உழைப்பைத் தருதலால், அவற்றை யடுத்து வரும் பகுதிகள், அறிவின் உழைப்பு அதிகமில்லாமல் பின்பற்றிச் செல்லத் தக்கனவாய் அமைக்கப்படுதல் இயல்பு. இனி, காட்சிகளாயினும் நிகழ்ச்சிகளாயினும், இன்பம் பயக்குமாற்றான் விரும்பத்தக்கனவும், துன்பத்தைத் தருமாற்றான், வெறுப்புக்குரியவையுமாக இருபெரும் பிரிவுகளாக அமையும். வாழ்க்கையில், இன்பத்தை விரும்பி, அதனைப் பயக்கும் பொருள்களைத் தம்மதாக்கிக் கொள்ளவும், அதனைப் பயக்கும் நிகழ்ச்சிகளின் கால வரம்பை நீட்டித்து அவற்றொடு தம் தொடர்பை நிலைக்கச் செய்யவும், துன்பத்தைத் தரும் காட்சிகளினின்றும் விலகி நின்று அவற்றின் தொடர்பின்றிச் செய்துகொள்ளவும் முயல்வரேனும், நாடகம் முதலிய இலக்கியங்களில், பிறர் துன்பத்தையும் அயர்ச்சியையும் காண்பதிலும்



உணர்வதிலும் விருப்பம் கொள்வது மக்கள் இயற்கையாகும். இனிப்பு பெரிதும் விரும்பப்படினும், கசப்பு முதலிய சுவைகள் ஒன்றும் பலவும் அதனொடு சேர்ந்தவாற்றானன்றி உணர்ச்சிக்கு நிறைவை யளிக்கும் திறத்ததாகாதது போன்றும், இரவின்றிப் பகலொன்றே ஒரு நாளாகாதது போன்றும், இன்ப வியற்கையும் துன்ப வியற்கையும் செறிந்த நிகழ்ச்சிகள் கலந்தாலன்றி சுவையுணர்ச்சி நிறைவெய்துவதில்லை. இனி, இவ்வாறன்றிப் பெரும் பகுதியும் துன்ப நிகழ்ச்சிகளா யமைந்தவற்றைச் சிறந்த இலக்கியங்களாகத் தரவும் வல்லுநராவர் பேராசிரியன்மார்.

### சுவை வகை

இன்ப நிகழ்ச்சிகளும் துன்ப நிகழ்ச்சிகளும் மாறித் தோன்றி நடந்து உள்ளத்திற்கு நிறைவை யளிக்குமாகையான், ஒருவகைச் சுவை பொருந்திய பகுதி, கற்போருள்ளம் வெறுப்பை யடையாதவாறு, அளவொடு அமைதலும், அதனை யடுத்த பகுதி பிற சுவை கொண்டதாக இருத்தலும் வேண்டும். ஒரு நந்தனவனத்தில் பலவகை உருவங்களும் நிறங்களு மமைந்த இலைகளையும் மலர்களையுமேந்திய பல செடி கொடிகளின் திரண்ட காட்சி உள்ளத்தைக் கவருமாறே, பலதிறச் சுவைகளமைந்த இலக்கியப் பகுதிகள், இயற்கையாகவே மாறி வரும் நலன் வகைகளை விரும்பும் உள்ளத்திற்கு விருந்தாகின்றன :—

"ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்."

—இராமா. ஆரணிய. சூர்ப்பணகை, 5.

எனச் சீதையும் இராமனும் ஒருவர் நடையழகை மற்றொருவர் கண்டு நலத்தை நுகர்ந்தவாற்றான் தோன்றிய உவகையின்வழி நகை பிறந்தது.

"நிருதர்த மருளும் பெற்றே
னின்னலம் பெற்றே னின்றே
டொருவருஞ் செல்வத் தியாண்டு
முறையவும் பெற்றே னென்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்று
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி றிலங்க நக்கான்."
—இராமா. ஆரணிய. சூர்ப்பணகை. 56.

எனத் தன்னை மணந்து கொண்டால் இராமன் பெறவிருக்கும் வரிசை யாதியவற்றைச் சூர்ப்பணகை சொல்லக் கேட்டு அவனுக்கு எள்ளல்வழி நகை பிறந்தது.

"நகையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வகையாலே நினதுபுகழ் வசையுண்ட தாகாதோ
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொசித்த
இசையாலே நிறைந்தபுயத் திராவணவோ விராவணவோ."
—இராமா. ஆரணிய. சூர்ப்பணகை. 110.

என, மூக்கு காது முலைகளை யிழந்தவாற்றான் சூர்ப்பணகை அழுதரற்ற நேர்ந்தது.

"பிரியார் பிரிவே தென்னும் பெரியோய் தகவோ வென்னும்
நெறியோ வடியே னிலைநீ நினையா நினைவே தென்னும்
வறியோர் தனமே யென்னும் தமியேன் வலியே யென்னும்
அறிவோ வினையோ வென்னு மரசே யரசே யென்னும்."
—இராமா. அயோத்தியா. நகர்நீங்கு. 31.

எனக் கணவன் மூர்ச்சித்து உணர்விழப்பக் கோசலை அழுது நுவலலுற்றாள்.

"விளிவார்விளி வதுநீவினை விழைவாருழை யன்றோ
களியாலிவ னயர்கின் றன வுளவோ கன லுமிழும்
ஒளிவாய்மழு வுடையாய் பொர வுரியா ரிடை யல்லால்
எளியாரிடை வலியார்வலி யென்னாகுவ தென்றான்."
—இராமா. பால. பரசுரா. 20.



என, இராமனைப் பொர வந்த பரசுராமன் சினத்தைக் கண்டு விளைவஞ்சிய தயரதன், மென்மை பற்றி இளிவரல் மேவியவாற்றாற் கூறியதாகும் இது.

"எம்பியே யிறக்கு மென்னி
னெனக்கினி யிலங்கை வேந்தன்
தம்பியே புகழ்தா னென்னை
பழியென்னை யறந்தா னென்னை
நம்பியே யென்னைச் சேர்ந்த
நண்பரி னல்ல வாமேல்
உம்பரு முலகத் துள்ள
வுயிர்களு முதவி பார்த்தால்."
—இராமா. உயுத்த. நாகபாச. 240.

எனத் தம்பி நாகபாசத்தாற் கட்டுண்டு கிடப்பதைக் கண்டு அலக்கணுற்ற இராமன், தான் எய்திய இளிவரல் பற்றிக் கூறியதாகும் இது.

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னான் உருவுகண் டாரையொத்தே."
—இராமா. பால. உலாவியல். 19.

என, அன்று வரை தாம் கண்டிராத இராமனுடைய சிறந்த வடிவழகைக் கண்ட மிதிலை நகரத்துப் பெண்கள் புதுமையால் மருட்கை (வியப்பு) எய்தியதைக் கூறுகின்றது இச்செய்யுள்.

"கடங்கலுழ் தடங்களிறு கையொடுகை தெற்றா
வடங்கொள நுடங்குமிடை யாண்மறுகி வானோர்
இடங்களு நெடுந்திசையு மேழுலகு மெங்கும்
அடங்கலு நடுங்கவுரு மஞ்சநனி யார்த்தாள்."
—இராமா. பால. தாடகைவதை. 50.

எனப் பெருவலி படைத்த தாடகை சினங்கொண்டு ஆர்த்ததைக் கண்டு அனைத்துலகும் இடியேறும் அஞ்சியதைக் கூறுகின்றது இவ்விருத்தம். அன்றியும்,—

"தறைவா யவன்வந் தடிதா முதலும்
கறைவாள் படவா விகலங் கினள்போல்
இறைவா வினையோ யெனவேங் கினளால்
பொறைதா னுயிர்போ வதுபோற் புகல்வாள்."
—இராமா. ஆரணிய. சடாயு. 73.

என்னும் விருத்தம், தீச்செயல் புரிவான் இராவணன் வந்தணுகியதைக் கண்டு, சீதை அஞ்சி யரற்றியதைக் கூறும்.

"இறந்தான் தந்தை யீந்த வரத்துக் கிழிவென்று
துறந்தா னீதென் றன்னவன் மைந்த னரசெல்லாம்
துறந்தான் றாயின் சூழ்ச்சியின் ஞால மவனோடும்
பிறந்தா னுண்டா னென்னும தென்றுற் பெறலாமே."
—இராமா. அயோத். பள்ளியடை. 78.

என, இசைமை நோக்கிப் பெருமிதம் (வீரம்) பிறந்தது. அன்றியும்,

"அஞ்சன வண்ணனென் னுருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடி னுய்க்குக னென்றெனை யேசாரோ."
—இராமா. அயோத்தியா. குக. 14.

என, இசைமையும் கொடையும் கருதி வீரம் தோன்றியது.

"கண்ட மாமுனி விழிவழி யொழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பரா யொழியுமென் றழியால்
விண்டு நீங்கினர் விண்ணவ ரிருசுடர் மீண்ட
எண்டி சாகமு மிருண்டது சுழன் றதெவ் வுலகும்."
—இராமா. பால. அகலிகை. 14.

எனப் போற்றுதலுக்குரிய மாலையை மதித்திலன் இந்திரனெனக் கருதியவழி வெய்ய மாமுனிக்கு வெகுளி பிறந்தது. அன்றியும்,

"நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
போயீ ரேநீ ரின்ன மிருக்கப் பெறுவீரே



மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்னு மெனக்கென் றருவீரே."
—இராமா. அயோத்தியா. பள்ளியடை. 76.

எனக் குடிகோள் கண்டு வெகுளியுற்ற பரதன் மொழிய லுற்றான்.

"நல்லியன் மகரவீணைத் தேனுக நகையுந் தோடும்
வில்லிட வாளும்வீச வேல்கிடந் தனைய நாட்டத்
தெல்லியன் மதியமன்ன முகத்திய ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவநோக்குந் தோகையி னுடி னுரே."
—இராமா. பால. கார்முக. 38.

எனவும்,

"வடங்களுங் குழைகளும் வான வில்லிடத்
தொடர்ந்தபூங் கலைகளும் துகிலுஞ் சோர்தர
நுடங்கிய மின்னென நொய்தி னெய்தினள்
நெடுந்தடங் கிடந்தகண் ணீல மாலையே."

"வந்தடி வணங்கினள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகையா ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனத் தொழுது சொல்லுவாள்."
—இராமா. பால. கார்முக. 56, 57.

எனவும் நுகர்ச்சி தரவல்ல வீரனுடைய அரிய செயலைக் கண்டு மகிழ்ச்சி பிறந்தது.

சூர்ப்பணகைப் படலம் ஒன்றிலேயே நகை அழுகைச் சுவைகளடங்கிய பகுதிகள் இருப்பதைக் கண்டாம். அன்றியும், அப் படலத்திலேயே [1]இளிவரல் வெகுளி

---

1. *"காவி யோகய லோவெனும் கண்ணினைத்
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்
பாவி யேனையும் பார்க்குங்கொ லோவெனும்
ஆவி யோயினு மாசையி னொய்விலாள்."
—இராமா ஆரணிய. சூர்ப்ப. 87.

* காவி - கருங்குவளை.

யாதிய பிற சுவைகள் மேவிய பகுதிகளும் அடங்கியுள்ளன. இப் படலம், இராமாவதாரத்தில் சுவைகள் செறிந்த பகுதிகளில் ஒன்றாகுமெனக் குறிப்பிடத்தக்கது. கம்பருடைய கவித்திறம் நனி வாய்ந்த பகுதி இஃதென்பதில் ஐயமில்லை.

**பிற சுவைகள்**

இனிக் காமம் பரிவு பொறாமை வாய்மை கயமை முதலியவற்றை மக்களின் ஒழுக்கங்கட்குக் காரணங்களாகக் கொண்டு இவ்வெண்வகைச் சுவைகளிலே வைத்து அடக்கிவிடக் கூடுமெனினும், அவை, வாழ்க்கையிலும் வாழ்க்கையை அழகுபடவும் திருத்தமாகவும் காட்டிடும் இராமாவதாரம் போன்ற பெருங்காப்பியங்களிலும் நாடகங்களிலும் மிகுதியும் தொழிற்படுமாற்றானும், கதைகளின் போக்குக்குக் காரணமாதலோடு, பெரிதும் சுவைக்கத்தக்க பண்பினவாகையானும் அவை ஒவ்வொன்றையும் தனிப்பட வைத்தெண்ணுதல் இழுக்காகாது.

**இயற்கைக் காட்சி**

இவையேயன்றி, தனிப்படப் பொலியும் இயற்கைக் காட்சிகளும், அவையே சிறுபொழுது பெரும்பொழுது ஆயவற்றின் இயல்புகள் தோயக்கொண்டு பொலிவனவும், கதையின் இடையிடையே நிகழ்ச்சிகட்குப் பின்னணிகளாக விளங்குவனவும், நிகழ்ச்சிகளின் சுவையை யுண்டு திகழ்வனவும் பெரிதும் சுவை பயப்பனவாகும். மிதிலைக் காட்சிப் படல[1]த்திலுள்ள மதியின் வருணனை, படிப்போர் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை யளிக்கும் அழகு வாய்ந்தது. அன்ன செவ்வியினதேயாகும் ஊர்தேடு படல[1]த்திலுள்ள மதியின் வருணனையும். தாடகை வதைப் படலத்தின்[2] தொடக்கத்திலேயேயுள்ள பாலைநிலத்தின் வருணனை ஒரு சிறந்த இலக்கியப் பகுதியாகும். ஆறாத வெப்பத்தினால் இளைத்த நிலத்தின் காட்சி, அப் பகுதியை ஒருமுறை படித்தோர் மனக்கண்ணின் முன்னே என்றும் நிலவும் தன்மையது. அன்றியும், அது பின்வரும் பசையற்ற நெஞ்சமுடைய தாடகையின் வரலாற்றிற்குத் தக்கவொரு பின்னணியாயும் திகழ்கின்றது. இப்பகுதி, பிற சீரிய தமிழ் இலக்கியப் பகுதிகளோடேயன்றி, இன்னும் பிற மொழி இலக்கியங்களிலுள்ள சிறந்த பகுதிகளோடும் வைத்து மதிக்கத் தக்க சிறந்த பண்பினதாகும். "[3]உண்டாட்டுப் படலத்தின் முதலிலுள்ள மதியின் வருணனை அழகொடு உணர்ச்சியும் கொண்டு துளும்பும் தன்மைத்து; அப் படலத்தில், பின்னே சொல்லப்படும் விளையாட்டுக்குத் தகுந்த பின்னணியாயும் அமைந்துள்ளது; அன்றியும், மதுவுண்டு காமவெள்ளத் தாழ்ந்து களித்து, இன்பம் துய்ப்பதாகப் பின்னே வரும் நிகழ்ச்சியின் செவ்வியை மதி நிலவின்மீதேற்றி வருணித்திருப்பது, பின்வரும் சுவையின் விளைவை ஒரு சிறிது முன்னே குறித்து, விளைவின்

"ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா னென்றுரை
நாக்கரியுந் தயமுகனார் நாகரிக ரல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
போக்கரிதிவ் வழக்கையெல்லாம் புல்லிடையே யுகுத்தீரே."
—இராமா. ஆரணிய. சூர்ப்ப. 125.

1. பின்னிணைப்பு: அ பார்க்க. (இராமா. பால. மிதிலைக். 70-75.)



1. பின்னிணைப்பு: கூ பார்க்க. இராமா. சுந்தர. ஊர்காண். 52-60.
2. „ கo „ „ பால. தாடகை. 5-16.
3. "வெண்ணிற *நறைநிறை வெள்ள மென்னவும்
†பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும்
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவும்
தண்ணிற நெடுநிலா தழைத்த தெங்குமே."

"கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப் பிரிந்
‡துலந்தவர்க் குயிர்சுடு விடமு மாயுடன்
§புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே."
—இராமா. பால. உண்டாட்டு. 1, 2.

* நறை - தேன்.
† பண் - பாட்டு.
‡ உலத்தல் - கெடல்.
§ புலத்தல் - புணர்ச்சிக்கமையாதது போல் முறையடல்.

பயனைத் தக்கபடி சுவைக்குமாறு, படிப்போர் உள்ளத்தை ஏற்ற நிலைக்கு உய்த்து நிறுத்தவும் செய்கிறது.

**சுவைக்கு முதல் அழகு**

இனி, திங்களும் அதன் நிலவின் நலத்தைப் பூண்ட உலகுமேயன்றி, ஞாயிற்றின் தோற்ற மறைவுகளின் செவ்விகளும், அஞ் ஞாயிற்றின் ஒளிநலத்தைத் தாங்கும் உலகமும், உலகின் பல இயற்கைப் பகுதிகளின் காட்சிகளும், கிளி மயில் முதலிய உயிர்களின் வனப்பும், உயிர்களிற் சிறந்த மக்களிடை வடிவழகிற் சிறந்த மாதர் உருநலனும், மற்றும் இயற்கை யழகுடைய காரிகையார் நலன் மேம்படுமாறு அன்னவரைக் கோலஞ்செய்ய வாய்க்கும் [1]இணையற்ற திருவொடு திகழும் எழிலுருவங்களும்,

1. *“கஞ்சத்துக் களிக்கு மின்றேன்
கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிளியைக் கெல்லா
மருளினு ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தம்
†தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு
மனமென்ப தொன்றே யன்றோ.”

‡“இழைகுலா முலையி னாளை
யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா §வோதி நல்லார்
களிமயக் குற்று நின்றார்
$உழைகுலா ¶நயனத் தார்மாட்
டொன்றொன்றே விரும்பற் கொத்த
தழகெலா மொருங்கே கண்டால்
யாவரே யாற்ற வல்லார்.”

—இராமா. பால. கோலங்காண், 19, 20.

* கஞ்சம் - தாமரை.
† தகை - நிலை.
‡ இழை - அணிகலன்.
§ ஓதி - கூந்தல்.
$ உழை - மான்.
¶ நயனம் - கண்



கற்றோருள்ளம் சுவைத்தின்புறும் வண்ணம் இலக்கியங்களில் ஒப்பனை செய்து காட்டப்பெறுகின்றன. இங்ஙனம், தெள்ளிய சுவையை யளிக்கும் பலவற்றிலும் சுவைக்குக் காரணமாய் நிற்பது அழகு. அழகெனினும் இன்ப வடிவெனினும் ஒக்கும். என்னை? அழகின் பயன் சுவை; சுவையின் பயன் இன்பமாகலின். இன்பம் பயவாத நூல் இலக்கிய மாகாது என்றபோது, நகை அழுகை முதலிய சுவை எட்டினுங்கூட அழகென்பதுண்டோ? எனின், உண்டு! இலக்கியத்திடை நிகழும் அழுகையும் அழகுணர்ச்சியால் எழுந்திடும் தக்க சார்பிடை, ஏற்ற முறையில், அளவுபட, இன்பம் பயக்கும் சுவையை யளிக்கும் பெறற்றாய் அமையும். பிற சுவைகளும் இவ்வாறே வைத்தெண்ணப் பட வேண்டும். பல சொல்ல வேண்டியதென்னை? நாளும் துய்க்கப்படும் உணவும் இன்பம் பயக்க வேண்டின், சுவை பொதிந்த கனியாதிய இயற்கைப் பொருளெனின், தக்கனவாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; சமைக்கப் பெற வேண்டியனவாயின், முறையும் சமைக்கப்பெறும் பொருள்களின் அளவும் தக அமையச் சமைக்கப் பெற்றவையாதல் வேண்டும்; அன்றியும், அமுதேயாயினும் அளவே கொள்ளப்படுதலும் வேண்டும். எனவே, முறையும் அளவும் அழகுணர்ச்சியாலெழும் பாகுபாடுகளாயினமையின், இன்பம் பயக்கும் சுவைக்குக் காரணம் அழகெனப் பொதுப்படக் கூறின் தவறென்னை? ஆகவே, அழகுணர்ச்சியே சுவை துளும்பும் பலவற்றையும் இலக்கிய நூல்களிலேயும் பிற அருங்கலைகளிலேயும் உருவாக்கிடுமென்பாம்.

**அவலம்**

இலக்கிய நூல்களிலேயன்றிப் பிறஇடங்களிலுங்கூட, இயல்பாக மக்கள் அவலச் சுவையை விரும்பித் துய்ப்பதைக் காண்கின்றோம். சிற்றூர்களிலே, கல்வி யறிவு நிரம்பாத மக்களிடை, அவர் விரும்பும் வகையில் நடைபெறும் கூத்துக்களில், அரிச்சந்திர காதை போன்ற அவலச் சுவையுடையனவும் உண்டு. எனவே, இச் சுவை இலக்கிய ஆசிரியர் ஆற்றலைக் கொண்டு மட்டும் மக்களை விரும்பச்

செய்யுமாறு ஆக்கப்படுவதன்று; மக்களின் இயல்பை அடிப்படையாகக் கொண்டே உருவளிக்கப்படுவதாகும். அவலச் சுவை, இன்பத்தைப் பயப்பதெங்ஙனம் என்பதை முற்றும் ஆராய்ந்து அறிவதற்கியலவில்லை. காளையரின் செறிந்த தோற்றத்தைக் கண்டு மகிழும் உள்ளம், வல்லியரின் மென்மையையும் கண்டு இன்புறுகின்றது. இவ்வாறே, செறிவை யளிக்கும் இன்ப நிகழ்ச்சிகளையேயன்றி, சோர்வை யளிக்கும் துன்ப நிகழ்ச்சிகளைக் காணும் விருப்பமும் மக்களுக்கு இயல்பா யமைந்துள்ளது.

நேர்மையான உள்ளம் பிறர் துன்புறுதலை விழையாது. எனவும், அவலச் சுவையை மக்கள் விரும்புவானேன்? உயிரின் உன்னத நிலை, வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கடந்த அமைதியான நிலையேயாகும். ஆனால், வாழ்க்கையும் மக்கள் உள்ளமும் இன்ப துன்பங்களைச் சார்ந்தே நிற்கின்றன. இவற்றைக் கடந்த அமைதி நிலையை வாழ்க்கையொடு வைத்து எண்ணலாகாது. இரவும் பகலும் சேர்ந்தே ஒரு நாளாவது போன்றே, இன்பமும் துன்பமும் பொருந்தியதேயாகும் வாழ்க்கை. இவ்வலைப் போக்கிலேயே சுவை அமைந்துள்ளது. அலைப் போக்கிலே ஓட்டமுண்டு; அமைதி நிலையோ போக்குவரவற்றதாகும்; அந்நிலை சுவை யுணர்வைக் கடந்ததாகும். சுவை, இன்பத்தை நினைப்பூட்டுகிறது. சுவை எட்டினுள், நன்னிலையைப்பற்றியன நான்கு; அல்லாதனவும் நான்கு. சுவைக்கு முதல் அழகாதலின், சுவை பலவற்றிலும் அழகு செறிந்திருத்தலும் வேண்டும். பகையால் தாக்குண்டானொருவன் இன்புறுவதில்லை. எனவே, அவலத்தில் இன்பம் பிறக்குமாறு எங்ஙனம்? இன்பத்தைப் பயப்பது சுவையேயாகும். துயரைச் சுவைக்குமாறில்லையாகலான், இன்பம் மேவும் வாய்ப்பும் அவ்வழி இல்லையென்க.

துயரைத் தாம் அனுபவித்தலை விரும்பாரெனினும், பிறர் துயருற்றதைச் சொல்லக் கேட்கவும் நூல்களின்



வாயிலாக அறியவும், அரங்கிலும் திரையிலும் கண்டு கேட்கவும் விரும்புகின்றனர் மக்கள். பிறர் துயருறுதலை விரும்பாதவழியும், அதைக் காணலையும் கேட்டலையும் விரும்புதல் தம் இயல்பை யொட்டியதே யாகும். இன்பமேயன்றித் துன்பமும் மேவியதாகும் வாழ்க்கை. தம் சாயலைக் கண்ணாடியிற் காணும் விருப்பம் மக்களுக்கு இயல்பாக அமைந்துள்ளமை போன்றதேயாகும் வாழ்க்கையிலமைந்துள்ள நலத்தையேயன்றி அவலத்தைக் காணும் விருப்பமும்.

இனி, அவலத்தைக் காணும்போது மக்களின் இயற்கைக் கட்டு முற்றும் அதிர்ச்சியுறுகின்றது. அவர் உணர்ச்சியின் வேர் நுனிகளின் வரையும் செல்லுகின்றது அவ்வதிர்ச்சி; உள்ளம் கனிந்து கனிந்து இளகுகின்றது. அதனிடை அனுதாபம் பொங்கி யெழுகின்றது; துயருழப்போர், நற்பண்பைச் சார்ந்து நின்றும் துன்புற நேர்வதைக் கண்டு உள்ளம் வியப்பெய்துகின்றது; குற்றமறியாத உள்ளத்தினரானபோதும் செயலற்றவராய்த் துயரைத் துய்க்க நேர்ந்ததெங்ஙனம்? என்று நினைந்து திகைத்து நிற்கும் நிலையில், விதிவசமாய் முடிந்ததாதல் வேண்டுமென்பதை உணர்கின்றது உள்ளம்; எல்லாவற்றிற்கும் காரணனாகி, வாழ்க்கையை இயக்கி, எங்கணும் மறையாய் மேவி நிற்கும் இறைவனை நினைந்து, உலகின் நிலையாமையைத் தெளிகின்றது உள்ளம்; துயரால் வாழ்க்கை சிதைவுற்றபோதும், சிதையாது வெற்றியொடு திகழும் அறத்தையும் நற்பண்புகளின் செவ்வியையும் தேர்கின்றது உள்ளம். இன்னவாறு, மக்களின் இயற்கை முற்றுக்கும் பொருளாகி நிற்பதாகும் அவலம். [1]தம் சாயலைத் தாம் காண விரும்பும் மக்கள், வாழ்க்கையில்

1. "......The purpose of playing, whose end, both at the first and now, was and is, to hold as 'twere, the mirror upto nature; to show virtue her own feature, scorn her own image, and the very age and body of the time his form and pressure".

—W. Shakespeare, Hamlet: Act III Scene II.

மேவிடும் இன்ப நிகழ்ச்சிகளையேயன்றித் துன்ப நிகழ்ச்சிகளையும் அறிந்து இன்புறுதற்குக் காரணம் இஃதே போலும்.

இனி, இலக்கியத்திலும் அரங்கிலும் பிற அருங்கலைகளிலும் அவலத்தைக் காண விரும்பும் இயல்பு, சுவைக்குக் காரணமாகிய அழகு அதனிடைப் பொதிந்து நிற்றல் காரணமாகவும் அமைந்ததாதல் வேண்டும். என்னை? அழகின் வழியே சுவையும் சுவையின் வழியே இன்பமுமுளவாகுமாகலின். [1]இன்பத்தை யளித்தல் இலக்கியமாதிய அருங்கலைகளின் விளைவாகையான், அக் கலைகளில் மேவிடும் துன்ப நிகழ்ச்சிகள் இன்பத்தை நல்குமாறு அழகுபட அமைதல் வேண்டும்.

வாழ்க்கையின் ஆழ்ந்தமைந்த பரிசையொத்த ஆழமுடையது அவலம்; இதுபற்றியே, அவலச்சுவை மேவிடும் நல்ல நூல்களை இயற்றிடும் ஆசிரியன்மாரும் சிறந்த ஆற்றலும் முதிர்ந்த அனுபவமுமுடையவராதல் வேண்

1. "The right art is that alone which creates the highest enjoyment".

.........In the presence of the most tragic circumstances, represented in a work of Art, the feeling of enjoyment, as is well known, may still subsist: representation of the most utter calamity, of the liveliest anguish, is not sufficient to destroy it: the more tragic the situation, the deeper becomes the enjoyment; and the situation is more tragic in proportion as it becomes more terrible".

—Mathew Arnold, The choice of subjects in poetry.

"Sorrow, terror, anguish, despair itself, are often the chosen expressions of an approximation to the highest good. Our sympathy in tragic fiction depends on this principle; tragedy delights by affording a shadow of the pleasure which exists in pain. This is the source also of the melancholy which is inseparable from the sweetest melody. The pleasure that is in sorrow is sweeter than the pleasure of pleasure itself".

—P. B. Shelly, A defence of poetry.



டும். மேனாட்டில், இலக்கியத்தில் மேவிடும் சுவைகளை, நகை (Humour), அவலம் (Pathos), அங்கதம் (Satirē) எனப் பாகுபாடு செய்துள்ளனர். அவலத்தைக் கண்டாம்; நகையைக் காண்பாம்.

**நகை**

கடலினைய அகற்சியும் ஆழமுமுடையது அவலமென்றால், துள்ளியெழுந்து திரிந்து மடிந்து சிதறிச் சிரிக்கும் அலைகள் மேவும் அக் கடலின் பரப்பே போல்வது நகைச்சுவை; வாழ்க்கையின் ஆழ்ந்த தத்துவத்தை நினைத்துப் பாராது, பரப்பிலே துள்ளித் திரியும் மனம், வாழ்க்கையின் மெருகுத்தன்மையை மகிழ்ந்து இயைபில் லனவற்றிலும் இயைபைக் கற்பித்து நிற்க, [1]எள்ளல் இளமை பேதைமை மடம் என்னும் நான்கு வகையில் அது தோன்றிடும்; துயரிலும் ஆழ்ந்த சிந்தனையிலும் பொதிந்து கிடக்கும் மனத்தைப் பரப்பிற்கிழுத்து மகிழ்ந் திடச் செய்யும். வாழ்க்கையில் ஆழமும் மறையுமேயன்றிப் பரப்பும் மெருகும்கூடப் பொருந்தி நிற்குமாற்றான், வாழ்க் கையின் சிறந்த சிகரங்களாய இலக்கிய மாதிய அருங்கலை களிலும், அவலத்துக்கேயன்றி, நகைக்கும் இடமுண்டு.

**அங்கதம்**

இனிக் [2]குற்றங்களை நகை தோன்றக் கூறி இன்புறுதல் அங்கதமாகும். குற்றங்களைக் கூறுது கூறியும் குறிப்பாக மொழிந்தும் வெள்ளையாக உரைத்தும் நகையை அரும்பச் செய்வதுண்டு. இது எள்ளல்வழித் தோன்றும் நகையொடும் மயங்கி நிற்கும்:—

1. "எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப."
—தொல். பொருள், 252.

2 "வசையொடும் நகையொடும் புணர்ந்தன் ருயி
னங்கதச் செய்யு ளென்மனார் புலவர்."
—தொல். பொருள். 441.

"நிருதர்த மருளும் பெற்றே
னின்னலம் பெற்றே னின்னே
டொருவருஞ் செல்வத் தியாண்டு
முறையவும் பெற்றே னென்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னு
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி றிலங்க நக்கான்."
—இராமா. ஆரணிய. சூர்ப்ப. 56.

என்னும் விருத்தத்தின் பொருள் நகையையும் அங்கதத்தையும் தழுவி நிற்கின்றது.

**விள்ளும் ஆற்றல்**

கருத்து உருவெய்தும்போது, அழகுணர்ச்சியானது தகுதியென்னும் முறையின் வாயிலாக அவ்வுருவங்களைத் தக்கவாறு அமையச் செய்கின்றது. கைபுனைந்தியற்றாத வகையில், இயற்கைப் பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் உருவங்கள், இயற்கையில் தக உருவெய்துகின்றன. ஆனால், மக்களின் மெய்ப்பாடு சொல்லாதிய களன்களில் அரும்பி மலரும்போது, கருத்துக்கள் எய்தும் உருவங்களின் தகுதியில் எத்துணை ஏற்றத் தாழ்ச்சிகளுள்ளன வென்பதை உலக வழக்கில் நாளும் காண்கின்றோம். சிலர் மெய்ப்பாடு இன்பத்தை யளிப்பதும் சிலர் மெய்ப்பாடு வெறுப்பைத் தருவதும் பலருமறிவர். சில மாதருடைய மொழியிலும் நடையிலும் அழகு சிந்திப் பலதர இன்பம் பயந்திட, சிலர் நடையும் மொழியும் வெறுப்பைத் தந்திட, பிறர் நடையும் மொழியும் அவ்வகை உணர்ச்சியொன்றும் பயவாதனவேயாம். எனவும், இன்பம் பயக்கும் எழிலுருவங்களாய செய்யுள் முதலிய இலக்கிய வகைகளின் மொழியுருவங்களை யளித்தல் பலருக்குமியலாதென்பது ஒருதலை: இயற்கை யாற்றல் வாய்க்கப் பெற்றார்க்கன்றி, விள்ளும் திறம் பிறர்க்கு வாய்ப்பதரிது; கல்வியாலும் முயற்சியாலும் விள்ளுந்திறம் ஒருசிறை எய்தக் கூடுமெனினும், இயற்கை யாற்றலில்லாத விடத்து, அல்லாத வகையாலமையுமாற்றல், உரு நலன் ஒரு சிறிதும் அமையாத காரிகையாரைப் பல கலன்களைக் கொண்டு கோலஞ் செய்ய விளையும் போலி நலத்தை யொக்கும். அவ்வகை இயற்கை யாற்றலும் சிலரிடை மிகுந்தும், சிலரிடம் குறைந்தும் அமைந்திருக்கும். சிறந்த இயற்கை யாற்றலைக் கல்வியாலும் பழக்கத்தாலும் செப்பஞ் செய்து கொள்பவரே பேராசிரியன்மாராவர்.



**கருத்தின் முதிர்வு உணர்ச்சியின் வீக்கம்**

நூல் செய்யப் புகுவதற்கு முன், நூலின் அடிப்படையான பொருள், ஆசிரியன் கருத்தில் ஊன்றி நிற்க, நூல் செய்ய வெழுந்த விருப்பத்தால் அக் கருத்து முதிர்ந்து, அஃதளிக்கும் உணர்ச்சியின் எழுச்சி மிகுந்து துளும்பா நிற்கவும் மொழியுருவினை யெய்தும். கருத்து முதிரா உணர்ச்சி மிகுமாற்றான் உள்ளத்தே உந்துதல் எழுந்தவழியன்றி நூல் செய்யப் புகான் ஆசிரியன். உணர்ச்சி செறிந்த கருத்து உற்ற பருவ மெய்தினு லொழிய இலக்கிய வுருவத்தை யெய்துவதற்கில்லை. கருத்தே நூலின் வடிவத்தைத் தரும்; உணர்ச்சியே அதன் உயிராகும்.

இங்ஙனம், பருவத்தே யமையும் நூலுருவம், கருத்துக்குச் சாலப் பொருந்தியதாகவே யிருக்கும். கருத்தும் அதனிடைச் செறிந்த உணர்ச்சியின் வகை திட்பங்களுக்கேற்பப் பல வகைப்படும். அவ்வாற்றான் மொழியுருவும் அமையும். [1]இராமனிடம் மிகுந்த அன்பு பூண்டு அவனைப் பிரிந்திருத்தற்குமாற்றாத நிலையில், குகன் சொன்னவற்

1. "திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
*டொருவலெ னிருபோது முறைகுவ னுளரானார்
†மருவல ரெனின்முன்னே மாள்குவன் வசையில்லேன்
பொருவரு மணிமார்பா போதுவ னுடனென்றான்."

* ஒருவல் - நீங்கல்.
† மருவலர் - பகைவர்.

றிற்கும் [1]பரதனைப் பகையெனக் கருதி அவன் கூறியவற்றிற்குமிடையே, உணர்ச்சியின் வகைக்கேற்பக் கருத்தை விள்ளும் வகையும் வேறுபடுதல் எத்துணைப் பொருந்தவமைந்து நிற்கின்றது!

### மொழிநயம்

உணர்ச்சியின் மிகுதியால் உயிர் பெற்றுத் துளும்பும் கருத்துக்களை, அவற்றின் தன்மை தக மணக்கும் மொழியுருவங்களாகவே மலரக் கொள்ளும் இலக்கியம். சுவை வகைக்கேற்ப மொழி யமைதலை முன்னே கண்டாம். ஒவ்வொரு சுவையின் பிரிவுக்கேற்பவும் அதனை விள்ளுவோர் தன்மைகட்கேற்பவும் மொழி யமையும். இனி, சுவைகளாக வைத்து எண்ணப்படுவனவேயன்றி, எல்லா நிகழ்ச்சிகளுமே, அவை யெழும் தறுவாய்க்கும் மக்கள் இயல்புகளுக்குமேற்ப, அவற்றைத் தக விள்ளும் மொழி யுருவில், எனவே, நடையில் நுவலப்பெறுவனவாம். பெண்மையொழிந்து, அரக்கத் தன்மை மலிந்து, செருக்கி நின்ற தாடகை நடந்த வகையையும் அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்புமுடைய சீதாபிராட்டியார் நடந்த வகையையும் விள்ளும் செய்யுள்களைக் கீழே "பொருளின் பெற்றி நடையின் ஓசை விசைகளில் மலர்தல்" என்னும் தலைப்பின் கீழ் ஆராய்ந்து, அவர் நடைகளின் வேறுபாடுகள் மொழியுருவில் உருக் கொண்டிருத்தலைக் கண்டோம். அவ்விரு வேறு நடைகளுடன் ஒருதலைக் காமம் மிகுந்தவாற்றான் தன் நெஞ்சின் நேர் நின்ற இராமனைத் தன் வயமாக்க வெண்ணி, மந்திரத்தின் உதவியா லெடுத்த வரம்பற்ற கவர்ச்சி மணக்கும் அழகுருவினைக் கொண்ட சூர்ப்பணகை ஆசை விஞ்ச வஞ்சங் கொண்டு,—

1. "ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ."
—இராமாவ. ஆரணிய. சூர்ப்பணகை, 31.



[1]"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர்ப் பல்லவம னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்சையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

என நடந்த கோலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நடந்தவர் தன்மைக்கும் நடந்த தறுவாய்க்கும் உணர்வுக்கு மேற்ற அன்னவர் நடைகளை எற்ற மொழிவடிவில், அவற்றின் தன்மைகள் நிழலாடுமாறு தந்த திறமை மிகச் சிறந்ததே யென்பது ஐயமின்றித் தோன்றும். நாளும் நினைவு கூரினும் இவ்விலக்கியப் பகுதிகளின் மொழிநயம் விள்ளும் சுவை குன்றுததேயாகும்.

### தேன்

இங்ஙனம் சுவை பலவும் தக மலரக் கொண்ட நூலினம், மாறுத மணமும் இனிமையும் வாய்ந்த சுவைத் தேனைச் சொரியா நிற்கும். அருந்தும்போதேயன்றித் தேனை நினைக்கும்போதும் இன்ப வுணர்வு மேவுவதே போன்று, [2]அவ்வகை நூல்களைக் கற்கும்போதேயன்றி, நினைவுகூரும்போதும் உள்ளத்தே இன்பம் மேவும். இனிப்புப் பொருள்கள் பல உளவேனும், தேனின் சுவை தனித்த சிறப்புடையது. தன்னை அருந்தியவர்க்கு அது களிப்பை யூட்டும்; அருந்தியவர் உள்ளத்தைத் தன்னையே நாடி நிற்கச் செய்யும். அது போன்றே, இலக்கிய நூல்களும் தம்மைத் துய்ப்போர்க்குத் தனிப்பட்ட இன்பத்தை நல்கி, அன்னவர் உள்ளத்தை மீண்டும் தம்பால் கவர்ந்து நிறுத்திடும் செவ்வியினவாம்.

### சீரிளமை

நல்லியற் கவிஞன் உள்ளம் பல உலகங்களின் நலங்களும் முக்காலங்களில் மெய்ப்படும் உண்மைகளும் நிலவும்

1. கம்பர். இராமா. ஆரணிய. சூர்ப்ப. 31.
2. "தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்."

உன்னத நிலையில் பொருந்தி நிற்கும் தறுவாயில் தோன்றும் காட்சியைப் பின்பற்றிச் செய்யப்படும் நூல்கள், என்றும் மாறாத இளமையொடு பொலிவன வாகும். மூவா நிலையில் எழுந்த கருத்து, மொழியுருவெய்தும்போது, சீரிளமை சென்று பற்றுகின்றது அம்மொழி யுருவினை. ஆகவே, அத்தகைய நூல்கள், அவை தோன்றிடும் நாட்டின் நாகரிகத்தினின்றும் மாறுபடும் நாகரிகம் நிலவும் நாட்டிலும், அவை தோன்றிடும் காலத்திற்றிகழும் உலகப் போக்கு மாறி நிற்கும் பிற்காலங்களிலும் மதிப்பு குறைவுபடாது திகழுமென்க. திருக்குறள் தோன்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தன. இந்நீண்ட காலத்திடை மக்களின் பழக்க வழக்கங்களும் அவர் விருப்பும் வெறுப்பும் பல மாறுதல்களை யடைந்துள்ளன. எனினும், இன்னும் அதன் செவ்வியும் சிறப்பும் சிறிதும் மாறிற்றில; சிறிதும் தேய்ந்துமில. கருத்துக்களின் தன்மையிலேயன்றி மொழியுருவிலும், அந்நூலேயன்றி, சிலப்பதிகாரம் மணிமேகலை யாதிய கதை தழுவிய நூல்களும் மூப்பெய்தியனவல்ல. அன்றிருந்த மொழி வழக்கே கூடப் பெரும்பாலும் இன்றும் நிலவுகிறது.

இனி, கன்னடம் தெலுங்கு மலையாளம் துளுவம் ஆகிய தென்னாட்டு மொழிகள் நான்குக்கும் [1]தமிழே தாய் மொழியாகும். எனினும், தமிழ், தன் இயல்பில் மூப்பெய்திலது: உலக வழக்கிலும் புலனெறி வழக்கிலும் பல்லாயிர வாண்டுகட்கு முன்னிருந்த பெற்றியே இன்றும் தன் ஆற்றல் குன்றாது கட்டழகு குலையாது வழங்கி வருகிறது. இவ்விடை, பல மொழிகள் வழக்காறற்றுப் போயின.

1. "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செய்ன்மறந்து வாழ்த்துதுமே."
—மனோன்மணீயம், தமிழ்த் தெய்வ வணக்கம்: ௨.



நிலவும் மொழிகள் பலவும் பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் தம்மிடைப் புகுத்திக் கொண்டுள்ளன. தமிழிலும் பிறமொழிச் சொற்கள் வழங்குகின்றன வெனினும், பிற மொழிகள் போலாது, அவையில்லாமலே அது தனித்தும் நிலவும்.

## முருகு

மாறாத இளமையும் தேயாத அழகுமுடைய இறைவனை முருகெனப் போற்றி வழிபட்டு வருகின்றவர் தமிழர். எழிலென்பது மலருமுண்மையாகையான், அதனிடை இறைமை பொதிந்து நிற்றல் ஒருதலை. தெய்வத்தையே முருகெனக் கொண்டுள்ள மக்களின் அழகுணர்ச்சி எத்துணைச் சிறந்ததாதல் வேண்டும்! நிரம்பி யோங்கிய அழகுணர்ச்சியுடைய மக்களிடை, அவ்வுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் செழித்துத் தோன்றி நிலவுதலிலும் வியப்பில்லை. தொன்று தொட்டு வந்துள்ள வகையில், அவர் இலக்கியத்தை மதித்துப் போற்றும் வரை, அவரிடை அவ்வுணர்ச்சி தேயாதென்பதும் உறுதி. என்னை? இலக்கியத்தில் முருகு செறிந்து நிற்குமாகையான்.

இலக்கிய நூல்களின் தோற்றத்திற்கும் அவற்றின் செழுமைக்கும் அழகுணர்ச்சி ஒரு அடிப்படையான காரணமும் ஆதரவுமாகும். அந்நூல்களினின்றும் அவிழும் எழிலினிடையே தெய்வத்தன்மை மணக்கின்றது. தெய்வத்தின் திருவருளாலன்றி இலக்கிய நூல்கள் தோன்றா வென்பது, பல மொழிகள் நிலவும் பல நாட்டினரிடையுமுள்ள கொள்கையாகும். தெய்வத்தை முருகென்னும் பெயரால் குறிக்கும் வழக்கு வடநாட்டிலும் பிறநாடுகளிலும் இல்லை. இதிலிருந்து முழுமுதற் கடவுளை முருகெனக் கொண்டவர் தமிழரென்றே கொள்ளல் வேண்டும். ஆனால், இப்போது வடமொழியிலுள்ள கந்த புராணக் கதையோடு முருகு தொடர்பு கொண்டதாகத் தென்னாட்டிலும் வழக்குண்டாயிருத்தலின், இப்பொருளை ஆராய்ந்தறிதல் நலம்.

### விருந்து

ஒரு காலத்தில், சுவை பொதுளும் விருந்தாக வமைந்த இலக்கிய நூல்கள் பின் வரவிருக்கும் காலங்களிலேயும் எஞ்சாத சுவையொடு நிலவல் எவ்வண்ணமென்பது கண்டாம். [1]நூல் விருந்தெங்கே, உணவு விருந்தெங்கே! சிறு பொழுது அதிகப்பட வைத்திருப்பின் சுவை மாறிக் கெட்டொழியும் தன்மையவாம் வயிற்றுக்கு உணவாகும் விருந்துப் பொருள்கள்; அன்றி வயிற்றுக்குரிய உணவு, மக்கட்கேயன்றி, உடல் கொண்ட உயிரனைத்துக்குமே பொதுவாகும். இனி, வாயினால் சுவைத்துத் திளைக்கும் உணவேயன்றி, பிற பொறிகளால் நுகரப்படும் பொருள்களும் கால வரம்பில் கெட்டொழிவனவேயாம். காம வேட்கையால், ஒரே சமயத்தில், ஒன்று சேர, ஐம்புலன்களாலும் நுகர்ந்தின்புற வாய்ப்பளிக்கும் உடலுறு புணர்ச்சியின் நலனும் சிறு வரம்பினதேயாம்; அதற்குரிய பருவமும் வாழ்க்கையினிடையே யெழுந்து மீண்டும் அதனிடையே மறைந்தொழியும். அன்றி, அவ்வகை வேட்கையும் நுகர்வும் மக்கட்கேயன்றிப் பிற உயிர்கட்கும் பொதுவாக நிற்பனவாம். அவ்வாறன்றி, அறிவுக்களனிடைத் தோன்றி நிற்கும் இலக்கிய நூல்களோவெனின், காலத்திடை அழியாதனவாய் தேயாத இன்பத்தை யளிக்கும் தன்மையினவாய், இவ்வுலகின் பிற உயிர்களுக்கேயன்றி, மக்கட்கே சிறப்பாயவை; அறஞ்சார்ந்த அறிவொடு தெய்வத்தின் அருள் மணமும் மாறாது கமழ்ந்திடத் தெய்வத்திற்கும் விருந்தாயமையும் திருவினவாம். அவற்றின் கருத்துக்களோ, மொழி வரம்பையுங் கடந்து, பிற மொழிகளிலும் சென்று உருவெய்துதற்காம் தன்மையினவாம். "விருந்தென்ப புதுமை": [2]மாறாத இளமையுடைமையால் எத்தனை காலம் பழகினும் வாடாத புது மணத்தைத் தந்து மகிழ்விப்பனவாம் இலக்கிய நூல்கள்.

1. "செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்." —திருக்குறள்: 412.
2. "நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு." —திருக்குறள்: 783.



### அமுதம்

மாறியழியும் இயல்புடைய உலகினிடையே, இலக்கிய நூல்கள், மாறாத இளமை வாய்க்கப்பெறல் தெய்வத்தின் அருளானன்றி, எவ்வாற்றானமையும்? முருகொடு திகழுமாற்றான், அவற்றை நுகர்வோரும் மாறாத இன்பம் பெறுவதும் இயல்பேயாகும். மாறித் தேய்ந்து அழியும் இவ்வுலகின் நலன்களைப்போலாது, காலவரம்பிற்படாதனவாய், அனைத்துலகுக்கும் பொதுவாயமையும் அழியாத்தன்மை வாய்க்கப்பெற்றவையுமாகும் அவை. அவற்றைத் துய்ப்போர் கருத்து, கால வரம்பிற் சிக்கிய இவ்வுலகுக்கப்பாற் சென்று, அழியாத அழகுடைய உருவங்களைக் கண்டு நிற்க, அவர் உள்ளம் மாறாத இன்பத்தை யெய்தும். உள்ளத்திற்கு இத்தகைய இன்பத்தை யளிக்கும் இலக்கிய நூல்களில், நுகர்வோர் உள்ளத்தை மூப்பானது அணுகாதவாறு செய்யும் திருவருளாகிய அமுதம் பொருந்தி நிற்கின்றதென்பதில் என்ன ஐயம்! காட்சிகளும் நிகழ்ச்சிகளும் தோன்றி மறையா நிற்கும் இவ்வுலகில், தம்மிடையமைந்த காட்சிகளும் நிகழ்ச்சிகளும் மூவாது மறையாது நிற்கச் செய்யும் இலக்கிய நூல்களின் பண்பு எங்ஙனமமையும்? திருவருள் வாய்ப்பில், மூவா முருகினை யளிக்கும் அமுதத்தைச் சுரக்கும் அவ்வருங்கலையின் செவ்வியானன்றோ! மிதிலையில், அன்னமாடுந் துறையின் அருகிலுள்ள கன்னி மாடத்தில் தோழிமார் சூழ நிற்கும் நங்கையும், கோசிகனோடும் தம்பியோடும் அவ்வழியே சென்று கொண்டிருந்த நம்பியும், காதல் மீதுற, ஒருவரையொருவர் விழைந்து நிற்க, அவர் நோக்குகள் ஒன்றையொன்று கௌவிக் கொள்ள, இருவர் மனமும் மாறிப்புக்கு மற்றவர் இதய மெய்தும் காட்சி இன்றும் நிலவுகின்றது. துசியந்தனைப் பிரிந்து செல்லுதற்கு மனமில்லாத சகுந்தலை, அவனும் தன் தோழிமாரும் பார்த்து நிற்க, நாணம் தன்னை அவ்விடத்தினின்றும் நடத்திச்

செல்ல, வேட்கை தன்னைப் பின்னே இழுக்க, பூவினும் மெல்லிய சீரடியில் முள்ளொன்று தைத்ததாகப் பிறர் கருதும்படி நடித்து நின்று, குனிந்து மீண்டுமொரு முறை அவள் அவனை விழைந்து நோக்காது நோக்கும் காட்சி, இன்றும் தேயாது நம்மை மகிழ்விக்கின்றது. இக்காட்சிகளைக் கொண்ட நூல்களிலும் பிற இலக்கிய நூல்களிலும் உள்ளத்தைக் கவரும் காட்சிகள் பிறவும் எத்தனையோ நிலவுகின்றன. ஆம்; இலக்கிய நூல்கள் தோன்றி நிலவும் நிலம் மூவா அமுத நிலமேயாம். ஆனதுபற்றியே, அவற்றொடு தொடர்புடையாரும், இக்கோழை யுலகிலே யிருப்பினும் அவ்வமுத முண்டு மூவா வின்பத்தே யாழ்ந்து நிற்கும் தேவர்களேயாவர்.

**மருந்து**

புலன்களுக்குப் பொருளாகும் பருப்பொருள்களையே மதிக்கும் இவ்வுலகினிடையே, பொருளுடையாரிடையும் எத்தனை ஏற்றத் தாழ்வுகள் உள்ளன! அன்றி, பொருளின்றி அல்லற்படும் மக்களின் தொகையே இவ்வுலகிடை எந்நாட்டிலும் மிகுதியன்றோ! உணவு உடுக்கை முதலிய வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைப் பலரும் விலை கொடுத்தன்றோ பெறுதல் வேண்டும் இவ்வுலகில்! அவற்றைப் பெறுதற்குப் பணமில்லாதாரும், போதிய பணமில்லாதாருமே யன்றோ இவ்வுலகிடைப் பெருந் தொகையினராவர்! இனி, பொருளுடையோரிடையும், மிகுந்த பொருள் படைத்தோர் தொகை மிகமிகக் குறைந்ததேயாகுமன்றோ! [1]சமூக வாழ்க்கையில், பொருளுடைமையின் அளவை வைத்தே பெரும்பாலும் மக்கள் மதிக்கப் பெறுகின்றனர். ஆணை செலுத்துவோரும் மதிக்கப்படுகின்றனரெனினும், அவ்வகையோர் எண், எச்சமூகத்திலும் மிகக் குறைந்ததாதலோடு, அத்தகையோர் தம் பதவியை வைத்து, எத்துணைப் பொருள் ஈட்டக்கூடு

1. “அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.”

—திருக்குறள் 247.



மென்பதையும் கருதியே அன்னார் மதிக்கப் பெறுதலானும், அவ்வகையோரும் பதவி யெய்துதற்கு முன்னும் அதனினின்று விலகி ஓய்வு பெற்ற பின்னும் அன்னவருடைய பொருளளவை வைத்தே பெரிதும் மதிக்கப் பெறுவ ரானமையானும், பொருள் அளவுக் கேற்பவே மக்கள் மதிக்கப் படுகின்றன ரென்று கூறுதல் பெரிதும் பொருந்து மன்றே! இஃதிவ்வாறாக, மக்களின் வாழ்க்கையில், பொருளும் காமமும் சேர்ந்தே வாழ்க்கையின் போக்கை அமைக்கின்றன: பொருள் வேட்கை காம வேட்கைகளாகிய இவையே பெரிதும் மக்கள் வாழ்க்கையை இயக்குகின்றன. மனம் பெரும் போதும் இவ்வேட்கைகளாலேயே அலைக்கப் பெறுகின்றது. கல்லாதவரேயன்றிக் கற்றோரும் இவற்றிற்கு ஆளாகின்றனர். எனவே, அறிவு புலனளவே நின்று, இக் கோழை யுலகின் பொருள்களையே விழைந்து நிற்கின்றது; பெரும்பாலோர் அற முறைகளினின்றும் வழுக்கித் தாழ்கின்றனர்; குறித்தவற்றை யடையாதவர் இன்னலுறுகின்றனர். பொருளளவிலே வேண்டியவற்றைப் பெற்று மனம் நிறைவுற்றார் தொகை எத்துணையாகும் இவ்வுலகில்? ஒரு சிலரே யன்றித் தொகை யென்று கொள்ளுதற்கு மாகுமோ! பொருளுடையாருள்ளும், அதன் பயனை உள்ளபடி அறிந்தொழுகுவார் சிலரே யாவர்; பிறர் கடு வச்சையராகவும், தம் நலனை விழைந்து பிறர் உரிமையைக் கொன்று இகந்து படுபவராகவும் இன்னல் விளைப்பர். இனிப் புலன்களின் வழி நின்று இன்பம் வேட்டு நிற்பார் பின்பற்றிச் செல்வதும் பிறழ்ந்த சுவை யறிவே யாகும். அவ் வகையில் எய்துவதும் போலி யின்பமே யாகும். அதன்வழி விளைவதும் இன்னலே யாகும். இங்ஙனம் கோழை யுலகிலே உழன்று, பல துன்பங்களால் மெலிந்து மங்கும் மக்கள் மன நோய்க்கு மருந் தன்றோ இலக்கியம்! மாசுண்ட சமூக வாழ்க்கையின் நச்சு மணம் சென்று அணுகலாகாத உன்னத அறிவு நிலத்திற் றோன்றி, மாயாத திருவருட்பாலுண்டு வளரும் இலக்கிய நூல்களொடு பழகி நிற்பார் மனம், கோழை யுலகைப் பொருட் படுத்தாது;

அவாவாது; குறித்த பொருள் கிட்டாமைக்குக் கவன்று துன்புறாது; சமூக நோய்களால் விளைந்த குற்றங்கள் நீங்கப் பெற்றுத் தூய்மை யுறும். பலகாலும் அவற்றோடு பழகுவார் சமூகக் குறைபாடுகளால் அலைக்கப் பெறார்.

***விஞ்சை**

தன்னைத் தொடர்புற்ற எப்பொருளையும் எவ்வுயிரையும் அழகு பொலியச் செய்யும் பேராற்றலும் இலக்கிய அருங்கலைக்குண்டு. இவ்வாற்றலை விஞ்சையென மதிக்கத் தகும். இச்செயல், பொன்னொழிந்த பிற உலோகங்களைப் பொன்னாக்கும் அரிய ஆற்றலை யுடைய இரசவாதத்தை யொக்கும். நாளும் காணுதற் கமைந்த பொன் மீன்கள் நிலவிடும் இருண்ட நீலவானின் தோற்றம், ஞாயிறு திங்கள்களின் தோற்ற மறைவுகளின் வண்ண ஒளிகள் படிந்த இயற்கைக் காட்சிகள், ஆதியவற்றை நேரிற் காணும்போது, பலரும் அவற்றின் திருவைத் தக்கபடி உணர்வதில்லை; ஆனால், இலக்கிய நூல்களில் அவற்றின் வருணனைப் பகுதிகளைப் பயில்வோமாயின், நேரிற் கண்டறியாத சிறப்புக்கள் அவற்றினின்றும் நம் கருத்தைக் கவர்கின்றன. இவ் வண்ணமே, உலகிலுள்ள பலருக்கும் பலவற்றிற்கும் அழகின் பொலிவை யளிப்பது இலக்கியம். [1]அதன் தொடர்புள்ளவை யனைத்தும் அழகுற்றுப் பொலியும். இலக்கிய ஆசிரியன்மாருடைய நோக்கின் சிறப்பினாலும் கற்பனைத் திறத்தினாலும் சொற் சித்திரத்தினாலும் இவ்வரிய செயல் அமைவதாகும். இவ்வாற்றான், இலக்கியத்தில் கண்டபின் அதனிடை யுள்ளவரிடமும் உள்ளவற்றி னிடமும் நமக்கு வியப்பும் மதிப்பும் மிகுகின்றன.

1. "அருளி லாளொளி னும்மனத் தாசையால்
வெருளி நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வாயவே."

—இராமா. பால. மிதிலை. 142.

* விஞ்சை - மாய வித்தை.



**கண்ணளிக்குங்கண்**

அடிக்கடி நாம் காண நேரும் பொருள்களும் உயிர்களும் தம் இயல்பில் அழகுடையனவா யிருப்பினும், பழக்கத்தினால் அவற்றின் அழகு நமக்குத் தென்படாது போமாறு மனக்கண்ணின் மீது படலம் ஏற்பட்டு நாளடைவில் தடித்து விடுகின்றது. ஆகவே, அவற்றின் செவ்வியை உள்ளவாறு உணருதற்கு ஆற்றலற்றவராகின்றோம். [1]இலக்கிய நூல்களில், அப்பொருள் உயிர்களுக்குரிய செவ்வி திகழக் காணும்போது, அப்படலம் நீங்கவும் செவ்வியை உள்ளவாறு உணரும் ஆற்றலைப் பெறுகின்றோம். எனவே, இலக்கியம் கண்ணொளியை மிகுவிக்கும் கண்ணை யொத்த அரும் பொருளுமாகும். கண்ணிருந்தும் ஒளியில்லாவிடத்து கண் இல்லாததேயாகும்; மீண்டும் ஒளியைப் பெறும்போது இழந்த கண்ணைப் பெற்றதாகும்.

**கலங்கரை விளக்கம்**

அன்றி, இலக்கிய நூல்கள் தம்மியல்பிற் கலங்கரை விளக்கங்களுமாகும். வாழ்க்கைக் கடலிலுள்ள இடர்ப்பாடுகளை உணர்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை விளக்கியும் இடித்துரைத்துச் செல்லும் திருக்குறள், தமிழருக்கேயன்றி, உலகினர் அனைவர்க்குமே யமைந்த கலங்கரை விளக்கமாகும். இவ்வியல்பின புறநானூறு நாலடியார் ஆதிய நூல்களும் உள. பிற இலக்கிய நூல்கள், நீக்க வேண்டியவற்றையும் மேற்கொள்ள வேண்டியவற்றையும் குறிப்பாக உணர்த்தும். இப்போக்கு, சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற கதை தழுவிய நூல்களில் காணலாகும். அந்நூற் கதைகளிலுள்ள பல உறுப்பினர் பண்புகளையும் செயல்களையும் அவற்றின் விளைவுகளையும் கண்டு, அவற்றிற் பின்பற்றத் தக்கவற்றையும் விலக்க வேண்டியவற்றையும் அவற்றைப் பயில்வோர் தாமே

1. "It strips the veil of familiarity from the world and lays bare the naked and sleeping beauty which is the spirit of its form."

—P. B. Shelly, A defence of poetry.

உணர்ந்து கொள்ளுவர். அன்னவற்றிலும் கூட, அத்தகைய பல கருத்துக்கள் வெள்ளையாகவும் கூறப்பெற்றுள்ளன. இது, மொழி மரபு காலப் போக்குகளுக்கேற்ப அமைந்ததாகும். மேனாட்டு இலக்கிய நூல்களில், நீதிகளை வெளிப்படையாக எடுத்துக் கூறும் கோட்பாடில்லை. அங்ஙனம் கூறுதலும் கூடாதெனவும் கொண்டுள்ளனர். ஆனால், இப்போது பல நாடுகளிலும் சமூக சீர்திருத்தத்தை முன்னிட்டே எழுதப்பெறும் நூல்களும் பல உள. ஆகவே, பல மொழிகளிலுமுள்ள இலக்கிய நூல்கள், மக்கள் தம் வாழ்க்கையில் பின்பற்றத் தகுந்தவற்றையும் நீக்க வேண்டியவற்றையும் நேர்முகமாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

### இலக்கியச் செவ்வியின் உண்மை

இன்ன பரிசுடைய இலக்கிய நூல்களைத் தந்திடும் ஆசிரியன்மாரையும் அவர்கள் நூல்களைக் கற்றறிந்த புலவர்களையும் சமூகத்திலுள்ள பெரும்பாலோரும் தக மதிப்பதில்லை. இதற்குக் காரணம் அன்னவர் சிறந்த போக்கை அறியலாகாமையேயாகும். சிலர் அவரொடு மாறுபட்டும் நிற்பர். காக்கைக் கூட்டத்திடை வரும் குயில் கடியப்பெறுமென்பதும் உலகறிந்ததே. எனினும், இலக்கியப் பேராசிரியரின் இயல்பு மக்களின் இயற்கைப் போக்குக்கு மாறுபட்டதாகாது. அன்னவர் சிறப்பை அறிஞர் சொல்ல உலகறியும்; புகழும். தாமறிதற்கியலாத உயர்ந்த நிலையில் நிற்பவரென்று பலரும் சிறிதளவேனும் உணர்வர். இவ்வாற்றானும், இலக்கிய நூல்களின் செவ்வியும் அவற்றைத் தருவோரின் சிறப்பும் என்றும் உண்மையென்று பெறப்படும். மாறுபட்ட சுவைகளால் அலைக்கப்பெறும் இருளடைந்த சமூக நிலத்திலுள்ளார், இலக்கியம் முதலிய அருங்கலைகளின் திருவாகிய ஒளியால் கவரப்பெற்றுச் சீர்பெற்று நிற்குமளவும் உய்வுண்டென்க; தாழ்வில்லை. [1]மனம் எதைச் சார்ந்து நிற்கின்றதோ, அத்தக

1. "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்று மெனலால்."
—தாயுமானவர், கருணாகரக்கடவுள், 7



வுடையதாகும் வாழ்வெனல் அருமறைப் பொருளன்றோ! தெய்வத்தை நினையாத நாளெல்லாம் பிறவா நாளென்பர் அருட்பெரியார். எனவும், உலகம் அந்நெறியிலோ நிற்கின்றது? நினையாதவழியும் தெய்வம் இல்லாது போகவில்லை. அப்பெற்றியே, பலர் உணராதவழியும் இலக்கியம் முதலிய அருங்கலைகளின் நலன் இல்லாது போகவில்லை; மதியாதவழியும் அவற்றின் சீர்மை குறைபடுதலும் இல்லை.

### அருங்கலை பலவற்றின் ஒத்த நலன்

இனிக் கலைகள் பலவற்றிற்கு மமையாத அருங்கலைகளின் சிறப்பை நோக்குவாம். கலைகளிற் பெரும்பாலன பல செய்திகளை அறிவித்து, உயிர் வாழ்தற்கு இன்றியமையாதனவும் பொறி யின்பம் பயப்பனவுமான பல வசதிகளை அமைத்துக் கொள்ளப் பெரிதும் பயன்படும் தன்மையனவாம். ஆனால், அருங்கலைகளோவெனின், பொருட் பயனைக் கருதாது, அழகுணர்ச்சி யுந்த இயற்கையை யொட்டி யெழுந்துள்ளமையான், தூய இன்பம் ஒன்றையே பெரிதும் பயனாகத் தருவதன்றிப் பிற பயன் எய்துதலை நோக்கமாக உடையனவல்ல. இனி, நேர்முகமாகப் பயக்கும் பயன் பிறவில்லையேனும், அவற்றிற்பதிந்த உள்ளத்தையும் அறிவையும் அவற்றின் தன்மையில் மேம்பட்டிடச் செய்யும் செவ்வியினவாம். [1]எனவே. அருங்கலைகள், பொருட்பயன் கருதாத உயர்ந்த நிலத்திலேயே தோன்றி நிலவுகின்றன வென்பது போதரும். எனலும், பிற கலைகளும் மக்களுக்கெனச் சிறப்பாயமைந்த ஆறாவதறிவையே களனாகக் கொண்டவையெனின், அருங்கலைகளின் தோற்றத்திலும் தன்மையிலும் அமைந்த சிறப்பென்னை என்று வினவுதலும் கூடும். அவற்றின் சிறப்பைப் பலரும் உணர்கின்றோம். உணர்ந்தும் அவற்றின் சிறப்பு இன்னதென்று வரையறுத்து உய்த்துணர முயலு

1. "Poetry begins where matter of fact or science ceases to be merely as such".
—James Henry Leigh Hunt,
An answer to the question what is poetry.

மாற்றானையே அவ்வாறான வினா எழுவதாகும். உணவுப் பொருள் வேண்டிச் செய்யப்படும் பயிர் வகைகளும் பயன் கருதாது பொழுது போக்குவோர் சேரும் நந்தன வனங்களும் மண்ணையேயன்றோ களனாகக் கொண்டுள்ளன! எனினும், முன்னையன, பயன் வேண்டும் கருத்துடன் யாக்கப்படுவனவாகப் பின்னையன, அவ்வகையிலன்றி விளையாட்டுக்கும் பொழுதுபோக்குக்குமே வசதி யளித்தலைக் கருதி யமைக்கப்படுவனவாம். முன்னையன, பயன் கருதுவார்க்கன்றிப் பொருளாகா; பின்னையன யாவரும் விரும்பும் வகையில் அமைந்துள்ளன. எனவே, தம் தன்மையில் விளைவுப் பொருள்களை யளிக்கும் பயிர்களை யொப்பனவாம் பிற கலைகள்; அருங்கலைகள் நந்தன வனங்களை யொப்பனவாம். இனி, நந்தன வனங்களையேனும் பொருட்பயன் கருதாத பிற வசதிகளைக் கருதி யமைக்கின்றோம். ஆனால், அருங்கலைகளிற் பெரும்பாலன, பயனொன்றும் கருதாத அழகுணர்ச்சி பற்றியே யாக்கப் பெறுவனவாம். பயன் கருதியே செய்யப் புகுவதாகச் செப்பி நூல் செய்தல் தமிழ் மரபு. எனினும், நூல் செய்தலை விழையும் வேட்கை பயன் கருதியதொன்றாகாது.

**இலக்கியத்தில் அறத்தின் கூறு**

அறிவே, கலைகளுக்கும் அருங்கலைகளுக்கும் களனாகுமெனினும், அவ்வறிவு தூய அன்பினின்றும் மலரும் அறத்தைச் சார்ந்தும் தொழிற்படும்; சாராதும் தொழிற்படும். அழகு, மலருமுண்மையாகும். மலர்ந்து தொழிற்படும் தன்மையில் அறத்தை யிகவாது நிற்றலே அறிவுக்கு அழகுடைமையாகும். அருங்கலைகள் அழகுணர்ச்சியால் உருவாவனவென்பதை முன்னே கண்டாம். எனவே, அவை தோன்றிடும் அறிவாகிய களன் அழகுற்றிருத்தல் இன்றியமையாததாகும். அழகு பொருந்தியதெனவே, அறிவு அறத்தைச் சார்ந்து நிற்றல் போதரும், என்னை? அறப் பண்பும் எழிற் கூறேயாகுமாதலின். ஆகவே, [1]"அறத்தான் வருவதே இன்பம்" என்பது "எழில் இன்

1. திருக்குறள் : 39.



பத்தின் வடிவம்" என்பதனோடு ஒத்த பொருளினதாகும்.

**இன்பம்-போலியின்பம்-சிற்றின்பம்-பேரின்பம்**

அளவுக்கு விஞ்சிய வகையில் இணைவிழைச்சையும் அறத்தை யிகந்த உணர்வுகளையும் பொருட்படுத்தும் நூல்களும் உள. இவற்றைத் தமிழிலேயன்றி, ஆங்கிலத்திலும் கூட இலக்கியங்களாகக் கொண்டாரில்லை. எனினும், இவ்வகை நூல்களோ மக்களால் பெரிதும் விரும்பிக் கற்கப்படுகின்றன. இதற்குக் காரணம் தூய சுவை யறிவு போதிய அளவு இல்லாமையேயாகும். பெருந்திணையே பெருவழக்காகவும், பிறனில் கவர்தலை வீரமெனவும் கொள்ளும் சமூகத்தில், இத்தகைய நூல்களை விரும்பும் சுவை மலிந்திருத்தல் வியப்பன்று. அவ்வகையினும் இன்பம் உளவாதல் பற்றியன்றே வழக்காயதெனின், கணிகையரை நாடுவதும் இன்ப விளைவு வேண்டியன்றே? ஆயினும், அவ்வகையில் இன்பமெனக் கருதப்படுவதும் போலியின்பமென்றன்றோ கொண்டுள்ளனர் அறிவுடையோர்! இதை நோக்க, அருங்கலைகளால் விளைவது இன்பம், போலிக் கலைகளால் விளைவது போலியின்பம் என்பதும் போதரும். போலி யின்பம் இன்பம் போன்று தோன்றினும், பின்னர் இன்ப உணர்வு கெட, இன்னலை விளைவிக்கும். அது, தன்னலன் பற்றிய வேட்கையால், பிற உயிர்கட்குப் பொருந்தாத வகையில் கருதி நாடிக் கொள்ளப்படுவது. அன்றி, இன்பமோ எல்லா உயிர்கட்கும் பொருந்திய உணர்ச்சி காரணமாக எழும் எண்ணங்களானும் ஒழுக்கங்களானும் விளைவது. இவ்வின்பம் இன்னலைத் தராதது; என்றும் நினைவு கூரும் போதெல்லாம் இன்ப வுணர்வையே யளிக்கும் தன்மையது. அருங்கலைகளால் விளைவது இவ்வகை இன்பமேயாகும். எல்லா வுயிர்கட்கும் பொருந்த விருப்பினும் காமம் பொருள் ஆயவற்றின் தொடர்பால் தோன்றி, பிரிவு பிணி மூப்பு ஆதியன இடையிடையே இடர்களாய் நின்று வரம்பறுப்ப நிகழ்வது சிற்றின்பம். தொடக்கனைத்து மற்று

விழ, அன்பின் பெருக்கால் இன்ப மயமான பரத்திேனாடு உள்ளம் ஒன்றி நிற்க விளைவதே எல்லையற்ற பேரின்ப மாகும்.

**பிற அருங்கலைகளில் அறத்தின் கூறு**

இசை வகைகளிலும், நல்லிசைகளும் போலி யிசைகளும் உள. முன்னையன அளிப்பனவே நல்ல உணர்வுகள்; அவற்றின்வழி விளைவது இன்பமேயாகும்; போலி யிசைகள், களிப்பை யளிக்கும் தாழ்ந்த உணர்வுகளையே தரும் தன்மையனவாம்; அவ்வழி நேர்வதும் போலி யின்பமேயாகும்; அஃது அருந்தியபோது, நரம்புக் கட்டுக்கு ஊக்கத்தை யளித்துப் பின் சோர்வை நல்கும் சில வகை உணவை யொக்கும். தூய உணர்வுகளைத் தருவன அறத்தின்வழி யமைந்தனவென்பதும், பிற அதன் புறம்பாவன வென்பதும் வெள்ளை. போலி யிலக்கியங்கள், யாப்பிலக்கணத்தை மேற்கொள்ளுமாறே, போலி யிசை வகையும், நல்லிசைக்கமையும் இலக்கண விதிகள் பொலியத் தோன்றும்.

இனி, வடிவத்தைப் பற்றி நிற்கும் சிற்பம் ஓவியமாயவற்றில் அறத்தின் கூறு பொருந்தி யிருத்தல் எங்ஙனமென்பதை நோக்குவாம். உள்ளப் பரிசு முகத்திலே தெரியப் பொலியும்; அவ்வாறே, உயிரின் தன்மைக்கேற்றவாறே உடல் வடிவமும் அமையும். [1]வலம்புரியும் அன்னப் புள்ளும் பிறவும் இவ்வகையில் தெய்வத் தன்மை வாய்ந்தனவாமென்பது கொள்கை. அவற்றை யுணர்த்தும் சொற்களும் தூய்மை யுடையனவாம். இம் மங்கல வியல்பு பற்றி, இலக்கியங்களிலும் அவை கையாளப்படுகின்றன. [2]வெண்ணிறமுடைய பிற சங்குகளிருக்க, வெண்மையை

1. " நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல."
—முல்லைப்பாட்டு: 1 - 3.
2. " வலம்புரி புரையும் வானரை முடியினர்,"
—திருமுருகு. 127.



யுணர்த்த வலம்புரியைச் சொல்லுதலை நோக்குக. அத னுடையதேயன்றி, அன்ன பிறவற்றின் வரிவடிவங்களும் அன்ன தன்மையினவேயாம். தெய்வத் தன்மையில் அறம் பொருந்தி நிற்றல் சொல்லவும் வேண்டா. எனவே, அன்னவற்றின் வரிவடிவங்களும் அவற்றின் பகுதிகளிலே யமைந்த வடிவங்களும் அவற்றை யொத்த வரிவடிவங் களும் ஓவிய சிற்பத் திருவடிவங்களில் போற்றிக் கொள் ளப்படும். அத் தொழில்களில் வல்லுநர் பலரும் இவ் வுண்மைகளை யுணர்ந்து அம் முறைகளைக் கையாளுவ ரென்று சொல்லுவதற்கிடமில்லை. வீட்டு வாயில்களின் நிலைகளில், அன்னப்புள் கிளி கொடி யாதிய வற்றின் வடிவங்களைச் செதுக்குதல் மரபு. அவற்றைச் செய்தமைக் கும் தச்சர்களிற் பலர், அவற்றை யமைக்கும் நோக்கத்தை யறியார், பொதுவாக, மக்கள் பலரும் உணரார். இங்ஙனம் உருவங்களை நிலைகளிற் செதுக்கும் வழக்கு தேய்ந்து வருகிறது. காரணமறியாதபோதும், அத் திருவுருவங்கள், அவற்றைக் காண்பார்க்கு மகிழ்ச்சியை யளித்தல் உண்மையேயாகும். எனவே, பிறழாத இன்ப உணர்வை யளிக்கும் மரபும், அறம் பொதிந்து நிற்கும் அழகுணர்வை யொட்டியே யெழுந்திருத்தல் வேண்டுமென்பது போதரும். பிடரியிலே கைகட்டலாகாது, கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவைக்கப்படாதென்னும் முறைகள் வழக்கில் இன்றும் உள்ளன. நீக்கப்பட வேண்டிய இயக் கங்களால் நன்மை விளையாதென்பது கருத்து. எனவே, அவற்றின் வரிவடிவங்களும் இன்பம் பயவாவாதலின், விலக்கப்பட வேண்டியவையே என்பதும் பெற்றும். காரிகையார், தம்மை ஒப்பனை செய்து கொள்ளும் முறை யிலும் நிற்கின்ற நிலையிலுங்கூடத் தம் கற்பு நிலையையும் அல்லாத பரிசையும் உணர்த்திடுவர். எனவே, அறத் தைச் சார்ந்த அவர் உள்ளத்தூய்மையும், அல்லாத வகையிலமைந்த அவர் உள்ளப் பான்மையும், அவர் மெய்யின் வரிவடிவிற்றிகழுமென்பது பெற்றும். அறத் தைச் சார்ந்த வரிவடிவு இன்பத்தை யளிக்குமென்பதும், அல்லாத வடிவு, கவருமியல்பினதே யாயினும், இன்பம்

பயப்பது போன்று தோன்றிப் போலி யின்பத்தை யளித்துப் பின் துன்பத்து ளாழ்த்து மென்பதும் உண்மையே. ஆகவே, அழகுணர்ச்சியொடு பொருந்தி யிருக்குமாற்றான் வரிவடிவங்களின் பரிசு இன்பத்தை யளிப்பதும், அல்லாத வகையிலமைந்த பிறவற்றின் பரிசு இன்ப மொழிந்த விளைவை யளிப்பதும் எங்ஙனமென்பதை ஒருவாறு ஆராய்ந்தும் அறிந்தாம். இவ் வுண்மைகளை யொட்டியே, ஓவிய சிற்ப அருங்கலைகளில் மரபுகள் அமைந்திருத்தல் வேண்டும்.

இனி, வரிவடிவ உண்மைகளோடு இயக்க முறை உண்மைகளும் கூத்து வகை மரபில் பொதிந்திருத்தல் வேண்டும். கூத்தில் மேற்கொள்ள வேண்டியவையும் நீக்கப்பட வேண்டியவையும் சிலப்பதிகார அரங்கேற்று காதையில் கூறப்பட்டுள்ளன. உடலின் உறுப்புக்கள் நிற்கும் சில நிலைகளும் அவை ஒன்றொடொன்று பொருந்தி யிருக்கும் வகை சிலவும் அவற்றின் இயக்கம் சிலவும் விரும்பத் தக்கனவல்ல; வெறுக்கத் தக்கனவே. அவற்றின் நிலை பிறவும் பொருந்தும் வகை பிறவும் இயக்கங்கள் சிலவும் கவருந் தன்மையனவாம். இனி, யோக முறைகளில், சில ஆசனங்களும் முத்திரைகளும் யோக சித்திக் கேற்றவை என்பது மரபு. உயிரோடு இயைந்து நிற்பது உடம்பு. உள்ளப் பரிசுக்கேற்ப உடலின் நிலை திரியும். எனவே, உடம்பின் நல்ல சில நிலைகளும் இயக்கங்களும் நல்ல உணர்வுகளைத் தோற்றுவிக்குமென்பதும் போதரும். இக் கருத்துப்பற்றியே, யோக ஆசனங்களும் முத்திரைகளும் உடம்பின் இழிதகவைத் தேய்த்துத் தெய்வத் தன்மையை வளர்த்தற்காம் வகையில் அமைந்துள வாதல் வேண்டும். எனவே, உடம்பின் நிலையிலும் இயக்கங்களிலும் தகவும் இழிதகவும் உளவாதலும் பெற்றாம். இவற்றுள், தகவுடையன, அறஞ்சார்ந்த அழகுடையன வென்பதும், பிற சில அறங்கடை நிற்கும் அழகொழிந்தவை யென்பதும் பெற்றாம். இவ்வுண்மைக்கேற்ப மரபை, கூத்தில் காண்பித்தல் முறையேயென்பதும் போதரும்.



கவருந் தன்மையுடைய கூத்தின் முறைகளை; போலிக் கூத்துக்களில் மேற்கொண்டு, காண்போர் உள்ளத்தைக் கவர்ந்து இழிந்த உணர்வுகளிடையே உலவச் செய்யும் அழிவழக்குமுண்டு. இலக்கியத்தையொத்தே, கூத்தே யாயினும் இசைப் பாட்டே யாயினும் ஓவிய சிற்ப உருவங்களே யாயினும் அவற்றொடு தொடர்புற்ற மனத்தைப் பிணித்து உன்னத நிலைக்கேற்றி, அதன் கோட்டத்தை மாற்றிச் செப்பஞ்செய்து, நல்ல உணர்ச்சிகளை யூட்டி இன்பத்தைப் பயவாவெனின் அவை போலித் தன்மையனவே யென்பது ஒருதலை.

ஒவ்வொரு வரிவடிவும் நிலையும் இயக்கமும் அழகுடையதாதலும் அல்லாததாதலும் எங்ஙனம் என்று ஆராய்ந்தறிதல் அருமையேயாகும்; அன்றி, இயன்றபெற்றி ஆராய்ந்து ஈண்டுக் குறித்தலும் மிகையேயாகும். ஆயினும், இதுமட்டும் கூறிவந்தவற்றிலிருந்தே, அவை அழகுற்று நிற்றல் எங்ஙனமென்பது பொதுப்படப் பெற்றாம். ஆயவழி, அறம் அழகிற் பொதிந்து நிற்றலும் உண்மையே யாகலின், அழகுணர்ச்சியைச் சார்ந்து தோன்றி நிலவும் இலக்கிய மாதிய அருங்கலைகள், இன்பம் பயக்கும் வகை எவ்வாறென்பதும் பெற்றாம். அன்றி, ஒரே களனில் தோன்றியபோதும், பயன் கருதாது அறத்தை யொன்றி யெழுந்து நின்று இன்பத்தை நல்கும் இலக்கிய மாதிய அருங்கலைகள், பயனைக் கருதியே யெழுந்து நிலவும் பிற கலைகளின் நிலைகளினும் உன்னத நிலையில் நிற்றலும் கண்டாம்.

### இலக்கியமும் பிற அருங்கலைகளும்

இலக்கியத்தை யொத்தே, இசை கூத்து ஓவியம் சிற்பமாயவையும், உலகிற்குத் தேனும் விருந்தும் அமுதமும் மருந்துமாம். ஒரே நிலத்திற் றோன்றி அழகின் பல உருவங்களோடு பல துறைகளிற் பொலியும் பெற்றியால், அவற்றின் இயற்கைச் செவ்வி ஒரு பெற்றித்ததே யாகும்: திருவருள் மணம், பலகால் பழகினும் புதுமை யளிக்குந் திறம், வாழ்க்கையின் பழக்க வழக்க நிலையி

லிருந்து மனத்தை உன்னத நிலைக்குச் சேர்த்து இன்பமளிக்குஞ் செவ்வி, ஆதியவற்றில் அவை ஒன்றையொன்று ஒப்பனவாம். எனினும், ஒவ்வொன்றும் சில அமைப்புக்களில் சிறப்புடையதாகும். அன்றி, ஓவியமும் சிற்பமும் நாட்டியமும் இசையும் கண்டு கேட்டபொழுதே உள்ளத்தை அள்ளுந் தன்மையனவாகவும், இலக்கியமோ, அத்துணை எளிதாக உணரத்தக்கதன்று; அதையறிந்து உணர்ந்துதுய்த்தற்கு மொழியறிவும் சுவைக்கு மாற்றலும் இன்றியமையாதனவாம்.

**இலக்கியத்தின் சிறப்பு**

[1]சில கூறுகளில் பிற அருங்கலைகளை ஒத்திருப்பினும், [2]அவற்றினும் இலக்கியம் சிறந்ததேயாகும். ஓவியமும் உருவச் சிலையும் நிலவக்கூடும் கால அளவு, அவற்றை அமைக்கப்பெறும் பொருள்களின் வன்மை மென்மைகளையும், அவை வைக்கப்பெறும் இடம், நிலவும் காலம், ஆயவற்றின் பரிசுகளையும் ஒட்டியதாகும். ஓவியம், அஃதமைந்து நிற்கும் சுவர் கிழி தாள் ஆதியவற்றோடு நின்றுபடும் பான்மைத்து; உருவச்சிலை, அதனைச் செதுக்கப்பெறும் கல் உலோகங்களோடு நின்று அழியும். சில நூற்றாண்டுகட்கு முன் அமைக்கப்பெற்ற கற்சிலைகளின் வடிவம் குலைந்துகொண்டிருத்தலை இன்று நாம் பார்க்கின்றோம்; இன்னும் பிண்டிக் கல்லினால் அமைக்கப்பெற்ற

1. "Poetry includes what so ever of painting can be made visible to the mind's eye, and what so ever of music could be conveyed by sound and proportion without singing and instrumentation."

—James Henry Leigh Hunt, An answer to the question what is poetry.

2. "Hence the fame of sculptors, painters and musicians, although the intrinsic powers of the great masters of these arts may yield in no degree to that of those who have employed language as the hieroglyphic of their thoughts has never equalled that of poets in the restricted sense of the term."

—P. B. Shelly, A defence of poetry.



சிலைகளின் உருவங்கள் குறுகியகால அளவிலேயே பெரும்பாலும் அழிந்துபட்டிருத்தலை (கச்சியம்பதியிலுள்ள கைலாயநாதர் கோயில் முதலியவற்றில்) நம் உள்ளம் பதைபதைக்கக் காண்கின்றோம். அன்றி, சிறந்த ஓவியங்களும் உருவச் சிலைகளுங் கொண்ட திருக்கோயில்களும் மாளிகைகளும் வேற்றரசர் படையெடுப்பாலும் காற்று வெள்ளம் தீ ஆயவற்றாலும் அழிந்துபட்டவை எத்தனை! கருதுந்தொறும் கருதுந்தொறும் மனத்துயரம் மிகுகின்றது. இனி, இலக்கிய நூல்களின் படிகளடங்கிய புத்தகங்களும், தீ முதலியவற்றான் அழிவெய்தவுங் கூடுமாயினும், அவ்வா றழியக்கூடியவை ஏடுகளேயாம்; நூல்கள் அழியாதனவே! என்னை? அவை வாய்ப்பாடமாகவும் நிலவுந் தன்மையனவாகையான். நான்மறை போன்ற பல நூல்கள், எழுதப்பெறாமல் நீண்டகாலமும் ஓதப்பெற்று வந்திருக்கின்றன. இவ்வாறாகவும், இலக்கிய நூல்களும் பல அழிந்துபட்டனவே யெனின், கால நிலைமையின் சீர்கேட்டை யொட்டிப் போற்றப் பெறாமையினான்மட்டுமே பெரும்பாலும் அழிவுறலாயின வென்க. ஒவ்வொரு நூலின் படிகள் பல, பல இடங்களில் இருந்திருத்தல் இயற்கையாகவும், அவை யடங்கலும் அழிந்துபட்டன வெனல், போற்றப்பெறாமையினானன்றி, எவ்வாறு நிகழ்ந்திருக்கக்கூடும்?

சிற்ப ஓவிய உருவங்கள், அவை எவற்றைக் குறிக்கின்றனவோ, அவற்றின் நலன்கள் மூப்பெய்தி அழியாதவாறு அவற்றை என்றும் முருகொடு திகழக் கொள்வனவாம். ஆயினும், அவை நிலவும் கால அளவானது, அவற்றின் முதற் கருவிகளாய கல் லாதியவற்றையும் அவற்றின் சார்புகளையும் ஒட்டியதாகும். இனி, அவை நிலவும்போதும், அவை இருக்கும் இடத்தேயன்றிப் பிற இடங்களிற் காணற்கியலாதனவுமாகும். அவற்றின் படிகளை யமைத்தல் அருமை; அமைக்கலாயினும் முதலின் பெற்றி ஓர் அளவு மட்டுமே பொருந்தியனவாகவே அமையும். அவ்வாறன்றி, இலக்கியத்தின் உருவங்களோ

அழியாதனவேயாம். என்னை? அதனை எழுதக்கொண்ட ஏடும் தாளும் பிறவும் அதன் உருவங்களாகா: அது சொல்லுருவினதே யாகையான்.

ஒரு சலவைக்கல்லாலான பாண்டத்திலுள்ள அருமை யான உருவங்களைப் பற்றி, கவி கீட்டு இயற்றிய பா வொன்று, (Ode on a Grecian urn) அவ் வரிய பாண்டத்தைக் காணவியலாத மொழியறிவுடைய பலரும் கற்று அச் சிற்ப உருவங்களின் மாண்பை அறிந்து இன்ப மெய்துமாறு, அவற்றின் அழகைத் தன்னிடை யமைத்து மேம்படுத்தியுள்ள தெனின், இலக்கியம் இவ் வகையில் எத்துணை உயர்ந்ததென்பதை உய்த்துணர்தல் வேண்டும். [1]சிற்பத்தின் வாடாத நலன்களை வாடாத வகையில் அளிக் கின்றது அப் பா! அன்றியும், அதன் நலத்தை மேம் படவும் செய்துள்ளது. என்னை? அதனைக் காணாத நாடு களிலுள்ளோர் பலரும் அதன் மாண்பை யுணருமாறு செய்துள்ளமையானும், அதன் நலத்தை உள்ளபடியே அழகுபடுத்திக் காட்டியுள்ளமையினானும், அப் பாண்டத் தொடு அதன் மிசையுள்ள சிற்ப வுருவ மழியினும், அப் பாவில் நிலவும் அதன் நலன் அழியாதவாறு தன்னிடைப் பொதியக் கொண்டுள்ளமையினானும் என்க.

வண்ணம் தூரியம் உளி முதலிய கருவிகளில்லாமல் ஓவியங்களையும் உருவச் சிலைகளையும் சமைத்தற்கியலாது.

---

1. "Oh attic shape! Fair attitude! with brede
 of marble men and maidens over wrought,
With forest branches and the trodden weed;
 Thou silent form, dost tease us out of thought
As doth eternity: cold pastoral!
 When old age shall this generation waste.
Thou shalt remain, in midst of other woe
Than ours, a friend to man, to whom say'st,

"Beauty is truth, truth beauty,"—that is all
Ye know on earth, and all ye need to know."

—Keats. Ode on a Grecian Urn.



[1]ஆனால், இலக்கியத்தின் உருவையளிக்கும் மொழியோ வெனின் கருத்துக்கு அணுக்கமாயுள்ளது; கருத்தின் உருவமாகவே திகழ்வது. ஓவியத்திலும் உருவச் சிலை யிலும் நுதலப்பெறுவனவற்றைக் காட்டிலும், நுண்ணிய கருத்துக்களை, அதி நுட்பமாகவும் இயங்குந் தன்மையிலும் மொழியைக்கொண்டு இலக்கியத்தில் அமைத்தல்கூடும். ஓர் இயற்கைக் காட்சியை ஓவியப்படுத்திக் காட்ட ஒரு படம் வேண்டும்; அத் தோற்றம் மாறி யெய்தும் நிலைகள் ஒவ்வொன்றையும் அமைக்க ஒவ்வொரு படமே வேண்டும். அன்னவாறே ஒவ்வொரு மெய்ப்பாட்டையும் காட்டுதற்குத் தனித்தனி உருவச்சிலையே வேண்டும். இன்னவாறு செய்தமைத்தல் எளிதன்று. ஆனால், இயற்கையின் பல தோற்றங்களையும் மக்களின் மெய்ப்பாடுகளையும் ஒழுக்கங் களையும் அவற்றை விளக்கி அணிசெய்ய வமையும் உவமைகள் உள்ளுறை யுவமங்கள் முதலியவற்றையும் நுட்பமாகவும் குறுகிய காலத்திலும் உயிர் நின்றியங்கும் பான்மையோடும் மாறிச் செல்லும் அழகுகள் சிந்தவும் மொழியைக்கொண்டு திறம்பட அமைக்கக்கூடும். தலைவன் உவக்கும் வண்ணம், அவனைத் தலைவி உண்பித்ததைச் செவிலி நற்றாய்க்குக் கூறிய செய்தியைக் கொண்ட,—

[2]"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்

---

1. "And this springs from the nature itself of language, which is a more direct representation of the actions and passions of our internal being, and is susceptible of more various and delicate combinations, than colour, form, or motion, and is more plastic and obedient to the control of that faculty of which it is the creation. For language is arbitrarily produced by the imagination, and has relation to thoughts alone; but all other materials, instruments and conditions of art have relations among each other, which limit and interpose between conception and expression."

—P. B. Shelly, A Defence of poetry.

2. குறுந்தொகை : 167.

தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே."

என்ற பாட்டில், உள்ள காட்சிகளை ஒரே படத்தில் அமைத்தற்கியலுமோ? அன்றி, அதனிடையுள்ள பல கருத்துக்களையும் பல படங்களில் அமைக்க முயன்றாலும் குய்ப்புகை மணமும் பாகரின் தீம் புளிப்பும் அமைத்துக் காட்டுதல் எங்ஙனம்? இயலாதெனக் கூறுதலும் வேண்டா. இனி, அத்தனை படங்களுங் கூடி, பாட்டிலுள்ள நுண் கருத்துக்களைக் கொண்ட பகுதிகளை, ஒருவர் எடுத்துக் கூறாதவழி, தாமே உணர்த்திடும் செவ்வியனவாமோ? இவற்றையெல்லாம் வைத்து ஆராயப்புகின், ஓவியக் கலைக்குள்ள குறைபாடுகள் தெள்ளிதாம்; இப் போக்கில், சிற்பக் கலையின் குறைபாடுகள் பிறவுமுளவாமென்பதும் தெரிய வரும். எனவே, இவ்விரு கலைகளிலும் இயற்றமிழ் சிறந்ததென்பது ஒருதலை.

**இசை நாடகங்களினும் இயல் சிறந்தது**

எஞ்சியுள்ள இசைப்பாட்டும் நாடகமும், சொற்பொருளைக் கொண்டன்றி, இசை அவிநயங்களில் விள்ள முயலும் மணம சுவைகளையும் நுண்ணிய கருத்துக்களையும் காட்சி செய்திகளையும் தகவிள்ளும் பரிசினவாகா. இவ்விரு கலைகளும் உள்ளத்தெழும் பலவகைச் சுவைகளை, உள்ளத்தைக் கவருந் தன்மையில் விள்ளும் ஆற்றலுடையனவாம். [1]அவற்றின் திறம் ஓரளவும் அவற்றிற்கில்லாத செவ்வி பிறவும் அமையப் பெற்றுள்ளமை பற்றி, அன்று தொட்டு இன்று வரையும் இயற்றமிழே இசை நாடக வகைகளைக் காட்டிலும் அறிஞரால் பெரிதும் போற்றப் பெற்று

1. "But it (poetry) far surpasses these divine arts (painting and music) in suggestiveness, range, and intellectual wealth."—James Henry Leigh Hunt, An answer to the question what is poetry.



வந்துள்ளது. ஆங்கிலத்திலும் பிற சில மொழிகளிலும் இசைப்பாட்டை இலக்கியமாகக் கொள்ளும் வழக்கில்லை.

**குறிப்புரை**

இனி, நுவலவிருக்கும் கருத்தை, ஏற்றவிடங்களில் குறிப்பாக உணர்த்தும் மரபு இலக்கியத்திலுண்டு. கதை தழுவிய நாடகம் இலக்கிய வகையேயாமாதலின், இவ் வழக்கு அதனிடையும் உண்டெனத் தனிப்படச் சொல்லுதல் வேண்டா. இலக்கியம் நாட்டியமொழிந்த பிற அருங்கலைகளில் இம் முறையைக் கையாளுதல் இயலாததொன்றேயாம். நாட்டியத்திலோ, இலக்கியத்தில் உணர்த்தக்கூடிய அளவு உணர்த்துதற்கியலாது.

[1]"வல்லைநீ துறப்பாயேல் வகைவாடு மிவளென
வொல்லாங் கியாமிரப்பவு முணர்ந்தீயா யாயினை
செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாட்ப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன."

என்னும் அடிகளில், தலைவியைப் பிரியின், அவள் துயருறுமென அறிவுறுத்தவும் அறிவுறுத்தவும் கேளாநாயு தலைமகனுக்கு, அவன் நீப்பின் தலைவியொடு அவள் சுற்றமும் கெடுமென்று தோழி குறிப்பாய் நயம்பட உணர்த்திய பொருள் பொதிந்து நிற்கின்றது. மரம் தோழியும் கொடி சுற்றமுமாகக் கூறினாள்: மரத்தினது நிழலில் நிற்றலிற், கொடி, மரம் வாடும் அளவும் நிற்கும். இச் செய்யுட் பகுதி யிற் கூறிய இறைச்சிப் பொருள் இணைப் பொருட்குப் பொருந்த நிற்கின்றது.

[2]"உள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு
முண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன."

இப் பகுதியில், "கருங்கண் செங்கண்" என்னும் சொற்களைக்கொண்டு, சொல்லவெடுத்துக்கொண்ட கருத்

1. பாலைக்கலி: 2. 2. சிலப். இந்திர: 235 - 238.

தைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார் ஆசிரியர். "கருங்கணென்றது கண்ணகிக்குப் புணர்ச்சியில்லாமையால்; நிறை கரந்து துன்பத்தால் கண்கள் நீருகுத்தன; செங்கணென்றுரைத்தது, மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலால்; அகத்து நிறை கரந்தொளித்து இன்பத்தாற் கண்கள் நீருகுத்தன." இப்பகுதிக்குப் பின்வரும்,—

[1]"எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன."

என்னும் அடி, பின் கண்ணகிக்குக் கூட்டமுண்டாக விருப்பதையும், மாதவிக்குப் பிரிவுண்டாகவிருப்பதையும், முறையே இடக்கண்ணும் வலக்கண்ணும் துடித்தனவென்பதைக் கொண்டு, வரவிருக்கும் நிகழ்ச்சிகளை முன்னரே உணர்த்தி நிற்கின்றது.

**சொல்லாது சொல்லுதல்**

[2]மேழே எடுத்துக் காட்டிய கலிப்பாட்டில் தலைவியும் அவள் சுற்றமும் இறந்துபடுவர் என்னும் கருத்தை, வெளிப்படையாகக் கூறாமல், குறிப்பாக நயம்பட உணர வைக்கப் பெற்றுள்ளது. இப்பண்பு குறிப்புரை யனைத்துக்கும் பொதுவாகும். ஆனால், ஒரு பண்பையோ அல்லது நிகழ்ச்சியையோ சொல்லி, அதன் விளைவைச் சொல்லாமலே அறிஞருக்குப் புலப்படுமாறு உணர்த்துதலும் மரபு.

[3]"கறங்கு கால்புகா கார்புகா கதிர்புகா மறலி
மறம்பு காதினி வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த வணிமதிட் கிடக்கைநின் றகத்தின்."

[4]அறன் கடை நின்ற பேதையனை இராவணன் நகரினுள் அறம் புகாதென்றது உண்மையே யாயினும், அப்புகாமை

1. சிலப். இந்திர. 239.
2. பாலைக்கலி: 2.
3. இராமாவ. சுந்தர. ஊர்தேடு. 23.
4. "அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்." திருக்குறள்: 142.



மதிலின் சிறப்பை உணர்த்தி நின்றது போன்று சொல்லி, பேராற்றல் படைத்த அவன் போகத்தில் [1]இன்பம் விளையாதென்பதையும், விளைவது துன்பமும் புகழுக்கு அழிவுமே என்பதையும் [2]இறுதியில் அறத்துக்குப் புறம்பாக நின்ற நகரமும் அதன் அரசும் அழியுமென்பதையும் சொல்லாது சொல்லி இழிவு சிறப்பை உய்த்துணர வைக்கின்றது இவ் விருத்தம். காதலரிடை வேட்கை மிகுந்த வழி, அவ்வுணர்ச்சியின் மிகுதி வாயால் மொழியப் பெறாத வழியும், அதனைக் [3]கண்கள் நுதலும்; மெய்ப்பாடுகள் பலவும் உணர்த்தும். கையறு நிலையில், பேசாமையே உணர்ச்சியை விள்ளாது விள்ளுதலை யாவருமறிந்ததேயாகும். எனவே, சொல்லாது சொல்லுதல் இயல்பாக அமைந்த செம்முறையேயாகும். இவ்வண்ணம் உணர வைத்தல், இலக்கியத்தில் அமையுமளவு, பிற அருங்கலைகளில் இயலாதென்று விதந்து கூறுதலும் வேண்டா.

இத்தனைச் சிறப்புடையது இலக்கியம். மொழியறிவுடையோர், இலக்கிய விருந்திலுள்ள செவ்வியை என்றென்றும் மனத்தகத்தே வைத்து இன்புறக்கூடும். அவ்வாறன்றி, இசைப்பாட்டு ஆட்டங்களினால் மேவும் துய்ப்புகளின் பயன்களோ, விரைந்து மறையும் தன்மையனவாம். இசைக்கும் நிருத்தத்திற்கும் அரங்கும் பிற வசதிகளும் இன்றியமையாதனவாகும்; ஆனால், இலக்கியத்தைக் கால வரம்புகளின்றியும் பிற வசதிகளின்றியும் துய்த்தல் கூடும்; ஏடும் ஆணியும் தாளும் கோலும் பிற கருவிகளுமின்றியே பாடவும் மொழியவுங்கூடும்.

இப்போக்கில், இசையிலுள்ள சொற்பொருட் பகுதியும் நாடகத்திலுள்ள மொழிப்பகுதியும் இயற்பகுதியைச்

1. "அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில." திருக்குறள்: 39.
2. "அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்." சிலப். பதிகம், 55.
3. "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில." திருக்குறள்: 1100.

சார்ந்தனவேயாம். தேவாரம்போன்ற நூல்கள் பண்ணொடு இசைக்கப் பெறுதலோடு பொருட்சுவை யமைந்த இயற்றமிழ்ப் பகுதிகளாகவும் விரும்பிக் கற்கப்படுகின்றன. ஆங்கிலத்தில், செகப்பிரியர் முதலியோர் செய்த நாடக நூல்கள், நடிக்கப் பெறுதலோடு இலக்கிய நூல்களாகவும் கற்கப் பெறுகின்றன. இனி, பல மொழிகளிலும், கற்று இன்புறுதற்கென்றே நாடக வடிவில் செய்யப்படும் நூல்களும் பல உள. எனவே,பிற அருங்கலைகளினும் இலக்கியம் பலவகைகளிலும் சிறந்ததென்பது பெற்றாம்.

**பேசும்படம்**

வைகலும், மக்கள், அரங்குகளிற் பெருந் திரளாகக் கூடி, கண்டும் கேட்டும் களித்தற்காம் பேசும் படம், இசைப் பாட்டு ஆட்டம் ஓவியம் சிற்பம் ஆகிய அருங்கலைகளின் கூறுகளையும் நிழற்படமாதிய பிறகலைத் திறங்களையுங்கொண்டு உருவெய்தி நிற்பதாகும். பல இயற்கைக் காட்சிகள் பொருள்கள் உயிர்களாதியவற்றின் தோற்றங்களையும், பல நிகழ்ச்சிகள் செய்திகளைக் குறிக்கும் காட்சிகளையும், மக்களின் மெய்ப்பாடுகள் ஆட்டங்கள் ஒழுக்கங்களாதியவற்றின் காட்சிகளையும் பட வடிவங்களி லமைத்து, அவற்றின் நிழலை அரங்குகளின் வெள்ளித் திரைகளில் இயங்கச் செய்வதோடு, நிகழ்ச்சிகளோடு பொருந்திய உரையாடல்களும் இசை வகைகளும் பொருந்திய முறையில் ஒலிக்கச் செய்யவும் பெறுகின்றன. இப் பரிசுகளமையப் பழம் புராணக் கதைகள், இலக்கிய நூல்கள் பலவற்றிலுள்ள கதைகள், பிற கதைகள் ஆதியனவும், தக்க சூழ் நலன்களுடன், பல நாட்டுமக்களின் பழக்க வழக்கங்களிற் றிகழும் நாகரிகம் விளங்கிட வுருவாக்கி, இயங்கும்வண்ணம் காட்டப்பெறுகின்றன. இவ்வாறு இயங்கும் பேசும்படம், அதைத் துய்க்கும் மக்களின் கண்களையும செவிகளையும் கவர்ந்து, மனத்தைக் கட்டி நிறுத்தி விடும் தன்மைத்து. அதன் பசப்பிற் சிக்குறும் நகர மக்களிற் பலர், நாளும் அரங்குகளுக்குச் சென்று களித்துத் திரும்புகின்றனர். இனி, கல்விக்கேற்ற பரிசமைந்திடப் படங்கள் சில சமைக்கப்பெறுதலு முண்டு.



வானளாவிய சிகரங்களைக் கொண்ட மலைகள், அவற்றினின்றும், அழகிய காடுகளையுடைய மலைச்சாரல்களில் இழிந்து தாழும் அருவிகள், உயர்ந்தகன்ற மலைத்தொடர்களி னிடையே யுள்ள மலையோரிகள், பல செடிகொடி வகைகளடங்கி அணிசெய்யும் பசும்புல் வெளியிடங்கள், கவரும் பல உருவங்களும் நிறங்களும் பொருந்திய பலவகைக் காட்டு விலங்குகள் முதலிய மக்கள் பலரும் சென்று காணலாகாத அரிய இயற்கைக் காட்சிகளையும், பல நாடுகளிலுள்ள பல நகரங்களையும், கற்று அறிதற்கரிய பல நூல்களிலுள்ள பல கதைநிகழ்ச்சிகள் முதலியவற்றையும் கண்கொண்டு காணும்வண்ணம், உண்மைத் தோற்றங்களைப் போலவே காண வசதியளிக்கும் படங்கள், கல்வி கற்கப் பெரிதும் பயன்படும் தன்மையினவாம்.

**அதனிடம் புன்சுவை பொருந்தி நிற்றல்**

ஆனால், மக்களின் சுவையறிவைத் தூய்மைப்படுத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டு சேர்த்து இன்பத்தை யளித்தல் அருங்கலைகளின் இயல்பாகவும், பேசும் படங்களோ, பெரும்பாலும் சமூகத்திலுள்ள பெரும்பகுதியினர்விரும்பித் துய்க்கும் இழிந்த சுவைகளைப் பொருட் படுத்தி, பேரெண்ணினரான அன்னவர் பெருந்திரளாகக் கூடி, இருந்து, கண்டு, கேட்டுக் களிக்கும்வண்ணம், பெரும்பாலும் பொருளீட்டும் வாணிகப் போக்கிலேயே இயற்றப்பெறுகின்றன. அவ் வரங்குகளுக்குச் செல்வோரில், தாழ்ந்த அறிவினர் பலரின் அறிவும் சுவையும் திருந்தி மேம்படும் வண்ணம் அப் படங்கள் அமைக்கப்பட்டால், அவ் வகை மக்கள் இறைகொடுத்துப் பெருந்திரளாக அவ் வரங்குகட்குச் செல்லாரென்பது திண்ணம். தாழ்ந்து பிறழ்ந்த சுவையறிவுடையோரே எச் சமூகத்திலும் பெரும்பகுதியினராயினமையின், அவர் விரும்பும் வகையில் படங்களை அமைத்தாலொழிய, அவ் வரங்குகளின் வாயிலாகப் பெரும்

பொருளீட்டலாகாது. எனவே, பொருளீட்டும் நோக்கத்துடன் கையாளப்பெறும்வரையும் அக் கலையில் அருங்கலையின் உயர்ந்த செவ்வியை எங்ஙனம் எதிர்பார்க்கக் கூடும்? உயர்ந்த நோக்கத்துடன் யாக்கப்பெற்றால், இயற்றமிழறிஞரை யொத்தே, அக் கலையை விரும்புவோர் தொகையும் குறையுமென்பதில் ஐயமும் உண்டோ!

குடியரசே சிறந்த அரசியல் முறையாகக் கருதப்படும் இந்நாளில், எத்துறையிலும் மக்களிற் பெரும்பகுதியினர்க்கான வகையில் யாவையும் அமைக்கப்பெற வேண்டுமென்பது நோக்கமாதலின், ஏற்றம் அமைவதெங்ஙனம்! என்னை? அப் பெரும்பகுதியினரும் குன்றிய அறிவும் பிறழ்ந்த சுவையும் தாழ்ந்த நோக்கமு முடையோராகலின். அன்னவர், பொருளையே பெரிதும் பொருட்படுத்தும் செவ்வியோர்; பெரிதும் முயற்சியின்றியே இன்ப நுகர்வு நேரவேண்டும் தவத்தினர்; அவை வரும் வழி அறத்தின் பாலதோ பிறிதோ என்று கருதிப் பாராது, நுகர்வுக்குரியவற்றை நாடிக்கொள்ளும் அறவோர்; வணங்குவதன் பயனாக விரும்பியவற்றைப் பெற்றிலரெனின், தெய்வத்தையும் வசைகூறும் பெரியோர்; எவ்வகையிலும் தம் உரிமைகளையே பொருட்படுத்துவதன்றி, தம் கடமைகளைக் கருதுதலும் செய்தறியாத வள்ளியோர். எனவும், இத்தகவுடையோர் விரும்பும் வகையில் அமையும் கலைகளின் இயல்பு எவ்வகைச் சிறப்புடையதாகும்? கூறவும் வேண்டுங் கொல்! நீதி புகட்டும் சில நிகழ்ச்சிகளும், மரபை யொட்டியே, படங்களில் இடையிடை செருகப் பெறுமெனினும், பெரும்பாலோர் அவ் வகைப் பகுதிகளை விரும்பாது, ஏதோ பொழுதுபோக்குக்காக அமைக்கப் பட்டவையென்று கருதுவர். கடவுளரே யாயினும் சிற்றின்பப் பூசலில் சிக்கியவராகக் காட்டப்பெறா ரெனின், அத்தகைய படங்களைக் காணவும் கேட்கவும் விரும்பார் அப் பகுதியினர்.

இத்தகைய புன்சுவை மாந்தர் மனநிறைவைக் கருதியே, அப் படங்களில், சிறந்த இலக்கியக் கதைகளின்



உருவைக் குறைத்திடவும் துணிகின்றனர்; மாற்றியும் அமைக்கின்றனர். இனி, ஆக்குவோன் தனிப்பண்பு சில அருங்கலைகளில் மணக்கும் தன்மையை அக் கலையில் காணலாகாது. ஏனெனின், படத்தை ஆக்குவிப்போர், பல் கலைவல்லுநரைக்கொண்டு, அவரவர் குறித்தபடி, அவ் வக் கூறுகளை ஆக்குவித்தலின் பயனாக வென்க. அன்னவர் பலர் செயல்களையும் ஒன்றுவிக்கும் தலைவரொருவர் உளராவரெனினும், பகுதிகள் இயற்கைப் போக்கிற் பொருந்தாவாகையான், படங்களிற் பெரும்பாலன கதம்பங்களாகவே அமைகின்றன. படத்தை ஆக்கும் கலைஞர் பலரும் மக்களேயாயினமையின், தலைவர் அன்னாரை முற்றும் கருவிகளாகக் கொள்ளலாகாது. தூரியம் உளி யாதிய கருவிகளே, கருத்திலுள்ள உருவங்களை முற்றிலும் செப்பமாகத் தர வமையாவெனின், மக்களோ அமைவர்!

இனி, பயனை நோக்கின், இடையிடையே மகிழ்ச்சியை யளிக்கும் காட்சிகளும் இசைகளும் நிகழ்ச்சிகளும் பொருந்தி நிற்பினும், அக் காட்சிகள், உள்ளத்தை உன்னத நிலைக்கு உயர்விக்கும் பயனை யளிப்பனவல்ல. பொழுதுபோக்கையும் கண்டபோது மகிழ்விக்கும் அதன் திறத்தையும் கருதியே மக்கள் அவ் வரங்குகளை மேவுகின்றனர். எய்திய பயனும் விரைவில் தேய்ந்து மறையும். ஆகவே, பேசும் படத்தின் இப்போதைய நோக்கம், தன்மை, பயன்களைச் சீர்தூக்கின், அது, ஆடல் பாடல் அழகுப் பயிற்சியைக் கொண்டு இழிந்த நோக்கத்தோடு ஒழுகும் விலைமாதை யொக்கும்.

**அஃதோர் அருங்கலையேயோ**

எனவே, அதனிடைப் பல அருங்கலைக் கூறுகள் பொருந்தியிருப்பினும், அதை ஓர் அருங்கலை யெனக் கொள்ளுவதற்கில்லை. அரிய காட்சிகளைக் காணுமாறும், அரிய செய்திகளைக் கேட்குமாறும், வருவாயை எதிர்பாராது, கல்வி முறையில், படங்கள் சில யாக்கப்பெறுகின்

றனவே யெனின், இப் பண்புகள் மட்டுமே அதனை ஓர் அருங்கலையெனக் கொள்வதற்குப் போதாவென்க.

### அஃதிந்நாள் நாகரிகத்தின் பிள்ளை

அது, தற்கால நாகரிகத்தின் இயல்பு முற்றும் பொருந்திய கலையென்பதில் ஐயமில்லை. நம் நாட்டை அடிமைப்படுத்திய மேல்நாட்டினரின் செல்வாக்கைக் கண்டு, அன்னவர் நாகரிகத்தில் பெருவிருப்பங்கொண்ட நம் மக்கள், மேல்நாட்டுக் கோட்பாடுகளையும் போக்குகளையும் மேற்கொண்டு, அன்னவர் கல்விமுறைகளையும் சமூக அரசியல் முறைகளையும் பின்பற்றியுள்ளனர். இவ் வகையில், இயற்கைச் சத்திகளை யடக்கி, வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ளும் கருத்தொடு வளர்க்கப்பெறும் அறிவியற்கலைகளின் உதவியால், உடம்பையும் ஆடரங்குகளையும் விரும்பியவாறே சிறந்த வகையில் அழகு செய்துகொள்ளவும், ஒளி பின்னணி முதலியவற்றைச் சேர்க்கைமுறையால் வேண்டியவாறு அமைத்துக்கொள்ளவும், நடிப்பு நிகழ்ச்சிகளின் காட்சிகளைப் படச்சுருளில் அமைத்துக்கொள்ளவும், உரைகளையும் பாட்டுகளையும் பிற ஓசைகளையும் பிணித்து நிறுத்தவும், வெளியிடவும், படிகளாக்கிப் பல இடங்களில் பரப்பவும், இன்னும் வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ளவும் போதிய அளவுக்கு ஆற்றலைப் பெருக்கிக்கொண்டு, பொருளைப் பெருவாரியாக ஈட்டும் வேட்கையோடு இயற்கையிலமையாத தளுக்கு பிலுக்குகளும் பசப்பு நடிப்புகளும் பொருந்திய பேசும் படங்கள் அமைக்கப்பெறுகின்றன. பொருள்வேட்கை இக் காலத்தின் போக்கு. இக் காலத்தில் பெரிதும் போற்றி வளர்க்கப்படும் அறிவியற் கலைகளாலமைந்த பொருள்களும் கருவிகளுமில்லாமல் படம் அமைக்கலாகாதாகவும், தளுக்கு முதலிய செயற்கை மெருகுகளும்கூடக் காலப் பண்பின்வழி யமைந்தனவேயாகும். இனி, பொழுது போக்கையும் புன்சுவை யறிவை மயக்கும் நுகர்வையும் கருதி அவற்றைக் காணுதற்கு அரங்குகளிற் கூடி நெருங்கி மொய்க்கும் மக்களின் மனப்பான்மையும் தற்கால நாகரிகப்



போக்கிலேயே யமைந்ததாகவும், பேசும்படம், இக் கால நாகரிகத்தின் பரிசு திகழத் தோன்றிய பிள்ளையென்னும் கூற்று பொருந்தியதே யாகுமன்றே !

### நாகரிகமும் மக்களியல்பும்

சோம்பித் திரிந்து, வறுமொழியாடி உடற்கின்பம் பயக்கும் வசதிகளையே மேன்மேலும் நாடிச்செல்லும் போக்கு, அஃதமைந்த நாட்டின் சீர்கேட்டிற்கு அறிகுறியாகுமென்பது சரித்திர வுண்மை. இம் முடிவு சமூகத்திற்கே யன்றி, தனிப்பட்டவரின் வாழ்க்கைக்கும் பொருந்தும் ; அன்றி, இலக்கிய நூல்களிலும் காணக்கூடும் : சச்சந்தன் வாழ்க்கை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஆனால், தற்போதோ, இப் போக்கு, ஒரு நாட்டிலும் சில நாடுகளிலுமே யல்லாமல், உலகிடை யெங்கும் பரவி நிற்கின்றது. இயல்பாக, மக்களின் வாழ்க்கையிலே யமைந்து கிடந்து, நாளடைவிலே வளர்ந்து, தற்போது மலிந்து நிற்கும் பல குறைபாடுகள், உடம்பொடு தோன்றிய நோய் நாளொடு வளர்ந்து உடம்பையே நலிந்து கொல்லுமாறுபோல், நாகரிகத்தையே நலிந்து கொல்லுதற்குள்ளனவோ, என்று அறிஞர் கண்டு அஞ்சத் தகும் பான்மையினவாம்.

உள்ளப் பரிசை யொட்டியதே யாகும் மக்களின் வாழ்க்கைப் பரிசாகையான், அவ்வாழ்க்கையின் மேம்பாட்டைக் குறிக்கும் நாகரிகமும் உள்ளத்தின் இயல்பையொட்டியதே யாகும். உள்ளக் கோட்டத்தின் ஒரு பண்பு பொறாமை யாகும். அதை அகற்ற வேண்டுமென்பதைத் தொன்றுதொட்டே ஒரு கோட்பாடாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அஃது இன்று வரையும் மக்கட் சமூகத்தை விட்டு அகன்றிலது. குடும்பங்களிலேயன்றி, சமூகத்திலும் அதன் நலிவு நிலைத்திருப்பதன்றியும், போருக்கும் அதன் விளைவுக்கும் அஃதே ஓர் அடிப்படையான காரணமாகவும் நின்று வாழ்க்கையை முருக்குகின்றது. மக்கள் வகுப்புக்களினிடையும், அன்றி, நாடுகளினிடையும்,

நம்பிக்கை, மிகமிகத் தேய்ந்து நிற்கின்றது. அவை, தம் உரிமைகளைக் காத்துப் பெருக்கிக் கொள்ளுதற்குப் பிறவற்றின் நலன் இடர்ப்பாடாதலுங் கூடுமென்று, அஞ்சியும் அஞ்சாதும் அழுக்காறு கொண்டு, தற்காப்பாகவும், பிறர் நலனை அழிக்கும் பொருட்டும், வேண்டியவற்றை அமைத்துக் கொள்ளுதலில் முனைந்து நிற்கின்றன. எனவே, பல நாடுகளின் முயற்சிகளும், பிறர் வலியையும் நலனையும் அழித்தற்கு வேண்டியவற்றை அமைத்துக் கொள்ளுவதில் இடையீடின்றித் தொழிற்பட்டு நிற்கின்றன. அவ்வகையில் முயன்று உருவாக்கப்பட்டவற்றுள் சிறந்த ஒரு கருவியே அணுக்குண்டு.

## நாகரிகத்தின் மற்றொரு அருமை மகவு

ஆகவே, பேசும்படம் நாகரிகத்தின் ஒரு பிள்ளையென்றால், அணுக்குண்டு மற்றொரு பிள்ளையாகும். வேண்டுவார் வேண்டும் வரமீதல் இறைவன் செயலாகவும், மனம்போல் வாழ்வென்பது அனுபவ உண்மையாகும். கற்றறிந்து, விலங்கியல்பை யொழித்து, அடங்கி யொழுகி, தேவர்களாகுக என்று பெரியோர் சொல்லி அறிவுறுத்தவும் அறிவுறுத்தவும் கேளாத சமூகம், விலங்கியல்பை வளர்ப்பதே வாழ்க்கையின் உரிமையெனக் கொண்டது; கல்வி முறையையும் அதற்கேற்பவே அமைத்துக் கொண்டது. இப்போக்கிலே, சிறந்த வரங்களை விழைந்து நின்றது; வரங்களைப் பெற்றது. இவ்வரங்களே சிறந்த நாகரிகத்தின் அருமைப் பிள்ளைகளான பேசும் படமும் அணுக்குண்டும். இவ்வரங்களைப் பெற்றும் மன நிறை வெய்திலர் உலகியலறிஞர். தம்வழி நில்லாதாரை மாய்ப்பதற்கு அணுக்குண்டினும் சிறந்த கருவியையும், புன்மாலை யின்பம் தோய்தற்குப் பேசும் படத்தினும் செப்பமான கலையையும் நாடி நிற்கின்றனர்; கல்வித் துறையில் முதலிடம் பெற வேண்டிய இலக்கியமாதியவற்றைத் தக மதியாது, அறிவியற் கலைப் பகுதிகளையே அளவுக்கு மிஞ்சிப் பேணி வருகின்றனர். இது, முடியைக் கீழே தள்ளி, காலணியைத் தலைமீதிட்டுச் சிறப்புச் செய்யும் செயலை யொக்கும். இதன் விளைவைக்



கருதிச் சிலர் அஞ்சுகின்றனரெனினும், உலகம், இப்போதைக்கு நல்வழிக்குத் திரும்புமென்று தோன்றவில்லை. அமைச்சரும் பிற சுற்றமுமிருக்கப் புலவர்களை நண்பர்களாகக் கொண்ட முற்காலத்தரசர் புல்லறிவினரோ?

## புலவர்

மொழியறிவு மட்டுமே யுடையவரெனக் கருதி, எளனமாக, ஏட்டுச் சுரைக்காய் என்று சுட்டப்படுபவரல்லர் புலவர். புலமையுடையோரே புலவராவர். அற்றேல், இலக்கியப் புலமையுடையோரையே புலவரென அழைப்பது எங்ஙனம்? எனின், ஆக்கவியலின் வாய்ப்பால், புலமையை, கல் பொன் கிழி மரம் ஆதியவற்றில், உளி தூரியம் அமுது ஆதியவற்றைக் கொண்டு, சிற்பம் ஓவியம் ஆதிய வடிவங்களில், அழகுபட நுவலக்கூடுமெனினும், மொழியைக்கொண்டு அமைக்கவெழும் இலக்கியமே அதன் சிறந்த வடிவமாயினமைபற்றி, அதனை நல்குவோரும் அதன்வழி வரும் புலமையுடையோருமே, சிறப்பு நோக்கிப் புலவரெனப்படுவாராயினர். புலவரெனினும் புன்மையில் காட்சியுடையோரெனினும் ஒக்கும். இலக்கிய நூல்களைத் தருவோர் இத்தகவுடையோராவர். பல துறைகளில் வினையாற்றுவோருக்கு, அவ்வத்துறைக் கல்வி, அவ்வவ்வினையைச் செப்பமாகச் செய்யப் பெரிதும் பயன்படுமெனினும், இலக்கியமே, மக்களை, மக்களென்ற தம் சிறப்பியல்பில் பெரிதும் மேம்படச் செய்யும் சிறப்புத் தன்மையினதாம்.

குறித்த பொருளைப்பற்றிப் பாடினும் எழுதினும், உலகின் தத்துவநிலையை ஓர்ந்த பெற்றியே செய்வர் புலவர்; செய்யும் ஒவ்வொரு நூலிலும், வட்டக்குறைகளில் முழு வட்டத்தின் போக்கு அமைந்து நிற்பது போன்றே, தத்துவவுணர்வு பொதிந்து நிற்கும். பிற கலைகளினும் இலக்கியத்துக்குள்ள சிறப்புக்கும், பிற கலை வல்லுநரினும் இலக்கிய ஆசிரியர்க்குள்ள சிறப்புக்கும் இஃதொரு காரணமாகும். பிற கலைகளின் தாயகம் இலக்கியமாதலின்,

அதன் தன்மையில் அறிவு வகைகளின் கூறுகள் திரண்டு நிற்கும் முழுமையுண்டு. எனவே, அதனொடு பழகுவோர் அறிவு, பிற கலைகளொடு பழகி யெய்தலாகாத பண்பாட்டொடு திகழும். இச் சிறப்பு நோக்கியே, அரசியற்றுறை ஒவ்வொன்றிலும் வல்லுநர் சுற்றமாகத் தம்மைச் சூழ்ந்திருந்து வினையாற்றி வந்துகொண்டிருந்தபோதும், தமிழ் வேந்தர், புலவர் நட்பைப் பெரிதும் பாராட்டி, அன்னவரை ஆதரித்து வந்துள்ளனர்.

**ஏட்டுச் சுரைக்காய்**

இத்தகைய சிறப்புடையோர் புலவரெனின், அன்னவரை உலகியல் மாந்தர் ஏட்டுச் சுரைக்காய் என இகழ்வானேன்? காரணமும் இருத்தல் வேண்டுமே எனின், அன்னவர், உலகியலாரொடு ஒட்டி வாழத் தெரிந்து கொண்டவரல்லர் என்னும் உலகியலார் கருத்துப் பற்றியதாகும் அவ்விழிவுரை. இலக்கிய நூல்களில், புலனெறி வழக்கிலமைந்த உலகைக் கண்ட மனம், கோழை யுலகினை மதியாதிருத்தல் இயல்பேயாகும். உடலம் பொருளுலகைப்பற்றி நிற்பது. எனவே, வாழ்க்கை முறைக்கு வேண்டிய அளவு உலகியலாரொடு ஒட்டி வாழ்தலும் இன்றியமையாததேயாகும். கழுகினம், உலகினின்றும் பறந்தெழுந்து, வானிடையே கண்ணுக்குக் காணாத உயரத்தில், பல மணி நேரம் பறந்து திரியுமெனினும், மீண்டும் தம் இருக்கையுள்ள உலகை யடையும்; அடைந்தேயாக வேண்டும். புலனெறி யுலகைப்பற்றி நிற்பவரான புலவர், உலகியலாரையொப்பப் பொருளீட்ட வல்லவரல்லர். எனவே, கற்றறிந்த வழியும், வாழ்க்கைக்கின்றியமையாத பொருள்வளமற்றவர், வறியோர் என்னும் கருத்துப்படவும் புலவரை அவ்வாறு இகழ்ந்து கூறுதலும் உண்டு. ஆகையான், தங் குறைபாடுகளையும் அறிந்து, குறை கடிந்து வாழ்தலே ஏற்புடைத்தாகும் புலவர்க்கு.

**காலப் போக்கு**

அனுபவமுடையாரென்றும், வாழ்க்கைக்கு வேண்டிய பொருளையீட்டும் ஆற்றலுடையாரென்றும், தம்மைத்தாம்



பெரியராக நினைத்துச் செருக்கிக் கற்றோரை ஏட்டுச் சுரைக்காய் என்று ஏளனஞ்செய்யும் மக்களைப் பெரும்பகுதியினராகக் கொண்ட சமூகத்தின் தகுதியை நோக்குவாம். மக்கள், நாகரிக வாழ்க்கையிலமர்ந்து பல நூற்றுண்டுகள் கழிந்தனவேனும், அடிப்படையான அவர் இயற்கையும் நோக்கமும் மாறிற்றில. காலம் கழியக் கழிய, உடை, அணி, வாழ்க்கைக்குரிய வசதிகள், ஆதியவற்றைச் செப்பஞ்செய்து வந்துள்ளனர்; உணவுப் பொருள்களை அறிவியற் கலையின் உதவியால் செப்பமான முறையில் பெருக்கி வருகின்றனர்; குறுகிய காலத்தில் உலகின் அகன்ற பகுதிகளைக் கடந்து செல்வதற்கு உந்து வானூர்தி போன்றவற்றை யமைத்துக் கொண்டுள்ளனர்; செய்திகளையும் பிற ஒலிகளையும் ஒளி வடிவங்களையும், உலகின் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குச் சில வினாடிகளில் உய்க்கும் கருவிகளைச் செய்து கொண்டுள்ளனர். இவ்வசதிகளை யமைத்துக் கொள்ளுதற்கு மக்கள் பெருந்தொகையினரின் முயற்சியும் உழைப்பும் கழிகின்றன. இவற்றை ஏவல் கொள்ள வாய்ப்புடையோரிற் சிலர் செருக்கி இறுமாப்படைகின்றனர். இவ்வசதிகளைச் செப்பஞ்செய்து கொள்ளுதற்கு இன்றியமையாத அறிவியற் கலையே பெரிதும் போற்றப்பட, இத்துறைக் கல்வியே சிறந்ததென்று விரும்பிக் கற்கப்படுகின்றது.

இக் கலையின் வாயிலாகத் தேர்ந்த இயற்கை விதிகளை வைத்து, இயந்திர சக்தியால் பல கைத்தொழில்களைச் செய்துகொள்ளுகின்றனர். இக் கலையின் உதவியால், கூடுமானவரை, எல்லாத் தொழில்களிலும் இயந்திரத்தின் உதவி பெருக்கிக்கொள்ளப்படுகின்றது. இதனால், பல வசதிகள் ஏற்படுகின்றன: பலர் கூடி, நீண்டநேரம் செய்ய வேண்டிய வேலைகள், குறுகிய காலத்தில், சிலரைக் கொண்டு, இயந்திர உதவியால் முடித்துக்கொள்ளப்படுகின்றன; எனவே, மக்களுக்கு ஓய்வு வாய்க்கின்றது.

### ஓய்வும் நாகரிக வளர்ச்சியும்

நாகரிக வளர்ச்சிக்கு ஓய்வு இன்றியமையாததாகும். மக்களொழிந்த பிற உயிர்களின் வாழ்நாளின் பெரும் பகுதியும் உணவு தேடுவதிலேயே கழிகின்றது. மக்கள், அதிக உழைப்பும் பொழுது கழிவுமின்றியே, வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு உடையாதியவற்றைத் தேடிக் கொள்ளுகின்றனர். எஞ்சியபொழுதில், வாழ்க்கையின் பண்பாட்டுக் குரியவற்றை யமைத்துக்கொள்ளும் வாய்ப்பு கிட்டுகின்றது. எனவே, பிற உயிர்களுக்கில்லாத மக்களின் நாகரிகச் சிறப்புக்கு ஓய்வு ஒரு தனிக் காரணமாகின்றது. நாகரிகத்தின் கொடிமுடியாகிய அருங்கலைகள் தோன்றி வளர்வதற்கும் இஃதே ஒரு பெரு வாய்ப்பளிக்கின்றது. ஆனால், இந்நாளிலோ, ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியும் தகுதியற்ற முறையில், பொழுதுபோக்காகக் கழிக்கப் படுகின்றது. பொருளின்மையினாலும், சமூக வாழ்க்கையில் ஏற்படும் பல சிக்கல்களினாலும் விளையும் இன்னல்களை நினைக்க வரும் கவற்சியிற் கழிந்தது போக, எஞ்சிநிற்கும் ஓய்வுநேரத்தைப் பலரும் பொழுதுபோக்கு முறையில் கழிக்கின்றனர்.

### நகர வாழ்க்கை

இயந்திரங்களினால் நடைபெறும் தொழில்களை நடத்தவும், இயந்திர வகைகளால் ஏற்படும் வசதிகளின் பயனைக் கொள்ளவும், அவ் வகை வசதிகள் பொருந்திய நகரங்களில் மக்கள் பெருவாரியாகக் கூடி வாழ்கின்றனர். ஏனெனில், பெரிய நகரங்களிலேயே, [1]தொலைபேசி, [2]மின்வண்டி உந்து, பேருந்து ஆதிய வசதிகள் கிடைக்கும். கல்லூரிகளும் தொழிற்கல்விச் சாலைகளும் அங்கேயே உள்ளன. இனி, நாகரிக மெருகுக்குரிய ஆடை அணி சுண்ணம் செம்பஞ்சு முதலியன நகரங்களிலேயே விற்கப்பெறும். எனவே, தற்கால நாகரிக வாழ்க்கைக்குரிய வசதிகள் நகரங்களிலேயே அமைந்துள்ளன. இதனாலேயே, நாகரிக

1. Telephone. 2. Tram.



வாழ்க்கையிலமைந்தவரும் அதை விரும்புவோரும் நாட்டிலிருக்க விரும்புவதில்லை. நகரங்களில் பெருவாரியாகக் கூடிவாழ்தல் தற்கால நாகரிகத்தின் போக்காகும்.

நாட்டிலுள்ளோர் வாழ்க்கைமுறைக்கும் நகரமக்கள் வாழ்க்கைமுறைக்கு மிடையே யுள்ள வேறுபாடுகளை ஆராய்ந்தால், முன்னதைக் காட்டிலும் பின்னதில் மெருகு அமைந்திருத்தல் தென்படுகிறது: நடை உடை பேச்சு ஆதியவற்றில் கவர்ச்சியுள்ள மேல்பூச்சு காணப்படுகிறது. இம் முறை பழக்கத்தின்பாற் படுமாற்றான், அதனிடை பல துறைகளிலும் காணப்படும் மெருகுக்கு ஆதாரமான உள் நிறைவு இல்லாதபோதும், மேல்மினுக்கை வெளி மயக்காகக் கொள்ளப்படுகின்றது. [1]அகமலர்ச்சி யின்றியே முகமலர்ச்சியைக் காட்டும் வேசியின் மேல்மினுக்கை யொத்த மெருகுடையது நாகரிக வாழ்க்கைமுறை.

அன்றியும், இயந்திரங்களைக்கொண்டு ஆக்கப்படும் நூற்படிகளை யொத்து, நகர வாழ்க்கையில் இயந்திரப் போக்கிலமைந்த ஒரே வகையான செப்பம் அமைகின்றது: நடை உடைகளிலும், கருத்து பேச்சுக்களிலும் பழக்க வழக்கங்களிலும், மேல்முகமாக ஒரே வகையான செப்பம் பொருந்தி நிற்கின்றது.

இனி, இயந்திர வசதியால், நூற்படிகளைப் பெருவாரியாகப் பெருக்கிக் கொள்ளப்படுமாற்றானும், வெளியீடுகளைப் பரவச்செய்யுமாற்றானும், கல்வி நிலையங்களின் மிகுதியினா

1. “ மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கி லேமுக மதியாலே
... ... ...
நிலவெறி யங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் குலுச்கி லேகன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு மொயிலாலே.”
... ... ...
—திருப்புகழ், திருப்பழநிமலை.

லும், நூல்நிலையங்களினாலும், பொருட் காட்சிச்சாலைகளினாலும், வானொலி வசதியினாலும் செய்திகளைக் குறுகிய காலத்தில் பரவச்செய்யும் வாய்ப்பு அமைந்துள்ளது இந்நாள் வாழ்க்கைமுறையில் : செய்தியறிவைப் பரவச் செய்தலும் தற்கால வாழ்க்கைமுறையின் ஒரு சிறந்த நோக்கமாகும்.

எனவே, இந்நாள் நாகரிகத்தில், நகரவாழ்க்கை, அறிவு வளர்ச்சி, ஒரே படித்தரமான செப்பமுறை, மேல் மயக்கு, ஓய்வு, புன் மாலையின்ப நுகர்வுகளிற் பொழுது போக்கு ஆதியவை சிறந்த தன்மைகளாக அமைந்துள்ளன. அன்றியும், இயந்திரங்களை ஏவல்கொண்டு எளிதாகப் பல அலுவல்களை முடித்துக்கொள்ள வாய்ப்புடைமையால், எவ் வழியிலும் பயனை எளிதாகக்கொள்ள விரும்பும் மனப்பான்மையும் மக்களிடை நிலைத்துவிட்டது.

இங்ஙனம், அறிவுக் கலைக் கிளைகளின் உதவியால் வாய்த்திருக்கும் இயந்திர சத்தியால், பல வாய்ப்புக்களும் வசதிகளும் அமைந்திருந்தும், வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளதோ? எனின், இல்லை: [1]வாழ்க்கையின் தன்மை உள்ளப் பரிசை யொட்டியதாகலின், சமூகத்தின் உள்ளப் பரிசு மேம்படாத வழி, வாழ்க்கைத்திறம் மேம்படுதல் எங்ஙனம்? மக்களின் நிலைத்த ஒருசில பண்புகளில் ஒன்றான அழகுணர்ச்சி நிறைவெய்துமாறு, வாழ்க்கையின் நிலைத்த தத்துவங்களின் அமைப்பைப் பெரிதும் பொருந்தக்கொண்டு நிற்பது அருங்கலைகளில் தலைசிறந்த இலக்கியமே யாகும். எனினும், உடலின்பத் துய்ப்பின் விருப்பத்திலே சிக்குண்டு கிடக்கும் சமூகம், பொருட்பயனைக் கருதி, அறிவியற் கலைக் கூறுகளையே பெரிதும் போற்றுகின்றது. இலக்கியம், கல்வி நிலையங்களில் ஓரளவு போற்றப் பெறினும், கற்போரிற் பெரும்பாலோர், பட்டம்பெறும் நோக்கத்தை யொட்டியே அவ் வகைக் கல்வியை மருந்

1. "இன்பமுந் துன்பந் தானு முள்ளத்தோ டியைந்த வன்றே."
—இராமாவதாரம். ஆரணிய. மாரீச. 100.



தெனப் பயில்கின்றனர்; பட்டம் பெற்றபின்னர், இலக்கிய நூல்களை விரும்பிக் கற்போர் தொகை மிகக் குறைந்ததே யாகும். அன்றியும், பயில விரும்பினும், வாழ்நாளின் பெரும்பகுதியும், பலருக்கும், வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை யமைக்கும் வகையிலும் மனக் கவற்சியிலும் கழியுமாற்றான், நூல்களைக் கற்பதற்கு, மனவமைதி பொருந்திய ஓய்வும் பொழுதும் கிடைப்பதில்லை. அன்றியும், எத்துறையிலும் பயனை எளிதில் அடையவும் விரும்புகின்றனர் மக்கள். எனவே, கற்கப் பொழுதும் மனமும் இருப்பினும், கற்போர் பலரும் எளிய நடை நூல்களையே விரும்புகின்றனர். இனி, பல திங்களும் முயன்று கற்க வேண்டிய நூல்களின் பொருள்களை, முயற்சியின்றியே சிலமணி வரம்பிடை, வெள்ளித்திரைகளில் காணவேண்டுமென்கின்றனர். இப் போக்கை ஆதரித்தே, நூல்கள் பல, உரைநடையில் எழுதப்படுகின்றன; அன்றி, பாவேயாயினும் உரையேயாயினும் எளிய நடையிலும் எழுதப் பெறுகின்றன.

### காலப்போக்கும் இலக்கியமும்

[1]நின்று நிலவும் பரிசுடைய கலைகள் பலவும் காலப் போக்கை யொட்டித் தம் வடிவத்தைப் புதுப்பித்து அமைத்துக்கொள்ளுதல் இயல்பேயாகும். இதை யொட்டியே, இலக்கியத்தில் மொழிவழக்கு அமையும் : சில சொற்கள் வழக்காறற்றுப் போம்; சில புதியனவாகப் புகுத்திக் கொள்ளப்படும். சில செய்யுள்வகை வழக்காறற்றுப் போம்; உரைநடையும் செய்யுள்நடையும் சில மாற்றங்களை யடையும். எனினும், அருங்கலைகள் தோன்றி நிலவுதற்கான அழகுணர்ச்சிக்குப் பொருந்தவே அவ் வடிவங்கள் அமையவேண்டுவது இன்றியமையாததாகும். நூல்கள் தரும் பொருள்களையும் கதைகளையும் இவ் வகையிலேயே விரும்பித் துய்த்தல் வேண்டும். அல்லாத

1. "பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."
—நன்னூல், சூ. 462.

வகையில், அவை மொழியும் கதைகளையும் பொருள்களையும் பொருட்படுத்தி, அவற்றை ஒருசாரார் போற்றுதலும் மற்றொரு சாரார் இகழ்தலும் உலகம் கண்ட தொன்றேயாகும். இன்னும், இலக்கிய நாற்கதைகளை, நாடக மேடைக்கும் பேசும் படத்தின் வெள்ளித்திரைக்கும் பொருந்த வமைப்பார், அக் கலைகளின் திறத்திற்கும் அவ் வண்ணம் அமைக்கும் ஆசிரியர் கல்வி அழகுணர்ச்சி முதலியவற்றிற்கும் அவ் வரங்குகளிற் பெருந்திரளாகக் கூடும் மக்களின் புன்சுவைத் திறத்திற்கும் பொருந்த அவற்றின் உருவங்களைக் குறைத்தும் நீட்டியும் மாற்றியும் அமைத்துக் கொள்ளுமாற்றான், அந் நூல்களின் எழில் வடிவங்கள் மாற்ற மடைகின்றன; அவ்வாற்றான், அவை தரும் பயனும் மாறுமென்பதும் சொல்லாமலே யமையும். எனவே, பலர் கற்க வசதி யளிக்கும் வகையில் நடையை எளிதா யமைக்கும் முயற்சி, கருத்தைத் தக விள்ளும் கோட்பாட்டுக்கும் அழகுணர்ச்சிக்கும் பொருந்த அமைய வேண்டுமென்பதும் மறத்தலாகாது. ஆகவே, நூல் வடிவங்களை எளிமை யாக்கும் முயற்சிக்கும் வரம்பு உண்டென்க. நூல்கள் நுவலும் செய்திகளை மட்டுமே பொருட்படுத்துதல் இலக்கியப் போக்காகாது. கண்டார் மனத்தைப் பிணிக்கும் வடிவழகும் வண்ணச் செறிவும் சாயலும் ஒருங்கே கொண்ட ஒரு மயிலுக்கும், அதன் உடம்பிலடங்கிய இறைச்சிக்குமுள்ள வேறுபாட்டை, அதனிறைச்சியையே பொருட்படுத்தும் மாக்களறியா; மக்களேன் அறியார்! எனலும், இலக்கிய நூலொன்றுக்கும் அதனிடை யடங்கிய செய்தித் திரளுக்கு மிடையுள்ள வேற்றுமையை யுணராத தென்னை?

தற்போது, நூல்களையும் வெளியீடுகளையும் தருவோர் பலர், புன்சுவைத் திறம்படைத்த பெருந்தொகுதியினரான மக்கள் வேண்டுமாறே தகுதியற்ற பொருள்கள் பலவற்றை எளிய நடையில் அமைக்கின்றனர். அன்றியும், அவற்றின் பொருளும் முறையும் நடையும் இயந்திரங்கள் செய்தமைக்கும் பொருள்களையொத்து, ஒத்த படித்தரமும் படிவமு



மமையப் பெற்றனவாயுமுள்ளன. அறிவிலும் இயந்திரப் பரிசு புகுந்து கொண்டது போலும்!

காலப் போக்கின் பரிசு இலக்கிய நூல்களில் அமைதல் இயல்பே யாயினும், அவற்றைக் கற்கும் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தி மேல்நிலைக்கு உய்த்திடா வெனின், அவற்றை நூல்களெனவும் கொள்ளத் தகுமோ! அவற்றைக் கற்றுப் பெறும் பயன்தானென்னை? தாம் (மாணவர்) வேண்டிய வழியே இயங்கும் ஆசிரியரால் மாணவர் எய்தும் மேம்பாடும் உண்டோ!

**மறுமலர்ச்சி**

முயற்சியின்றியும், குறைந்த முயற்சியின்வழியும், கோரிய பயனை யடைய விரும்புதல் தற்காலப் போக்கென் பதைக் கண்டாம். இப் போக்கையொட்டியே, நூலாசிரியர் பலர் எளிய நடையில் நூல்களைச் செய்து வருகின்றனர். எளிமையொன்றையே கோட்பாடாகக் கொண்டால், அரிய கருத்துக்களையும், சிக்கலான கருத்துக்களையும், கொத்தாக அரும்பும் கருத்துக்களையும், தக்கபடி, மொழியுருவில் மலர்வதற்கு வாய்ப்பளித்தல் எங்ஙனம்? இப் போக்கு, ஆங்கிலமாதிய பிற மொழிகளில், இத்துணை பின்பற்றப் படுகிறதா? வளமற்ற கருத்துக்களை வறிய மொழியில் விள்ளும் முறையே பெருவழக்காவானேன்? மறுமலர்ச்சி மறுமலர்ச்சியென்னும் பெயரால் கடைப்பிடிக்கும் இப் போக்கு ஆற்றலற்ற வறுமையை யுணர்த்துமோ? அன்றி, நிறைவில் அமையும் எளிமையை யுணர்த்துமோ? உய்த்துணர்தல் வேண்டும்!

**தெய்வ மணம்**

[1]தெய்வத்தின் அருள்வழித் தோன்றுமாற்றான் இலக்கிய நூல்கள், தெய்வ மணம் கமழத் திகழும்.

1. " உரைப்பா ருரைக்குங் கலைகளெல்லா
மெண்ணி லுன்னையன்றித்
தரைப்பா லொருவர் தரவலரோ
தண்டாள முலே

புலமையிற் சிறந்த புலவரே யாயினும், இறைவனருளாலன்றிச் சிறந்த நூலொன்றும் செய்யுமாற்றலற்றவரே யாவர். புலமையுடையோரும், தம் புலமையினால் அளந்தறிந்து செய்யாது, அருள் வாய்ப்பில் வந்து தோன்றிடும் காட்சியின்வழி யுணர்ந்து செய்தளிப்பனவே சிறந்த இலக்கிய நூல்களாம். எனவே, அவற்றில், தெய்வமணம், பூவின் நறுமணம் போன்று இயல்பாகப் பொருந்தி நிற்கும். புலமையின் சிறப்புப்பற்றி யமைந்த சிறப்பினும், இறைவன் அருளுக்குக் களனாகச் சமையும் பெருமையே இலக்கிய ஆசிரியரின் நிலைத்த சிறப்புக்குக் காரணமாகும். தெய்வத்தை யணுகி நிற்றற்கு உரிமையும் அவ்வழி யமையும். என்னை? [1]அவனருளின்றி, அவனை யறிதலும் அணுகுதலு மில்லையாயினமையின்.

எனவே, இயற்கையாற்றலுடைய புலவரால், திருவருள் வழி யெழுந்த இலக்கியம், அதனைக் கற்போர் உள்ளத்தை உன்னத நிலைக்கு உய்த்திடும் இயல்புடையதாகும். நாளும், மக்கள் பொருளுலகில் வறுமையாலும் நோயாலும் பிற இன்னல்களாலும் உயர்ந்த நோக்கமின்மையாலும் நலியுண்டு நிற்கும் வாழ்க்கைநிலை மிக இழிந்ததேயாகும். ஆகவும், இலக்கியத் தொடர்புடையார் மனம், வாழ்க்கை நிமித்தத்தை யொட்டிப் பொருளுலகிலே திரியினும், மீண்டும் தன் உயர்ந்த நிலையை யுணர்ந்து, அந்நிலைக்கு மீளும். அருள் வாய்ப்பில்லாது, முயற்சியினால் செப்பஞ்செய்து கொண்ட திறமையை வைத்துச் செய்யப்பெறும் நூல்கள், படிப்போர் மனத்தைப் பிணிக்கும் தன்மையினவாக இருத்தலுங்கூடும்; ஆனால், மனத்தை உன்னத நிலைக்கு உயர்த்தும் தன்மை அவற்றில் அமையாது. பரத்தை, தன் அழகுப் பயிற்சியின் உதவியினால் கண்டார் மனத்தைப் பிணிக்கும் வண்ணம் தன்னை அணிசெய்து கொள்ளுகின்றாள்; இயற்கை யழகைக் காட்டிலும் கவருந் தன்மை யமையும்படி ஒப்பனை செய்து கொள்ளுகிறாள். ஆனால், அவள் நோக்கம் எத்தகைமைத்து? அன்றி, அவள் மயக்கில் அகப்பட்டார் எய்தும் நிலைமைதான் என்னை? உலகம் அறியாததோ!

*வரைப்பா லமுதந் தீங்கெனை
வாழ்வித்த மாமயிலே
†விரைப்‡பா §சடைமலர் வெண்டா
மரைப்பதி மெல்லியலே.”

—கம்பர், சரசுவதியந்தாதி, 3.

* வரை - மலை.
† விரை - வாசனை.
‡ பாசு - பச்சை.
§ அடை - இலை.

1. “அவனரு ளாலே யவன்தாள் வணங்கி.”

—திருவாசகம், சிவபுராணம், 18.



தற்போது, விளம்பரப் போக்கே, உலகில் எத்துறையிலும் நிலைத்து விட்டது; தொழில்களின் மேம்பாட்டுக்கு அது இன்றியமையாததென்னும் வகையில் உலகம் அதைப் பாராட்டுகிறது. பேரதிகாரம் படைத்த அரசாங்கமும் அம் முறையைக் கடைப்பிடிக்குமானால், உலகில் அதன் செல்வாக்கு எத்தகைமைத்தென்று சொல்லவும் வேண்டா. எனவே, நலமற்றவற்றையும் விளம்பர வாயிலாகக் கண்டு விரும்பி, உலகம் ஆதரிக்க நேர்கின்றது. அதனோடு விளம்பர வாயிலானன்றி, தகுதியுள்ளவற்றையும் உலகம் ஆதரிக்கும் வழக்கு தேய்ந்து வருகிறது. இப்பெற்றித்தாய உலகில், இலக்கியத்தை ஆதரித்துப் போற்றும் வழக்கு குன்றி வருவதில் வியப்பென்னை!

புல்லியல்பமைந்த சமூகத்தில், அலையும் மனத்தைப் பிடித்துக் கட்டி, இவ்வுலகின் நிறைவெய்தா நிலையும் திரிபுணர்ச்சியும் சென்றணுகலாகாத உன்னத நிலைக்கு உய்க்கும் செவ்வியுடையது இலக்கியமெனின், இனமான பிற அருங்கலைகட்கும் இப் பரிசு உண்டென்க. இதனை யுணரும் பலர், போலிச் செயல்களுக்கு இப் பிணிக்கும் தன்மையை யமைத்து, மக்களை மயக்குகின்றனர். இசைப் பாட்டுக்கு, மனத்தைப் பிணிக்கும் ஆற்றல் பெரிதுமுளது.

என்றால், அது பிணிக்கும் செயலொடு நில்லாது, கட்டுண்ட மனத்தை உன்னத நிலைக்கு உயர்த்தும் தன்மையுமுடையது. போலி யிசைகளும் மனத்தைக் கட்டிடும் பரிசுடையனவாம்! ஆனால், அவை மீண்டும் மீண்டும் காமத்தை யூட்டிக் கோழை யுலகிலே உழலச் செய்யும். இவ்வகைப் பாட்டுகளே தற்போது மக்களால் பெரிதும் விரும்பப்படுமாற்றான், மக்களை மயக்கிப் பணம் பறிக்கும் கலைகளில் அவை புகுத்தப்படுகின்றன. திருக்கோயிலை வலம் வந்தாலும், இடம் வந்தாலும், அதனைச் சுற்றுகை செயற்பாலதாகுமெனின், வலமாகச் சென்றே சுற்றல் வேண்டுமென்னும் வழக்கு எங்ஙனமமைந்தது? புரியுடையனவே எல்லாச் சங்குகளுமெனின், இடம்புரியனவற்றை விட்டு, வலம்புரிகளையே போற்றும் வழக்கென்னை? மக்களியல்பைத் தூய்மைப்படுத்தி, மேம்படச் செய்யும் இயலிசை நாடகங்களை யொத்தே, வலம்புரியினிடத்தும் தெய்வத்தன்மை பொருந்தி நிற்றல் உண்மையென்க. இவ்வாறே, வலஞ்செய்கையும், மக்களியல்பு தூய்மையெய்தி, இவ்வண்டத் தோற்றத்தினிடைத் தக்கபடி பொருந்தி நிற்றற்கென்க. இனி, வலம்புரியை யொத்தே, இலக்கிய நூல்களும், எம்மொழியிலும் எக்காலத்தும் அருமையாகவே தோன்றுவனவாம்.

இக் காலத்தோ, களைக்காடாகத் தோன்றி, மக்களின் புன்சுவை யறிவெனும் செழித்த எருவை யுண்டுகொழுத்து மதர்த்து நிற்கும் போலிநூல்களிடையும் வெளியீடுகளிடையும் இலக்கியமெனும் கற்பகப் பொழில், நலியுண்டு மறைந்து நிற்குமோ, என்று அறிஞர் கவலையுற நேர்ந்திருக்கின்றது. சிற்றின்ப முயக்கிற் பட்ட மனம், பேரின்பமே வாழ்க்கையின் குறிக்கோளென்று மதிக்குமாறு போன்று, புன்சுவை நூல்களைத் துய்க்கும் மக்கள், இலக்கியத்தின் மாண்பை யறியாதார்களு மல்லர், மதியாதார்களு மல்லர். இம் மதிப்பும் தேயுங்காலமும் உண்டுகொல்! உண்டாமெனின், மக்கள் முற்றும் தம் சிறப்பியல்பிற் குன்றிவிடாரோ!



தெய்வமணம் எல்லா மக்களிடத்தும் இயல்பாகப் பொருந்தி நிற்குமாற்றான், திருவருளினால் மலரும் இலக்கியத்தை மக்கள் விரும்ப நேர்கின்றது. விலங்குகளின் தடித்து மாறுபட்ட இயல்பினால், அவற்றின்பால் தெய்வமணம் தொக்குநிற்கின்றது. இங்ஙனமே, வேட்கை வெகுளி மயக்கங்கள் நனிபொருந்திய வியல்பினரான மக்களிடமும், தம் உயிருக்கு உயிராயுள்ள தெய்வத்தன்மை மறைந்தே நிற்கும். இக் குற்றங்கள் குறையக் குறைய, தெய்வமணம் கமழத்தொடங்கும். குற்றங்கள் முற்றிலும் நீங்கிய நிரம்பிய காட்சியுடையோரிடம் தெய்வத்தன்மை இடையீடின்றிச் சுடர்ந்து நிற்கும்.

## திருப்புகழ்

கருத்துக்கு அடங்காத அகன்ற நீலவானிடை யுலவும் எண்ணிலாத நாள்கள் கோள்களுக்கிடையே அமைந்த பாரொடு கூடிய இப்பேரண்டம், எவற்றிற்கும் இறைவனாய் எங்கும் பொதிந்து, புலன்களுக்கும் பிற தத்துவங்கட்கும் அறிவரியனாய், கடந்து நிற்கும் கடவுளின் செவ்வியொடு திகழ்வதாகும்; அதனிடை நிற்கும் இப் பாரும், தன் அமைப்பில், அவன் பெருமையையே யுணர்த்தும். உயிரற்றவை யென்று சொல்லப்படும் உயிர் செறிந்துநிற்கும் இயற்கைப் பொருள்களும், புல் முதல் மக்கள் வரையுமுள்ள கணக்குக் கடங்காத உயிர்களும், அவற்றின் இயற்கை யமைப்புகளைக் கருதப்புகின், அவை ஒவ்வொன்றும் இறைவனையே உணர்த்துவனவாம். சுழன்று திரியும் நாள்களும் கோள்களும் இப் பாரும், நீலம் பொன் வெள்ளை சிவப்பு பச்சை யாதிய வொளி விரிக்கும் மணி பொன் வகைகளும், அழகிய வடிவங்களும் இன மணி நிறங்களும் பொருந்திய மலர்களை யேந்திய செடி கொடி வகைகளும், பல வண்ணங்களமைந்த எழில் வடிவங்களைத் தாங்கி இசை பாடி யாடித் திரியும் தும்பி வண்டு கிளி மயில் குயிலாதிய பறவைகளும், தம் இயற்கையில், தோற்றத்தாலும் மணத்தாலும் ஆடல் பாடல்களாலும் இறைவன் செவ்வியைத் தெரித்து, அவனிடமமைந்து வற்றாத ஊற்றாய்

யாவற்றினும் நிறைந்து நிற்கும் மகிழ்ச்சியினால் ஆடிப் பாடி நிற்கின்றன. இவ் வண்ணமான தோற்றமும் ஆடலும் பாடலும் சொல்லாமல் உணர்த்தும் பொருள் அவன் புகழேயாம்.

மனிதனோ, பகுத்தறிவு உடையவன்; தான் விரும்பிய படி, விரும்பியவற்றை ஓரளவில் செய்து முடித்துக் கொள்ளும் ஆற்றலுடையவன். எனவே, பேரெண்ணினரான மக்களிடையுள்ள பழக்க வழக்கங்களிற் சில வேண்டப்பெறாதனவாகும்; சில இயற்கைக்கு மாறுபட்டனவாகும்; எனினும், அன்னவர் வாழ்க்கையின் குறிக்கோள் மட்டும் இறைவனை யடைதலேயாகும்; அவர் சிறந்த செயல்களின் வடிவங்கள் அருங்கலைச் செல்வங்களே யாகும். அவையும் அவன் அருள்வழியன்றித் தோன்றா. அருள்மண மில்லாத இலக்கியம் நறுமணமில்லாத மலரை யொக்கும். எனவே, பூவின் மணம், குயிலின் இனிய குரல், மயிலின் ஆடல், புலவன் பாட்டு ஆயவற்றிற்குக் காரணம், அவை தோன்றும் பூ குயில் மயில் ஆயவற்றிலும் புலவனினும் காணலாகாது : [1]அந் நலன்களின் காரணன் இறைவனேயாம்.

## பூப்பு

இளவேனிற் பருவம் அணுகித் தழுவும்போது, அதனிடைப் பொதிந்து நிற்கும் நலன் கதித்து மிகுமாற்றான், உலகம் பூப்பெய்தி நின்று, பகலவன் தன் கதிர்க

1. "ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஒட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
உருக்குவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே."
—அப்பர், தேவாரம்.



ளாகிய கைகளைக் கொண்டு முயங்கும்போது அதன் நலன் மலிந்து சிந்துகிறது; இரவொடு கட்டை யவிழ்த்து, காலைப்பொழுதொடு மீண்டும் அவன் கட்டி யணைக்கும் போதெல்லாம் இனிமை பயக்கும் ஊறு, நாற்றம், சுவை, வடிவம், இசைகளொடு மலரும் இப் பருவத்தின் நலன் பின்வரும் பருவங்களில் தேயும். மீண்டும் அடுத்த ஆண்டில், இப் பருவம் நலன் பொலியத் திரும்பும். இங்ஙனம், ஆண்டுதோறும் இப் பருவத்தோடு இயற்கை யுலகின் நலன்கள் தோன்றி வளர்ந்து தேயு மியல்பினவாம்.

இங்ஙனமே, ஒவ்வொரு நாட்டின் சமூக வாழ்க்கையிலும் பருவங்களுண்டு. இவ் வகைப் பருவங்கள் ஆண்டு தோறும் தோன்றி மறையா; அன்றி, இப் பருவங்கள் நின்று கழியும் கால எல்லைகளும் வரம்பின்பாற் படாதனவேயாம். ஒரு நாட்டின் திரு வளரும்போது, பொருள் வளம் பெருகுகின்றது. வாழ்க்கை உடம்பு பற்றியதாகலின், பொருள்வளம் மிகுதலோடு, மக்கள் அவற்றில் திளைத்து மனநிறை வெய்துகின்றனர் : உழவும் பிற தொழில்களும் மேம்படுகின்றன. மனநிறைவும் அமைதியும் பொருந்தவே, மக்களின் கருத்தும் ஆற்றலும் ஆக்கவியலின் வழி யமைகின்றன; அமையவே, கலைகள் வளம் பெறுகின்றன. ஆக்கவியற் கற்பக தருவின் வாடாத நறு மலர்கள் அருங்கலைகளே யாகும். எனவே, சிறந்த இலக்கியங்களையும் பிற அருங்கலை மணிகளையும் தரும் நாட்டின் சிறப்பு வாடாததாகும். ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த சிற்பத்திறன் பொருந்திய திருக்கோயில்களும் பிறவும் வெற்றிக் குறிகளாகவும் மகிழ்ச்சி மேலீட்டின் விளைவுகளாகவும் அமைக்கப்படுகின்றன. சோழநாட்டின் வளம் மேம்பட்டிருந்த காலத்து, ஆங்குக் கலைகள் பலவும் வளம் பெற்றிருந்த செய்தியை, சிலப்பதிகாரத்திலும் பிற நூல்களிலும் கூறியிருத்தலைக் கண்டு மகிழ்கின்றோம். கரிகாற்பெருவளத்தான் அரசு வீற்றிருந்த அக் காலமே இலக்கிய நூல்கள் பலவற்றைத் தந்த வளவிய காலமாகும். இலக்கியத் துறையில், அக் காலத்தையொத்த வளம்

பெற்ற காலம், இதுவரை மீண்டும் தோன்றிலது. ஆங்கிலத்தில் முதல் எலிசபெத் அரசியார் காலமே இலக்கியத் துறையில் பெருவளம் படைத்த காலமாகும். அன்று, கவிச்சக்கரவர்த்தியாகப் பாராட்டப்பட்டவரே இன்றும் ஆங்கில இலக்கியத்துறையில் தலைவராக விளங்குகிறார். அக் காலத்திற்குப்பின் ஆங்கிலேயர் பல வெற்றிகளைப் பெற்றனர்; அவர் நாடு பொருள் வளம் பெற்றது; அவர் ஏகாதிபத்தியம் உலகின் பல பகுதிகளில் பரவிற்று; அவர் செல்வாக்கு மிகுந்தது. அதன் பின், கடந்த ஒரு தலைமுறையாக, அவர் செல்வாக்கு தேய்ந்துகொண்டே வரலாயிற்று; இன்று, அவர் ஏகாதிபத்தியம் இந் நாட்டினின்றும் ஒழிந்தது. ஆனால், செகப்பிரியர் புகழ் மங்கிற்றில்லை. எனவே, ஆங்கிலேயர் செல்வாக்கு, எத்துறையிற் குறையினும், இலக்கியத்துறையில் குறையாதென்பது திண்ணம். [1]இலக்கியப் பேராசிரியர் கார்லயில், "ஆங்கிலேயரின் இந்திய ஏகாதிபத்தியம் ஒழிந்துபடும் நாளும் ஒன்றுண்டெனினும், செகப்பிரியர் மட்டும் என்றும் ஆங்கில மக்களுக்கே உரியவராவர்" என்று, அன்று கூறிச் சென்ற உண்மையை இன்று உலகம் கண்கூடாகக் கண்டது. எனவே, அருங்கலைச் செல்வங்களே, எந்நாட்டிற்கும் மங்காத புகழை யளிப்பனவாம் என்பது பெற்றாம். இன்ன சிறப்புடைய அருங்கலைகளைத் தரும் ஆற்றல், சமூகத்தின் வாழ்க்கையில், இடையிடையே உரிய பருவங்களில் தோன்றித் தேயும். தற்போது, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு முன்னமே, இப்பருவம் மீண்டும் நம் நாட்டில் தோன்றியுள்ளது. இப்

1. "He (Shakespeare) is the grandest thing we have yet done...Consider now, if they asked of us, will you give up your Indian Empire or your Shakespeare, you English?... Indian Empire or no Indian Empire; we cannot do without Shakespeare. Indian Empire will go, at any rate, some day; but this Shakespeare does not go; he lasts for ever with us; we cannot give up Shakespeare."

—T. Carlyle, The Hero as poet.



பருவத்தில் வாடாத பல நறுமலர்களைத் தமிழ்ப் பொழில் நல்கும்; திண்ணம்.

**பருவத்தை இகந்த செவ்வி**

இலக்கிய நூல்களும் பிற அருங்கலை மலர்களும் நாட்டின் செழும் பருவங்களிலேயே பெரும்பாலும் தோன்று மியல்புடையன வெனினும், வளர்ந்து தேயும் பருவ இயல்பு அவற்றிற்கில்லை. ஆண்டுகளோடு பருவங்கள் தோன்றித் தோன்றி மறையும். பருவ நலனைத் துய்த்து மங்கும் உயிர்கள், நலன் மாறித் தேய்ந்து மறையும்; ஊழியூழியும் பெயரும்; [1]ஆனால் இலக்கிய நூல்கள் தம் நலன் மாறாது நிலைபெற்று நிற்கும். வானமும் பொய்க்கும்; உலகில் வற்கடம் மலிந்து உயிர்களை நலியும்; அரச வம்சங்கள் மறையும். ஆன காலத்தும், தம்மியல்பிற் குன்றா இலக்கிய மணிகள். மலர்கள், தம் உரு நலனையும் நறுமணத்தையும் அளிக்கும் நிலையிலேயே வாடியழியும்; விளக்குகள், ஒளியைத் தரும் நிலையில் நெய் மின்சாரமாதிய தம் சத்தி குன்றிட ஓய்ந்து மறையும்; ஆனால், மணி வகையோ ஊழிகள் பெயரினும் ஒளி விள்ளும் தம்மியல்பிற் குன்றா; தாமுமழியா. இன்ன தன்மையினவே இலக்கியக் கருவூலங்களும்.

**நீடும் பொருள்**

உலகிடை நாகரிக வாழ்க்கை யமைந்தது முதல், இப் பல்லாயிர வாண்டுகளாகத் தோன்றிய அரசாட்சிகள்

1. "Heard melodies are sweet, but those unheard
Are sweeter; therefore ye soft pipes, play on;
Not to the sensual ear, but, more endeard,
Pipe to the spirit ditties of no tone:
Fair youth, beneath the trees, thou canst not leave
Thy song, nor ever can those trees be bare;
Bold lover, never, never canst thou kiss,
Though winning near the goal - yet, do not grieve;
She cannot fade, though thou hast not thy bliss,
For ever will thou love, and she be fair!"

—Keats, Ode on a Grecian Urn.

எத்தனை? அவற்றின் செல்வாக்குகளின் பேரள வென்னை? அரசாட்சிகளை யமைத்த அரசர்கள், தம்மை யொப்பவர் இலரென, வெற்றியிற் செருக்கி நின்று, பிறர் பொருள் களைக் கவர்ந்து, நுகர்வுக்குரியவற்றைப் பெருக்கிப் புலன்க ளார இன்பம் துய்த்தவர் எண் என்னை? அவ்வாட்சி யுரிமைகள் எவ்வழி யேகின? அவர் அரிய பொருள்க ளெங்கே? காலப் பெருந் தீயிடைச் சிக்கி, ஒரு நொடி சுடர்ந்து, உடனே சாம்பலாகி மறையும் துகள்களென மறைந்தனரன்றோ; அவர் செல்வம் மாய்ந்த வழியும் அஃதேயன்றே! எஞ்சி நிற்கும் பழவரசுகளின் சிதைந்த மாளிகைகள் முதலியன, அவர் செல்வத்தின் உயிர் நீங்கிய உடலங்களென, பொருள்களின் நிலையாமையை உணர்த்தி நிற்கின்றன. நம் ஆட்சி யுரிமையை நாம் இழந்து, அடிமை களாயிருந்த அன்றுங்கூட, நம்மை அடிமைப்படுத்தி வாகை சூடிச் செருக்கி நின்றோரையும், நம்மை மதிக்கச் செய்த மாண்பு, நம் அருங்கலைச் செல்வங்களின் சிறப்பே யன்றோ! அழகு மணக்கும் சிற்பங்களும் வானளாவிய கோபுரங்களுமுடைய திருக்கோயில்களையும், அரிய ஓவியங்க ளமைந்த அசந்தா எல்லோரா குகைகள் முதலியவற்றை யுங் கண்டு மகிழ்தற்கு இன்றும் நம் நாட்டிடைத் திரிந்து செல்லும் பிற நாட்டினரின் தொகை யென்னை! இனி, நம் ஆடல் பாடல்களின் திறமும் நம் இலக்கிய நூல்களின் மாண்பும் உலகறிந்தனவேயாம். எனவே, ஒவ்வொரு நாகரிகத்தின் உயர்ந்த பண்புகளும் மலர்ந்து வாடாது நிலவு தற்கு வாயில்களாவன என்றும் அழியாத அருங்கலைப் பொழில்களேயாமென்பது அறியக் கிடக்கின்றது. ஆகவே, இலக்கியம் நீடும் பொருளுமாகும். தோன்றியன எல்லாம் மாறும்; அழியும். ஆனால், இலக்கிய நூல்கள் தம் இயல் பிற் குன்றா. மரவுரி யுடுத்த சகுந்தலையைப்பற்றிய இலக் கிய நூல், நாகரிகம் மேம்பட்டோங்கிடும் இந்நாளிலும் போற்றுதலுக்குரிய மூவா நலனுடையதேயன்றோ! தமிழில், சிறந்த நாடகக் காப்பியமாகப் பொலியும் சிலப்பதிகாரம், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றியதாகும். அது தோன்றிய நாட்டின் பகுதியில் தமிழ்மொழி வழக்காறற்றுப் போயது. ஆனபோதும்,



இன்றும் அந் நூல் தன் சுவை குன்றாது சிறந்து விளங்குகிறது.

**கற்பகம்**

வாடாத இதழுடன் மாறாத மணமுடைய மலர்களும், பருவத்தொடு தேயாத நலனுடைய கற்பின் மாதரும், எஞ்சாத வீரமுடைய மாந்தரும், வரையாத சித்திரங்களும், செதுக்காதமைந்த சிறந்த சிற்பக் கோயில்களும், ஓயாத நாடகங்களும், நெறியின் புறஞ்செலா வொழுக்கங்களும், நல்லியல்புடைய பிறவும் என்றும் வாடாது தேயாது ஒடியாது நிலவும் நாடு, மூவா இலக்கிய நன்னிலமேயாகும். தோன்றி மாறி மறையும் பொருள்களும் உயிர்களும் மேவிடும் இப்பாரில், வேண்டியவற்றைப் பெறலாகாத இவ் வுலகில், துன்பந் தோயாத இன்பத்தை எய்தலாகாத சமூகத்தில், சாயாத நலன் நிரம்பக் கொண்ட இன்ன பொருள்களையும் உயிர்களையும் நல்கும் இலக்கியம் கற்பகமேயாகுமன்றே!

**இறை யுவக்கும் தெள்ளமுது**

இங்ஙனம், இயற்கைப் பொருள்கள் முதலாக, எண்ணரிய உயிர்கள் பலவற்றிலும், அவற்றிற் சிறந்த மக்களிடத்தும் தன் நலனையே ஊட்டி, அவற்றினின்றும் அவரிடத்திருந்தும் எண்ணுக் கடங்காத வகை நலன்க ளாக அரும்பி மலரச் செய்பவனும், அந் நலன் வகைகளை மகிழ்ந்து ஏற்றுத் துய்த்து ஆதரிப்பவனும் இறைவனே யாகும். [1]புலவன்பால் நின்று செழித்து, இலக்கிய

1. "What divine drink wouldst thou have, my God, from this overflowing cup of my life?

My poet, is it thy delight to see thy creation through my eyes and to stand at the portals of my ears silently to listen to thine own eternal harmony.

Thy world is weaving words in my mind and thy joy is adding music to them. Thou givest thyself to me in love and then feelest thine own entire sweetness in me."

—R. Tagore, Gitanjali: 65.

உருவில் மலரும் தெள்ளமுதில் உலகமேயன்றி, உலகைத் தன் உடம்பாகக்கொண்டு உயிர்க்குயிராயிருந்து திளைத்து மகிழ்கின்றவனும் அவனேயன்றோ!

## பெரு வாழ்வு

இன மணிகளின் செவ்வியை யேந்திய எண்ணரும் மீன்கள் திரியும் விசும்பினிடமும் வானுற வோங்கி முகிற் கூட்டங்கள் படிய நிற்கும் மலைச் சிகரங்களினிடமும், பிற இயற்கைக் காட்சிகளினிடமும், வடிவழகும் வண்ணமும் சாயலு மமைந்த உயிர்கள் பலவற்றினிடமும் காண்பார் மனம் கவரப்படுதல், அவ்வகைப் பொருள் உயிருடம்புகளின் பொருட் பரிசினாலேயோ? அன்று; அவற்றினின்று மணக்கும் திருவினாலேயேயாகும். விண்மீன்களின் பொருட் கூற்றிலும் மலைச் சிகரங்களி லமைந்த கல்லிலும் ஊனுடம்புகளின் இறைச்சியிலும் கவருந்தன்மையில்லை. இவ்வண்ணமே, எப்பொருளிலும் எவ்வுயிரிலும் காண்பார் உள்ளத்தைத் தன்னிடத்தே வலித்து இன்பத்தை யூட்டி நிற்பது அவற்றிடை மணக்கும் திருவேயாகும். இலக்கிய நூல்களிலே மணப்பதும் இத் திருவேயாம். இத்தகைய திருவுடைய இலக்கியத்தின் செவ்விகள் பலவற்றையும்

“Look not thou down but up!
To uses of a cup,
The festal board, lamp's flash and trumpets' peal
The new wine's foaming flow,
The Master's lips a - glow!
Thou, heaven's consummate cup, what needst thou
with earth's wheel?”
—R. Browning, Rabbi Ben Ezra: 175 - 180.

“கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
அடுக்க வந்தவந் தாடவோ னுடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ.”
திருவிளை. பாண்டியத் திருநாட்டுப் படலம்: 55.



ஒருவாறு ஆராய்ந்தறிந்தாம்.[1] இனி, அது, புலன்கடந்த பெருவாழ்வுக்கு வைப்பாகும் திருக்கோயிலின் அணி வாயிலுமாகும். மக்கள் பெரும்பாலோரின் உணர்வு, நீண்ட போதும் பொறியளவிலேயே நிற்கும். சிறுபோது, அஃது, அறிவுவெளியையும் பற்றி நிற்கும். தோன்றி மறையும் புலன்களின் உதவியால் திருவெளியை அணுகுதல் கூடும். ஆனால், அவ்வழி, அதன் செவ்வியை ஓர்தற்கமையாது. அவ் விடை, அதன் செவ்வியை ஓரளவு நற்செவ்வி வாய்ந்த அறிவால் உணர்தற்கியலும். அங்ஙனம் செம்புலமையின் வழியமையும் துய்ப்பினால் திருவெளியை யடையலாகும். அத் தறுவாயில், அறிவின் திறம் அடங்கி நிற்க, இன்பம் மேவிநிற்கும். அந்நிலையில், உள்ளம் வெஃகாது; வெகுளாது; அழுக்கா றுறாது; காலத்தின் கழிவையும் உலகின் குற்றங்குறைகளையும் உணராது. நிரம்பிய காட்சிகள் மலரும் நிலம் அஃதேயாகும். அஃதே கோழையுலகின்கண் அமைந்த வாழ்க்கையின் பல குறைகளும் தோயாத எண்ணரு நலப் பெருவாழ்வின் வைப்பாகும். இலக்கியத் திருவின் வாயிலாக இவ் வைப்பைச் சேரலாகும். எனவும், இலக்கியத்தைச் சுவைப்பாரும், அதன் செவ்வியை முற்றும் ஓர்தல் எளிதேயோ!

## மறை பொதுத்திமைக்குந் திரு

மறையாய் எங்கும் செறிந்து நிற்கும் இறையி னின்றுமே செவ்வி பலவும் அரும்பி மலர்ந்து நிறைவெய்துவனவாம். இறையும், தோன்றி மறையும் பலவற்றிற்கும் அவற்றை யறிய முயலும் அறிவிற்கும் உணரும் உள்ளத்திற்கும் கருவாதலோடு, எல்லாம் சென்று செறியும்

1. “A thing of beauty is a joy for ever:
Its lovliness increases; It will never
Pass into nothingness; but still will keep
A bower quiet for us, and a sleep
Full of sweet dreams, and health and quiet breathing.”
—Keats, Endymion, Bk. I: 1 - 5.

தனித்த ஒன்றுமாகும். எனவே, வாழ்க்கையின் தன்மையை எங்ஙனம் மறை நீக்கி முற்றும் அறியலாகாதோ, அவ் வண்ணமே, அதனிடையே தோன்றி, மாறாத முருகொடு பொலியும் இலக்கியத்தின் செவ்வியையும் முற்றும் விள் ளுதல் ஆவதொன்றன்று. நீலவானிடைத் தோன்றும் மீன்கூட்டங்கள், அதன் இருளை ஒரு சிறிது அகற்றிடினும், இருளை முற்றும் நீக்குதல் இயலாததொன்றென்றும் உணர்த்துமாறு போன்றே, இலக்கியச் செவ்வியைச் சொல்லப் புகுந்து, இங்குமங்கும் புலப்பட்ட சில தன்மை களைச் செப்பினுமெனின், மொழிந்த ஒரு சிலவும் அதன் பரிசை ஒருசிறிதே உணர்த்தியதோடு, [1]மறை நீக்கி முற்றும் அறியலாகாத அதன் இயல்பையும் உணர்த்தா நின்றன.

### திருவிடை யிமைக்கும் இறை

மக்களிற் பெரும்பாலோருடைய உள்ளம், இடை விடாது பொருளையே பற்றி நிற்கின்றது. ஒரோஒவொரு வழி, சிறு காலவரம்பிடை, அவருடைய உள்ளம் பொருட் பரப்பைக் கடந்து சென்று, பொருளையும் உயிரையும் ஆட் கொண்டுள்ள எல்லாம்வல்ல இறையொன்று இருப்பதை உணரும். அதன் உண்மையையும் ஆற்றலையும் பற்றிய வற்றைப் பலகால் படித்திருப்பினும், சொல்லக் கேட்டிருப் பினும், பொருட்பரப்பிற் பிணிப்புண்டு நிற்கும் உள்ளம் அதை உணர்வதில்லை; பொருள் உடைமையே பேணத் தக்கதென்று அதனையே பொருட்படுத்தி நிற்கும். பொருள், பொருளென்ற வகையில், விலங்கினங்களின் உடம்புகளோடு ஒத்த பரிசுடைய மக்களுடலங்களுக்கு உகந்ததாகும். ஆனால், மக்களோவெனின், உயிர்ப் பண்பு களை வளர்த்தற்காம் வகையிலேயே உடம்பை வளர்த் தற்காம் முறையை மேற்கொண்டு, பொருளை அதற்கு உரிய அளவிலேயே வைத்து மதிக்கக் கடமைப்பட்டவ

1. "From cloud-zoned pinnacles of the secret spirit
Song falls precipitant in dizzying streams."
—Francis Thompson, Sister Songs, The proem.



ராவர். ஆடு, முல்லைக்கொடியையும் அஃதேந்தி நிற்கும் நறுமலர்க் கொத்துக்களையும் ஒருவகையிலேயே பொருட் படுத்தும்: உணவாகவே பொருட்படுத்தும். மக்களோ, அக் கொடியின் திருவுடைய பூங்கொத்துக்களின் சிறப்பை யறிவார்; உணவெனக் கருதார்; வடிவு நிறம் நறுமணங்க ளொடு பொலியும் அவற்றின் திருவினை விரும்புவார்; திருவுடைய காரிகையார் வகைவகையாக அணிசெய்யும் தம் கூந்தலிலிட்டு அவற்றைப் புனைவார்; [1]அவற்றின் திருவிடை யிமைக்கும் இறையை யுணர்ந்து, அவற் றைக்கொண்டு தெய்வத் திருவுருவங்களை ஒப்பனை செய் வார். பொருள் மண்ணுலக வாழ்க்கைக்கு இன்றியமை யாததேயாகும். பொருளுடையவராதலில் இழிவில்லை. பொருளின் தன்மையை யறியும் பொருளுடையாரை அறிவுடையோர் கண்டு மகிழ்வர். பொருள்களை விழை யாது, அவற்றிற் றிகழும் திருவைக் கண்டு மகிழ்தலுங் கூடும். திருவுடையாரின் உடலங்களுக்கு உரிமையுடையா ரிருக்க, [2]அவர்மேனிகளை அவாவாது, அவர் திருவையும், திருவிடை யிமைக்கும் இறையையுங் கண்டு மதித்து மகிழும் அறிஞரும் உளர். எனவே, உலகை, அதன் பொருட் பரிசு ஒன்றையே நோக்கி மதித்தல் தகுதியன்று; பொருளிடை யிமைக்கும் திருவையும், திருவினில் மணக் கும் இறையையும் கண்டு மதித்தலே தகுதியாகும்.

பொருளை உடற்குறுதி பயக்குமளவிலே மட்டும் பொருட்படுத்துவதில் மக்கட்குச் சிறப்பில்லை. உயிர்க்

1. "பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்திஅப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணேன்." ... ... ...
—தாயுமானவர், கருணாகரக் கடவுள்: 6.

2. "...........................I disdain
To count the beauty worth my wish or gain,
which the dull daily fool can covet or obtain."
—Francis Thompson, Her portrait.

குறுதி பயக்கும் வகையில் உடம்பைப் போற்றும் மக்களும், தம் சிறப்பியல்பு மேம்படவேண்டின், உணர்வைத் தூய்மைப்படுத்தி உன்னத நிலைக்குக் கொண்டுய்த்து, இன்பத்தையும் அவ்வழி மகிழ்ச்சியையுமளிக்கும் திருவையும் பொருட்படுத்துதல் வேண்டும். திருவுடையவற்றிற் சிறந்த இலக்கியத்தை மதித்துப் பயிலுமாற்றான் தம் சிறப்பியல்புகளில் மேதக்கவராவர். என்னை? மக்கட் சிறப்பியல்புகளின் வளர்ச்சிக்கும், நாட்டின் மேம்பாட்டுக்கும், சாயாப் புகழுக்கும் அஃது தாய்ப் பாலன்னதாகலின். பொருளைப் பொருளளவிலே கண்டு கொண்டு துய்த்துச் செருக்கிக் களித்து நின்று, திருவருள் வாய்ப்பில் அளிக்கப்பெறும் இலக்கியத்தை மதியாத நிலையில், மன்பதை வறுமை எய்தாதாக [1]பொருளின் துய்ப்பிலே, இதுவரையும் காணாததைக் கண்டுவிட்டதாக நினைத்து இறுமாப்படைதல் பேதைமையின்பாற்படும்.

**இன்ப வெள்ளம்**

உரு நலன் நிரம்பிய மயில், தன் உள்ளத்தின் எழுச்சியால் வடிவு சாயல் வண்ணப்பொலிவுகள் சிந்த நடித்தின்புறுதலை யொத்து, தன் இயற்கையில் தன் நலன்கள் சிந்தி மணக்க, சாயா முருகொடு பொலிகின்றது இலக்கியம். அதன் செவ்வி, குழவியின் திருவும் திருவுடையார் அருளும் போன்று நிரம்பித் ததும்பி வழிகின்றது. பாணி தூக்கு சீர் என்னும் முப்பகுதிகளைக் கொண்ட தாளம்

1. " வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப்
 பொருளுமற் றெப்பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும்
 பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப்
 பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளுங் கலைமா
 ணுணர்த்து முரைப்பொருளே."

—கம்பர், சரசுவதியந்தாதி, 26.



குறிக்கும் காலவரம்பொடு பயின்று அதனை யிகந்து செல்லும் இசைப்பாட்டை யொத்தும், பூவின் இதழைக் கடந்து விரிந்து பரவும் நறுமணத்தை யொத்தும், அதன் இயலைக் கண்டவாறு வகுத்த இலக்கண வரம்பையும் கடந்து நிற்கும் இலக்கியத்தின் செவ்வி, உலகையும் வாழ்க்கையையும் அறிவையுங் கடந்து, [1]அவற்றைத் தூய்மைப்படுத்தி, அணிசெய்து இன்பவெள்ளமாய்த் தழைத்துப் பொலிகின்றது. அதன் செவ்வியில் திளைத்து உய்க உலகம்.

1. "The air is purer for her breathing, sure!
 And all the fields do wear
 The beauty fallen from her;
The winds do brush me with her robe's allure."

—Francis Thompson, In her paths.

# பின்னிணைப்பு

௧

[பக்கம் : 24 பார்க்க]

"அறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்து திரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி."

—பொருநராற்றுப்படை : 25-47.

உ

[பக்கம் : 69 பார்க்க]

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம் பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறு சோற்றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற்றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன் கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாண ரகன் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்று வீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநருமில்லைப் பாடுநர்க் கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே."

—புறநானூறு : 235.

ங

[பக்கம் : 95 பார்க்க]

"ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
றூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான். (க)

துடிய னாயினன் றோற்செருப் பார்த்தபே
ரடிய னல்செறிந் தன்ன நிறத்தினா



னெடிய தானை நெருங்கலி னீர்முகி
லடியி னோடெழுந் தாலன்ன வீட்டினான். (உ)

கொம்பு துந்துபி கொட்டு முறைமையான்
பம்பை பம்பு படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாத னழிகவுட்
டும்பி யீட்டம் புரைகிளை சுற்றத்தான். (ங)

காழ மிட்ட குறங்கினன் கங்கையி
னாழ மிட்ட நெடுமையி னாரைத்
தாழ விட்ட செந்தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினான். (ச)

பற்றொ டுத்தன்ன பல்சூற் கவடியன்
கற்றொ டுத்தன்ன போலுங் கழலினா
னற்றொ டுத்தன்ன குஞ்சிய னாளியின்
னெற்றொ டுத்துநெ ரிந்தபு ருவத்தான். (ரு)

பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர் வார்ந்துயர் முன்கையன்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லின
னெண்ணெ யுண்டவி ருள்புரை மேனியன். (சு)

கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளின
னச்ச ராவுந டுக்குறு நோக்கினன்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ராயுதம் போலு மருங்கினன். (எ)

ஊற்ற மேமிக வூனொடு மீனுகர்
நாற்ற மேய நகையின் முகத்தினான்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமுறுங் குரலினான். (அ)

சிருங்கி பேரமெ னத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையா
னொருங்கு தேனொடு மீனுப காரத்த
னிருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்." (கூ)

—இராமாவ. அயோத்தியா. கங்கை. 28-36.

௪

[பக்கம்: 110 பார்க்க]

“மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்குக்
கலிகெழு கூடற் செவ்வணி காட்டக்
காரர சாளன் வாடையொடு வருஉங்
கால மன்றியு நூலோர் சிறப்பின்
முகிறோய் மாடத் தகிறரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்
வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
யிளநிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
யரிதிற் றோன்று மச்சிரக் காலையு
மாங்க தன்றியு மோங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
வகிலுந் துகிலு மாரமும் வாசமுந்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்க ணெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளன்
கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடன் மகிழ்துணை தழூஉ
மின்னிள வேனில் யாண்டுளன் கொல்லென்
றுருவக் கொடியோ ருடைப்பெருங் கொழுநரொடு
பருவ மெண்ணும் படர்தீர் காலைக்
கன்றம ராயமொடு களிற்றின நடுங்க



வென்றாழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காடுதீப் பிறப்பக் கனையெரி பொத்திக்
கோடையொடு புகுந்து கூட லாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
வோசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்.”

—சிலப். ஊர்காண் : 94-125.

௫

[பக்கம்: 114 பார்க்க]

**Break, Break, Break.**

“Break, break, break,
    On thy cold grey stones, O sea!
And I would that my tongue could utter
    The thoughts that arise in me.

O well for the fisherman's boy,
    That he shouts with his sister at play!
O well for the sailor lad,
    That he sings in his boat on the bay!

And the stately ships go on
    To their haven under the hill;
But O for the touch of a vanished hand,
    And the sound of a voice that is still!

Break, break, break,
    At the foot of thy crags, O Sea!
But the tender grace of a day that is dead
    will never come back to me.”

—*Lord Tennyson.*

## ௬

[பக்கம் : 128 பார்க்க]

"தகையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயலுழந்து தளரு மேல்வை
சிதையுமனத் திடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா
னையி னுரிவைப் போர்வை போர்த்த
வுதயகிரி யெனுங்கடவு ணுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான். (௧)

விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
வுதயகிரி விரிந்த தூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரு
நிறைபுனலும் பரந்து பாய
அசையாத நெடுவரையின் முகடுதொறு
மிளங்கதிர்சென் றணைந்து வெய்யோன்
றிசையாளு மதகரியைச் சிந்தூர
மப்பியபோற் சிவந்த மாதோ. (௨)

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையிற்
பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடுங்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகலுங் கற்பி னார்போற்
புண்டரீக முகமலர வகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம். (௩)

எண்ணரிய மறையினொடு கின்னரர்க
ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை யென்னு



மண்ணுமணி முழவதிர வானரங்கி
னடம்புரிவா னிரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தா
லெனவிரிந்த கதிர்க ளெல்லாம்." (௪)
—இராமாவ. பால. மிதிலைக் காட்சி: 150-153.

## ௭

[பக்கம் : 153 பார்க்க]

"..................................வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
றாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கமர் மராஅம் பல்பூந் தணக்க

மீங்கை யிலவர் தூங்கிணர்க் கொன்றை
யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்தகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி.''

—குறிஞ்சிப்பாட்டு : 61-97.

## அ

[பக்கம்: 196 பார்க்க]

“பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப்
    பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை யுதிர்ந்தமணி
    விசும்பின் மீனின் மேல்விளங்க
வருந்த வமரர் கலக்கியநா
    ளமுத நிறைந்த பொற்கலச
மிருந்த திடைவந் தெழுந்ததென
    வெழுந்த தாழி வெண்டிங்கள். (௧)

வண்டா மயனுன் மறைபாட
    மலர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து
    பாரு நீரும் பசித்தான்போ
லுண்டா னுந்திக் கடல்பூத்த
    வோதக் கடலுந் தான்வேறோர்
வெண்டா மரையின் மலர்பூத்த
    தொத்த தாழி வெண்டிங்கள். (௨)



புள்ளிக் குறியிட் டனவொண்மீன்
    பூத்த வானம் பொலிகங்கு
னள்ளிற் சிறந்த விருட்பிழம்பை
    நக்கி நிமிரு நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்றுங்கொல்
    கீழ்பாற் றிசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத் திளங்கமுகின்
    பாளை போன்று விரிந்துளதால். (௩)

வண்ண மாலை கைபரப்பி
    யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத்
    துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
    விழுங்கிக் கொண்ட விரிகன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
    புகழ்போ லெங்கும் பரந்துளதால். (௪)

நீத்த மதனின் முளைத்தெழுந்த
    நெடுவெண் டிங்க ளெனுந்தச்சன்
மீத்தன் கரங்க ளவைபரப்பி
    மிகுவெண் ணிலவாம் வெண்சுதையாற்
காத்த கண்ணன் மணியுந்திக்
    கமல நாளத் திடைப்பண்டு
பூத்த வண்டம் பழையதென்று
    புதுக்கு வானும் போன்றுளதால். (௫)

விரைசெய் கமலப் பெரும்போது
    விரும்பிப் புகுந்த திருவினொடுங்
குரைசெய் வண்டின் குழாமிரியக்
    கூம்பிச் சாம்பிக் குவிந்துளதா
லுரைசெய் திகிரி தனையுருட்டி
    யொருகோ லோச்சி யுலகாண்ட
வரச ரெதுங்கத் தலையெடுத்த
    குறும்பு போன்ற தரக்காம்பல்.'' (௬)

—இராமாவ. பாலகாண். மிதிலைக்காட்சி, 70-75.

௮௯

[பக்கம்: 197 பார்க்க]

“தீண்டருந் தீவினை தீக்கத் தீந்துபோய்
மாண்டற வுலர்ந்தது மாரு திப்பெய
ராண்டகை மாரிவந் தளிக்க வாயிடை
யீண்டற முளைத்தென முளைத்த திந்துவே. (௧)

வந்தன னிராகவன் றூதன் வாழ்ந்தன
னெந்தையே யிந்திர னுமென் றேமுரு
வந்தமில் கீட்டிசை யளக வாணுதற்
சுந்தரி முகமெனப் பொலிந்து தோன்றிற்றே. (௨)

கற்றைவெண் கவரிபோற் கடலின் வெண்டிரை
சுற்றுநின் றலமரப் பொலிந்து தோன்றிற்று
விற்றதெம் பகையென வெழுந்த விந்திரன்
கொற்றவெண் குடையெனக் குளிர்வெண் டிங்களே. (௩)

தெரிந்தொளிர் திங்கள்வெண் குடத்தி னூற்றிரை
முரிந்துயர் பாற்கடன் முகந்து மூரிவான்
சொரிந்ததே யாமெனத் துள்ளி மீனெடும்
விரிந்தது வெண்ணிலா மேலுங் கீழுமே. (௪)

அருந்தவன் சுரபியே யாதி வானமா
விரிந்தபே ருதயமே மடிவெண் டிங்களா
வருந்தலின் முளைகதிர் வழங்கு தாரையாச்
சொரிந்தபா லொத்தது நிலவின் றோற்றமே. (௫)

எண்ணுடை யனுமன்மே லிழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
வண்ணல்வா ளரக்கனை யஞ்சி யாய்கதிர்
விண்ணிடைத் தங்கின போன்ற மீனெலாம். (௬)

எல்லியி னிமிரிருட் குறைய மவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியுங் கவ்வின
புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் வதிந்த வண்டெலாம். (௭)



வீசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
வாசுற வெங்கணு நுழைந்த ளாயது
காசுறு கடிமதி லிலங்கைக் காவலூர்த்
தூசுறை யிட்டது போன்று தோன்றிற்றே. (௮)

இகழ்வரும் பெருங்குணத் திராம னெய்ததோர்
பகழியின் செலவென வனுமன் பற்றிரு
லகம்புகுந் தரண்புகுந் திலங்கை யன்னவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே.” (௯)
—இராமாவ. சுந்தர. ஊர்தேடு. 52-60

௯௦

[பக்கம்: 197 பார்க்க]

“பருதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோ
ரிருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளுங்
கருதின்வே முள்ளமுங் காணில்வேம் நயனமும். (௧)

படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னில்வே றியாவைவே வாதவே. (௨)

விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்சவே செருமுகத் தமர்செயுந் திறனிலா
வஞ்சர்தீ வினையினுன் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா ருதரோ. (௩)

பேய்பிளந் தொக்கநின் றுலர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககா ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம். (௪)

பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாதுகூ டாதரோ சூரியன்
றேருமோ டாதுமா மாகமீ தேரினேர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ. (௫)

கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகார்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயின்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்கண்மண் மகளுடற்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே. (சு)

புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா
விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய்
முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வ்ழுங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே. (எ)

ஏகவெங் கனலர சிருந்த காட்டினிற்
காகமுங் கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை வீழ்ந்த போலுமே. (அ)

கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலந்
தானகத் தெழுதலாற் றலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடில் விசும்பும் வேமெனு
வானவர்க் கிரங்கிநீர் வளைந்த தொத்ததே. (கூ)

ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
காய்ந்தவக் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே. (க0)

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. (கக)

பொரிபரற் படர்நிலம் பொடிந்து சீமுற
விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலா
லரிமணிப் பணத்தரா வரசர் நாட்டினு
மெரிகதிர்க் கினிதுபுக் கியங்க லாயதே.'' (கஉ)

—இராமாவ. பாலகாண். தாடகை வதை, 5-16.

# அருஞ்சொற்பொருள் அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| அமரும் - விரும்பும் | 4 |
| அரங்கு - நாடக மாதியன நிகழுமிடம் | 106 |
| அலக்கண் - துன்பம் | 193 |
| அழுக்காறு - பொறாமை | 259 |
| இகந்த - கடந்த | 174 |
| இசை - புகழ் | 132, 192 |
| இணைவிழைச்சு - புணர்ச்சி | 40 |
| இயம் வாய்ச்சியம் | 102 |
| இயைபு - பொருத்தம் | 129 |
| இளிவரல் - இழிவு | 193, 195 |
| இறுதி - முடிவு | 175 |
| இறை - வரி, அனுமதிக் கட்டணம் | 233 |
| இறைச்சிப் பொருள் - கருப் பொருளினுள்ளே கொள்ளும் பொருள் | 158 |
| உந்து - மோட்டார் வண்டி (motor car) | 241 |
| உம்பர் - தேவர் | 193 |
| உரன்று - செறிந்து | 3 |
| உரும் - இடி | 193 |
| உழை - அருகு | 191 |
| உள்ளுறை-நூற்பொருள் மறைந்து நிற்கும்பொருள் | 77, 82, 227 |
| உள்ளுறை யுவமம் - குறிப்பாற் பொருளைப் புலப்படுத்தும் உவமம் | 227 |
| உறைப்பு - ஊற்றம் | 63 |
| ,, - அழுத்தம் | 141 |
| ஊழி - நீண்ட காலம் | 255 |
| ஊழ் - முறை | 193 |
| ஊறு - பரிசம் | 2, 17 |
| எயிறு - பல் | 192 |
| எல் - ஒளி | 195 |
| எழிலி - மேகம் | 195 |
| எழினி - திரைச் சீலை | 102 |
| எள்ளல் - நிந்தை | 192, 203 |
| ஒப்பனை - அலங்காரம் | 102 |
| ஒருவுதல் - நீங்குதல் | 192 |
| ஒறுத்தல் - ஒடுக்கல் | 69, 72 |
| ஒறுத்தார்-வருத்தினோர் | 10 |
| ஓதிமம் - அன்னம் | 191 |
| ஓம்பல் - பாதுகாத்தல் | 31 |
| ஓர்தல் - அறிதல் | 259 |
| ஓவியம் - சித்திரம் | 220 |
| கங்குல் - இரவு | 155 |
| கடம் - யானை மதம் | 193 |
| கடிதல் - வெறுத்து ஒதுக்குதல் | 113 |
| கடுவச்சையர் - மிகவும் உலோபகுணமுடையோர் | 21[illegible] |
| கண்டம் - இசைப்பாட்டு நிகழுமிடம் | 106 |
| கதம்பம் - ஒத்த தன்மையற்றன பல சேர்த்த தொகுதி | 235 |
| கதித்தல் - மிகுதல் | 102 |
| கருவூலங்கள் - பொருட் களஞ்சியங்கள் | 156 |
| கலுழ்தல் - சாய்தல் | 193 |
| களி-வண்டல் | 99 |
| கறங்கல் - சுழல்தல் | 230 |
| கறைதல் (கரைதல்) - அழுதல் | 194 |
| கற்கந்து - கல்தூண் | 38 |
| காரிகை - அழகு | 25 |
| காரிகையார் - மகளிர் | 25 |
| கிடக்கை - இடம் | 230 |
| குழவி - குழந்தை | 262 |
| கூர்தல் - மிகுதல் | 109 |

| | பக்கம் |
|---|---|
| கூறு - பகுதி | 4, 7 |
| கேண்மை - நட்பு | 173 |
| கோள் - கிரகம் | 163 |
| சலிப்பு - சோர்வு | 168 |
| சாயல் - மென்மை | 4 |
| சிறை - பகுதி | 126 |
| சீர் - தாளத்தின் இறுதிக் கூறு | 262 |
| செயிர் - குற்றம் | 84 |
| செவ்வி - செப்பமான தன்மை; அழகு. | 255, 259 |
| தளை - கட்டு | 100 |
| தறுவாய் - உற்ற சமயம் | 16, 35, 43, 171 |
| தாரகை - விண்மீன் | 166 |
| திணை - ஒழுக்கம் | 105, 114 |
| திரு - அழகு | 162 |
| திரு(க்கோயில்) - தெய்வத்திற்குரிய (கோயில்) | 165 |
| திரு-தெய்வத்தன்மை | 168, 175 |
| திளைத்தல் - அனுபவித்தல் | 253 |
| திறம்பல் நிலைமாறிக் கெடுதல் | 230 |
| தீவிய - இனிமையான | 1 |
| துய்ப்பு அனுபவம் | 17[illegible] |
| துளக்கு - அசைவு | 19 |
| துளும்பல் - திமிர்தல் | 117, 197, 199, 205, 206 |
| தூக்கு - தாளத்தின் இடைக் கூறு | 262 |
| தூவி - இறகு | 66, 104 |
| தொழுதி - கூட்டம் | 99 |
| தொழும்பு - அடிமை | 7 |
| தோய்ந்து - பொருந்தி | 104 |
| நசை - ஆசை | 192 |
| நம்பி-ஆடவரிற் சிறந்தோன் | 193 |
| நாள்தாள் - நாளிதழ் (Daily News Paper) | 150 |
| நிரல் - வரிசை | 122 |
| நிருதர் - அரக்கர் | 192 |

| | பக்கம் |
|---|---|
| நிருத்தம் - கூத்து | 56 |
| நிரை - பசுக்கூட்டம் | 98 |
| நிறுவல் - நிலைபெறச் செய்தல் | 176 |
| நீத்தம் - கடல் | 187 |
| நென்னல் - முன்னை நாள் | 118 |
| படர்தல் - பெயர்தல் | 118 |
| பயின்று - பொருந்தி | 123 |
| ,, - மிகுந்து | 124 |
| பரத்தை - வேசி | 249 |
| பரிசு - தன்மை | 121, 124 |
| பருமம் - குதிரைக் கலனை | 99 |
| பலகணி - சாளரம் | 135 |
| பறை - இறகு | 99 |
| பாசறை - வேடம் அணியும் அறை | 7 |
| பாணி - தாளத்தின் முதற் கூறு | 262 |
| பார்ப்பு - பறவைக் குஞ்சு | 161 |
| பிணிப்பு - கட்டு | 176 |
| பிலிற்றல் - துளித்தல் | 107 |
| பிலுக்கு - பகட்டு | 141 |
| புணரி - கடல் | 120 |
| புள் - பறவை | 107 |
| பெயல் - மழைத்துளி | 107 |
| பெருந்திணை - வழுவுடைக் காமம் | 219 |
| பெருமிதம் - மேம்பாடு | 11 |
| பேறு-செல்வம் | 16, 62, 162, 172 |
| போங்கர் - வாடற் பூ | 57 |
| பொதிதல் - மறைத்தல் | 124 |
| பொறை - சுமை | 194 |
| பொன்று நலிவு | 101 |
| போதகம் - யானைக்கன்று | 191 |
| மதுவனம் - மதுவையுடைய சோலை | 120 |
| மருங்கு - பக்கம் | 57 |
| மறம் - பகை, போர் | 11 |
| ,, - வலிமை | 230 |
| மறலி - யமன் | 230 |



| | பக்கம் |
|---|---|
| மறை-மறைந்துநிற்கும் உண்மை (mystery) | 26 |
| மா - விலங்கு | 107 |
| மாண்பு - மாட்சிமை, பெருமை | 7, 63 |
| முகில் - மேகம் | 104 |
| முகைத்தல் - அரும்புதல் | 75 |
| முருகு - அழகு | 3, 262 |
| ,, - தெய்வம் | 4 |
| முறுக்கு - அரும்புத் தன்மை | 3, 52 |
| முறுவல் - சிரிப்பு | 191 |
| முனைப்பு - முற்படல் | 35 |
| மூரல் - பல் | 155 |
| மூவா - கெடாத | 256, 257 |
| வசை - குற்றம், இகழ்ச்சி | 192 |
| வச்சையர் - உலோபிகள் | 40 |
| வதிதல் - தங்குதல் | 106 |
| வற்கடம் - வறட்சி | 110 |

| | பக்கம் |
|---|---|
| வனப்பு - பல உறுப்பும் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு | 102 |
| வாழ்க்கை - சீவிக்கை | 79 |
| வாழ்வு - நல் வாழ்க்கை | 79 |
| வானூர்தி - ஆகாய விமானம் | 241 |
| விசும்பு - ஆகாயம் | 163 |
| விரவல் - கலத்தல் | 124 |
| வில் - ஒளி | 195 |
| விள்ளுதல் - சொல்லுதல் | 26 |
| ,, - தெரிவித்தல் | 260 |
| ,, - விரித்தல் | 255 |
| விழுப்பம் - பெருமை | 31, 49 |
| விழுமிய - சிறந்த | 38 |
| வினைவர் - தொழிலினர் | 99 |
| வெஃகல் - விரும்புதல் | 259 |
| வெகுளல் - கோபித்தல் | 259 |
| வெகுளி - கோபம் | 251 |
| வேட்டல் - விரும்புதல் | 35 |

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 101882
EGMORE, MADRAS

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 30 | 25 | நோக்குக்கு | நோக்குக்கும் |
| 47 | 27 | eves | eyes |
| 59 | 27 | டுமருகமைய | மெருகமைய |
| 68 | 29 | பிறப்பினு | யிறப்பினு |
| 90 | 33 | கம்பர். தனிப்பாடல் | தனிப்பாடல் |
| 97 | 18 | ஐவவி | ஐயவி |
| 118 | 30 | and | of |
| 121 | 33 | anv | any |
| 132 | 5 | தன்னதாக | தன்னவாக |
| 134 | 14 | தம்மதாக்கி | தம்மவாக்கி |
| 160 | 26 | கூறு, | கூறு. |
| 179 | 26 | Broidered | Broidered robe |
| ,, | 27 | to be robe | to be |
| 197 | 22 | ஊர் காண் | ஊர் தேடு |
| 210 | 24 | கேயன்றி | இல்லாமல் |
| 212 | 10 | மூவா | மூவா |

O-,1:9
N56



விலை ரூ. 5-0